இறக்கை: 14 இறகு: 5

# காக்கைச் சிறகினிலே

இலக்கிய மாத இதழ்

மே 2025 | விலை ₹ 50

**பெரியாரியத்தின் பெரும்பயன் தமிழகத்தைத் தாண்ட வேண்டும்**
▪ மே.து.ராசுகுமார்

**ஆர்த்தெழும் உரிமைக் குரல்.. அச்சுறுத்தப்படும் நீதிமன்றம்..**
▪ தி.சிகாமணி

**மக்களாட்சியை வீழ்த்தினோம்**
▪ க.பழனித்துரை

**செயற்கை நுண்ணறிவுத் தொழில்நுட்பமும் அதன் தாக்கங்களும்**
▪ நிகழ் அய்க்கண்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





கட்டுரை | குந்தவை

# தோழர் எஸ்.வி.ஆர். 86

2025, ஏப். 10 – எல்லா ஆண்டுகளையும் போல அன்றைய பொழுது கோத்தகிரியில்தான் விடிந்தது. மார்க்சிய – பெரியாரிய ஆய்வறிஞர் தோழர் எஸ்.வி. ராஜதுரையின் பிறந்த நாள்!

கோத்தகிரியில் மலை முகடொன்றிலுள்ள எஸ்விஆரின் இல்லத்திற்குக் காலை 9.30 மணியிலிருந்தே ஒவ்வொருவராக வரத் தொடங்கிவிட்டனர். காக்கைச் சிறகினிலே தோழர்களிலிருந்து திராவிடர் விடுதலைக் கழகத் தலைவர் கொளத்தூர் மணியில் தொடங்கித் தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் ஏராளமானோர் வரத் தொடங்கினர்; எஸ்விஆரை வாழ்த்துவதும் வணங்கி வாழ்த்துப் பெறுவதுமாகத் தொடர்ந்தனர், எவ்வித சட்டகத்துக்குள்ளும் கட்டுப்படாத பல்வேறு இயக்கங்களைச் சார்ந்த, சாராத தோழர்களும் தலைவர்களும் நண்பர்களும் மற்றும் உறவுகளும்.

சில மணி நேரங்களுக்கும் மேல் தொடர்ந்த இடைவிடாத உரையாடல்களுக்குப் பிறகு, பெருங்கூட்டம் திரண்டிருக்கத் துணைவியார் சகு அம்மாவுடன் இணைந்து பிறந்த நாள் கேக்கை வெட்டினார் எஸ்விஆர்; பிறந்த நாள் செய்தியாக அச்சிட்டப் பத்திகளை வாசித்தார், எங்கேயோ கேட்ட வரிகள்.

வாசித்து முடித்ததும், 'தந்தை பெரியார் தன்னுடைய 85 வயது முடிந்து 86-ல் அடியெடுத்துவைத்தபோது விடுத்த செய்திதான் இது. அதையேதான் அப்படியே என்னுடைய பிறந்த நாள் செய்தியாகவும் தெரிவிக்க விரும்புகிறேன்' என்றார் எஸ்விஆர்.

"நான் இப் புவியில் 85 ஆண்டுகள் வாழ்ந்து 86-வது ஆண்டில் புகுகிறேன்.

இந்த நாட்டில் மக்கள் வாழும் சராசரி வயது 10 ஆண்டுகளுக்கு முன் 32 வயதாக இருந்து, இன்று 43 வயதாக மாறியுள்ள இக் காலத்தில் ஒரு மனிதன் 85 ஆண்டுகள் வாழ்ந்து, அதுவும் ஓய்வு என்பதை அறியாத தொண்டும், சுகம் என்பதை அறியாத வாழ்வும், கிடைத்ததைத் தின்றுகொண்டு, வாய்த்த இடத்தில் தூங்கிக் கொண்டு திரிந்த நான் 85 ஆண்டுகள் வாழ்ந்து விட்டேன் என்றால் என் ஆயுளைப் பற்றி நான் பாராட்டிக் கொள்ள வேண்டாமா?

என்ன செய்து சாதித்துவிட்டாய்? என்று நீங்கள் கேட்கலாம். அதற்குப் பதில் நீங்களே (வாசகர்கள்) தான் தேடிப் பார்த்துத் தெரிந்துகொள்ள வேண்டும்.

ஓய்வு ஒழிச்சல் இன்றி, சோம்பல் கழிப்பிணித்தனமின்றி உழைத்தேன். திருட்டு, புரட்டு, மோசடி இன்றி வெள்ளையாய் நடந்துகொண்டேன். என் நடத்தையில் பல தவறுதல்கள், தகாத காரியங்கள் ஏற்பட்டு இருக்கலாம். என்னையே நீதிபதியாகக்கொண்டு எனக்குச் சரி என்று பட்டதையும், தேவை என்று பட்டதையும் செய்தேன். அதுவும் ஒளிவு மறைவு இல்லாமல் செய்து வந்தேன்.

– தொடர்ச்சி 83ஆம் பக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காக்கைச் சிறகினிலே

இறக்கை: 14
இறகு: 5

திருவள்ளுவராண்டு 2055
சித்திரை - வைகாசி
மே 2025

ஆசிரியர்
வி. முத்தையா
9841457503

ஆசிரியர் குழு
முகிலன்
இரா.எட்வின்

தொடக்க கால நெறியாளர்கள்
காலஞ்சென்ற
கி. பி. அரவிந்தன்
வீர. சந்தானம்

உலகளாவியத் தொடர்பாளர்:
க. முகுந்தன்
K. Mukunthan
kmukunthan@gmail. com

முகப்பு ஓவியம்:
*steve johnson*

உள் ஓவியங்கள்:
லெசி

தொடர்பு முகவரி:
காக்கை, 22, MJB தெரு,
திருவல்லிக்கேணி,
சென்னை- 600 005.
செல்பேசி: 98414 57503

மின்னஞ்சல்:
**kaakkaicirakinile@gmail.com**

இணைய முகவரி: kaakkai.in
www.facebook.com/kaakkai.cirakinile

## சமூகமும் அரசமைப்பும் பாசிசமயமாகுவது ஆபத்து!

சட்டசபை - நாடாளுமன்றம்; அதிகார வர்க்கம்; நீதித்துறை ஆகிய மூன்றும் ஜனநாயகத்தின் தூண்களாகும். தேர்தலின் மூலம் மக்களால் தேர்ந்தெடுக்கப்படும் மக்கள் பிரதிநிதிகள், மக்கள் நலனுக்கான திட்டங்களை அதிகார வர்க்கத்தின் துணையுடன் மக்களுக்குச் சேவையாற்றுகின்றனர். நீதித்துறையானது அரசியலமைப்புச்சட்டத்தின் பாதுகாவலனாகவும்; ஜனநாயகத்தூண்களுக்கிடையே ஏற்படும் முரண்களை தீர்த்து வைக்கவும் செய்கிறது. நாடாளுமன்றத்தைவிட, அரசைவிட, அரசியல் சாசனமே மேலானது. ஏனெனில், அரசியல் சாசனப்பிரிவுகளை விளக்கும் பணி உச்ச நீதிமன்றத்தினுடையதாகும்.

இதனை உணர்ந்த உச்ச நீதிமன்றமும் சமீபத்தில் சிறுபான்மையின மக்களுக்கு உறுதியளிக்கப்பட்டிருக்கிற அரசியல் சாசன விதிகளைப்பாதுகாக்கவும், அம்மக்களுக்கு நீதியை நிலைநாட்டும் பொருட்டு ஒன்றிய அரசின் வக்ஃப் வாரியச்சட்டம்-2025க்கு எதிரான வழக்கில் விசாரணையை மேற்கொண்டு, சில பிரிவுகளுக்கு மட்டும் தடை விதித்திருக்கிறது. அதேபோல், தமிழகச்சட்டப்பேரவையில் நிறைவேற்றப்பட்ட 10 மசோதாக்களுக்கு ஆளுநர் வருடக்கணக்கில் ஒப்புதல் தராததற்கு எதிரான வழக்கில் விசாரணை மேற்கொள்ளப்பட்டு, தனக்குள்ள சிறப்பு அதிகாரத்தைப்பயன்படுத்தி ஒப்புதல் வழங்கியுள்ளது. உச்ச நீதிமன்றத்தின் இத்தகைய உத்தரவுகளானது பரந்த அளவில் நாட்டுமக்களின் பாராட்டுதலைப்பெற்றிருக்கிறது.

உச்சநீதிமன்றத்தின் சிறப்பு வாய்ந்த இப்படியான தீர்ப்பினைக்கண்டு எரிச்சலடைந்த வலதுசாரி அடையாள அரசியல் கட்சியான பாஜகவின் மக்கள் பிரதிநிதிகள் முதல் அரசியல் சாசனத்தைக்காப்பவர் வரை வெறுப்பு அனலைக் கக்குகின்றனர். குடியரசுத்தலைவருக்கு உச்சநீதிமன்றம் உத்தரவிடமுடியாது எனவும்; நீதிமன்றம் சட்டம் இயற்றுகிறதென்றால் சட்டசபை- நாடாளுமன்றத்தைக் கலைத்துவிடவேண்டியதுதான் எனவும் பொறுப்பற்று சொற்களை உதிர்க்கின்றனர். உதாரணத்திற்கு கூறவேண்டுமெனில், தமிழக சட்டப்பேரவையில் நிறைவேற்றப்பட்ட மசோதாக்கள் அசைவற்று கிடப்பில் போடப்பட்டுள்ளதை உயர் பொறுப்பிலுள்ளவர்கள் யாரும் அதுநாள் வரை கேள்வி கேட்காத நிலையில், உச்சநீதிமன்றம் தலையிட்டதும் கொதித்தெழுகின்றனர். இச்செயலானது ஒருவகையான கருத்தாக்க அரசியல் போரே தவிர வேறில்லை.

இதுவரை வலதுசாரி ஆட்சியாளர்களின் மக்கள் விரோதச் சட்டங்களை மற்றும் செயல்பாடுகளை கடந்துசென்ற நீதிமன்றங்கள் தற்போது கேள்விக்குட்படுத்தியதும் பதட்டமடைகின்றனர். வலதுசாரிகளின் கருத்தியல் அல்லது திட்டங்கள் சட்டசபை- நாடாளுமன்றம் வழியாக சட்டமாக்கப்படும்போது அதனை நீதிமன்றங்கள் கேள்விக்குட்படுத்தக்கூடாது என்பதுதான் அவர்களின் எண்ணம். இவர்களினது செயல் தந்திரமே, ஜனநாயகத்தை காப்பதாகக்கூறிக்கொண்டே அதனை அழித்தொழித்து அவ்விடத்தில் மனுவின் சட்டவிதிகளை நிலை நிறுத்துவதுதான். ஜனநாயகத்தின் சாரம்சத்தையும், ஜனநாயகத்தின் விழுமியங்களையும் ஒழித்துக்கட்டுவதற்கு ஜனநாயகக்கட்டமைப்புக்களையே பயன்படுத்துவது என்பது மிகுந்த வேதனையளிக்கிறது. ஒருபக்கம் சட்டசபை- நாடாளுமன்றங்களில் குடிமக்களுக்கெதிராகவே சட்டங்களை இயற்றி மக்களைப்பிளவுபடுத்துகின்றனர். இன்னொருபக்கம் அரசியல்சாசனம் உறுதியளித்திருப்பதற்கு மாறாக, மாநிலங்களின் சகல உரிமைகளையும் பறித்து ஒரேநாடு முழக்கத்தை நிலைநிறுத்தத்துடிக்கின்றனர். இதிலிருந்து ஜனநாயகத்தின் பண்புகளான சமத்துவம்- சுதந்திரம்- சகோதரத்துவத்தினை மறுக்கும் தற்போதைய வலதுசாரிகளின் ஆட்சிகாலத்தில் சமுதாயத்தையும், அரசமைப்பையும் பாசிசமயமாக்குவது என்பது அதிகரித்துவருவதைக்காணமுடியும். பாசிசம் என்பது அடிப்படையிலேயே ஜனநாயகத்திற்கும், மனிதர்களின் கூட்டுவாழ்க்கைக்கும் எதிரானது என்பதை உணர்வது அவசியம். •

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காக்கைச் சிறகினிலே

ஒவ்வொரு மாதமும்
1 ஆம் தேதி உங்கள் கைகளில்

ஒவ்வொரு மாதமும்
29 அல்லது 30ஆம் தேதியில்
'காக்கைச் சிறகினிலே' இதழ்
அஞ்சல் செய்யப்படுகிறது.
அடுத்து வருகிற 5ஆம் தேதிக்குள் இதழ்
கிடைக்கப் பெறாதவர்கள்
தொடர்புகொள்ள வேண்டிய
செல்பேசி எண்: 98414 57503

தனிஇதழ் விலை ரூ. 50.00
ஆண்டு சந்தா ரூ. 500.00
இரண்டாண்டு சந்தா ரூ. 750.00
ஐந்தாண்டு சந்தா ரூ. 2000.00

வெளிநாடு

ஆண்டு சந்தா $ 50.00

வங்கி விவரம்

A/C Name : kaakkai
A/C No : 60111010005660
CANARA BANK
TRIPLICANE BRANCH
CHENNAI - 600 005
IFSC: CNRB0000914

Google Pay மூலம் செலுத்த:
செல்பேசி எண்: 98414 57503

வெளிநாட்டு வாசகர்கள் சந்தா செலுத்த:

A/C Name : kaakkai
A/C No : 60111010005660
CANARA BANK
TRIPLICANE BRANCH
CHENNAI - 600 005
SWIFT CODE : CNRBINBBBFD

விளம்பரக் கட்டணம்

பின் அட்டை வண்ணம் ரூ.15000
உள் அட்டை வண்ணம் ரூ.10000
உள்பக்கம் கருப்பு - வெள்ளை ரூ.5000

காக்கையில் வெளியாகும் கதை, கவிதை மற்றும் கட்டுரைகளின் கருத்துகள், எழுத்தாளர்களின் கருத்தாகும். காக்கையின் கருத்தாகாது.

## சிறகுக்குள்ளே...

பெரியாரியத்தின் பெரும்பயன்
தமிழகத்தைத் தாண்ட வேண்டும்
▶ மே.து. ராசுகுமார் ........ 05

ஆர்த்தெழும் உரிமைக் குரல்.. அச்சுறுத்தப்படும் நீதிமன்றம்
▶ தி.சிகாமணி ........ 13

2026 தேர்தலும் திராவிடமும்
▶ வல்லபாய் ........ 17

கல்லறை அரசியல்!
▶ இரா.மோகன்ராஜன் ........ 21

செயற்கை நுண்ணறிவுத் தொழில்நுட்பமும்
அதன் தாக்கங்களும்
▶ நிகழ் அய்க்கண் ........ 26

மக்களாட்சியை வீழ்த்தினோம்
▶ க.பழனித்துரை ........ 31

சமூக நீதிக்கானது அய்யாவின் வழி!
▶ இரா.முரளி ........ 35

பெண்ணை உயிர்ச் சக்தியாக சித்தரிக்கும்
கீர்த்திகாவின் ஓவியங்கள்
▶ ரூபன் சிவராஜா ........ 41

தொல் தமிழ்நாட்டில் இரும்பு யுகம் (கி.மு.3350)
▶ நெல்லை சு.முத்து ........ 47

உழவுக் கம்புப் போராட்டம்
▶ அ.கா.பெருமாள் ........ 52

நல்அரா! சங்க இலக்கியங்களில் நாகப்பாம்பு!!
▶ சு.இராமசுப்பிரமணியன் ........ 55

தற்குறியும் கையெழுத்தும்
புதுக்கோட்டை கல்வெட்டுகளில் படிப்பறிவு
▶ கி.இரா.சங்கரன் ........ 59

65/65
▶ இரா.எட்வின் ........ 65

கிழக்கிலங்கையில் தொழில் முறையோடு
மறைந்த சூட்டுக்களம் ஆற்றுகை
▶ துரைநாதன் சபீதன் ........ 67

ஓநாய் குலச்சின்னம்!
▶ துருவன் ........ 71

சோழர்களின் அடிமைப் பணிப்பெண்கள்
▶ சௌ.குணசேகரன் ........ 73

மணிமேகலையை ஏன் வாசிக்க வேண்டும்?
▶ சு.பொ.அகத்தியலிங்கம் ........ 77

மறந்த காவியம் நீலகேசி
▶ கோச்சடை ........ 81

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டுரை | மே.து. ராசுகுமார்



# பெரியாரியத்தின் பெரும்பயன் தமிழகத்தைத் தாண்ட வேண்டும்

**த**ந்தை பெரியார் அவர்கள், தாம் வாழ்ந்த காலம் முழுதும் தமிழ் மக்களையும் தமிழ் நாட்டையும் நடுவப்படுத்தியே செயல்பட்டு வந்தார் என்பதில் மாற்றுக் கருத்துக்கள் இல்லை. அவர் எழுதியனவும் பேசியனவும் தமிழாகவே இருந்தன. பரப்புரைகளும் போராட்டங்களும் தமிழ் மக்கள் சார்ந்தே அமைந்திருந்தன.

'ரிவோல்ட்' போன்ற ஒரு சில முயற்சிகள் அல்லாமல், பெரியார் நடத்திய பல்வேறு இதழ்கள் யாவும் தமிழிலேயே வெளிவந்தன. அவரது காலத்தில் பரப்புரைக்காகப் பதிப்பிக்கப்பட்ட நூல்களும் தமிழ் மொழியிலேயே இருந்தன.

சமூக, பொருளிய, பண்பாட்டு, அரசியல் தளங்கள் எதிலும், தான் வாழ்ந்த காலம் முழுதும் பெரியார் தனித்து ஒதுங்கியிருக்கவில்லை. அனைத்திலும் நேரடியாகவும் மறைமுகமாகவும் அவரது பங்களிப்பு அழுத்தமாகவும் ஆழமாகவும் தொடர்ந்துகொண்டிருந்தது.

அன்றைய சென்னை மாமாநிலத்தில், இன்றைய தமிழ் பேசும் மக்களைக் கொண்ட தமிழ்நாடு, தெலுங்கினைத் தாய்மொழியாகப் பெற்றிருந்த ஆந்திரம் ஆகியவற்றோடு, கன்னடம், மலையாளம், ஒரியா போன்ற மொழிகள் பேசுகின்ற சில வட்டங்கள் அல்லது பகுதிகள் இணைக்கப்பட்டிருந்தாலும், பெரியாரின் பொதுவாழ்வுச் செயல்பாடுகள் பெரிதும் இன்றைய தமிழ்நாட்டின் எல்லைகளுக்குள்ளேயே முன்னிடம் பெற்றிருந்தன.

கேரளத்தில் உள்ள வைக்கம் போராட்டத்தின் போக்குகளையே மாற்றி, வெற்றிகளை வென்றெடுத்த பெரியாரின் பங்களிப்புப் பெரிது என்பது உண்மைதான். இருந்தாலும், பெரியாரின் அன்றாட நிகழ்வுகள் தொடர்ந்து தமிழ்நாட்டிலேயே மேலோங்கி நின்றன. தமிழ் பேசுகின்ற பகுதிகளுக்கு அப்பால் பெரியாரது சுற்றுப்பயணங்கள், பொதுக்கூட்டங்கள், இயக்கச் செயல்பாடுகள் என அவ்வப்போது தொடர்புகள் பல நீடித்திருந்தாலும், அவை சில வரையறைகளுக்குள்ளேயே இருந்தன எனலாம்.

தமிழ் பேசும் பகுதிகளைப் பொருத்தளவில், அவர் செல்லாத இடங்களோ, உரையாற்றாத ஊர்களோ, தொடர்புகொள்ளாத மக்கள் பிரிவினரோ இல்லை என்றே கூறிவிட முடியும்.

பகுத்தறிவு, கடவுள் மறுப்பு, சாதி ஒழிப்பு, சமய மறுப்பு, மூட நம்பிக்கைகளுக்கு எதிரான போராட்டங்கள், தன்மானப் பரப்புரைகள், பெண் விடுதலை, பார்ப்பனிய எதிர்ப்புகள், இட ஒதுக்கீடு, மொழி, மாநில உரிமைகள், ஆங்கில ஆட்சி எதிர்ப்பு, தாழ்த்தப்பட்டோர் விடுதலை உள்ளிட்ட இன்னும் பல முனைகளில் பெரியார் ஆற்றிய பணிகளைக் கூறிக்கொண்டே போக முடியும். மக்கள் முன்னேற்றத்திற்குத் தடையாக இருந்த அனைத்தையும் பெரியார் எதிர்த்தார், மக்கள் இனத்தின் வளர்ச்சிக்கு வாய்ப்பளிக்கும் அனைத்து முற்போக்குக் கூறுகளுக்கும் பெரியார் துணை நின்றார் என்று சுருக்கமாகக் கூறிவிட முடியும். பெரியாரியம் என்று தனித்துக் கூறுமளவுக்கு, சமூக, பொருளிய, பண்பாட்டு, அரசியல் மாற்றங்களுக்கான கருவிகளாகப் பெரியாரது பணிகள் மேம்பட்டிருந்தன என்பதில் மாற்றுக் கருத்து இருப்பதாகத் தெரியவில்லை.

தமிழக மக்களுக்காகத் தமிழில் பேசியனவாகவும் தமிழில் எழுதியனவாகவும் பெரியாரது கருத்துக்கள், கொள்கைகள், தத்துவங்கள், செயல்பாடுகள் போன்றவை இருந்தாலும், இவை யாவும் மனித இனம் முழுமைக்கும் வேண்டுவனவாக இருந்தன -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்கின்றன என்பதை எவரும் புறக்கணித்துவிட இயலாது. எடுத்துக்காட்டுகள், பெயர்கள், சொற்கள், நிகழ்வுகள் போன்றன தமிழ் நிலம் சார்ந்து இருப்பினும், பெரியாரது முன்னெடுப்புகள் யாவும் அனைத்து மக்களுக்கும் பொருந்துவனவாக இன்றும் இருக்கின்றன என்பதை மறந்துவிடக்கூடாது.

பெரியாரின் பெரும் பங்களிப்பின் அடித்தளத்தில்தான் தமிழகம் பிற மாநிலங்களிலிருந்து வேறுபட்டு நிற்கிறது. இட ஒதுக்கீடு, இந்தித் திணிப்பு, பார்ப்பன மேலாண்மை மறுப்பு, சமூக நீதி, தன்னுரிமை வேட்கை, மூடநம்பிக்கை ஒழிப்பு போன்ற இன்னும் பல நிலைகளில், பிற மாநிலங்களுக்குத் தமிழ்நாடு வழிகாட்டியும் வருகிறது.

பெரியாரது கருத்துக்களின் தாக்கம் உரிய காலத்தில் இந்திய ஒன்றியத்தில் இடம்பெற்றுள்ள பிற மாநிலங்களுக்கும் கொண்டு செல்லப்பட்டிருந்தால், சமய அடிப்படையிலான பிரிவினைப் போக்குகளும் பாரதிய சனதா போன்ற அரசியல் கட்சிகளின் வளர்ச்சியும் வல்லமையும் கட்டுக்குள் அடங்கியிருக்கும். பெரியார் வாழ்ந்த காலத்திலேயே இந்திய ஒன்றியத்தில் உள்ள மாநில இனங்களின் முன்னேற்றத்தில் பல வகையான தடைகள் நிலவின. ஆயினும், ஆங்கில ஆட்சியிலிருந்து விடுதலை பெற்றிருந்த தொடக்கக் காலக்கட்டத்தில், பெரியாரியத்தின் பரவலுக்கான புறச் சூழல்கள் முழுமையாக உணரப்படவில்லை.

இந்திய ஒன்றியத்தில் வாழும் மக்கள் இனங்களின் முன்னேற்றத்துக்கும் வளர்ச்சிக்கும் முட்டுக்கட்டைகளாக இருந்த பல தடைகளுக்கு, குறிப்பாக தன்மானம், தனியுரிமை, தன்னாட்சி, சமயம் சார்ந்த மூடநம்பிக்கை ஒழிப்பு, பார்ப்பன எதிர்ப்பு, சமூக நீதி போன்ற பலவற்றுக்கும் தீர்வாகப் பெரியாரியத்தைப் பின்பற்றாத நிலையே அடிப்படையாக இருக்கிறது என்பதை இன்று முற்றிலுமாக அறிய முடிகிறது. இன்றைய இந்திய நிலைமைகளில், அரசியலாக இருந்தாலும் ஆட்சி முறையாக அமைந்தாலும், பண்பாட்டு முறைமைகளாக இருந்தாலும், சமூக நீதியாகப் பார்த்தாலும், பெரியாரியத்தின் கட்டத்தைக் கடக்காமல் அல்லது தாண்டாமல், அடுத்த கட்ட முன்னேற்ற நகர்வு ஏற்பட வாய்ப்பில்லை என்பதை இன்றைய நிலைமைகள் உறுதிப்படுத்தி வருகின்றன.

அரசியல், பொருளிய விடுதலைக்காக அல்லது மாற்றங்களுக்காக இயங்கும் பல இயக்கங்கள், பெரியாரியத்தை உள்வாங்கிக் கொள்ளாத அல்லது உள்வாங்கி கொள்ள முடியாத தன்மைகளால் ஒரு தேக்க நிலையும் ஏற்பட்டிருப்பதை ஒதுக்கித் தள்ளிவிட முடியாது. முற்போக்கு இயக்கங்களும் பெரியாரை உள்வாங்கிக்கொண்டுதான் தங்களது அரசியல் நகர்வுகளை வடிவமைத்துக் கொள்ளவேண்டும். பெயர் குறிப்பிட்டுச் சொல்லாவிட்டாலும், இது இன்றைய அரசியல் கட்சிகள் அனைத்திற்கும் செவ்வனே பொருந்தும் என்பதில் அய்யமில்லை.

பெரியாரியம் என்பது என்ன, அதன் சிறப்பிடம் எதில் உள்ளது, விளைவுகள் யாவை என்பவற்றைத் தமிழக மக்களே முழுமையாகப் புரிந்துகொண்டிருக்கிறார்களா என்பது புலப்படவில்லை. ஆயினும், பெரியாரது பணிகளின் பெரும்பயன்களை அவர்கள் ஏதோவொரு வகையில் துய்த்துக்கொண்டிருக்கின்றனர். இதனால், பெரியாரியத்தினுடைய பங்களிப்பின் பயன்கள், தமிழ் மக்களுடைய வாழ்க்கை முறைகளோடு கலந்து, வேறுபாடு தெரியாமல் ஒன்றிப்போயிருப்பதைக் காண முடிகிறது.

பெரியாரை ஏற்றுக்கொள்ளாதோராகத் தங்களைக் காட்டிக்கொள்வோர்கூட, பெரியாரியச் செயல்பாட்டு விளைவுகளுக்குள் தங்களை முழுமையாக ஆட்படுத்திக்கொண்டிருக்கின்றனர் என்பதைப் பார்க்கலாம். அதாவது, பெரியாரின் தாக்கம், சமூகப் போக்குகளை மாற்றியமைத்து, அதை ஏற்காதவரையும் அதற்குள் உள்ளடக்கிக்கொண்டுவிட்டது.

இந்திய அரசியல், சமூக வாழ்வில் பல முனைப்புகளில் தமிழகம் தனித்து முன்னிற்பதற்கான அடிப்படையாக இருப்பது பெரியாரின் பங்களிப்புதான் என்பது உறுதியான பின்னர், இதனை ஒன்றிய மக்களின் தெளிவுக்காகவும் விடியலுக்காகவும் பிற மொழி பேசுவோரிடமும் எடுத்துச்செல்வது இன்று இன்றியமையாத கடமையாகவே மாறியிருக்கிறது எனலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரியாரின் நூற்றாண்டு விழாக் கொண்டாட்டங்கள் நிறைவு பெற்றுவிட்டன. பெரியார் இறந்து 50 ஆண்டுகளுக்கு மேலாகிவிட்டன. பெரியாரை ஏற்றுக்கொண்டிருக்கின்ற இயக்கங்கள், தமிழகத்தின் ஆட்சியில் கடந்த 58 ஆண்டுகளாக மாற்றின்றி நீடித்து வருகின்றன. இருப்பினும், பெரியாரைத் தமிழர்கள் தங்களுக்குள்ளேயே முடக்கிக்கொண்டுவிட்டார்களோ என்ற வினா இயல்பாகவே எழுவதைத் தவிர்க்க முடியவில்லை.

பெரியாரியத்தின் பெரும்பயன் தமிழகத்தைத் தாண்டிச் சென்றிருக்கவேண்டும். இன்றுள்ள நிலைமைகளில் சமூக மறுமலர்ச்சி முன்னிலை பெற்று வருவதைக் காண முடிகிறது. சமூக மாற்றங்களைக் கொண்டுவராமல், முற்போக்கு இயக்கங்கள் வளரவும், வளர்ந்தாலும் தம்மை நிலைநிறுத்திக்கொள்ளவும் இயலாது என்ற நிலை தெளிவாகத் தெரிகிறது. பொருளிய வளர்ச்சிக்கு இணையாக அல்லது பொருளிய வளர்ச்சியின் நிலைப்படுதலுக்கு முன்னேற்பாடாக, சமூக மறுமலர்ச்சியின் வேண்டல் அடிப்படையாக அமைந்திருக்கிறது என்பதைப் புறக்கணித்துவிட முடியவில்லை. இதனை, விடுதலைக்குப் பின்னரான 78 ஆண்டு காலங்களின் பட்டறிவு நமக்குப் பாடம் எடுத்துக் கொண்டிருக்கிறது.

பெரியாரது கொள்கைகள், இந்திய ஒன்றியத்தில் உள்ள பிற மொழி இனத்தவருக்கும் சென்று சேரவேண்டும் என்றால், அதற்கு முதன்மையான முதல் பணியாக அமைவது அவருடைய அனைத்துப் படைப்புகளையும் கால வரிசையில் தொகுப்பதாகும்.

பெரியார் மறைந்து அய்ம்பது ஆண்டுகள் கடந்த பின்னரும் பெரியார் எழுத்துக்களும் பேச்சுக்களும் கொள்கைகளும் கோட்பாடுகளும் அவர் முன்னெடுத்த முனைப்புகளும் முனை மழுங்காமல் தமிழர்களிடம் நிலைகொண்டிருக்கின்றன என்பதை எவரும் மறுக்கவில்லை. திராவிடர் கழகமும் அந்த இயக்கத்தில் இருந்து பிரிந்து சென்று தனித்தனியே இயங்கிக் கொண்டிருக்கின்ற பல்வேறு இயக்கங்களும், பெரியார் எழுத்துக்களையும் பேச்சுக்களையும் தொடர்ந்து தனி நூல்களாகவும் தொகுப்புகளாகவும் வெளியிட்டுக்கொண்டிருப்பதன் வாயிலாகப் பெரியாரின் இன்றைய இருப்பை நிலைநாட்டிக் கொண்டிருக்கின்றனர். இவர்களுடைய பங்களிப்புகள் குறைத்து மதிப்பிடக்கூடியவனாக இல்லை என்றாலும், பணிகள் இவற்றோடு நிறைவு பெற்றுவிடவில்லை என்பதையும் எடுத்துக்காட்ட வேண்டியுள்ளது. பெரும் தொகுதிகளாகப் பெரியார் எழுத்துக்களும் பேச்சுக்களும் அச்சில் தொடர்ந்து கிடைத்துக்கொண்டிருக்கின்றன என்பது பாராட்டத்தக்க பணியாகவே அமைந்திருக்கிறது என்று துணிந்து கூறிவிட முடியும்.

மேலும், பெரியாரின் எழுத்துக்களும் பேச்சுக்களும் பல்வேறு தலைப்புகளில் நூற்றுக்கணக்கில் வெளியிடப்பட்டுள்ளன; வெளியிடப்பட்டு வருகின்றன. பெரியார் நடத்திய வைக்கம் போர், இந்தி எதிர்ப்பு, பிள்ளையார் சிலை உடைப்பு போன்ற பல வகைப்பட்ட போராட்டங்கள் குறித்த விளக்கங்களும் தனித்தனியே நூல் வடிவம் பெற்றுள்ளன. தமிழக வரலாற்றை மாற்றியமைக்கக்கூடிய வகையில் பெரியார் நடத்திய மாநாடுகள், வெளியிட்ட அறிக்கைகள் போன்றவற்றின் விவரங்களும் நூல்களில் பதியப்பட்டிருக்கின்றன. எடுத்துக்காட்டாக, '1929 செங்கல்பட்டு முதல் சுயமரியாதை மாநாடு', 'செங்கல்பட்டு முதல் தமிழ் மாகாண சுயமரியாதை மகாநாடு - ஒரு வரலாற்றுத் தொகுப்பு' போன்றவற்றைக் குறிப்பிடலாம். பெரியாரின் கொள்கை விளக்க நூல்களாக ஆசிரியர் வீரமணி அவர்கள் எழுதிய 'பெரியாரியல்' (5 பகுதிகள்), 'அய்யாவின் அடிச்சுவட்டில்' (7 பகுதிகள்) ஆகியனவும் நமக்குக் கிடைக்கின்றன. தமிழ் மண்ணுக்கு அப்பால் பெரியாரின் செயல்பாடுகளை வெளிக்காட்டும் வகையில் 'வடநாட்டில் பெரியார்' (2 பகுதிகள்), 'அய்ரோப்பாவில் பெரியார்', 'மலேசியா சிங்கப்பூரில் பெரியார்' போன்ற நூல்களும் இருக்கின்றன. பெரியாரைப் பற்றிப் பிற தலைவர்கள், அறிஞர்கள், படைப்பாளர்கள், ஆய்வாளர்கள் எழுதியனவும் வந்துள்ளன.

பெரியாரின் முழுமையான பங்களிப்பினை இவையெல்லாம்பல்வேறுகண்ணோட்டங்களில் தெரியப்படுத்துகின்றன. ஒருவர் எந்தப் பார்வையில் பெரியாரைப் பார்க்க விரும்பினாலும் அவ்வாறு நோக்கத்தக்க அளவில் நூற்றுக்கணக்கான படைப்புகள் நம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண் முன்னே காத்திருக்கின்றன. எனவே, பெரியார் பற்றிய நூல்களுக்கும் பதிவுகளுக்கும் குறைவில்லை, பஞ்சமில்லை என்று துணிந்து கூற முடியும். இவற்றோடு பெரியார் எழுத்துக்களும் பேச்சுக்களும் நிறைவு பெற்று விடவில்லை என்பதையும் காண வேண்டியுள்ளது. பெரியாரியத்தின் இருப்பும் வேண்டலும் புரிதலும் அடுத்தடுத்த தலைமுறையினருக்கு வலுவுடன் மேலும் கொண்டு செல்லப்பட வேண்டும்.

ஆனைமுத்து அய்யா அவர்களின் 'பெரியார் ஈ.வெ.ரா. சிந்தனைகள்' முதல் முயற்சியாக தேர்ந்தெடுக்கப்பட்ட படைப்புகள் என்ற வகையில் 1974இல் மூன்று தொகுதிகளாக வெளிவந்தன. பின்னர் விரிவாக்கம் செய்யப்பட்டு இருபது தொகுதிகளாக வெளிவந்திருந்தபோதிலும், அவையும் தேர்வு செய்யப்பட்ட படைப்புகள்தாம். அடுத்தடுத்துப் பலரது முயற்சிகள் பெருமளவில் பெரியாரின் எழுத்துக்களையும் பேச்சுக்களையும் நூல் வடிவில் வெளிக்கொண்டு வந்தன என்றாலும், அவை யாவும் தேர்ந்தெடுக்கப்பட்ட படைப்புகளாகவே அமைந்துவிட்டன.

தாய் அமைப்பு என்ற வகையில் திராவிடர் கழகம் பெரியாருடைய எழுத்துக்களையும் பேச்சுக்களையும் முழுமையாகக் கொண்டுவரும் முயற்சிகளில் ஈடுபட்டுள்ளது வரவேற்கத்தக்கதுதான். 'பெரியார் களஞ்சியம்' என்ற பொதுத் தலைப்பிட்டு, கடவுள் (5 தொகுதிகள்), மதம் (7 தொகுதிகள்), பெண்ணுரிமை (5 தொகுதிகள்), ஜாதி (17 தொகுதிகள்), பகுத்தறிவு (3 தொகுதிகள்), திருக்குறள் - வள்ளுவர் (ஒரு தொகுதி) ஆகிய பொருள்களில் வெளிவந்துள்ள 38 தொகுதிகளும், தனித்தனிக் கால வரிசையில் கொடுக்கப்பட்டுள்ளன. 'குடியரசு' இதழில் வெளியான படைப்புகள் கால அடிப்படையில் 42 தொகுதிகளாக வந்துள்ளன. இவை யாவற்றையும் ஒன்றிணைத்து, பெரியாருடைய எழுத்துக்களும் பேச்சுக்களும் அடங்கிய படைப்புகள் யாவும் கால அடிப்படையில் முழுமையாக, பெரியார் படைப்புகள் அல்லது பெரியாரின் தொகுப்பு நூல்கள் அல்லது வேறு ஏதாவது ஒரு பொருத்தமான பெயரில் வெளியிடுவது இன்றைய வேண்டலாகும். பொருள் அடிப்படையில் கால வரிசை என்பது கருத்துக்கள் அடுத்தடுத்து முழுமை பெற்றுவந்ததைக் காட்டுவதாக அமையும் என்பதில் அய்யமில்லைதான். இருப்பினும், அனைத்துப் பொருள்களையும் சேர்த்துக் கால வரிசையில் கொடுக்கும்போது, பெரியாரியலுக்கான அடிப்படைத் தரவுகளாகவே அவை அமைந்து பயன் தரும். ஒரு பொருளோடு தொடர்புள்ள மற்றொரு பொருள் குறித்த ஒப்பீட்டுக்கும் அவை துணையாக அமையும். கருத்துருவாக்கம் செழுமை பெற வெவ்வேறு பொருள்களின் புரிதல்கள் எவ்வாறு அடுத்தடுத்துப் பயனாக அமைந்தன என்பதும் தெளிவாகும்.

பல மொழிகளில் பெரியாரது படைப்புகள் வெளிவரும்போது, அந்தந்த மொழியினரின் புரிதலுக்கும் பயன்பாட்டுக்கும் ஏதுவாகக் கால அளவிலான முழுமைத் தொகுப்புகளே துணையாகும். மார்க்சு, எங்கல்சு, லெனின் போன்றோரது படைப்புகள் தனித்தனியாகப் பொருள் அடிப்படையில் நூல்களாக வந்திருக்கின்றன. அடுத்துத் தேர்வு செய்யப்பட்டவையும் பல தொகுதிகளாக வெளியிடப்பட்டுள்ளன. இருந்தாலும், அவர்களுடைய படைப்புகள் அனைத்தும் முழுமையாகத் தொகுத்துக் கால வரிசையில் பல தொகுதிகளாக கொண்டுவரப்பட்டுள்ளன என்பதை மனதில் கொள்ளவேண்டும்.

இந்திய ஒன்றியத்தில் காந்தி, அம்பேத்கர் ஆகிய இருவருடைய படைப்புகளும் கால வரிசையில் முழுமையாகத் தொகுக்கப்பட்டுப் பல மொழிகளில் வெளியிடப்பட்டுள்ளன. ஒன்றிய அரசின் பெரும் பொருள் நல்கையுடன் காந்தியின் படைப்புகள் பல தொகுதிகளாக வெவ்வேறு மொழிகளில் கொண்டுவரப்பட்டன. காந்தி எழுத்துக்களின் தாக்கங்களும் எதிர்பார்ப்புகளும் இன்றைய காலச் சூழலில் பெருமளவிலான வரவேற்பினைப் பெறவில்லை என்பதால் தொடக்க முயற்சிகளுக்குப் பின்னர் அடுத்தடுத்த பதிப்புகளை வெளியிடுவதில் ஆர்வம் காட்டப்படவில்லை. அம்பேத்கரை பொருத்தவரை, அவரது நூற்றாண்டினையொட்டி அப்போது தலைமை அமைச்சராக இருந்த வி.பி. சிங் அவர்கள் பெரும் பொருளை ஒதுக்கி, ஒன்றியத்தின் பல மொழிகளில் அனைத்துத் தொகுப்புகளும் வெளிவர வாய்ப்பளித்தார்.

தோழர் மாஜினி அவர்களது பொறுப்பில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பலர் இணைந்து அம்பேத்கரின் படைப்புகளைத் தமிழில் மொழிபெயர்த்து 37+1 தொகுதிகளாக நியூ செஞ்சுரி நூல் நிறுவனத்தின் சார்பில் மிகக் குறைந்த விலைக்குக் கிடைக்கச் செய்தனர். இவையெல்லாம் விரைவில் விற்றுத் தீர்ந்துவிட்டன என்பதையும் மறந்துவிடக்கூடாது. அம்பேத்கர் எழுத்துக்களின் வேண்டல் என்பதோடு, குறைந்த விலை என்பதும் விரைவு விற்பனைக்குத் துணையானது.

தற்போது மொழிபெயர்ப்புச் செம்மையுடன் மீண்டும் 10* தொகுப்புகள் வெளிவந்துள்ளன. நூறு தொகுதிகளாக வெளியிடத் திட்டமிடப்பட்டுள்ளதாகத் தெரிகிறது. இந்தப் பணிகளுக்காகத் தமிழ்நாடு அரசு 5 கோடி ரூபாய் பொருள் ஒதுக்கியுள்ளது பாராட்டத் தக்கதாகும். 300 பக்கங்கள் என்ற வரையறையுடன் 100 ரூபாய் விலையில் இவை விற்கப்படுகின்றன. தமிழ்நாட்டரசின் தமிழ் வளர்ச்சித் துறையும் நியூ செஞ்சுரி நூல் நிறுவனமும் இணைந்து இப்பணிகளை மேற்கொண்டுள்ளன. அரசு உதவி இல்லையெனில் இந்த தொகுப்பு நூல்கள் ஒவ்வொன்றின் விலையும் ரூ. 300 முதல் 400 வரை இருந்திருக்கும். தமிழ்நாடு அரசின் உதவியினாலேயே மிகக் குறைந்த விலையில் நூல்களைத் தர முடிகிறது.

பெரியாரது படைப்புகளைப் பொருள் அளவிலான நூல்களாகவோ, தேர்வு நூல்களாகவோ வெளியிட்ட பெரியார் இயக்கத்தினர் அனைவரும் வணிக நோக்கோடு விலையிடவில்லை என்பது உண்மைதான். கொள்கைப் பரப்பு நோக்கில் குறைந்த விலையில் பெரியார் நூல்கள் விற்கப்பட்டாலும், அன்றைய உற்பத்திச் செலவுகளுக்கு ஈடுகட்டக்கூடிய அளவில் விலை வைப்பதும் தவிர்க்க முடியாததாகிவிடுகிறது.

இன்றைய அரசியல் சூழலில் பெரியார் படைப்புகளை வெளியிட ஒன்றிய அரசு பொருள் ஒதுக்கீடு செய்யும் என்று எதிர்பார்க்க வேண்டியதில்லை. ஆனால், கடந்த 58 ஆண்டுகளாகத் தொடர்ந்து ஆட்சியில் இருந்துவரும் பெரியாரை ஏற்றுக்கொண்டுள்ள கட்சிகள் இரண்டும் பொருளுதவி செய்திருக்கலாம். செய்யவில்லை என்பதைப் பேசுவது தனி அரசியல் ஆகிவிடக்கூடாது. இன்றைய நிலையில், கட்சி அரசியலுக்குள் பெரியாரைக் கொண்டுவர வேண்டியதில்லை. இனிச் செய்யவேண்டியது என்ன என்பதை மட்டுமே எண்ணவேண்டும்.

பெரியார் படைப்புகள் அனைத்தையும் கால அடிப்படையில் தொகுத்தால் 200 தொகுதிகளையும் தாண்டலாம். பெரியாரது பொதுக்கூட்டம் அல்லது நிகழ்வுகளின் உரைகள் பெரிதும் பெரியார் நடத்திய இதழ்களிலேயே முழுமையாக வெளியிடப்பட்டிருப்பதால், அவை யாவும் உண்மைத் தன்மை கொண்டவையாகவே அமைந்துவிட்டன. எனவே, பெரியாரது எழுத்துக்களும் பேச்சுக்களும் ஒரே தன்மை கொண்ட படைப்புகளாகவே கருதத் தக்கனவாக அமைந்துள்ளன.

தமிழில் இவற்றைக் கால வரிசையில் வெளியிடத் தமிழ்நாட்டரசு பொருள் ஒதுக்கீடு செய்யவேண்டும். பெரியாருடைய அனைத்துப் படைப்புகளையும் வெளியிடுவதை உறுதி செய்யவேண்டும். இதனால், தொடக்க நிலையில் இரண்டு பயன்கள் கிடைத்துவிடுகின்றன.

முதலாவது, பெரியாரது எழுத்துக்கள் அனைத்தும் கால வரிசையில் முழு வடிவம் பெற்றுவிடுகின்றன.

அடுத்து, இந்த நூல்கள் யாவும் மிக மிகக் குறைந்த விலையில் மக்களைச் சென்றடையும் வாய்ப்பினைப் பெறுகின்றன.

இந்தப் பணிகளை மேற்கொள்ள, பெரியார் கொள்கைகளுக்காகத் தங்களை முழுமையாக ஈடுபடுத்திக்கொண்டிருக்கின்ற இயக்கத்தினர், தனியார் சிலர் கொண்ட குழு ஒன்றினைத் தமிழ்நாடு அரசு அமைக்கலாம்.

பெரியார் படைப்புகள் தொடர்பான இதழ்கள், நூல்கள் போன்ற அனைத்தையும் திரட்டிக் கால அளவில் ஒழுங்குப்படுத்தி வெளியிடும்போது, முன் வெளியீட்டுத் திட்டம், விலை குறைவு போன்ற வாய்ப்புகளால் பல்லாயிரக்கணக்கில் அவற்றுக்கு வேண்டுதல் இருக்கும் என்பதில் ஐயமில்லை.

இத்தகைய பணிகளில் பெரியார் பற்றாளர்கள் பலரும் ஏதோவொரு வகையில் தொடர்ந்து ஈடுபட்டு வருவோராகவே இருக்கின்றனர். இதனால், தொகுப்பு முயற்சிகளை முன்னெடுப்பதும் முறைமைப்படுத்துவதும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முழுமைப்படுத்துவதும் பெரும்பணியாகத் தெரிந்தாலும், எளிதில் நிறைவேற்றக்கூடியனவாகவே அமைந்திருக்கும்.

இத்தகைய பணிகள் தொடங்கப்பட்டு நடைபெற்றுக்கொண்டிருக்கும்போதே, பெரியார் படைப்புகளை ஆங்கிலத்தில் மொழியாக்கம் செய்கின்ற கடமையையும் உடன் நிகழ்வாக மேற்கொள்ளலாம். ஆங்கில மொழிபெயர்ப்புதான் பெரிதும் அடிப்படையாக அமைந்து பிற மொழிகளுக்குச் செல்ல உறுதுணையாக இருக்கப்போகிறது.

பல கருத்துக்கள், விவரங்கள், விளக்கங்கள் போன்றவை திரும்பத் திரும்ப வருவனவாக இருக்கும் என்பது உண்மைதான். இருப்பினும், அவை யாவற்றையும் ஆவணங்களாக, தரவுகளாக எடுத்துக் கொள்ளவேண்டுமேயன்றிப் புறக்கணிக்கவோ அல்லது கழிக்கவோ எண்ணவேண்டியதில்லை. ஒரு பொருளை விளக்கிப் பேசும்போது அல்லது எழுதும்போது, ஒரு சொல் அல்லது ஒரு வரிகூடப் புதிய பொருளைக் கொடுக்கலாம்; விவரங்களைச் செறிவாக்கலாம்; முழுப் புரிதலைத் தரலாம். தொகுப்பு முயற்சிகளில் இவையெல்லாம் இயல்பானவையாக இருக்கின்றன என்பதையும் நினைவில் கொள்ளவேண்டும்.

பெயர்கள், நிகழ்வுகள் போன்றன வரலாற்றில் இடம்பெற்றிருந்தாலும், இன்றைய தலைமுறையினருக்குத் தெரியாமல் இருக்க வாய்ப்புகள் மிகுதி. இவற்றைப் புரிந்துகொள்ளும் அளவில் குறிப்புகள் தரப்பட்டால், தொகுப்பின் பயன் முழுமையடையும். ஆனைமுத்து அய்யா அவர்கள், 'பெரியார் ஈ.வெ.ரா. சிந்தனைகள்' நூல் தொகுப்பினை விரிவுபடுத்திச் செம்மையுடன் வெளியிட்டபோது இத்தகைய பணியினைச் சிறப்புற மேற்கொண்டிருந்தார்.

ஆசிரியர் வீரமணி அய்யா போன்றோருடன், பெரியாரியலில் ஆழம் கண்ட பல அறிஞர்கள் இன்று இருக்கின்றனர். இவர்களோடு அண்மைக் கால வரலாற்றினை ஆய்வு செய்து வரும் அறிஞர்களின் பங்களிப்பினையும் வேண்டுமெனில் பெற்றுக்கொள்ள இயலும். குறிப்பாக, ஆங்கிலத்திலும் பிற இந்திய ஒன்றியத்தின் மொழிகளிலும் பெரியார் படைப்புகளை வெளியிடும்போது, விவரக் குறிப்புகள் முற்றாகப் புரிதலுக்கான பின்னணித் தகவல்களாக அமைந்துவிடும்.

இந்தப் பெரும் பணியோடு இணைந்து செய்யவேண்டிய வேறு சில கடமைகளும் காத்திருக்கின்றன.

1. பெரியார் வரலாறு

2. பெரியார் கைப்பட எழுதிய மடல்கள், குறிப்புகள்

3. பெரியார் தொடர்பான படங்கள்

4. பெரியாரது காலத்தில், அவரது செயல்பாடுகள் குறித்துப் பல்வேறு இதழ்கள் வெளியிட்ட செய்திகள், கட்டுரைகள், நேர்காணல்கள்

5. பெரியார் குறித்த நிகழ்வுகளின் நாள் குறிப்புப் பதிவுகள்

போன்ற அனைத்தும் ஆவணப் பதிவுகளாகத் திரட்டப்படுவதும் நாளைய தலைமுறையினருக்கான அறிமுகமாகவும் வழிகாட்டுதலாகவும் அமையும்.

பெரியார் காலத்திலேயே, 1939 வரையிலான அவரது வாழ்க்கை வரலாற்றினைத் 'தமிழர் தலைவர்' என்ற தலைப்பிட்டு சாமி. சிதம்பரனார் அவர்கள் முதல் பகுதியாகப் பதிவு செய்தார். இதன் தொடர்ச்சியினை, 'உலகத் தலைவர் பெரியார் வாழ்க்கை வரலாறு' என்ற தலைப்பில் ஆசிரியர் வீரமணி அவர்கள் இரண்டு முதல் பத்து தொகுதிகள் வரை விரிவாக எழுதியிருக்கிறார்.

மேலும், கவிஞர் கருணானந்தம் 1979இல் பெரியார் வரலாற்றினை 800 பக்க அளவில் வெளியிட்டிருக்கிறார். சென்னைப் பல்கலைக்கழகத் துணைவேந்தராக இருந்த நெ.து. சுந்தரவடிவேலு அவர்கள் ஆயிரம் பக்க அளவில் எழுதியிருந்த பெரியார் வரலாறு வெளிவராமல் இருப்பதாகக் கூறப்படுகிறது. இவர்களன்றி மஞ்சை வசந்தன், பேரா. நன்னன் போன்ற பலரும் பெரியார் வரலாற்றினைப் படைத்துத் தந்திருக்கின்றனர். 'இளைஞர்களுக்குத் தந்தை பெரியார் வரலாறு' என்று நாரா. நாச்சியப்பன் எழுதியதும், 'தந்தை பெரியாரின் கதை' என்று சுகுமாரின் படைப்பும் இளம் பருவத்தினருக்கான நூல்களாக வெளிவந்துள்ளன.

இவற்றுக்கு அப்பால், பெரியாரை முறையாக அறிமுகப்படுத்தும் நூல்கள் வரவேண்டியுள்ளன


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றுதான் கூறவேண்டும்.

இவற்றோடு, பெரியார் வரலாற்றை முழுமையாக விளக்கிக்கூறும் நூல்கள் பல பக்கங்களாக அமையாமல், எளிதில், விரைவில் படிக்கக்கூடியனவாகவும் வெளிவரவேண்டும். பல பக்கங்கள் கொண்ட வாழ்க்கை வரலாற்று நூல்கள் வேண்டியுள்ளன என்றாலும், அனைவரும் அவற்றை முழுமையாகப் படிப்பதற்கான வாய்ப்புகள் கிடைப்பதில்லை. இதனால், ஆழமான அறிமுகத்துடன் கூடிய சிறு நூல்களும் வெளிவரவேண்டும். இவையல்லாமல், மாணவர்களுக்குப் பாட நூலாக வைக்கும் அளவில் பெரியார் வாழ்க்கையினை அறிமுகப்படுத்தும் வகையிலான நூல்களும் வேண்டப்படுகின்றன. இவை பின்னர் ஆங்கிலத்திலும் பிற மொழிகளிலும் வெளியிட ஏதுவாக அமையும்.

பெரியார் அறையில் அமர்ந்து கொண்டு அரசியல் அல்லது பரப்புரை செய்தவராக இருக்கவில்லை. தான் வாழ்ந்த முதுமைக் காலம் வரை இயக்கத்தினரோடு தொடர்புகொண்டு இயங்கிக்கொண்டிருந்த பெருமகனார் அவர். இயக்கத் தோழர்களுக்கு அவர் தன் கைப்பட எழுதிய மடல்கள் நூற்றுக்கணக்கில் இருக்க வாய்ப்புகள் உண்டு. பெரியார் இயக்கத்தினர் பெரிதும் தலைமுறைகளாகக் கொள்கைப் பிடிப்பில் வளர்க்கப்பட்டிருப்போர் என்பதால், இத்தகைய மடல்களை அவர்கள் காத்து வைத்திருப்பர். ஒரு வரி மடலாகவும் அவை இருக்கலாம், பல பக்கங்கள் கொண்டனவாகவும் இருக்கலாம். இவற்றைத் திரட்டி ஒளியச்சுப் படமாகவே வெளியிட இன்றைய நுட்ப வளர்ச்சி ஒத்துழைக்கிறது.

காந்தி, அம்பேத்கர் தொடர்புடைய படங்கள் யாவும் நூல் வடிவில் வெளியிடப்பட்டிருக்கின்றன. பெரியார் நிகழ்வுகளில் எடுக்கப்பட்ட படங்கள் நூற்றுக்கணக்கில் அல்ல, ஆயிரக்கணக்கில் இருக்கலாம். இவை யாவும் முடிந்த அளவு பதிவு செய்யப்படவேண்டும்.

பெரியார் காலத்தில் அவரது செயல்பாடுகளை முழுமையாக வெளியிட அன்றைய இதழ்கள் பெரிதும் தயக்கம் காட்டின. வேறு வழியின்றிப் பதிவு செய்யவேண்டிய அழுத்தம் இருப்பினும், ஒரு பத்திச் செய்தியாக, ஒரு சில வரிகளில் முடித்துக்கொள்ளும் நடைமுறையே பெரிதும் பின்பற்றப்பட்டு வந்தது. அவரது நேர்காணல்கள் ஆனந்த விகடன், கல்கண்டு போன்ற இதழ்களில் விரிவாக வந்திருப்பதையும் மறக்க முடியாது. இவை யாவற்றையும் தொகுத்து வெளியிடலாம். காந்தியின் இறுதி 100 நாள்களில் அவர் குறித்து 'இந்து' ஆங்கில நாளிதழில் வெளியான செய்திகள் யாவும் திரட்டப்பட்டு, அவர்களது வெளியீடாக வந்திருப்பதை இங்குக் குறிப்பிடலாம்.

அடுத்து, காந்தியின் அன்றாடப் பணிகளை நாள், இடம் என்ற அளவில் நிகழ்வுகளின் விவரங்களை நூலாக்கி, ஒன்றிய அரசின் தகவல் ஒளிபரப்பு அமைச்சகத்தின் வெளியீட்டுப் பிரிவு வெளியிட்டிருக்கிறது. இதுபோன்று, பெரியாருடைய நாள் நிகழ்வுகளை வெளியிடலாம். ஆசிரியர் வீரமணி அவர்களின் 'உலகத் தலைவர் பெரியார் வாழ்க்கை வரலாறு' நூலின் ஒன்பது தொகுதிகளில் இவையெல்லாம் அடங்கியிருக்கின்றன என்றாலும், நாள், நிகழ்வு, ஊர், பேசிய தலைப்பு என்ற அளவில் மட்டும் தொகுத்துத் தந்தால் பெரியார் ஓய்வின்றிச் செய்யப்பட்டுக்கொண்டிருந்த விவரங்களை மட்டுமல்லாது, எங்கெல்லாம் சென்று தனது பரப்புரையினை முன்னெடுத்தார் என்ற விவரங்களும் எளிதில் மனதில் பதியும்படி கிடைக்கும்.

இவையன்றி, பெரியார் தொடர்பானவற்றை மேலும் வெவ்வேறு வகையில் வெளிப்படுத்த முடியும்.

பெரியார் சிலைகளிலும் சிலைகளின் கட்டமைப்பின் கீழ் எழுதப்பட்டுள்ள ஒரு சில வரிகளிலும் மட்டும் இன்று வாழ்ந்துகொண்டிருக்கவில்லை. பிற இன மக்கள் பெறாத, பார்க்காத விடியலைத் தமிழினத்துக்கு முன்னெடுத்தவராகப் பெரியார் இன்றும் வாழ்ந்துகொண்டிருக்கிறார். அவருடைய பணிகள் இன்னும் தமிழ்நாட்டிலேயே முற்றுப்பெறவில்லை என்பதை மறந்துவிடக்கூடாது.

முருகன் வேலினைத் தூக்கிக்கொண்டு வெறி ஊர்வலம் சென்றாலும், திருப்பரங்குன்ற மலை உரிமை குறித்துப் பேரணிகள் நடத்தினாலும், தமிழ்நாட்டின் மக்களைத் திக்கு மாற்றிவிட முடியாது என்ற அளவில் தமிழ்நாடு தெளிவு பெற்றிருக்கிறது. இருப்பினும், ,ப்கைவர்களின் முயற்சிகள் தொடர்ந்துகொண்டுதான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்கின்றன. அவர்களுடைய முயற்சிகள் யாவும் முளையிலேயே கிள்ளி எறியப்பட்டுவிடுகின்றன என்பதும் உண்மைதான். இதற்கான அடிப்படை, சமூக மறுமலர்ச்சிக் கருத்துக்கள் இங்கு தொடர்ந்துகொண்டிருக்கின்றன என்பதால்தான் என்பதைப் பெரியார் பற்றாளர்களும் முற்போக்காளர்களும் உணர்ந்துகொண்டிருக்கின்றனர்.. முற்போக்கு எண்ணங்களும் கல்வியறிவும் மிக்க மாநிலமாகக் கருதப்படும் கேரளத்தில்கூட, சபரிமலை அய்யப்பன் கோயிலுக்கு மகளிர் செல்லலாம் என்ற உச்ச நீதிமன்றத் தீர்ப்பு வந்தபோது, அதனை ஏற்றுக்கொண்டதால், அடுத்த தேர்தலில் பொதுவுடைமைக் கட்சியினரைக் கொண்ட கூட்டணி தோல்வியைத் தழுவ வேண்டியதாயிற்று. இதைப் போன்று, பிற மாநிலங்களில் மக்களை பிளவுபடுத்தி வாக்குகளை அள்ளுகின்ற பா.ச.க.வின் செயல்முறைகள் ஓரளவு வெற்றியினைக் கண்டுகொண்டிருக்கின்றன.

இதனால், முன் எப்போதையும்விடத் தற்போது பெரியாரின் வேண்டல்கள், தமிழ்நாட்டைத் தாண்டியும் செல்லவேண்டிய நெருக்குதல்கள் உள்ளாகியிருக்கின்றன. சமூக மறுமலர்ச்சி என்ற அளவில், சமூக நீதியினை அடிப்படையாகக் கொண்டு பிற மாநிலங்களில் உள்ள மக்கள் தெளிவு பெறாத நிலையில் நீடித்துக்கொண்டிருக்கின்றனர். அரசியல் அடிப்படையில் தெளிவு பிறந்தாலும், சமூகத் தடைகள் குறுக்கிட்டுத் தடுப்பதைக் காண முடிகிறது. பெரியாரது அனைத்துப் படைப்புகளையும் தொகுத்து, தமிழ்நாட்டைத் தாண்டிப் பிற இனங்கள் சார்ந்த மொழிகளில் வெளியிடுவது மட்டுமே தீர்வு என்று கூற முடியாது. ஆனால், இது முதல் படியாக அமையும் என்பதில் சிறிதும் அய்யமில்லை. இந்த முயற்சியினை அடுத்து, பெரியாரியத்தினை உள்வாங்கிக்கொண்டு முற்போக்கு இயக்கங்கள் தங்கள் செயல்பாடுகளை வடிவமைத்துக் கொண்டால்தான் மாற்றங்களுக்கான வழி பிறக்கும். பகைகளை வெல்ல முடியும்.

தற்போதைய தமிழக முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள், தமிழ்நாட்டின் உரிமைகளை வென்றெடுப்பதோடு நின்றுவிடாமல், பிற மாநிலங்களுக்கு எடுத்துக்காட்டாகப் பல முன்னெடுப்புகளை நிகழ்த்தி வருகிறார். மாநிலங்களுக்கான உரிமைகளை வென்றெடுக்கத் தமிழகம் மட்டும் போராடினால் போதாது. சமூக மறுமலர்ச்சி – சமூக நீதி என்ற விடியலுக்குள் நுழைந்தால்தான், பிற மாநிலங்களில் உள்ள இன மக்கள், மாநில உரிமைகள், தன்னாட்சி, தனித்துவம் போன்றவற்றைப் புரிந்துகொள்ள முடியும்.

அதற்கான முதல் முயற்சியாகப் பெரியாரது படைப்புகளை முழுமையாகத் தொகுத்து, கால வரிசையில் வெளியிடுவதை விரைவுபடுத்த வேண்டும். உடன் நிகழ்வாக, அவற்றை அனைத்து மொழிகளிலும் வெளியிடுவதற்கான ஏற்பாடுகளைச் செய்யவேண்டும். இவைதாம் முதல் கட்டமாகப் பெரியாரித்தின் பெரும்பயன்கள் தமிழக எல்லைகளைத் தாண்டுவதற்குத் துணையாக அமையும்.

இந்தப் பணிகளைத் தமிழ்நாடு அரசு தானாக முன்னெடுத்துப் பொருள் ஒதுக்கீடு செய்து நிறைவு செய்யவேண்டும். காந்திக்கு ஒன்றிய அரசு செய்தது. அம்பேத்கருக்கு மராட்டிய அரசு தொடக்கத்திலும், பின்னர் ஒன்றிய அரசும் செய்தன. தமிழ்நாடு இதில் பின்தங்கிவிடவில்லை என்பது உறுதிப்படவேண்டும். தமிழ்நாட்டின் தனித்தன்மைக்கு அடிப்படையாக இருக்கின்ற பெரியாரியத்துக்கு வேறு எவரும் உதவப்போவதில்லை. பெரியார் பற்றாளர்களோடு, பொதுவுடைமையினர் உள்ளிட்ட அனைவரும் தமிழக முதல்வர் பார்வைக்கு இதனைக் கொண்டு செல்லவேண்டும். அகழ்வுகளை விரிவுபடுத்தி, இரும்பின் காலத்தை வெளிக்கொண்டுவருவதில் தொடங்கி, மாநில உரிமைகளை நிலைநாட்டுவது வரை பல நகர்வுகளுக்குத் தமிழ்நாடு அரசு முன்னிரிமை கொடுத்து வருகிறது. தமிழக முயற்சிகளுக்குத் துணை நிற்க மற்ற மாநிலங்களையும் அணியப்படுத்துவது காலத்தின் வேண்டலாகும்.

இதற்கு, பெரியாரியத்தின் பெரும்பயன்கள், தமிழகத்தின் எல்லைகளைத் தாண்டிச் சென்றாகவேண்டும் என்பதுதான் முதல் புரிதலாக இருக்கிறது; முழுமையான புரிதலும் அதுதான்.

●

கட்டுரையாளர்: பேராசிரியர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டுரை | **தி.சிகாமணி**



# ஆர்த்தெழும் உரிமைக் குரல்.. அச்சுறுத்தப்படும் நீதிமன்றம்..

இது காலங்களில் மிக மோசமான காலம்.. இது காலங்களில் மிக நல்ல காலம் என்று *"A Tale of two cities"* நாவலின் துவக்க வரிகளில் விவரிப்பார் சார்லஸ் டிக்கன்ஸ். இந்த வரிகள் பொருந்தும் வகையில் இன்றைய இந்திய அரசியல் சூழல் காட்சியளிக்கிறது.

11 ஆண்டுக்கால மோடி ஆட்சி ஜனநாயக அமைப்புகளை சீர்குலைத்து வருகிறது. படிப்படியாக பாசிசம் படர்கிறது. சி.பி.ஐ தொடங்கி எல்லா விசாரணை அமைப்புகளும் ஏவல் அமைப்புகளாக மாறிவிட்டன. தேர்தல் கமிஷனும் சந்தேக வலையில் சிக்கிவிட்டது. ஒன்றிய அரசு மாநிலங்களின் நிதி வசூலிக்கும் உரிமையை பறித்ததோடு நிற்காமல் தமிழ்நாட்டை வஞ்சிக்கும் விதமாக திட்டங்களுக்கான நிதியைத் தராமல் முடக்கி வைக்கிறது. தென் மாநிலங்களின் நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையைக் குறைத்து பிரதிநிதித்துவ உரிமையை பறிக்கப் பார்க்கிறது. எதிர்க்கட்சிகள் என்ன சொன்னாலும் கேட்காமல் ஒரே நாடு ஒரே தேர்தல் என்ற எதேச்சதிகார முறையை திணிக்கப் பார்க்கிறது. ஜனநாயகத்தை கேலிக்கூத்தாக்கும் வகையில் நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் அடாவடிகளை அரங்கேற்றுகிறது. இந்நிலையில் காரிருளில் ஒளிக்கீற்றாக ஏப்ரல் எட்டாம் தேதி உச்ச நீதிமன்றத் தீர்ப்பு வந்துள்ளது. மூன்று ஆண்டு காலத்திற்கு மேலாக கிடப்பில் போடப்பட்டிருந்த தமிழ்நாட்டு சட்ட மசோதாக்களுக்கு 142-வது பிரிவு தரும் அசாதாரண அதிகாரத்தை பயன்படுத்தி உச்சநீதிமன்றம் ஒப்புதலை வழங்கியுள்ளது. மூன்று மாத காலத்தில் சட்ட மசோதாக்கள் குறித்து ஆளுநர், குடியரசுத் தலைவர் முடிவெடுக்க வேண்டும் என்றும் அறிவுறுத்தி இருப்பது சட்டமன்றங்களின் இறையாண்மைக்கு கிடைத்த ஊக்கமாகும். கூட்டாட்சி தத்துவத்திற்கு அளிக்கப்பட்ட மரியாதையாகும்.

**ரவியின் நடத்தையை விமர்சித்த நீதிமன்றம்**

பஞ்சாப் ஆளுநர் காலவரையின்றி சட்ட மசோதாக்களை நிறுத்தி வைத்ததை உச்சநீதிமன்றம் கண்டித்தது. மசோதாக்களுக்கு ஒப்புதல் எவ்வளவு வேகமாக முடியுமோ அவ்வளவு வேகமாக செய்யப்பட வேண்டும் என்று சட்டத்தில் குறிப்பிட்டுள்ள நிலையில் ஆண்டுக் கணக்கில் முடிவெடுக்காமல் இருப்பது எப்படிச் சரியாகும் என்று உச்சநீதிமன்றம் கேட்டிருந்தது. இந்த தீர்ப்புக்குப் பிறகு ஆளுநர் ஆர்.என். ரவி கிடப்பில் வைத்திருந்த பல்கலைக்கழகங்களின் அதிகாரம் தொடர்பான 10 மசோதாக்களை மீண்டும் தமிழ்நாடு அரசுக்கு அனுப்பி வைத்தார். அந்த மசோதாக்களை உடனடியாக மீண்டும் நிறைவேற்றி தமிழ்நாடு அரசு ஆளுநருக்கு அனுப்பியது. அதற்கு அவர் உடனடியாக ஒப்புதல் அளித்திருக்க வேண்டும். சட்டப்படி அதுதான் சரியானது. ஆனால் அதைச் செய்யாமல் மசோதாக்களை குடியரசுத் தலைவருக்கு அனுப்பி வைத்தார். அப்படிச் செய்ய சட்டப்படி ரவிக்கு எந்த அதிகாரமும் இல்லை என்று உச்சநீதிமன்றம் குட்டு வைத்துள்ளது. ஒவ்வொரு கட்டத்திலும் ஆளுநர் சட்டமன்றத்தின் நோக்கத்தையும் தனது செயல்களுக்கான நீதிமன்ற ஆய்வையும் முறியடிக்க முயன்றார் என்று தீர்ப்பில் ஆளுநரை விமர்சித்துள்ளது. ஆளுநரின் நடத்தை நல்லெண்ணம் இல்லாததாக இருந்தது என்று வெளிப்படையாகவும் கண்டித்துள்ளது. *(Governor acted without bonafides)*

மானம், ரோஷமுள்ள மனிதர் என்றால் ரவி இந்தத் தீர்ப்பை அடுத்து பதவி விலகி இருக்க வேண்டும். ஆனால் ரவியின் எஜமானர்கள் அமித் ஷா, மோடி வகையறாக்கள் ஒரு நீண்ட கால திட்டத்தோடுதான் தமிழ்நாட்டில் ஆளுநர் மூலம் சதி வேலைகளைச் செய்கிறார்கள்.

ஆளுநரின் அதிகாரங்கள் வரையறுக்கப்படாமல் இருந்த நிலையில் அதில் சற்றே மாற்றம் ஏற்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்வாய்ப்புக் காலம் தொடங்குகிறது என்று மகிழ்ச்சி வந்தது. கேசவானந்த பாரதி வழக்கு, எஸ். ஆர் பொம்மை வழக்கில் தீர்ப்பு வந்தது போல் இந்தத் தீர்ப்பு மைல்கல் தீர்ப்பாகும்.

ஆனால் உச்ச நீதிமன்றத் தீர்ப்பை அணு ஏவுகணைத் தாக்குதல் *(atom missile attack)* என்று குடியரசு துணைத் தலைவர் ஜெகதீப் தங்கர் உளறுகிறார். உச்ச நீதிமன்றம் என்ன சூப்பர் நாடாளுமன்றமா? என்றும் கேட்கிறார். அவரின் பேச்சை பல ஆங்கிலப் பத்திரிகைகளின் தலையங்கங்கள் கண்டித்து உள்ளன. நீதித்துறையை அச்சுறுத்தும் முயற்சிகள் ஜனநாயகத்துக்கு ஆபத்தானவை என்று தெரிவித்து 'தி இந்து' பத்திரிகை ஏப்ரல் 23-ம் தேதி தலையங்கம் வெளியிட்டுள்ளது. நாடாளுமன்றம் இயற்றும் எந்தச் சட்டமும் அரசமைப்புச் சட்டத்தின் அடிப்படை உரிமைகளை மீறுவதாக இருக்கக்கூடாது என்று ஏற்கனவே தெளிவுபடுத்தப்பட்டுள்ளது *(Article 13 gives the judiciary the power to strike down laws that are violating fundamental rights)* நாடாளுமன்றமோ உச்ச நீதிமன்றமோ நிர்வாக அமைப்போ ஒன்றுக்கு ஒன்று உயர்வான நிலையை கொண்டதல்ல. அரசமைப்புச் சட்டம்தான் உயர்வானது என்ற அடிப்படை அறிவு கூட இல்லாமல் தங்கர் பேசுகிறார். நிஷிகாந்த் துபே போன்ற பாரதிய ஜனதா எம்பிக்கள் சிலரும் நீதிமன்றத்தை அச்சுறுத்துகிறார்கள். நாடாளுமன்றம்தான் உயர்வானது என்று பாரதிய ஜனதா கட்சியினர் சொல்வார்கள் என்றால் சட்டமன்றம் தான் மாநிலத்தில் உயர்வானது என்று ஆர்.என் ரவியும் அவரை ஆட்டுவிப்பவர்களும் ஏற்க மறுப்பது ஏன்? உண்மையில் உச்சநீதிமன்றம் இந்த மசோதாக்களை நிறுத்தி வைத்திருந்த ஆளுநர், குடியரசு தலைவருக்கு கண்டனத்தை வெளியிட்டு இருக்கலாம் என்று உச்சநீதிமன்ற முன்னாள் நீதிபதி செலமேஸ்வர் சென்னையில் நடந்த ஒரு கருத்தரங்கில் சொல்லியுள்ளார். மூன்று மாதத்தில் சட்ட மசோதாக்கள் விஷயத்தில் முடிவெடுக்க வேண்டும் என்ற உச்ச நீதிமன்றத்தின் உத்தரவு திடீரென்று முளைத்தது அல்ல. ஏற்கனவே உள்துறை அமைச்சகம் அத்தகைய வழிகாட்டுதலை வழங்கியுள்ளது.

நீதிமன்றம் சட்டமியற்றும் வேலையை எடுத்துக் கொள்ளக்கூடாது என்று சிலர் இந்த பிரச்சினையில் கருத்து சொல்கிறார்கள். உண்மையில் நீதிமன்றம் எந்த சட்டத்தையும் இயற்றவில்லை இயற்றப்பட்ட சட்டத்தை முடக்கப் பார்த்த அரசியல் கண்ணோட்டத்திற்கு தான் 'அடி' கொடுத்துள்ளார்கள்.

உச்சநீதிமன்றத்தின் இந்த உத்தரவுக்கு பின்பு மசோதாக்களுக்கு ஆளுநர் ஒப்புதல் தருவதில் குழப்பத்திற்கு வழி தரும் 200 சட்டப்பிரிவைத் திருத்த வேண்டும் என்று மக்களவை செயலகத்தின் முன்னாள் செயலாளர் P.D.T ஆச்சாரி கருத்து வெளியிட்டார்.

மசோதாக்களை நிறுத்தி வைக்கும் அதிகாரம் ஆளுநருக்கு இருக்கிறது என்று வாதிடுபவர்களிடம் கேட்க வேண்டிய கேள்வி இதுதான். ஒன்றிய அரசு நிறைவேற்றும் சட்ட மசோதாக்கள் விஷயத்தில் குடியரசுத் தலைவர் பாராமுகமாக இருந்து விட முடியுமா? சமீபத்தில் வக்பு சட்டத்திற்கு உடனுக்குடன் குடியரசு தலைவர் ஒப்புதல் தந்தாரே? 370 நீக்கப்பட்ட சமயத்தில் குடியரசுத் தலைவர் அதிகாரம் தவறாக பயன்படுத்தப்பட்டது. மாநில அமைச்சரவை ஒப்புதல் இல்லாமல் ஆட்சியை கலைத்து விட்டு ஜம்மு காஷ்மீர் மாநிலம் யூனியன் பிரதேசமாக பிரிக்கப்பட்டன. ஒன்றிய அரசுக்கு மட்டும் குடியரசுத் தலைவர் ரப்பர் ஸ்டாம்ப் ஆக பயன்பட வேண்டுமாம். ஆனால் ஆளுநர் மட்டும் மாநில அரசுக்கு எதிராகச் செயல்பட வேண்டும்.

வக்பு திருத்தச் சட்டம் தொடர்பான வழக்கு உச்சநீதிமன்றத்தில் வந்த போது இந்துக் கோயில் நிர்வாகத்தில் இஸ்லாமியருக்கு இடம் தருவீர்களா என்று கேள்வி எழுப்பிய உச்ச நீதிமன்றத்தை ஒன்றிய அமைச்சர் கிரண் ரிஜூ மிரட்டுகிறார். இவர்கள் விரும்புவது அடிபணிந்து போகக்கூடிய நீதிமன்றம். *(A committed judiciary).* தனக்கு ஆதரவாக இருப்பார் என்ற அடிப்படையில் பணி மூப்புக்கு மாறாக ஒரு நீதிபதிக்கு பதவி உயர் கொடுத்த இந்திரா காந்தி அன்று விமர்சனத்திற்கு ஆளானார். அன்று இந்திராவை விமர்சித்தவர்கள் இன்று நீதிபதிகளை அடிமையாக இருக்க வேண்டும் என்று எச்சரிக்கிறார்கள்.

அரசமைப்புச் சட்டத்தில் ஒத்திசைவு *(concurrent)* எனப்படும் பொதுப் பட்டியல்தான் பல குழப்பங்களுக்கு காரணமாய் இருக்கிறது. ஒத்திசைவு பட்டியல் அதிகாரங்களை முன்பே மாநிலங்களிடம் ஒப்படைத்து இருக்கலாம். ஒத்திசைவு பட்டியலில் உள்ள அதிகாரங்கள் விஷயத்தில் சட்டமன்றம் சட்ட மசோதாவை நிறைவேற்றினால் அது குறித்து வேண்டுமென்றால் குடியரசுத் தலைவருக்கு ஆளுநர் அனுப்பி வைக்கலாம். நீட் விலக்கு மசோதாவை குடியரசுத் தலைவருக்கு அனுப்பி வைத்தது அந்தக் காரணத்தைச் சொல்லித்தான். ஆனால் அதையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரிய தாமதத்திற்கு பின்தான் செய்தார். அவ்வாறு போஸ்ட்மேனாகச் செய்ய வேண்டிய வேலையைச் செய்யாமல் எதிர்ப்பு அரசியலில் ஈடுபடுகிறார் ரவி.

### தங்கர் அடாவடியும் ரவியின் தோல்வியும்

தடாலடி தங்கரை ஒன்றிய ஏஜென்ட் ரவி சந்தித்து பேசி மற்றொரு சூழ்ச்சி நடவடிக்கையை மேற்கொண்டார். துணைவேந்தர்களை நியமிக்கும் வேந்தரின் அதிகாரம் மற்றும் மாற்றும் அதிகாரம் தற்போது முதல்வருக்கு வந்துவிட்டது. இதனால் முதல்வர் துணைவேந்தர்களை அழைத்து கூட்டம் நடத்தினார். இதற்கு போட்டியாக ஆளுநரும் ஏப்ரல் 25, 26 தேதிகளில் துணைவேந்தர்களை அழைத்து கூட்டம் நடத்தினார். பல்கலைக்கழகங்களின் வேந்தர் என்ற முறையில் அழைப்பு விடுப்பதாக அவர் அந்த அழைப்பிதழில் குறிப்பிட்டு இருந்தார். ஊட்டியில் ராஜ்பவன் வளாகத்தில் நடந்த இந்தக் கூட்டத்தில் மாநிலத்தின் 20 பல்கலைக்கழகங்களின் துணைவேந்தர்கள் யாரும் பங்கேற்கவில்லை குடியரசு துணைத் தலைவர் ஜெகதீப் தங்கரை சிறப்பு விருந்தினராக அழைத்து நீதிமன்றத்தின் தீர்ப்பை எதிர்க்க பயன்படுத்துகிறார். ஆனால் இது வழக்கமான கூட்டம் போட்டி கூட்டமல்ல என்று விளக்கம் தரும் நிலை அவருக்கு ஏற்பட்டது. பல்கலைக்கழக கல்வி நிலையை மேம்படுத்த மாநாடு என்று கூறிவிட்டு தமிழ்நாட்டு அரசு பள்ளிகளில் கல்வித் தரம் குறைந்து விட்டது என்று ரவி புகார் கூறினார் . தமிழ்நாட்டுக்கு எதிராக கருத்து கூற ஒவ்வொரு வாய்ப்பையும் ரவி பயன்படுத்தி வருகிறார். குருகுலக்கல்வி சிறந்தது என்று தங்கர் பேசியுள்ளார். மாநில அரசின் கல்விக் கொள்கைக்கு மாறாக தேசிய கல்விக் கொள்கையை பழமைவாதக் கருத்துக்களை.. இந்துத்துவ வெறியை புகுத்துவதுதான் அவரது அன்றாட வேலையாக மாறிவிட்டது .

2007:-ம் ஆண்டு ஐக்கிய முற்போக்கு கூட்டணி ஆட்சி காலத்தில் நீதிபதி மோகன் புஞ்ச் கமிஷன் மத்திய, மாநில உறவுகளை ஆராய்ந்தது. பல்கலைக்கழக வேந்தராக ஆளுநர்கள் இருக்கத் தேவையில்லை என்ற பரிந்துரையை அந்தக் கமிஷன் வழங்கியது. வேந்தர் பொறுப்பு ஆளுநர்களுக்கு மாநில சட்டமன்ற சட்டங்கள் மூலம் தான் கிடைத்தது என்பதையும் அந்தப் அரசமைப்புச் சட்டப்படி வழங்கப்பட்ட பதவி அல்ல என்றும் சரியான விளக்கத்தை அந்த கமிஷன் தந்தது. ஏதோ ஆளுநரின் உரிமையை பறிப்பதாக இப்போது சங்கிகள் புகார் செய்து வருகின்றன. அவர்கள் அந்த கமிஷன் பரிந்துரையை படித்தறிய வேண்டும்.

ஊட்டி கூட்டம் மூலம் ரவியும் தங்கரும் நீதிமன்றத்தின் மீது இருக்கும் மதிப்பை சீர்குலைத்து அராஜக உணர்வை ஏற்படுத்துகின்றனர். துணைவேந்தர்கள் அந்தக் கூட்டத்தில் பங்கேற்கவில்லை என்றால் அதற்கு காரணம் போலீஸ் மூலம் அவர்கள் மிரட்டப்பட்டனர் என்ற கற்பனையான குற்றச்சாட்டை கூட்டத்தில் தெரிவித்துள்ளார். இதை உயர் கல்வித்துறை அமைச்சர் கோவி. செழியன் மறுத்துள்ளார் மிரட்டுவது ஒன்றிய அரசின் வாடிக்கை என்று பதிலளித்துள்ளார்.

இன்றைய ஜனநாயகத்தின் மீதுள்ள நம்பிக்கையை நீதிமன்றத்தின் மீதுள்ள மரியாதையை சீர்குலைப்பதுதான் இவர்களைப் போன்ற சங்கிகளின் சதித் திட்டம். ஏற்கனவே தங்கர் மீது நம்பிக்கை இல்லாத் தீர்மானம் வந்தது. அவரை நீக்க வேண்டிய நடவடிக்கையில் மீண்டும் ஈடுபடுவது அவசியம்.

### நீதிபதி குரியன் குழு

இந்தப் போக்கெல்லாம் மாநிலங்களின் உரிமையை துச்சமாக மதிக்கும் அராஜகமாகும். இந்த நிலையில் ஓய்வு பெற்ற நீதிபதி ராஜமன்னார் தலைமையில் கலைஞர் குழு அமைத்தது போல மாநில உரிமைகளை மீட்டெடுக்க உச்ச நீதிமன்ற முன்னாள் நீதிபதி குரியன் ஜோசப் தலைமையில் ஒரு குழுவை முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அமைத்துள்ளார். முன்னாள் ஐ.ஏ.எஸ் அதிகாரி அசோக் வர்தன் ஷெட்டி, தமிழ்நாடு மாநிலத் திட்டக் குழுவின் முன்னாள் துணைத் தலைவர் மு. நாகநாதன் ஆகியோர் அந்தக் குழுவில் உள்ளனர். இந்தியாவின் தொலைநோக்கு சிந்தனைச் சிற்பி அறிஞர் அண்ணா வழியில் முன்னோடியாக இப்படி தமிழ்நாடு மாநில உரிமைகளுக்கு மீண்டும் குரல் கொடுக்க முன் வந்திருப்பதை பாராட்டி வரவேற்காமல் இதையும் திசை திருப்பும் நடவடிக்கை என்று அ.தி.மு.க போன்ற கட்சிகள் கூறுவது வேதனையானது. மாநிலங்களுக்கு உரிமை வேண்டும் என்று கேட்பது திமுகவின் கட்சி சார்ந்த பிரச்னையல்ல. இதை எதிர்ப்பவர்கள் மாநிலங்களுக்கு அதிகாரமே வேண்டாம் என்று சொல்ல முன்வருவார்களா? மாநில உரிமை வேண்டுமாம். ஆனால் அதை திமுக கழகம் கேட்கக்கூடாது என்பது அபத்தம். மாநில உரிமை கேட்பதை பிரிவினைவாதம் என்று தொடர்ந்து வியாக்கியானம் செய்கிறார்கள்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

1974 ல் மாநில சுயாட்சி தீர்மானம் சட்டசபையில் கொண்டு வந்த போதும் பிரிவினைவாதம் என்றுதான் சொன்னார்கள். மத்திய ஆட்சியில் திமுக கழகம் பங்கேற்ற காலங்களில் ஏன் மாநில உரிமைகளை கேட்டு பெறவில்லை என்று கேள்வி கேட்கிறார்கள். ராஜமன்னார் குழு அறிக்கைக்குப் பின்பு சர்க்காரியா கமிஷன், புஞ்ச் குழு என்று பல குழுக்கள் வருவதற்கும் மத்திய, மாநில உறவில் பல முன்னேற்றம் ஏற்படுவதற்கும் அடிப்படையாக தமிழ்நாடு இருந்திருக்கிறது. வாதத்திற்கு ஏற்றுக் கொண்டாலும் அன்று செய்யாததை இன்று திமுக செய்வதை தவறு என்று எப்படிக் கூற முடியும்? மேலும் மாநிலங்களுக்கு மாநில அதிகாரங்களை படிப்படியாக கபளீகரம் செய்யும் நடவடிக்கை மோடி ஆட்சி காலத்தில்தான் வேகம் அடைந்துள்ளது. அதனால் மாநில உரிமைக் குரல் ஓங்கி ஒலிக்க வேண்டிய காலகட்டம் வந்துள்ளது. மக்களவைத் தொகுதி மறுசீரமைப்பு விஷயத்தில் மு க ஸ்டாலின் முன்னின்று நடத்திய மாநில முதல்வர்களின் கூட்டம் மோடி அரசுக்கு எரிச்சலை ஏற்படுத்தி உள்ளது. மாநில உரிமைக்காக விழிப்போடு செயல்படும் மு க ஸ்டாலின் இந்தக் காலத்தின் நம்பிக்கை விளக்கு. இதேபோல் நிதிப் பகிர்வில் காட்டப்படும் அப்பட்டமான பாரபட்சம் காரணமாக பாஜக ஆட்சி செய்யாத மாநிலங்களும் ஒன்றுபட்டு குரல் கொடுக்க முன்வந்துள்ளன. அதற்கும் ஸ்டாலின் முன் கை எடுத்துள்ளார்.

எவ்வளவு நிதி கொடுத்தாலும் நிதி கேட்டு அழுகிறார்கள் என்று பிரதமர் மோடி ஆணவமாகப் பேசுகிறார். ஒன்றிய அமைச்சர் தர்மேந்திர பிரதான் தமிழ்நாட்டு எம்.பி.க்களைப் பார்த்து ஜனநாயகமற்றவர்கள்.. நாகரிகம் இல்லாதவர்கள் (*undemocratic and uncivilized* ) என்று திமிர்த்தனமாக பேசுகிறார்.

**பரவும் எதிர்ப்பு**

தேசிய கல்விக் கொள்கை மூலம் இந்தி மொழியை திணிக்கும் நடவடிக்கையை இன்று பல மாநிலங்கள் எதிர்க்கத் தொடங்கி உள்ளன. இதுவரை இந்தியை எதிர்க்காத மராட்டியத்தில் தற்போது இந்தி மொழித் திணிப்பு பிரச்சனையாக மாறியுள்ளது. ஆறாம் வகுப்பு முதல் ஹிந்தி மூன்றாவது மொழி என்று இருந்ததை மாற்றி அங்கு முதல் வகுப்பில் இருந்தே இந்தி மூன்றாவது மொழி என்று அறிவித்ததற்கு எதிர்ப்பு கிளம்பி இப்போது அந்த உத்தரவை வாபஸ் பெற்றுள்ளனர். மராத்தி மொழி உணர்வு, பெருமை மீண்டும் முகிழ்த்து விட்டது. இது அந்த மாநிலத்தோடு நிற்காது.

ஒற்றை ஆட்சி ஒற்றைக் கலாச்சாரம் பேசும் ஆர்எஸ்எஸ்-ன் பக்தர்களின் வெறித்தனம் நாடு முழுவதும் எதிர்ப்பை சந்திக்கத்தான் போகிறது. இந்தியா பல்வேறு மொழி, இனம் கலாச்சாரத்தை பன்முகத் தன்மையைக் கொண்டது என்பதை ஏற்காமல் தான்தோன்றித்தனமாக நடக்கிறார்கள். மாநிலங்களின் ஒன்றியம் தான் இந்தியா என்பதை ஏற்காமல் செயல்படும் ஆர் எஸ் எஸ் மற்றும் அதன் அரசியல் அமைப்பான பா.ஜ.க வை அரசியல் ரீதியாக தோற்கடிப்பதோடு அதன் ஏஜெண்டுகளாக கல்வி நிலையங்கள் அரசுத் துறையில் உள்ள புகுத்தப்பட்ட அதிகாரிகளையும் அம்பலப்படுத்த நாம் முன் வர வேண்டும்.

தமிழ்நாடு சார்பாக இன்று முன்வைக்கப்படும் பல்வேறு முழக்கங்கள் இந்தியா முழுவதும் சென்றடைய காலம் அதிகமாகலாம். ஆனால் நாம் பொறுமையோடு முயற்சிக்க வேண்டியது அவசியம். 1974 மாநில ஆட்சி தீர்மானம் நிறைவேற்றப்பட்ட போது நடந்த விவாதத்தில் அரசமைப்புச் சட்டத்தை வங்கக்கடலில் தூக்கி எறிய வேண்டும் என்பது தனது தனிப்பட்ட கருத்து என்று திமுக கழகத்தின் ஆலடி அருணா பேசினார். அது ஒன்றிய அரசின் அதிகாரக் குவிப்புக்கு எதிரான போர்க்குரல். அந்த எதிர்ப்புக் குரல் வேகமடைந்தால் அதற்கு ஒன்றிய அரசுதான் பொறுப்பேற்க வேண்டும்.

இப்போதைக்கு 200-வது சட்டப் பிரிவில் ஆளுநர் அதிகாரம் தொடர்பாக நிலவி வந்த குழப்பமான விளக்கங்களுக்கு தற்போது விடை கிடைத்துள்ளது அந்தச் சாதனையை செய்தது தமிழ்நாடு அரசின் முதல்வர் மு க ஸ்டாலின்தான். மற்ற மாநிலங்களுக்கும் இந்த உத்தரவு மூலம் நிவாரணம் கிடைக்கும். அந்த வகையில் ஸ்டாலினுக்கு வரலாற்றில் முக்கிய இடம் உண்டு. இந்த உரிமைக் குரல் ஓங்கி ஒலிக்க வேண்டும். இந்த உரிமை உணர்வை வளர்த்தெடுத்து கூட்டாட்சி மலர பாடுபட வேண்டும். இது ஏதோ ஒரு அரசியல் கட்சியின் வேலை என்று ஒதுங்கி நின்றோம் என்றால் நம்மை நாளடைவில் அடிமை நிலைக்கு தள்ளி விடும். இரண்டாம் தர குடிமக்கள் ஆகிவிடுவோம்.

●

கட்டுரையாளர்: மூத்த பத்திரிகையாளர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டுரை | வல்லபாய்



# 2026 தேர்தலும் திராவிடமும்

அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் பாரதிய ஜனதாக் கூட்டணி தேர்தலுக்கு ஒரு வருடம் முன்னதாகவே அரங்கேறியது தமிழகத்தில் ஒரு முக்கிய அரசியல் பேசுபொருளாகியிருக்கிறது. தலைநகர் பரிமாற்றங்களைச் சிறிது காலம் வரையிலும் இரகசியம் காக்க நினைத்த அதிமுக தலைமைக்கு அதற்கான கால அவகாசம் தராமலேயே பாஜக பட்டவர்த்தனமாக்கியதன் மூலம் அதிமுகவின் மேல் பாஜக தன் மேலாண்மையை அழுத்திக் கூறியிருக்கின்றது. பரஸ்பரப் புரிதல்களில்கூட தங்களை ஒரு பரிகாசமான நிலவரத்திற்கு ஏன் தள்ளிவிடுகிறீர்கள் என்று கேட்பதற்குக்கூட திராணியற்ற பரிதாப நிலவரத்திற்கு அதிமுக தலைமை தள்ளப்பட்டிருக்கிறது. தலைமையைக் காட்டிலும் தொண்டர்களின் கையறு நிலை, பொதுவெளியில் அவர்களுடைய சில ஸ்தல (திருப்பூர்) நிர்வாகிகள் கண்ணீர் விட்டுக் கதறும் காட்சிகளாய் அரங்கேறுகின்றன. ஆரம்பித்து அரை சத வருட காலமே முடித்திருக்கும் ஒரு தொண்டர் பலம் மிக்க மக்கள் இயக்கத்திற்கு ஏன் இத்தனை பெரிய வீழ்ச்சியும் அவலமான பின்னடைவும்?

அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் தொடக்கத்திலிருந்து முற்றிலும் ஒற்றைத் தலைமை ஆக்ரமிப்பில் வழிநடத்தப்பட்ட இயக்கம்; அதிலும் மிக உன்னதமான வெகுஜன ஊடகமாகிய திரைக் (சினிமா) கவர்ச்சியை முன்னிறுத்தி உதித்த தலைமை. அம்மையார் ஜெயலலிதாவோடு அது முடிந்துவிட்டது. அநேகமாக அனைத்து முதலாளித்துவ அரசியல் இயக்கங்களும் தனி நபர் ஆளுமைத் துதிபாடலில்தான் பயணிக்கின்றன என்றாலும் திரை (சினிமா)வழிப் பிரபலம் என்பது அதிமுகவின் தனித்துவம். தங்கள் இயக்கம் நூறாண்டு காலத்திற்கும் மேல் தழைத்துச் செழிக்கும் என்று கம்பீரித்து முழங்கிய அம்மையார் ஜெயலலிதாவுக்கு, தனக்குப் பின் அதை வழி நடத்த ஒரு சரியான தலைமையை அடையாளம் காட்டி வளர்த்தெடுக்க வேண்டும் என்கிற அக்கறை இல்லாது போனது துரதிர்ஷ்டம். அதற்கான விலையைத்தான் அதிமுக இப்பொழுது கொடுத்துக் கொண்டிருக்கிறது.

பிரதானப் போட்டியாகிய திமுகவைப் போலல்லாமல் ஒரு சாதாரணத் தொண்டனாகிய தன்னால் இத்துனை பெரிய மக்கள் இயக்கத்தின் தலைமைப் பொறுப்பிற்கு வர முடிந்தது என்று எடப்பாடியார் தன்னைக் குறித்தும் தன்னுடைய இயக்கத்தைக் குறித்தும் பெருமை பாராட்டிக் கொள்ளலாம். ஆனால் அது கூவத்தூரில் நடந்த ஏலத்தில் அவருக்குக் கிடைத்தது என்பதை அவர் மறந்துவிடலாம்; ஆனால் அதிமுக தொண்டனோ தமிழகமோ அங்கே அரங்கேறிய காட்சிகளை அவ்வளவு எளிதாக மறந்துவிடவில்லை. அதனால்தான் எடப்பாடியாரும் அவரது அமைச்சர் சகாக்களும் அடித்த கொள்ளையை, ஏலத்தில் கட்டிய பெருந்தொகையை மீட்டெடுக்கும் முயற்சியாக அவர்கள் கண்டுகொள்ளவில்லை. தவிரவும் இந்த தேசத்தின் பொது வெளிச் சமூக ஆன்மாவில் ஊழல் என்பது ஒரு ஏற்றுக்கொள்ளபட்ட, அங்கீகரிக்கப்பட்ட அரசியல் இலக்கணமாகிப் போனதாலும் அதை யாரும் பெரிதாகக் கண்டுகொள்ளவில்லை. பெருமளவிற்கு, இந்தியப் பொதுஜனம் இந்த விஷயத்தில் கம்யூனிஸ்ட்களையும் இடதுசாரிகளையும் தானும் படுக்காமல் தள்ளியும் படுக்காத தொந்தரவாய் அனுமானிப்பதால்தான் நடப்பு அரசியலில் அவர்களுக்கான பின்னடைவு. ஆனால் எடப்பாடியாரும் அவருடைய சகாக்களுமுடைய கனத்த மடிதான் அவர்களை டெல்லியின் முன் மண்டியிட வைக்கிறது என்பதுவும் ஊரறிந்த இரகசியம். ஆகவே எடப்பாடியாரின் "கொள்கை வேறு; கூட்டணி வேறு" என்கிற ஞான முழக்கங்களெல்லாம் ஆகப் பெரிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நகைச்சுவையாகவே இரசிக்கப்படுகின்றன.

தவிரவும் வரலாற்றில் சற்று பின்தள்ளிப் பார்த்தால் அதிமுகவின் உதயத்திலேயே சில கோணல்கள் இருப்பது புலப்படும். அவசரநிலை காலத்தையொட்டி அம்மையார் இந்திராகாந்தி அவர்களால் "தமிழ்நாடு ஒரு தனித் தீவாகவே இருக்கிறது" என்ற சான்றிதழைப் பெற்றிருந்தது. கலைஞரின் ஆட்சி கலைக்கப்பட்ட காரணங்களுள் இதுவும் ஒன்றாக முன்வைக்கப்பட்டது. திராவிட இயக்கத்தை சுவீகரித்துக் கொண்ட தமிழகம் மத்திய டெல்லி அரசுக்கு எப்பொழுதுமே ஒரு உறுத்தலாகவே தொடர்ந்திருக்கிறது. அதற்கு எப்படியாகிலும் ஒரு குட்டு வைக்க வேண்டும், அந்த இயக்கத்தை அதன் வளர்ச்சியை, எழுச்சியை கொஞ்சமாகிலும் மட்டுப்படுத்த வேண்டும் என்கிற துவந்த முயற்சியில் டெல்லி அரியணை ஈடுபட்டிருந்தது. 1971 சட்டப் பேரவைத் தேர்தலில் கலைஞரின் தலைமையிலான திமுகவின் மகத்தான வெற்றி டெல்லியைத் திகைக்க வைத்தது. காங்கிரஸ் தனியாக அடுத்த தேர்தலில் திமுகவை அகற்றி ஆட்சியைக் கைப்பற்றுவது என்பதில் அவர்களுக்கே நம்பிக்கை இருக்கவில்லை. தமிழக அரசியலில் தனிப்பெரும் சக்தியாக கலைஞர் விஸ்வரூபமெடுத்திருந்தார். எனவே அவர்கள் வெற்றிபெற இயலாவிட்டாலும் திராவிட இயக்கத்தைப் பலவீனப்படுத்தும் யோசனைகளில், முயற்சிகளில் டெல்லி தீவிரித்தது.

இந்தக் கால வெளியில் கழகத்திலும் காங்கிரஸிலும் சில முக்கியமான கொள்கை சார்ந்ததும், நிறுவனப் பிரச்சினைகளுமாய் அதையொட்டி கணக்கு தீர்க்க முற்பட்ட தனி நபர் ஆளுமை அரசியலும் அரங்கேற ஆரம்பித்தன. மாநில சுயாட்சியை உரக்க ஒலித்து அதற்கு அணி சேர்க்க ஆரம்பித்த கலைஞரும், மன்னர் மான்ய ஒழிப்புப் பிரச்சினையில் முட்டுக்கட்டையாக காங்கிரஸின் முதுபெரும் தலைவர்களின் முகவரியாக காமராஜரும், தமிழகத்திலிருந்து அம்மையார் இந்திராகாந்திக்குத் தலைவலியாகியிருந்தனர். காமராஜர், நிஜலிங்கப்பா போன்றோரின் சிண்டிகேட்டை அவர்களுடைய பிற்போக்குத்தனமான கொள்கைகளைக்கொண்டே இந்திராகாந்தியார் முறியடித்து காங்கிரஸில் தன் பிடியை இறுக்கிக் கொண்டார். ஆனால் கலைஞர் ஒரு சவாலாகவே தொடர்ந்தார்.

கழகத்தில் கலைஞர் எம்ஜியார் இடையிலேயான, பல்வேறு காரணங்களினால் தொடர்ந்த நிழல் யுத்தத்தை மோப்பம் பிடித்த டெல்லி அதற்குத் தூபமிட்டது. அண்ணாவிற்குப் பின் கழகத்தில் கலைஞரின் உயர்வை, வளர்ச்சியை விரும்பாத சில கழக முன்னோடிகளின் மையமாக எம்ஜியார் உருவெடுத்தார். இந்தச் சூழலில்தான் எம்ஜியார் மிகப் பெரிய பொருட்செலவில் தயாரித்திருந்த "உலகம் சுற்றும் வாலிபன்" திரைப்படம் அந்நியச்செலாவணி விவகாரத்தில் டெல்லி மத்திய அரசிடம் மாட்டிக்கொண்டது. டெல்லி எம்ஜியாரிடம் தன் அரசியல் பேரத்தைத் தொடங்கியது. படம் வெளிவந்து முதலீடு செய்திருந்த பணத்தையும் லாபத்தையும் பார்க்காவிட்டால் திரை மற்றும் சொந்த வாழ்வில் மிகப் பெரிய சரிவைச் சந்திக்க நேரிடும் சூழலுக்கு எம்ஜியார் தள்ளப்பட்டிருந்தார். இயக்கத்திற்குள் பேச வேண்டிய விஷயங்களை எம்ஜியார் பொதுவெளியில் பேச ஆரம்பித்தார். இயக்கத்திலும் ஆட்சியிலும் ஊழல் மலிந்துவிட்டதாகவும், மாவட்டச் செயலாளர்கள் தொடங்கி, சட்டமன்ற உறுப்பினர்கள், அமைச்சர்கள் அனைவரும் தங்களுடைய 71 தேர்தலுக்கு முந்தியதும், நடப்பு சொத்து விவரங்களையும் பொதுவெளியில் மக்கள் முன் சமர்ப்பிக்க வேண்டுமென்று குரலெழுப்பினார். எம்ஜியாரின் அன்றைய இந்த அறைகூவலை இன்று எடப்பாடியார் கவனத்தில் கொள்ள வேண்டும். கழகத்தின் பொருளாளர் என்ற கோதாவிலும் சில கணக்கு வழக்குகளைப் பொதுவெளியில் கேள்விக்குள்ளாக்கினார். எதிர்வலியின் பலத்தைக் குறைத்து மதிப்பிட்ட கலைஞர் கழகத்திலிருந்து எம்ஜியாரை நீக்கினார். அன்றைய சூழலில் நடப்பு அரசியலில் தன் பலம் என்னவென்றே தெரியாதிருந்த எம்ஜியார் என்கிற யானையை - கலைஞரை மட்டுப்படுத்துகிறோம் என்கிற வியூகத்தில் - தமிழகத்தில் கம்யூனிஸ்ட்டுகள் உட்பட உற்சாகப்படுத்த எம்ஜியார் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தை ஆரம்பித்தார். அண்ணா சாலை திணறியது. இப்படியாக திராவிட இயக்கம் பிளக்கப்பட்டது. அறிந்தும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இந்தக் கூட்டணி வழி அழிவென்பது அதிமுகவுக்கு மாத்திரமேயல்ல. இது திராவிடத்தை அழித்தொழிக்க பரபரக்கும் ஆரிய ஆரெஸ்ஸெஸ் பார்ப்பனிய இந்துத்துவ ஆக்ரமிப்பு அரசியல் என்பதுதான் சரியான புரிதல். ஐம்பது வருடங்களுக்கும் மேலாக அரியணையிலிருக்கும் திராவிடத்தை, அதன் அதிகாரத்தை அகற்றுவதுதான் ஆரெஸ்ஸெஸின் அஜெண்டா.**

அறியாமலும், தெரிந்தும் தெரியாமலும் டெல்லிச் சதுரங்கத்தின் பகடையாய் எம்ஜியார் பயன்பட்டார். அன்றைக்கு இதைச் செய்தது காங்கிரஸ்; அதே அதிமுகவை எம்ஜியார் எந்தக் காரணங்களுக்காக ஆரம்பித்தாரோ அதே ஊழலை, அதே அஸ்திரத்தைக் கையிலெடுத்து இன்றைக்கு கபளீகரம் செய்வதும் திரும்பவும் டெல்லிதான். சித்தாந்தம் மட்டும் மாறியிருக்கின்றது; இப்பொழுது திராவிட இயக்கத்தைச் செறிக்க நினைப்பவர்கள் அதன் ஜென்ம வைரிகளான ஆரெஸ்ஸுசும் அதன் அரசியல் முகமான பாஜகவும். மிகப் பெரிய சித்தாந்த முரண்கள் ஏதுமின்றி தனி நபர் மாச்சாரியங்களை மாத்திரம் முன்னிறுத்தித் துவங்கப்படுகிற அரசியல் இயக்கங்களின் தவிர்க்க முடியாத முடிவுதான் இன்று அதிமுக சந்திப்பதும். '26ல் அதிமுகவைச் செறித்தால், மெகா கூட்டணியின் வழி வெற்றியும் பெற்றுவிட்டால் திமுகவை எளிதாய் ஓரங்கட்ட முடியும் என்கிற கணிப்பில்தான் பாஜகவின் அவசர அதிரடிக் காய் நகர்த்தல்கள். பண்பாட்டுவெளியில் எப்படி அம்பேத்காரை தங்களுக்குரியவராக செறித்து பெரியாரை முற்றிலுமாய் ஒழிக்க முற்படுகிறார்களோ அதே போல்தான் அரசியலிலும்.

இந்தக் கூட்டணி வழி அழிவென்பது அதிமுகவுக்கு மாத்திரமேயல்ல. இது திராவிடத்தை அழித்தொழிக்க பரபரக்கும் ஆரிய ஆரெஸ்ஸெஸ் பார்ப்பனிய இந்துத்துவ ஆக்ரமிப்பு அரசியல் என்பதுதான் சரியான புரிதல். ஐம்பது வருடங்களுக்கும் மேலாக அரியணையிலிருக்கும் திராவிடத்தை, அதன் அதிகாரத்தை அகற்றுவதுதான் ஆரெஸ்ஸெஸின் அஜெண்டா. ஏனெனில் அவர்களுடைய ஒரே நாடு, ஒரே மொழி, ஒரே மதம், ஒரே அரசு என்கிற ஒற்றை மேலாதிக்க அரசியலுக்கு மிகப் பிரதானமான, சரியான, தீவிரமான மாற்றுச் சித்தாந்தமாக மாத்திரமல்லாமல் அதை அரசியல் நடவடிக்கைகள் வழி வெற்றி பெற்ற மாற்று அரசாகவும் நிறுவியிருப்பது திராவிடம்தான் என்கிற காரணத்தால்தான். தமிழ்நாடு கல்வி, பொது சுகாதாரம், வேலை வாய்ப்பு, தொழில் மேம்பாடு, வேளாண் வளர்ச்சி, வறுமையொழிப்பு ஆகிய முக்கிய வளர்ச்சிக் குறியீடுகளில் பெற்றிருக்கிற வெற்றியே திராவிடத்தின் வெற்றிதான். சாரை சாரையாய் வட மாநில இளைஞர்கள் தமிழ்நாடு நோக்கிப் படையெடுப்பதே பொதுச் சமூக நலனில் வட மாநிலங்கள் தோல்வியுற்றிருப்பதின் அடையாளம்தானே.

தவிரவும் பிந்திய 1930கள் தொடங்கி ஒரு தீர்க்கத்தரிசனத்துடன் கையிலெடுத்த இரு மொழிக் கொள்கை காலத்தால் வெற்றிகரமான சரியான வழி என்பது நிரூபிக்கப் பட்டுவிட்டபடியாலும், தமிழ் இளைஞனும் யுவதியும் உயர் கல்வியில் சிகரங்களைத் தொட்டு உலகெங்கும் உயர்ந்த பதவிகளை அலங்கரிப்பதும் அவர்களால் ஜீரணிக்க முடியாத அடையாளங்கள். தன் மொழி மற்றும் பண்பாட்டின் தொன்மத்திலிருந்து பெற்றெடுத்த சமூக அரசியல் விதைகளால் விழுதுகள் தாங்கும் விருட்சமாய் விரிந்து பரவி வெற்றி கொண்டிருப்பதை, "பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்", "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்கிற அதன் சமூக இலக்கணங்களை நேரெதிரான வர்ணாசிரமத்தை உயர்த்திப் பிடிக்கும் ஆரெஸ்ஸெஸாலும் அதன் அரசியல் முகமான பாஜகாவாலும் ஏற்றுக்கொள்ள முடியாமல் போவதில் ஆச்சரியப்பட ஏதுமில்லை.

எனவே தனது 2024 நாடாளுமன்றத் தேர்தல் பரப்புரையில் மாண்புமிகு தமிழக முதல்வர் ஸ்டாலின் அவர்கள் மிகச் சரியாகச் சொன்னபடி இது இரண்டு சித்தாந்தங்களுக்கிடையேயான போர்தான்.

அது தளராத இந்தித் திணிப்பு எதிர்ப்பு, சரியான நியாயமான தொகுதி மறு வரையறை, ஆளுநருக்குக் குட்டு வைத்த உச்ச நீதிமன்றத் தீர்ப்பு வழி ஒன்றிய அரசுக்கு செவிட்டில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விழுந்த அறையாக 2026 நோக்கி இன்னமும் கூர்மைப்படவே செய்கிறது. ஒன்றிய அரசுக்கு இது மிகுந்த பதட்டத்தைத் தந்திருக்கிறது. அதன் விளைவுதான் ஒரு வருடத்திற்கும் முன்னதாகவே முளைத்திருக்கும் அவர்களின் இந்த அவசர நிர்ப்பந்த அதிமுக கூட்டணி.

காலம் நெருங்க நெருங்க வக்ஃப் வாரியத் சட்டத் திருத்தத் தீர்மானத்தின் போது காணாமல் போன கனவான்களும், தேர்தலுக்குத் தேர்தல் தங்கள் பைகளை மாத்திரம் நிரப்பிக் கொள்ளும் படோபடத் தலைவர்களும், அவ்வப்பொழுது வீரம் பேசுவதும், வழக்குகள் விசாரணைகளுக்காகக் குலாவுவதும் கூடவே புதிரான தமிழ்த் தேசியத் தீரர்களுமென ஒரு வலுவான எதிரணியை திமுக அல்ல, இந்தத் தமிழ் மண் சந்திக்கவிருக்கிறது. கூடவே வாக்குகளைக் கலைக்கும் ஒரே நோக்கத்துடன் ஒரு வீராதி வீரரும் களமிறக்கப் பட்டிருக்கிறார். இந்தக் கூட்டணியின் வாக்கு சதவீத நியாயத்தை உறுதி செய்ய இவிஎம்களும், அடிமை இந்தியத் தேர்தல் ஆணையமும் இருக்கவே இருக்கிறது. இந்த ஆலகால விஷக் கூட்டணியின் அபாயம் உணர்ந்து 2026ல் திராவிட முன்னேற்றக் கழகக் கூட்டணி அரியணையில் வெற்றிகரமாய் அமர்த்தப்பட்டால் மாத்திரம் மேற்சொன்ன கொள்கை முன்னெடுப்புகள் மேலும் கூர்மையடைந்து முழு இந்திய ஜனநாயக எழுச்சிக்கே அதுவொரு உந்துகோலாய் அமையும். இல்லையென்றால் இந்த தமிழ் கூறும் நல்லுலகிற்கு 1967 எப்படியொரு திருப்புமுனையாக வெற்றி சிறக்க அமைந்ததோ அதற்கு நேர் மாறாக தமிழகத்தின் வீழ்ச்சியாக, இருள் துவக்கமாக, துக்கமாக 2026 அமையும். அந்த வீழ்ச்சியின் முழுப் பொறுப்பும் அவலமும் அதிமுகவையும் எடப்பாடியாரையுமே சென்று சேரும். 2026 வெறும் தேர்தலல்ல; அது தமிழ் மண்ணின் ஜீவ மரணப் போராட்டம்.

எடப்பாடியாருக்கும், பாஜகவிற்கும் இந்தத் தேர்தல் போர் என்பது "வந்தால் மலை - போனால் மயிர்" என்பது போலத்தான். ஆனால் தமிழ்ப் பெருங்குடி வாக்காளர்களுக்கோ அவர்களின் தேர்வென்பது ஆதிக்க பாஜகவும் அடிமை அதிமுகவும் என்றானால் அது - ஒரு பெரிய நீரோடையின் கரையருகே அமர்ந்து தன் குழந்தையைக் கொஞ்சிக் கொண்டிருந்த ஒரு தாய், ஓடையில் மிதந்து வந்த ஒரு பலாப் பழத்தை எடுப்பதற்காகக் கரையிலே பிள்ளையை விட்டுவிட்டு, பழத்தை எடுத்து திரும்ப வந்த போது பிள்ளை கரையிலே இல்லை; அவளுக்கு எட்டாத தூரத்தில் பிள்ளை ஓடையின் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டுக் கொண்டிருந்த அவல் அறக் கதையின் சொல்லடைவான -"பிள்ளையைப் போட்டு பலாப்பழம் எடுத்த" விபரீத முட்டாள்தனம்தான்.

அறுத்துக் கெடுக்கும் கலையை சாத்தியப்படும் இயக்கங்களிலெல்லாம் அற்புதமாக அரங்கேற்றிக் கொண்டிருக்கும் - ஊழல் என்கிற அஸ்திரத்தின் வழி சிறிய மீன்களை விழுங்கிக் கொண்டிருக்கும் - பாஜக என்கிற பெரிய மீன் இப்பொழுது உலக மயமாக்கப்பட்ட பெரு வணிகம் செறிக்க இயலாமல் திணறுவது போல, நிச்சயம் வெகு சீக்கிரம் வெடித்துச் சிதறும். சாம்ராஜ்யங்களின் சாம்பலும் அதன் நாயகர்களின் எலும்புகளைச் செறித்த மண்மேடுகளின் எச்சங்களுமாய்த்தான் கால வெள்ளத்தின் வரலாற்றுச் சுவடுகள்; மாற்றங்களை உள்வாங்கித் தழைத்த மனிதம் மாத்திரம் முன்னேறிப் பயணிக்கின்றது. ஆகப் பெரிய சித்தாந்தமானாலும், கலாச்சாரமானாலும், மதமானாலும், எத்தனை பெரிய நிறுவனமானாலும் மாற்றம் மட்டுமே மாறாதது என்கிற விதிக்குத் தப்ப இயலாது. "கிறிஸ்தவம் எல்லோருக்கும் ஒரே சட்டையைத்தான் அணிவிக்கின்றது" என்றுதான் இந்து வீரத் துறவி விவேகானந்தர் விமர்சித்தார். அதே தவறைத்தான், பல்வேறு மத,மொழி,கலாச்சார, நம்பிக்கையுடன் தங்களின் அபிமான அடையாளங்களை தேசிய இனப் பதாகையின் கீழ் பேணிக் காக்கும் மிகப் பெரிய மக்கள் கூட்டத்தை ஒற்றை மத தேசியத்தின் வழிக்குள் முடக்க முயலும், ஆரெஸ்ஸெசும் பாஜகவும் அரங்கேற்றுகின்றன. ஒரு நசிவுச் சித்தாந்தத்தைக் கையிலெடுத்துக் கொண்டு பின்திரும்பிப் பயணிக்க காலமும் வெளியும் அனுமதிப்பதில்லை. நாசகர நோக்கங்கள்தாம் முறைகேடான, மோசமான வழிகளைத் தேர்ந்தெடுக்கின்றன. தன் அழிவின் விளிம்பை நோக்கிய பயணத்தில் அது நம் தந்தையர் தேசத்தையும் கூடவே அழைத்துச் சென்று கொண்டிருக்கிறது என்பதுதான் அற வழி ஆரோக்கியமான ஒவ்வொரு குடிமகனுக்குமான செய்தி.

•

கட்டுரையாளர்: மொழிபெயர்ப்பாளர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டுரை | இரா.மோகன்ராஜன்

# கல்லறை அரசியல்!





"சொத்து, தகுதி, மற்றும் அறிவு ஆகியவற்றில் உயர்ந்த நிலையில் உள்ளவர்கள் அதை நிலைநாட்டிக் கொள்ள வெறும் சக்தியை மட்டும் பயன்படுத்த மாட்டார்கள். அவர்கள் ஆயுதங்களை, துரோகத்தை, அரசின் அதிகாரத்தை மட்டுமே பயன்படுத்த மாட்டார்கள். அவர்கள் சிந்தனைகளைப் பயன்படுத்துவார்கள். வரலாற்றைப் பயன்படுத்துவார்கள். இத்தகைய சிந்தனைகளை மக்களிடம் சொல்வார்கள். அத்தகைய தத்துவங்களை உள்வாங்கச் சொல்வார்கள். அவர்கள் தங்களுடைய மேலாண்மையை நிலை நாட்டிக் கொள்ள எது உதவுமோ அத்தகைய வரலாற்றைக் கற்பிப்பார்கள். அத்தகைய சிந்தனைகளும் தத்துவங்களும் அத்தகைய தவறான பாதி உண்மைகளைக் கொண்ட, திரிக்கப்பட்ட வரலாறுகளும் அவர்களது தற்போதைய தகுதியை தக்கவைத்துக் கொள்ள உதவும், சிந்தனை என்பது மிகவும் ஆற்றல் வாய்ந்த ஆயுதம். அது நீடித்து நிலைக்கும். அது பீரங்கியை விட மேலானது. ஆட்சியாளர்கள் எப்போதும் இந்த ஆயுதத்தை ஒடுக்கப்படுபவர்களுக்கு எதிராகப் பயன்படுத்துகிறார்கள்".-கோவிந்த்பன்சாரே

பாஜக மற்றும் சங்க பரிவாரங்களின் அரசியல் என்பதே கல்லறை அரசியல்தாம். வரலாற்றின் பிணங்களைத் தோண்டுவதும், அதற்கு எதிரான தனது தூர்ந்து போன வரலாற்றுக் கோபங்களைக் கொண்டு அந்த பிணங்களின் மீது கற்களை வீசுவதும்தான். தோண்டி எடுக்கப்பட்ட எலும்புக்கூடுகளைக் கொண்டு வந்து வாழும் மனிதர்களின் வாரிசுகளுடனும், அல்லது அதற்கு எதிரானவர்களின் வாழ்க்கையுடனும் வெறுப்பு அரசியல் போர் செய்வதே அதன் அரசியல்.

பாபரின் கல்லறைக்குள் ராமர் இருக்கிறார் என்றார்கள். இந்தியா மதசார்பற்ற நாடு. நல்லது இருவரும் சேர்ந்து அங்காவது நிம்மதியாக உறங்கட்டும் என்றால் பாபரும் - ராமரும் ஏதோ சமகாலத்தவர் போல, வரலாற்றுப் பகை போல பாபரை அகற்றிவிட்டு ராமரை தோண்டி எடுத்தனர். பாபர் ஆட்சியும், அரசியலும் வரலாற்று ஆவணம். சமூக, வரலாற்று அரசியல் சாட்சி. ராமர் புராணக் கட்டுக் கதையின் நாயகன். வெறும் நம்பிக்கை சார்ந்த உருவெளித் தோற்றம். பாபர் ரத்தமும் சதையுமான வரலாற்று மனிதன். பாஜக பரிவாரங்கள் நினைத்தால் உருவெளிக்கும், அல்லது மெய்நிகர் உலகுக்கும், மெய் உலகுக்கும் வேறுபாடில்லாத அரசியல் கதையை உருவாக்கும் மெய்யுலகு மெய்நிகர் வடிவமைப்பாளர்கள். நவீன மெய்நிகர் புனைவாளர்கள். அவர்கள் நினைத்தால் பாபரும், ராமரும் ஒரே காலத்தில் ஒருவருக்கொருவர் யுத்தம் செய்து கொள்ள முடியும். அந்த யுத்தத்தின் வெற்றியை அல்லது தோல்வியை அவர்களோ, அவர்களது வாரிசுளோ அடைந்து கொள்ள முடியாது. அதை மெய்யுலகின் அரசியலில் பாஜக பரிவாரங்களே அறுவடை செய்து கொள்ளும்.

கைபேசியின் விளையாட்டு செயலிலைப் போன்றது அது வரலாற்றை மறு உருவாக்கம் செய்து விளையாடுவது. அதில் தேர்ந்தவர்கள் பாஜக மற்றும் ஆர்.எஸ்.எஸ். உள்ளிட்ட பரிவாரத்தினர். தென்கொரிய டிவி சிரீஸ் ஆன 'ஸ்க்யுட்' போல விளையாட்டு விளையாட்டாக இருக்க அதில் பங்கேற்பவர்கள் பலியாகும் ஒன்றைத்தான் பாஜகவின் கல்லறை அரசியல் விளையாட்டு அரங்கேற்றுகிறது.

கல்லறையை அரியணை ஆக்க முடியுமா என்றால் பிணத்தை வைத்து அரசியல் செய்பவர்களால் உறுதியாக முடியும் என்றுதான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்ல முடியும். ராமர் பெயரில் ரத்த-ரதயாத்திரை நடத்தியவர்களால் பாபர் மசூதியை இடிக்க முடியும் என்று நம்ப முடியாத காலம் ஒன்றிருந்தது. அவர்களால் ஆட்சியை பிடிக்க முடியாது என்று நம்பமுடியாத காலம் ஒன்றிருந்தது. இன்றைக்கு அவர்கள் பாபர் பிணத்தின் மீது ஆட்சியை அமைத்திருக்கிறார்கள். எனவே எங்கெல்லாம் வரலாற்றின் பிணங்கள் உறங்கிக் கிடக்கின்றனவோ அவற்றை எழுப்பி கொண்டு வருவதே அந்த ஆட்சியை தொடர்ந்து தக்கவைத்துக் கொள்ளும் அரசியலாக மாறியிருக்கிறது. ஆட்சி நிலைக்க வேண்டுமானல் பிணம் வேண்டும். அரசியல் பிணம் வேண்டும். வரலாற்றுப் பிணம் வேண்டும்.

தற்போது அவர்களுக்குக் கிடைத்திருப்பது நாக்பூரில் 300 ஆண்டுகளுக்கு மேலான மொகலாயப் பேரரசர் அவுரங்கசீப் கல்லறை. வரலாற்றின் வாள்கள் துருப்பிடித்து மண்ணோடு மக்கி கிடக்க அதில் இந்துக்களின் குருதி ஒட்டிக்கிடக்கிறதா என தேடும் பாசிச அரசியலை பாஜக கையிலெடுத்திருப்பதுடன் வரலாற்றின் பழிக்குப் பழியை அவர்களது வாரிசுகளின் குருதியில் பங்கு கேட்கிறது. இந்தப் பிணம் தோண்டும் அரசியல் முஸ்லிம்களை பதற்றத்திற்குள்ளும், அச்சத்திற்குள்ளும் வைத்தபடி உயிருடன் கல்லறை கட்டுகிறது.

இந்திய உளவு துறையான சி.பி.ஐ விழா ஒன்றில் பிரதமர் கைரேகை மற்றும் தடயவியல் துறையில் புதிய வளர்ச்சித் தேவை என்று பேசியதை சிவாஜி பயன்படுத்திய வாளில் அல்லது அவரது மகன் சம்பாஜியின் கண்களைக் குருடாக்கி அவரை கொலை செய்த அவுரங்கசீப்பின் வாளின் குருதி யாருடையது என்று கண்டறியக் கூட அவர்கள் பயன்படுத்துவார்கள்.

சிவாஜியின் பெயரை அவர் பயன்படுத்தியதாகச் சொல்லப்படும் அவரது குல தெய்வமான பவானி தெய்வத்தின் வாளைக் குறிப்பிட்டு ஜெய் பவானி, ஜெய் சிவாஜி என்று வன்முறைக் கூச்சலிடும் சங்க பரிவாரங்களுக்கு அவர் பயன்படுத்தியது போத்துகீசியரின் வாள்தான் என்பதையும் கண்டறிந்து கோசத்தை மாற்றிக் கொள்ளவும் தடய அறிவியல் உதவக்கூடும். அறிவியல் என்பது அவர்களைப் பொருத்தவரை கல்லறையைத் தோண்டுவதற்கு மட்டுமே போதுமானதாகும்.

அவுரங்கசீப் ஒரு கொடூரமான மொகலாய அரசன். அவன் வாள் முனையில் இந்துக்களை முஸ்லிம் ஆக்கினான், மதம் மாறாதவர்களின் தலையைச் சீவினான். வதைப்படுத்தினான். இந்துக்களுக்கு மட்டும் அதிக வரிவிதித்தான். இந்துப் பெண்களை தமது இச்சைக்குப் பலியாக்கினான், அவர்களது சொத்துக்களைப் பறித்தான், கோவில்களில் புகுந்து கொள்ளையடித்தான். இப்படியான புனைகதைகளை பொது வெளியில் பரப்புவதும், அதை நேற்று நடந்தது போல எடுத்துக் கொண்டு கலவரங்களைச் செய்வதும் பாஜக பரிவாரங்களுக்கு வாடிக்கை. மேலே குறிப்பிட்ட நிகழ்வுகளிலிருந்து அவுரங்கசீப் பெயரை நீக்கிவிட்டால் அந்த இடத்தில் பிறிதொரு மொகலாய அல்லது முஸ்லிம் மன்னன், இவை போதும் அவர்களுக்கு.

இப்போது வரலாற்றை திரைப்படங்கள் மீள் காட்சி செய்கின்றன. மீள் காட்சி என்பது வெறும் காட்சி மட்டுமல்ல அது ஒரு கனவைப் போன்றது. நம்பத் தூண்டும் துர்கனவு. மெய் நிகர் கனவு. காட்சி. அதுவே மெய்யாகிவிடுவதில்லை. ஆனால் திரிபுவாதிகளுக்கு மெய்யும், மெய்யற்றவையும் ஒன்றே. திரைப்படங்கள் மிகை சொல்லிகள். மிகைக் காட்சிகள். ஆனால் மிகை அரசியலுக்கு மிகை காட்சிகள் அவசியமே. அந்த மிகையையே பகையாகக்கொண்டு கிளம்பியிருக்கிறது வரலாற்றுப் பிணந்தேடும் பரிவாரப்படை.

அவுரங்கசீப் பற்றி எடுக்கப்பட்ட திரைப்படம் 'சாவா' மகாராட்டிரம் நாக்பூரில் கலவரத் தீயை பற்ற வைத்திருக்கிறது. அல்லது அந்த திரைப்படத்தை காரணமாகக் கொண்டு கலவரத் தீ பற்ற வைக்கப்பட்டுள்ளது. இந்துக்களை கசக்கிப் பிழிந்த மன்னராக அவுரங்கசீப்பை சித்தரிக்கும் அந்த திரைப்படம் சிவாஜியின் மகனான சத்ரபதி சம்பாஜியை அவுரங்கசீப் படுகொலை செய்வதை வீரியமான காட்சிப் புலத்தில் விரிவாகப் புனைகிறது. மத நல்லிணக்கத்துடன் அதுவரை காலமும் இருந்து வந்த மக்களுக்கிடையே திரைப் போட்டுக் கொண்டுள்ளது. வரலாற்று பதற்றத்தை நவீன காலத்திற்கு கடத்தும் அந்த திரைப்படத்தின் கற்பனைக் காட்சிகளை இன்றைய இந்துக்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவுரங்கசீப்பின் வரலாற்று எதிரியான சத்திரபதி சிவாஜி மற்றும் அவரது மகன் சம்பாஜியின் வாரிசு இந்துக்கள் இன்றைக்கு கையிலெடுத்துக் கொண்டிருக்கின்றனர். துருப்பிடித்த போர்த்துக்கீசிய வாள் கூர்தீட்டப்பட்டுக் கொண்டிருக்கிறது.

நாக்பூரில் உள்ள குல்பாத் நகரில் தனது கல்லறையின் நீண்ட உறக்கத்தில் இருக்கும் மொகலாய மன்னன் அவுரங்கசீப்பின் வரலாற்று உறக்கத்தைக் கலைத்து வெளியே கொண்டு வந்து கடந்த கால இந்துக்களின் கண்ணீருக்கு பழியைத் தீர்க்க வேண்டும். இது இன்றைய இந்துக்களின் வரலாற்றுக் கடமை. இதை இந்துக்கள் சொல்லவில்லை அவர்களின் பெயரிலான அரசியல் சொல்கிறது. கலவரம் சொல்கிறது. இது அவுரங்கசீப் அறியாதது. வரலாறும் அறியாதது.

அவுரங்கசீப்பின் எலும்புக்கூட்டிற்கு இப்போது தண்டனை அறிவிக்கப்படுகிறது.

**இன்றைக்கு பரிவாரங்கள் கொண்டாடும் சத்ரபதி மன்னர்களான, சிவாஜி, சம்பாஜி போன்றவர்களை உயர்குடி சாதி இந்துக்கள் மன்னராகவே ஏற்றதில்லை என்பது வரலாறு. சிவாஜி தன் முடிசூட்டு விழாவை முறையான, அசலான பார்ப்பனர்களைக் கொண்டு நடத்தவில்லை என்று கூறி அவரை இரண்டு முறை பதவியேற்க வேண்டிய அவல நிலைக்கு மராட்டிய பார்ப்பனர் தள்ளினர்.**

அவரது குற்றங்கள் அவரது கல்லறை போன்றே மறு கண்டுபிடிப்பு செய்யப்படுகிறது. அவரது பெயரில் அவர்களது வாரிசுகளின் ரத்த மாதிரிகள் சோதிக்கப்படுகின்றன. அவர்களும் சோதிக்கப் படுகின்றனர். வாரிசுகளின் அரசு இது. எனவே எதிர் வாரிசுகள் இப்போது தண்டனைகளிலிருந்து தப்பமுடியாது. தப்புவிக்க முடியாது.

அவுரங்கசீப் யார்? அவுரங்கசீப்பை எப்படி வறையறுப்பது. அவுரங்கசீப் மொகலாயப் பேரரசின் ஒரு காலக்கட்டத்தின் வாரிசு. அக்பர், பாபர், ஷாஜகான் வழித் தோன்றல். பாபர் மொலாய பேரரசிற்கும் அப்பாலான ஜகத்குரு. மதங்களை இணைத்து புதிய மதமொன்றை நிறுவ முயன்றவர். அக்பருக்கும் இப்படியான பெருமைகள் உண்டு. ஆனால் அவுரங்கசீப்பிற்கு அப்படியான பெருமைகள் எவற்றையும் இந்திய வரலாற்று எழுதிகள், எதிரிகள் அளிக்க விரும்பவில்லை. அவர் முஸ்லிம் மத குருமார்களின் மன்னர் என்றார்கள். இந்துக்களுக்கு மட்டுமேயான ஜிசியா வரிக்கு காரணமானவர் என்றார்கள். இஸ்லாம் மத தேசத்தை உருவாக்க முயன்றவர் என்றனர். ஆனால், இவற்றை எல்லாம் இந்துக்களின் தேசத்தில் நிறுவ முயன்றவர் எனவே அவர் நேற்றைய,இன்றைய இந்துக்களின் எதிரி. ஆனால் இப்படியான வரலாற்று எதிரிகளுக்கு அவுரங்கசீப் மொகலாய மன்னன் என்பது தெரிந்திருக்கிறது. வரிவிதிப்பு பற்றி தெரிந்திருக்கிறது. இந்துக்களை ஒடுக்கினான் என்பது தெரிந்திருக்கிறது. ஆனால் அவுரங்கசீப் பிற எல்லா பேரரசர்களையும் போல ஒரு பேரரசன் என்பது தெரிந்திருக்கவில்லை. பேரரசன் என்றால் பேரரசனுக்கான இயல்புகளை மட்டுமே கொண்டவர்கள். அவர்களது மத குருக்கள் மட்டுமே மாறுகிறார்களேயன்றி பேரரசுகள், பேரரசர்கள் மாறுவதில்லை. போர்கள் மாறுவதில்லை, கொள்ளை, கொலைகள் மாறுவதில்லை.

மன்னன் என்றால் மன்னன்தான் அவனுக்குச் சிறப்பு சலுகைகள் இருக்க முடியாது. இந்துக்கள் பகுதியை ஆள்கிறானா அல்லது முஸ்லிம் பகுதிகளை ஆள்கிறானா என்பதல்ல எப்படி ஆள்கிறான் என்பதே முக்கியமானது. மன்னர்களுக்கு ஆட்சியே முக்கியம் அதிகாரமே முக்கியம் அது நிலைத்திருக்க அவர்கள் என்ன விலையேனும் தருவார்கள். முஸ்லிம் மன்னர்களின் படையில் இந்துக்களும், இந்து மன்னர்களின் படைகளில் முஸ்லிம்களும் இருப்பதன், இருந்ததன் பொருள் அவர்களது, ஆட்சி, அதிகாரம் நிலைத்திருப்பதற்கான விலை. மதம் கடந்த அரசியல். மதம் கடந்த அதிகாரம் மட்டுமே.

இன்று இந்துக்களின் அரசனாக மறு அடையாளம்செய்யப்படும்கண்டுபிடிக்கப்படும் சத்ரபதி சிவாஜி ஆகட்டும், அவரது புதல்வன் அவுரங்கசீபின் குறிப்பிடத்தக்க எதிரியாகச் சித்தரிக்கப்படும் சம்பாஜியாகட்டும் இருவருக்கும் மொகலாய மன்னர்களை விட இந்து பாளையக்காரர்களே, தளபதிகளே உறவினர்களே மேட்டுக்குடிகளே எதிரிகளாக இருந்தனர் என்பது வரலாற்று மெய்மை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்படியே மொகலாய மன்னர்களுக்கும் எதிரிகள் சுல்தான்களாகவும், ஜமீன்களாகவும் இருந்த அளவுக்கு இந்து மன்னர்களோ தளபதிகளோ இருந்திருக்கவில்லை. இது வரலாற்று முரணும் கூட. இந்து மன்னர்களுக்கு எதிராக முஸ்லிம்களோ, மொகலாய மன்னர்களுக்கு எதிராக இந்துக்களோ கிளர்ந்து எழுந்திருக்கவில்லை. அதற்கு காரணம் ராமரோ, பாபரோ யார் ஆட்சி செய்கிறார்கள் என்பதை அறியாத அளவிற்குத்தான் அவர்களுக்கும் பேரரசர்களுக்குமான தொடர்பு இருந்து வந்துள்ளது.

அதற்கு காரணம் இந்திய சாதி அமைப்பு முறை. கிராமநிர்வாகம் என்பது வழமை போல மேலிருந்து கீழாக இயங்கிக் கொண்டிருந்தது. கிராமிய சுயப் பொருளாதாரம் அவர்களுக்குப் போதுமானதாக இருந்தது. வழமை போல அவர்கள் குறுநில மன்னர்களுக்கு கப்பம் செலுத்த அந்த மன்னர்கள், அல்லது நிலபிரபுக்கள் தமது பங்கு போக சுல்தான்களுக்கோ, அல்லது பாளையக்காரர்களுக்கோ அல்லது மொகலாயர்களுக்கு அல்லது பிற இந்து சிற்றரசர்களுக்கோ செலுத்திவந்துள்ளனர். இந்த கப்பத்தில் ஏற்படும் மாற்றம் எதுவும் மக்களை சேர்வதில்லை. அவர்கள் வழமை போல தமது கப்பத்தை செலுத்த வேண்டியவர்களாகவே இருப்பார்கள் இந்த கூடுதல் குறைவு நிலபிரபுக்களைப் பாதிக்கும் போது மொகலாய ஆட்சியோ அல்லது தாம் சார்ந்திருக்கும் இந்துக்கள் ஆட்சியோ அவற்றிற்கான ஆதரவை விலக்கிக் கொள்வர். இவர்களது ஆதரவிலேயே பேரரசு தொடங்கி சிற்றரசுகள் வரை இருந்தன. அவர்களும் இவர்களை நம்பியே தமது ஆட்சியையும், அதிகாரத்தையும் தக்கவைத்துக் கொள்பவர்களாக இருந்தனர். மன்னர்கள் கொடுங்கோலர்களா அல்லது சாந்த செரூபிகளா என்பவை பற்றி அந்த நிலபிரபுக்களுக்கு கவலை இல்லை. தமது பங்கு பறிபோய்விடக் கூடாது என்பதே முக்கியம். மக்களை எவ்வளவு பிழிந்தெடுத்தாலும் அது பற்றி அவர்களுக்கு எந்த கவலையும் கிடையாது. அது மொகலாய ஆட்சியில் இந்துக்களாகட்டும், இந்துக்கள் ஆட்சியில் முஸ்லிம்களாகட்டும் எல்லாம் ஒன்றே. மராட்டிய மண்ணில் 36 உயர்குடி சாதியினரின் ஆதரவில்லாமல் எந்த ஒரு அரசும் நீடித்திருக்க இயலாது. சத்தரபதி சிவாஜி மொகலாயர்களை எந்த அளவு தன் வாழ்நாளில் எதிர்க்க வேண்டியிருந்ததோ அதைவிட பல மடங்கு அவர் தனது சொந்த இந்து உயர்சாதியினரிடம் போராட வேண்டியிருந்தது. இன்றைக்கு இந்துக்களின், பசுக்களின் பாதுகாவலன் என்று சிவாஜியின் வரலாற்றை திரித்த குரலில் பாடும் சங்கபரிவார வன்முறை கும்பல்கள் ஒரு சிறிதேனும் மெய் வரலாற்றை வாசித்துப்பார்க்க வேண்டும்.

**வக்ஃப் வாரிய சொத்துக்களைச் சட்டத்தைக் காட்டி பாஜக அரசு முஸ்லிம்கள் அல்லது சிறுபான்மையினர் உரிமைகளைப் பறித்தெடுக்குமானால் கல்லறைகள் மட்டுமல்ல மசூதிகள், தேவாலயங்கள் உள்ளிட்டவற்றை கேள்விக்கு இடமில்லாமல் அகற்றும், தோண்டும் உரிமையை சட்டவழியிலாக பெற்றுக் கொள்ள முடியும். அதற்காகவே வக்ஃப் வாரிய சட்டத்தை ஒன்றிய அரசு கொண்டு வந்திருக்கிறது.**

சம்பாஜி நாட்பது நாட்கள் அவுரங்கசீப்பால் சிறைவைக்கப்பட்டார். அவரது கண்கள் பிடுங்கப்பட்டன. கடும் வதைக்கு உட்படுத்தப்பட்ட அவரை முஸ்லீமாக மதம் மாறச் சொல்லி அவுரங்கசீப் கொடுமைப் படுத்தினார். தனது சொந்த மதத்தை துறப்பதைவிட மரணத்தை ஏற்பேன் என்ற சம்பாஜியை அவுரங்கசீப் படுகொலை செய்தார் என்று வரலாற்று எழுதிகளை, சாவா படத்தைக் காண்பித்தும் வன்முறையாளர்கள் நீதி கற்பிக்கிறார்கள். தமது இன்றைய வன்முறைக்கு நியாயம்கற்பிக்கிறார்கள். இந்தநியாயவாதிகளின் நேற்றைய முன்னோர்கள் முப்பாட்டன்கள் சிவாஜிக்கோ, சம்பாஜிக்கோ எத்தனை விசுவாசமாக இருந்தார்கள் என்பதை இன்றைக்கு அவுரங்கசீப்பை விட வரலாற்று மன்னிப்பை கேட்க வேண்டியவர்கள் தற்கால இந்து வாரிசுகளும் பரிவாரங்களாகவும்தான் இருப்பார்கள்.

இன்றைக்கு பரிவாரங்கள் கொண்டாடும் சத்ரபதி மன்னர்களான, சிவாஜி, சம்பாஜி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போன்றவர்களை உயர்குடி சாதி இந்துக்கள் மன்னராகவே ஏற்றதில்லை என்பது வரலாறு. சிவாஜி தன் முடிசூட்டு விழாவை முறையான, அசலான பார்ப்பனர்களைக் கொண்டு நடத்தவில்லை என்று கூறி அவரை இரண்டு முறை பதவியேற்க வேண்டிய அவல நிலைக்கு மராட்டிய பார்ப்பனர் தள்ளினர். அவர்கள் சங்கபரிபாரங்களின் முப்பாட்டன்கள் இல்லையா?

வக்ஃப் வாரிய சொத்துக்களைச் சட்டத்தைக் காட்டி பாஜக அரசு முஸ்லிம்கள் அல்லது சிறுபான்மையினர் உரிமைகளைப் பறித்தெடுக்குமானால் கல்லறைகள் மட்டுமல்ல மசூதிகள், தேவாலயங்கள் உள்ளிட்டவற்றை கேள்விக்கு இடமில்லாமல் அகற்றும், தோண்டும் உரிமையை சட்டவழியிலாக பெற்றுக் கொள்ள முடியும். அதற்காகவே வக்ஃப் வாரிய சட்டத்தை ஒன்றிய அரசு கொண்டு வந்திருக்கிறது. சூஃபிக்கள், முஸ்லிம் மன்னர்கள் கல்லறைகளின் நிம்மதியான உறக்கம் இனி கலைக்கப்படுவதாக இருக்கும். வரலாறுத் தோண்டிகளுக்கு வரலாறு முக்கியம் இல்லை. தோண்டுவதே முக்கியம்.

உத்தரபிரதேசம், உத்ரகாண்ட், மத்தியபிரதேசம், ராஜஸ்தான், குஜராத் போன்றவைதான் வெறுப்பு அரசியலின் முக்கிய பரிசோதனைக்கூடங்கள். அங்கு ஒவ்வொரு நாளும் முஸ்லிம்களை ஒடுக்குவதற்கு ஏதோ ஒரு காரணம் கண்டுபிடிக்கப்பட்டு அந்த ஒடுக்குமுறைக்கான புது புது கருவிகள் வளர்த்தெடுக்கப்படுகின்றன என்று காங்கிரசின் தீபங்கர்பட்டச்சார்யா சுட்டிக் காட்டுகிறார், மேலும் அவர், கடந்த காலத்தில் சம்பாஜியின் மகனும் மராட்டியப் பேரரசின் ஐந்தாவது சத்ரபதியுமான முதலாம் சாகுமகராஜ் அவுரங்கசீபின் கல்லறைக்குச் சொன்று மரியாதை செலுத்திவந்துள்ளார். அவுரங்கசீபின் மகள் ஸிடன் உன்நிஸாவின்(சத்தார மசூத் பேகம்) நினைவின் பொருட்டு ஒரு மசூதியையும் அவர் கட்டியிருப்பதை சுட்டிக்காட்டுகிறார் தீபங்கர்.

தனது சமகால இஸ்லாமிய மன்னர்கள், அல்லது அவர்களது வாரிசுகளுடன் மகாராட்டிர சத்ரபதிகள் போர் செய்யவும், சமாதனாமாகப் போகவும் துரோகங்களை மறக்கவும், மன்னிக்கவும் தெரிந்தவர்களாக இருந்திருக்கிறார்கள். மகாராட்டிரத்தின் சத்ரபதி சிவாஜியின் வாரிசுகள் அவர்களது ஆட்சிக்காலத்தில் அவுரங்கசீப்பின் கல்லறையை தோண்டவோ, இடித்து அகன்றவோ முயன்றதாக எந்த வரலாற்றுப் பதிவும் இல்லை. தற்காலத்து அவர்களது அரசியல் வாரிசுகளுக்குத்தான் சீற்றங்கள் பிறக்கின்றன. அவுரங்கசீப்பின் கல்லறையை அகற்ற வேண்டும் என்று திட்டமிட்ட வன்முறையில் இறங்கியிருக்கின்றன. கடந்த இரண்டு ஆண்டுகளாக குல்பர்காவில் விஸ்வ இந்துபரிசத் உள்ளிட்ட குழுக்கள் சிறுபான்மையினர் நடுவில் பதட்டத்தை உருவாக்கிக் கொண்டுள்ளன.

முஸ்லிம் மன்னர்கள் முதலில் மன்னர்கள் பிறகே அவர்கள் முஸ்லிம் மதத்திற்குரியவர்கள். அப்படித்தான் அவர்களது ஆட்சி இருந்தது. மொகலாய மன்னர்கள், கோவில்களில், வழிபாட்டுத்தளங்களில் அவர்கள் அடித்த கொள்ளை என்பது மதவழிப்பட்டதல்ல என்பதை முதலில் புரிந்து கொள்ள வேண்டும். இன்றைக்கு வகுப்புவாத வன்முறைகளை வளர்த்தெடுப்போர் போன்று அது திட்டமிட்டதல்ல. வகைப்பட்டதல்ல. மக்களின் உழைப்பை உறிஞ்சிய உள்ளூர் நிர்வாகமும் உயர்சாதியிரும் பெருஞ் செல்வத்தை கோவில்களிலேயே குவித்து வைத்திருந்தனர். அந்த பெருஞ்செல்வத்தை அவர்கள் கொள்ளையடித்த போது செல்வம் மட்டுமல்லாது அவர்களது அதிகாரமும் நிலைகுலைந்தது. எனவேதான் கோவிலை நடுவப்பத்திய அவர்களது அதிகாரம் பறிபோவது கண்டு கூப்பாடு போட்டனர். அதுவே அவர்கள் அந்த மன்னர்களிடம் எஞ்சிய கொள்ளையில் பங்கு கேட்டதும், கெஞ்சிப் பெற்றதும், மதம் மாறி மொகலாயர்களின் நிர்வாகத்தில் பதவிப் பெற்றுக் கொண்டதும் பிறிதொரு பக்கம் ஓசையற்ற வரலாறுகளாகும். நேற்றைக்கு அவர்களது முப்பாட்டன்கள் என்ன செய்தனரோ அதையே, மதப் பற்று, தேசப்பற்று என்று சொல்லிக் கொண்டு பன்னாட்டு நிறுவனங்களிடம் கமிசன் பெற்றுக் கொண்டு அவர்களது வாரிசுகளான சங்பரிவாரங்கள், பாஜகவினர், உயர்சாதியினர், மேட்டுக்குடி ஆட்சி அதிகாரத்திலுள்ளோர் செய்து கொண்டுள்ளனர். •

---

கட்டுரையாளர்: எழுத்தாளர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டுரை | நிகழ் அய்க்கண்

# செயற்கை நுண்ணறிவுத் தொழில்நுட்பமும் அதன் தாக்கங்களும்

வளர்ந்து வரும் நாடுகளில் இயற்கை வளங்களைக் கொள்ளையடிப்பது; தொழில் நுட்பத்தின் மூலமான ஆதிக்கம்; அதீத தேசியத்தை உள்நிறுத்திய வலதுசாரி அடையாள அரசியல்; இராணுவத்திற்கான செலவுகளை அதிகரிப்பது; நாடுகளுக்கிடையேயான போர்: வேலைவாய்ப்பின்மை: சுற்றுச்சூழல் கேடுகள் ஆகிய ஏழு தாக்கங்களும் உலகளவில் இன்றைக்கு ஜனநாயகத்திற்காகவும் வாழ்வாதார மேம்பாட்டிற்காகவும் ஏங்கி நிற்கும் ஏழைமக்களுக்கு பெரும் அச்சுறுத்தலாக இருக்கின்றது.

இதற்கு முன்பான மக்கள் நல காலகட்டத்தில் சமூகப்பாதுகாப்பு; அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சி; மனித உரிமைக்கு முக்கியத்துவம் என்பதாக இருந்தது. அதுவே தற்போதைய காலத்தில் தனியாரை அனுமதித்து, புதுமையைப்படைப்பது : போட்டிக்கு முதன்மை : பொருளாதார வளர்ச்சி என்பதாக மாறி நிற்கிறது.

இன்றைய ஊடகங்களை கவனித்தோமேயானால் தொழில் நுட்பஞ்சார்ந்த செயற்கை நுண்ணறிவு மற்றும் செமிகண்டக்டர் சார்ந்த உரையாடல்கள் நிறைந்திருப்பதைக் காணவும் கேட்கவும் முடியும். தொழில் நுட்பமானது மனித நாகரிகத்திற்கும், அரசியல்-சமூகம்-பொருளாதாரம் வளர்ச்சியடைவதற்கும் முக்கிய பங்காற்றுகிறது. எனினும் மனித உயிர்களைக் காவு வாங்கும் (இராணுவத்) தொழில் நுட்பமும், வேலைவாய்ப்பின்மையும் மறை குலத்திற்கு அச்சுறுத்தலாக உள்ளது.

செயற்கை நுண்ணறிவைப்பொருத்தவரை சீனா, ஐரோப்பிய யூனியன், கனடா, கொரியா, பெரு, அமெரிக்கா போன்ற நாடுகள் இதனை ஒழுங்குபடுத்த தனக்கென விதிமுறைகளை வகுத்துள்ளது. இன்னும் சில நாடுகளில் ஒழுங்குமுறைகள் வகுக்கப்பட்டிருந்தாலும் இன்னும் சட்டமாக்கப்படவில்லை. இந்தியாவைப்பொருத்தவரை, இதுவரையில் ஒழுங்குமுறைவிதிகள் ஏதும்வகுக்கப்படவில்லை.

செயற்கை நுண்ணறிவு பற்றி 'மைக்ரோசாப்டின்' நிறுவனர் பில்கேட்ஸ் கூறும்போது, "செயற்கை நுண்ணறிவானது குறியீட்டாளர் (CODER), உயிரியலாளர் (BIOLOGIST), ஆற்றல் நிபுணர்( ENERGY EXPERT) தவிர, பிற யாவற்றையும் இடமாற்றம் செய்துவிடும்" என்கிறார்.

மனித வேலைகளை செயற்கை நுண்ணறிவு எடுத்துக்கொள்வது குறித்து ட்விட்டரின் உரிமையாளரும், உலக பணக்காரர்களில் முதலிடத்திலுள்ளவருமான எலன் மஸ்க் கூறும்போது, "நம்மில் யாருக்குமே இனி வேலை இருக்காது" என்கிறார்

செயற்கை நுண்ணறிவு என்பது கணினி அறிவியலின் ஒரு பகுதியாகும் மனிதனைப்போன்றே இயந்திரங்களும் பகுத்தறியும் திறனைப்பெற உதவுதல் மற்றும் தானாக முடிவெடுக்கும் திறன்களைக் கொடுக்கும் ஒரு தொழில் நுட்பமாகும். இது, கற்றல், சிக்கலைத்தீர்த்தல், மொழிகளைப் புரிந்துகொள்வது போன்ற மனித நுண்ணறிவு தேவைப்படும் பணிகளைச்செய்ய கணினி அமைப்புகளைப் பயன்படுத்துகிறது. இன்னும் சுருக்கமாகக்கூறினால், மனிதனுக்கும் இயந்திரத்திற்கும் இடையிலான வேறுபாடு படைப்பாக்கத்திறனாகும். இந்த படைப்பாக்கத்திறன் இயந்திரங்கள் மூலமும் சாத்தியப்படுமானால் அதுவே செயற்கை நுண்ணறிவு என அழைக்கப்படுகிறது.

செயற்கை நுண்ணறிவு எவ்வாறு செயல்படுகிறது எனப்பார்த்தோமேயானால், நாம் உள்ளீடாகக்கொடுக்கும் தரவுகளை வைத்து அதன் சாதக பாதகங்களை கணக்கில் கொண்டு சொந்தமாக யூகித்து செயற்கை நுண்ணறிவு செயல்படுகிறது. மனித மூளையில் நியூரான்கள் என்று சொல்லப்படும் கம்பி போன்ற அமைப்புகள் கோடிக்கணக்கில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளன. இந்த நியூரான்களின் ஒன்றிணைந்த செயல்பாட்டினால் ஒரு முடிவு எடுக்கப்படுகிறது. அதுபோல செயற்கை நரம்பியல் வலையமைப்பிலும், இவ்வாறு பல்வேறு நியூரான்கள் வடிவமைக்கப்பட்டுள்ளன.

செயற்கைநுண்ணறிவுத் தொழில் நுட்பமானது ஒவ்வொரு தனிமனிதனின் வாழ்வையும் யாரும் எதிர்பாராத அளவுக்கு மாற்றியமைக்கக்கூடியதாக மாறியுள்ளது. இந்தியாவில் இதுவரை 724 மில்லியன் மக்கள் செயற்கை நுண்ணறிவுத்தொழில் நுட்பத்தினை பயன்படுத்தி வருகின்றனர். உலகளவில் செயற்கை நுண்ணறிவுத் தொழில்நுட்பத்தில் சீனா, அமெரிக்கா, பிரிட்டன், ஜப்பான், போன்ற நாடுகள் வலிமை கொண்ட நாடுகளாக இருக்கின்றன. இந்நாடுகளின் சந்தை மதிப்பு 409 லட்சம் கோடி என மதிப்பிடப்பட்டுள்ளது. 2023 ஆம் ஆண்டில் மட்டும் செயற்கை நுண்ணறிவுத் தொழில் நுட்பத்தில் அமெரிக்கா 5.7 லட்சம் கோடி முதலீடு செய்துள்ளது. இம்முதலீட்டில் 70 சதவீதம் தனியாருக்குச்சொந்தமானது என்பது கூடுதல் செய்தி. இந்தியாவும் செயற்கை நுண்ணறிவுத்துறையில் 11,900 கோடி முதலீடு செய்து உலகின் 10 வது இடத்திலுள்ளது. செயற்கை நுண்ணறிவுத்தளத்தில் மைக்ரோ சாஃப்ட், கூகிள், ஆப்பிள், டீப் சீக், ட்விட்டர், மெட்டா, ஓபன் ஏஐ, அமோசான் போன்ற தகவல் தொடர்பு சார்ந்த கார்ப்பரேட் நிறுவனங்கள் செயல்பட்டு வருகின்றன.

செயற்கை நுண்ணறிவானது இந்தியநாட்டின் மூன்று முக்கிய துறைகளாக விளங்குகின்ற விவசாயம், பொருளுற்பத்தி, சேவை சார்ந்து முழுவீச்சாகப் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. விவசாயத்தில்; காலநிலை குறித்த முன்னறிவிப்பு; மண்ணின் தரத்தினை மேம்படுத்தவும்; பூச்சிகளை நிர்வகிக்கவும்; மண் வளங்களைப்பாதுகாக்கவும் செயற்கை நுண்ணறிவு பயன்படுத்தப்பட்டு வருகிறது. தகவல் தொடர்புகளில்: மெய் நிகர் உதவியாளர்கள், மொழிபெயர்ப்பு, மின்னஞ்சல் வடிகட்டுதல். போக்குவரத்தில்; வழிகாட்டுதல் மற்றும் போகுவரத்து மேலாண்மை, ஓட்டுநர் இன்றி சுயமாக ஓட்டும் வாகனங்கள், சுகாதாரப்பராமரிப்பு: மருத்துவ நோயறிதல், தனிப்பட்ட நோயாளிக்கு ஏற்றவாறு சிகிச்சைத்திட்டங்கள், மெய்நிகர் சுகாதார



**செயற்கை நுண்ணறிவு எவ்வாறு செயல்படுகிறது எனப்பார்த்தோமேயானால், நாம் உள்ளீடாகக்கொடுக்கும் தரவுகளை வைத்து அதன் சாதக பாதகங்களை கணக்கில் கொண்டு சொந்தமாக யூகித்து செயற்கை நுண்ணறிவு செயல்படுகிறது.**

உதவியாளர்கள். நிதித்துறையில்: மோசடிகளை கண்டறிதல், தனியங்கி வர்த்தகம், தனிநபருக்கான வங்கிசெயல்பாடு. பொழுதுபோக்கில் – மிதந்தோடுகிற (Streaming) சேவைகள்: பயனர்களின் விருப்பத்தின் அடிப்படையில் வழங்கப்படும் திரைப்படம், இசை சார்ந்த சேவைகள் (உ;ம்) Netflix, Spotify. கல்வி; தனிநபர் கற்றல், தானியங்கி தரப்படுத்துதல், ஏஐ ஆசிரியர்கள். வேலை மற்றும் உற்பத்தித்திறன்: தானியங்கி, ஸ்மார்ட் உதவியாளர்கள், ஆட்சேர்ப்பு, ரோபோட்கள். இதுதவிர, சில்லறை விற்பனை மற்றும் ஷாப்பிங், ,சைபர் பாதுகாப்பு, சுற்றுலா, விளையாட்டு, உணவு வினியோகம், விமானப்போக்குவரத்து போன்ற எண்ணற்ற சேவைகளிலும் செயற்கை நுண்ணறிவுத் தொழில் நுட்பம் பயன்படுத்தப்படுவதாக இருக்கின்றன.

செயற்கை நுண்ணறிவுத்தொழில்நுட்பத்தில் Chat Bot. Chat GPT, Generative AI, ஆகியன முக்கியமானதாகும். இதில் Chat Bot என்பது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**Generative AI, Chat GPT, Chat Bot. யாவுமே பெரிய அளவிலான போலி உள்ளடக்கத்தை விரைவாகவும் எளிதாகவும் உருவாக்க அனுமதிக்கின்றன. இவ்வாறு செயல்படுவதினால் ஜனநாயகச்செயல் முறைகள் மற்றும் ஜனநாயக நிறுவனங்கள் மீதான நம்பிக்கை குறைந்து போவதற்கு வாய்ப்புக்கள் அதிகரித்து வருகிறது.**

மனிதர்களுக்கு இடையேயான உரையாடலைப்போன்று கணினிக்கும் மனிதனுக்கும் இடையே ஒரு சாதாரணமான உரையாடல் செய்யக்கூடிய ஒரு மென்பொருள் ஆகும். *Chat GPT* என்பது உரையாடல் பயன்பாடுகளுக்கான உரை உருவாக்கத்தில் நிபுணத்துவம் பெற்ற ஒரு குறிப்பிட்ட வகை உருவாக்க செயற்கை நுண்ணறிவு (*Generative AI*) ஆகும். *Generative AI* என்பது படங்கள், உரை, ஆடியோ மற்றும் வீடியோக்கள் போன்ற புதிய உள்ளடக்கத்தை உருவாக்கக்கூடிய ஒருவகை செயற்கை நுண்ணறிவாகும். இது ஏற்கனவே உள்ள தரவுகளிலிருந்து வடிவங்களைக் கற்றுக்கொள்வதற்கும் பின்னர் அந்த வடிவங்களின் அடிப்படையில் புதிய உள்ளடக்கத்தை உருவாக்குவதற்கும் இயந்திரக்கற்றலைப் பயன்படுத்துகிறது. இம்மூன்றிற்கும் இடையேயான தொடர்புகள்பற்றி கூறும்போது, *Chat GPT* என்பது ஒரு செயற்கை நுண்ணறிவு *Chat Bot* ஆகும். இது மனிதனைப்போன்ற உரையாடலை உருவாக்க இயற்கையான மொழி செயலாக்கத்தைப் பயன்படுத்துகிறது. இதுவும் ஒருவகையான *Generative AI* தான்.

இவை மூன்றினது செயல்பாடு பற்றிக்கூறுகையில், ஏற்கனவே பயிற்சி அல்லது ஊட்டப்பட்ட தரவுகள் மட்டும் அல்லாமல், இணையத்திலுள்ள தரவுகளையும் தேடி, தங்களது பதிலில் இணைத்துக்கொள்வதாக இருக்கின்றன. ஊட்டப்படுகிற தரவுகள் அல்லது இணையத்தில் பெறப்படுகிற தகவல்கள் போலியாகவோ, தவறான தகவலாகவோ இருக்கும் பட்சத்தில் பயனர்களுக்கும் அப்படியே கடத்தப்படுகிறது. இதிலிருந்து செயற்கை நுண்ணறிவுத்தளங்கள் யாவுமே நம்பகமானவை அல்ல என உறுதி செய்து கொள்ளலாம்.

*Generative AI, Chat GPT, Chat Bot.* யாவுமே பெரிய அளவிலான போலி உள்ளடக்கத்தை விரைவாகவும் எளிதாகவும் உருவாக்க அனுமதிக்கின்றன. இவ்வாறு செயல்படுவதினால் ஜனநாயகச்செயல் முறைகள் மற்றும் ஜனநாயக நிறுவனங்கள் மீதான நம்பிக்கை குறைந்து போவதற்கு வாய்ப்புக்கள் அதிகரித்து வருகிறது.

நாடுகளுக்கிடையேயான போரில் செயற்கை நுண்ணறிவுத்தொழில் நுட்பத்தின் உதவியுடன், மக்களின் இருப்பிடங்களைக் குறிவைத்து தாக்குதல் நடத்தவும், வாழ்வாதாரங்களை அழிக்கவும் செய்ய முடிவதுபோல, செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பமானது ஜனநாயகத்தூண்களிலும் (சட்டசபை, நாடாளுமன்றம்- அதிகார வர்க்கம்-நீதித்துறை) உட்புகுந்து அதன் அடித்தளத்தையே அசைத்து வருவதைக் காணமுடிகிறது.

மக்களால் தேர்ந்தெடுக்கப்படும் பிரதிநிதிகள் மக்கள் நலனுக்கு முன்னுரிமையளித்து அதனை மக்களுக்கே திருப்பிச்செலுத்துவது அவசியம். நிலைமை அப்படியல்லாமல் மக்கள் பிரதிநிதிகள் செல்வாக்கினையிழந்து சந்தை நலனுக்கு முக்கியத்துவம் அளிக்கும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர். அதாவது, பொருளாதாரத்தில் கட்டுப்பாடுகளற்ற வணிக நடைமுறை பின்பற்றப்படுவது போன்று, அரசியல் மற்றும் சமூகப்பரப்பிலும் கட்டுப்பாடுகளற்ற தன்மை பிரதிபலிக்கத்தொடங்கியுள்ளது கவனிக்கத்தக்கது. தேர்ந்தெடுக்கப்படும் மக்கள் பிரதிநிதிகளின் வழியான ஆட்சி நிர்வாக முறை அப்போது பின்பற்றப்பட்டுவந்தது. தற்போது, அதிகாரவர்க்க ஆட்சி நிர்வாக முறையானது மக்களின்மீது திணிக்கப்படுவதாக மாறியிருக்கிறது.

ஏற்கனவே ஆட்சி நிர்வாக முறையும் நீதித்துறையும் கணினிப்பயன்பாடு அதிகரித்து, செயற்கை நுண்ணறிவு பயன்படுத்துவதனைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்க்கமுடிகிறது. ஒன்றிய அரசுத்துறை - பொதுத்துறை மற்றும் அனைத்து மாநிலங்களிலும் நிர்வாகத்திலும் கணினி பயன்பாடு அதிகரித்தவண்ணமிருக்கிறது. குடிமக்களின் சேவை, நிர்வாகம் மற்றும் கொள்கை உருவாக்கம் வரை, தனியார் கணினி நிறுவனத்தின் துணையுடன் செயற்கை நுண்ணறிவானது திறன் பயிற்சி, திறன் மேம்பாட்டுத்திட்டங்கள், மற்றும் கருவிகள் மூலம் பொது நிர்வாகத்தை வடிவமைத்து செயல்படுத்தி வருகின்றன.

அரசியலில் நேர்மறை மற்றும் எதிர்மறை என பல வழிகளில் செயற்கைநுண்ணறிவானது பெரும் தாக்கத்தினை மக்களிடையே ஏற்படுத்தி வருகிறது. அரசியல் அமைப்புகள், பிரச்சாரங்கள், தேர்தல் கணிப்புகள் உள்ளிட்ட யாவையும் பாதிக்கச்செய்கிறது. அரசியல் கட்சிகள் தேர்தல் சமயத்தில், தனக்கான செய்திகளை உருவாக்குவது; விளம்பரங்கள் மூலம் ஒரு குறிப்பிட்ட மக்கள்தொகையினரை குறிவைப்பது; போலிச்செய்திகளை வெளியிடுவது; தவறான தகவல்களை பரப்புவதற்குப் பயன்படுத்திக்கொள்கின்றன. இதுமட்டுமலலாது, அரசியல் கட்சிகளும், வேட்பாளர்களும் வாக்காளர்களுடன் தொடர்பு கொள்ளவும், கேள்விகளுக்கு பதிலளிக்கவும், சமூக ஊடகங்களில் ஈடுபாட்டை அதிகரிக்கவும் ஏ.ஐ. சாட்போட்களைப் பயன்படுத்துகின்றனர். இதனால் ஜனநாயகத்திற்கு வேராக உள்ள பிரதிநிதித்துவம் :பொறுப்புக்கூறல்: நம்பிக்கை என்பது கேள்விக்குறியாக உள்ளது.

இதுதவிர, அரசின் தரவுகளை பகுப்பாய்வு; முன்கணிப்பு பகுப்பாய்வு; பொருளாதாரப் போக்குகளை கணிப்பது; பொதுச்சேவை மேம்பாடுகளுக்கு செயற்கை நுண்ணறிவு பயன்படுத்தப்படுகிறது. அது மட்டுமின்றி, வரலாற்றுப்போக்குகள் மற்றும் பொது உணர்வுகளின் அடிப்படையில் கொள்கைகளைப் பரிந்துரைக்க ஏராளமான தரவுகளை செயற்கை நுண்ணறிவு பகுப்பாய்வு செய்து உதவுகிறது இன்னும் சொல்லப்போனால், தானியங்கிப் பணியிலும் ஈடுபடுகிறது.

செயற்கைநுண்ணறிவுத்தொழில்நுட்பமானது ஒருபக்கம் சிறந்த நிர்வாகம், வளமான பொருளாதாரக்கட்டமைப்பு, கல்வி, சுகாதார பராமரிப்பு மற்றும் சிறந்த உள் கட்டமைப்புகளை வழங்கினாலும், மறுபக்கம் தவறான தகவல்களைப்பரப்புதல், தனியுரிமையை மீறுதல், சார்பு மற்றும் பாகுபாட்டை ஏற்படுத்துதல், பொறுப்புக்கூறல் இல்லாமை மற்றும் வேலைகளை இடமாற்றம் செய்தல் போன்ற சவால்களையும் எதிர்கொள்ளவேண்டியிருக்கிறது.

தவறான தகவல் என்பது செயற்கை நுண்ணறிவு தொடர்பான மிகவும் கடுமையான கவலைகளில் ஒன்றாகும். இந்தியாவில் 724 மில்லியனுக்கும் அதிகமான பயனர்கள் உள்ளனர். இதன் மூலம் தவறான தகவல்களைப்பரப்புவது எளிது. செயற்கை நுண்ணறிவின் வழியாக வகுப்புவாத வாத தகவல்களைப்பரபவும், போலி தகவல்களைப்பரப்புவது, தேர்தல் சமயத்தில் செயற்கைநுண்ணறிவால் மாற்றியமைக்கப்பட்ட வீடியோக்களை வெளியிட்டு அரசியல் பிரச்சாரம் செய்து சமூகத்தில் அமைதியின்மையை ஏற்படுத்துகிறது.

சாட் ஜிபிடி,(CHAT GPT) கோ பைலட் (CO PILOT), க்ரோக் (GROK) போன்ற ஆற்றல்மிக்க செயற்கை நுண்ணறிவு உரையாடல் கருவிகள் ஜனநாயகத்திற்கான வாய்ப்புக்களையும், சவால்களையும் ஏற்படுத்தித் தருகின்றன. உள்ளடக்க உருவாக்கம், மற்றும் கேள்விகளுக்கு பதிலளிப்பதில் உதவ வடிவமைக்கப்பட்ட இந்தக்கருவிகள் பயிற்சிக்காக பெரிய தரவுத்தொகுப்புக்களை நம்பியுள்ளன. இந்த வகையான செயற்கை நுண்ணறிவு மூலம் தகவல் அணுகல், செயல்திறன் மற்றும் ஈடுபாட்டை மேம்படுத்தமுடியும் என்றாலும், சார்புடைய அல்லது நம்பகத்தன்மையற்ற தரவுகளில் ஊட்டப்பெற்றால் அவைகள் தவறான தகவல்களைப் பரப்பமுடியும். ஏ.ஐ. சாட்போட்களும் தவறாக வழிநடத்தும் உள்ளடக்கத்தையும் உருவாக்கலாம். சரியான உள்ளடக்கக்கட்டுப்பாடு மற்றும் அவர்களுக்கு ஊட்டப்படும்தரவுகளில்வெளிப்படைத்தன்மை இல்லாமல் போனால், இந்தக்கருவிகள் பிரச்சாரத்திற்கான ஆதாரங்களாக மாறும் அபாயம் உள்ளது. செயற்கை உரையாடல்களினால், நமது தக்வல் சுற்றுச்சூழல் அமைப்பு எவ்வளவு மாசுபடுகிறதோ அவ்வளவுக்கு நம்பகமான தகவல் ஆதாரங்களைக்கண்டு பிடிப்பது கடினமாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்கும். ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச்செயலாளரான அந்தோணியோ குட்ரஸ் செயற்கை நுண்ணறிவு பற்றி கூறும்போதுகூட, " மனித குலத்திற்கு இருத்தலியல் ஆபத்து" என்கிறார்.

*Generative AI ,Chat GPT, Chat Bot* இணையம் சார்ந்த சேவைகள் யாவுமே தனியாரின் வசமே உள்ளன. தனியார் கட்டுப்பாடு எனும்போது தனது கருத்தியலை வலுப்படுத்தவும், நிலை நிறுத்தவுமே செய்யும். மேலும் லாபத்தை அடிப்படையாகக்கொண்டு மட்டுமே இயங்கும் என்பதைச் சொல்லத் தேவையில்லை.

செயற்கைநுண்ணறிவுத்தொழில்நுட்பமானது நாளுக்குநாள் வளர்ச்சியடைந்துகொண்டே வருகிறது. தொழில் நுட்ப வல்லுநர்கள் தங்களது அறிவுத்திறனை செயற்கை நுண்ணறிவுத்தளத்திற்குள் புகுத்தி மேலும் மேலும் செழுமையாக்குகின்றனர் வல்லுநர்கள் அவ்வாறு செய்யும்போது, பயனர்கள் புதுப்பித்த தகவல்களைபெற முடிகிறது. இவ்வாறாக புதுப்புதுத்தகவல்களை பயனர்களுக்கு அளிக்கும்போது பயனர்களின் விமர்சனத்திறன் நாளடைவில் குறைந்துவிடும் அபாயத்தினை மறுக்கமுடியாது."அதிகரித்துவரும் தானியங்கி செயற்கை நுண்ணறிவால்" பயனர்கள் மேலும்மேலும் அறிவாற்றல் ரீதியாக செயலற்றவர்களாக மாறக்கூடும். இது திட்டமிடப்பட்ட சிந்தனை மற்றும் சமூகத்தேக்கத்திற்கு வழிவகுக்கும்" என்கிறார் - யுவல் நோவல் ஹராரி.

மனிதர்களுக்குப்பதில் செயற்கை நுண்ணறிவுத்தொழில் நுட்பத்தால் பணிகளை மேற்கொள்ளும் போது, பணியாளர்களைவிட மூலதனத்திற்கே முன்னுரிமையளிக்கும் சூழல் உருவாகும். இதனால் சமத்துவமின்மை பெருகவே வழிவகுக்கும். அதுமட்டுமின்றி, புதிய வகைத்தொழில்நுட்பம் வளர்சியடையும்போது ஒருபக்கம் வேலை வாய்ப்புகள் உருவாவதும் இன்னொருபக்கம் திறனற்ற தொழிலாளர்கள் வேலையிழப்பதும் நேர்கிறது. தொழில்நுட்பம் யாவுமே லாபத்தினை நோக்கமாகக்கொண்டிருப்பதால் வேலைவாய்ப்பின்மை என்பது அதிகரிக்கவே செய்யும்.

புதுவகை செயற்கை நுண்ணறிவுத்தொழில் நுட்பத்தின் கண்டுபிடிப்புகளுக்கேற்ப பயனர்களின் எண்ணிக்கையும் அதிகரித்து அதிக லாபமீட்டிட வழிவகுக்கிறது. அரசாங்கமும் தன்பங்கிற்கு பொதுமக்களையும், பயனர்களையும் இத்தொழில் நுட்பத்தின் மூலம் கண்காணிக்கவும் வாய்ப்பாகியுள்ளது. சமூக வலைதள நிறுவனங்களும், இணைய சேவை செயலிகளும் பயனர்களின் இணைய நடவடிக்கைகள் அனைத்தையுமே சேகரிக்கின்றன. அவ்வாறு சேகரித்த தகவல்களை செயற்கை நுண்ணறிவு மென்பொருளுக்குக்கொடுத்து பகுப்பாய்வு செய்கின்றன. அதன்மூலம் உங்கள் நோக்கங்களைக் கண்காணிக்கின்றன. பிறகு அவற்றினை தனியாருக்கு விற்கவும் செய்யலாம்.

செயற்கை நுண்ணறிவுத்தளத்தில் ஈடுபட்டுவரும் கார்ப்பரேட் நிறுவனங்கள் யாவுமே அந்நிறுவனங்கள் எதிர்நோக்கும் முடிவை பயனர்களையே எடுக்கவைக்கும் அளவுக்கு திறன்பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது. செயற்கை நுண்ணறிவுத்தொழில்நுட்பமானது, நாள்தோறும் வளர்ந்து ஒவ்வொரு தனிமனிதனின் எண்ணங்கள், உள்நோக்கங்களை முன் அறிவித்து அவற்றினைச்செயல் படுத்தும் திறனைக்கொண்டுள்ளது. இத்தொழில் நுட்பமானது ஒருகட்டத்தில் தனிமனிதனின் தனியுரிமைக்கும், சுய முயற்சிக்கும் ஆபத்தை ஏற்படுத்தும் கருவியாகவும் மாறலாம். மக்களை முன்னிருத்திச்செயல்படும் ஒரு ஜனநாயக தேசத்தில் மக்கள் பிரதிநிதித்துவம், மக்களுக்கு பொறுப்புகூறல், அரசியலமைப்பின் மீதான மக்களின் நம்பிக்கை செயற்கை நுண்ணறிவுப் பரப்பின் அதிகரிப்பால், எந்த அளவுக்கு சிதைந்துபோகும் என்பது கவலைக்குரியதாக உள்ளது.

**இக்கட்டுரை எழுத உதவியவை: நன்றி**


Is AI Eroding Our Critical thinking? - By ROSS POMEROY

Why Great AI Produces Lazy Humans? - By ETHAN MOLLICK

How AI Threatens Democracy - By SARA KREPS and DOUG KRINER

தினமணி 06.04.25 மற்றும் The Hindu Dated 16.04.2025 and 18.04.2025


●

**கட்டுரையாளர்: எழுத்தாளர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்களாட்சியை வீழ்த்தினோம்

இன்றைய பிரதிநிதித்துவ மக்களாட்சிக்கு விளக்கம் தந்த அறிஞர்களுள் ஜான் ஸ்டுவர்ட் மில் மிகக் குறிப்பிடத்தக்கவர் என்பதை எவரும் மறுக்க இயலாது. அவர் இந்த பிரதிநிதித்துவ மக்களாட்சிக்கு விளக்கம் அளித்தபோது இது மிகவும் உன்னதமான கருவி இதை கையாள்வதற்கு சமூகங்கள் தங்களைத் தகுதப்படுத்திக் கொள்ள வேண்டும் என்றார். அப்படி தகுதிபடுத்திக் கொண்ட சமூகங்கள் உலகில் ஒருசில மட்டுமே என்றும் கூறினார். அது மிகப் பெரும் விமர்சனத்திற்கு ஆளானது. அதற்குப் பதிலளிக்கும் விதமாக அவர் ஒரு கருத்தை முன் வைத்தார். இது ஒரு கருதுகோளாக வைத்துக் கொள்ளுங்கள் எதிர்காலத்தில் இந்த பிரதிநிதித்துவ மக்களாட்சியைக் கைக்கொண்டு ஆட்சி செய்யும் சமூகங்களை ஆய்வு செய்து இதன் உண்மைத் தன்மையை அறிந்து கொள்ளுங்கள் என்றார்.

தேர்தல்தான் மக்களாட்சியை உருவாக்கும் கருவி. அந்தத் தேர்தலுடன் நின்று விடுவதில்லை மக்களாட்சி அந்த ஆட்சியில். அந்த ஆட்சி மக்களாட்சியின் கூறுகளை தன் ஆளுகையில் நிர்வாகத்தில், மக்களுடன் இணைந்து மக்களுக்குப் பணி செய்வதில் என அனைத்திலும் நடைமுறைப்படுத்திக் காண்பிக்க வேண்டும். அந்த நிலையை அடைய ஆட்சியாளர்களும் சரி, நிர்வாகத்தில் இருக்கின்ற பணியாளர்களும் சரி, அதற்கான சிந்தனையை உருவாக்கிக் கொண்டு தங்களின் நடத்தையில் மக்களிடம் காண்பிக்க வேண்டும். அது ஒரு சமத்துவம் பழகும் பண்பு. அதற்கு ஒரு புதிய உழவியல் அனைவரிடமும் வேண்டும். இன்றைய நம் பிரபுத்துவச் சிந்தனையில் செயல்படும் கலாச்சாரத்தை மாற்றத் தேவையான உளவியலை நம் அரசியல்வாதிகளும், அதிகாரிகளும், மக்கள் பிரதிநிதிகளும் உருவாக்கிக் கொள்ள வேண்டும். இதற்கு மிக முக்கியமானது எளிமையாக மக்களுடன் பழகுவது கலப்பது. அது மட்டுமல்ல அப்படி நம் ஆட்சியாளர்களும், அதிகாரிகளும், பணியாளர்களும் நடந்து கொள்கின்றார்களா என்று கண்காணிக்கும் பண்பு கொண்டவர்களாகவும் புரிதல் உள்ளாவர்களாகவும் மக்கள் இருக்க வேண்டும். அப்படி பொதுமக்கள் குடிமக்களாக பொறுப்புடன் புரிதலுடன் செயல்பட்டு, அரசியல்வாதிகளையும், ஆட்சியாளர்களையும், தங்களுக்கு மேலானவர்கள் அல்ல, சமமானவர்கள் என்பதை புரிய வைக்க வேண்டும். அது மட்டுமல்ல பொதுமக்களும் தாங்கள் பொறுப்புமிக்க குடிமக்கள் என்ற கண்ணோட்டத்தில் அரசுடன் இணையும் பக்குவம் கொண்டவர்களாக மாற்றம் பெறவேண்டும். மேற்கூறிய அனைத்துக்கும் ஒரு பெரும் உளவியல் மாற்றம் அனைத்து தரப்பினருக்கும் வந்தாக வேண்டும். இதுவே ஒரு மக்களாட்சிக்கான ஒரு பயிற்சி மற்றும் கல்வி. மக்களாட்சி என்பது ஒரு ஆட்சி முறை மட்டுமல்ல. அது ஒரு கலாச்சாரம், அது ஒரு உளவியல். இதனைக் கொண்டுவர கடும் முயற்சி தேவை. அது ஒவ்வொருவரிடமும் உள்ளும், புறமும் நடைபெற வேண்டும். அது தொடர் தயாரிப்பு. மக்களாட்சி என்பது அரசும் மக்களும் இணைந்து செயல்படுவதுதான். அரசுப் பணியாளர்கள் தன் பணியைச் செய்வார்கள். குடிமக்கள் குடிமக்களாக பொறுப்புடன் அர/சியலில் பொருளாதாரத்தில், சமூகத்தில், கலாச்சாரத்தில் என அனைத்துத் தளங்களிலும் தங்கள் பங்களிப்பைச் செய்வார்கள். இதற்கு வழிகாட்டுதல் நமக்கு நம் அரசமைப்புச் சாசனத்திலிருந்து கிடைக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த பிரதிநிதித்துவ தாராளமய மக்களாட்சியில் வரப்பற்ற உரிமைகள் மக்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ளன. அரசு இயந்திரங்கள் ஒன்றோடு ஒன்று இணைந்து சட்டத்தின்படி ஆட்சியையும் நிர்வாகத்தையும் நடத்திட வேண்டும். இதில் முரண்பாடுகள் வந்தால் அதை தீர்த்து வைக்க சுதந்திரமான நீதிமன்றம் செயல்பட வேண்டும். இந்தச் செயல்பாடுகள் அனைத்துக்கும் ஒரு கட்டுப்பாடும், பக்குவமும், நியாய உணர்வும், அறச் சிந்தனையும் அனைவரிடமும் பின்புலத்தில் இருந்து இயக்க வேண்டும். இதற்கு வழிகாட்டுவது நம் அரசமைப்புச் சாசனம்தான்.

இதில் நேர்மை, தர்மம், நியாயம் என்பது ஆட்சியாளர்களுக்கு மட்டுமல்ல, இவைகள் அனைத்தும் அனைவருக்குமானது. இந்தப் பின்புலத்தில் அரசாங்கமும் மக்களும் இணைந்து செயல்பட்டு சமூகத்தில் உள்ள ஏற்றத்தாழ்வுகள், பாகுபாடுகள், வேறுபாடுகள், வித்தியாசங்கள், புறக்கணிப்புக்கள், அவமதிப்புக்கள் அனைத்தும் களையப்பட வேண்டும் என்றால் அது அரசாங்கத்தால் மட்டுமே இயலாது. அதற்கு அரசாங்கத்துடன் மக்கள் கைகோர்க்க வேண்டும். அரசாங்கம் மக்களுடன் இணைய வேண்டும். இன்று அந்த நிலை இல்லை. மக்களுக்கும் அரசுக்கும் உள்ள இடைவெளி என்பது மிக அதிகம். மக்கள் அந்நியப்பட்டிருக்கிறார்கள். கட்சிக்காரர்கள் மட்டுமே அரசுடன் இணைகின்றார்கள். இதன் விளைவுதான் நம் மக்களாட்சி கட்சிக்கானதாக இருக்கிறது, மக்களுக்கானதாக செயல்படவில்லை என்ற குற்றச்சாட்டிற்கு ஆளாகியிருக்கிறது. அரசியல் என்பதை கட்சியை மையப்படுத்தி கட்சியின் நலன் மையப்படுத்தப்பட்டே நடத்தப்பட்டு வருகிறது என்பதையும் நாம் கண்டு வருகின்றோம்.

இன்று நம் நாட்டில் நடைபெற்று வரும் மக்களாட்சி என்பது பிரதிநிதித்துவ மக்களாட்சிதான். கடந்த 30 வருடங்களாக பிரதிநிதித்துவ மக்களாட்சியில் ஒரு மாற்றம் செய்து பிரதிநிதித்துவ மக்களாட்சியுடன் பங்கேற்பு மக்களாட்சியையும் இணைத்தனர் புதிய உள்ளாட்சியை அரசாங்கமாக உருவாக்கி. இந்த பங்கேற்பு மக்களாட்சியின் மாண்பினை பிரெஞ்சுப் புரட்சிக்கு வித்திட்ட மாபெரும் சிந்தனையாளர் ரூசோ தன் சமூக ஒப்பந்தம் என்ற நூலில் சுட்டியுள்ளார். அதற்குமுன் அமெரிக்க சுதந்திரப் போராட்டத்தை நியாயப்படுத்தி எழுதிய "பொது அறிவு" என்ற நூலில் தாமஸ் பெயினும் அந்தக் கருத்தைக் கூறும்போது முகத்திற்கு முகம் பார்த்து ஒரு மரத்தடியில் எழுதப்படாத சட்டங்களை வைத்து முடிவு எடுக்கும் முறைக்கு ஒப்பாக வேறு எந்த மகக்ளாட்சி முறையையும் கூற முடியாது என்றார்கள் இந்த இரண்டு சிந்தனையாளர்களும்.

இதை நன்கு உணர்ந்த சுவிச்சர்லாந்து, நார்வே, சுவீடன், டென்மார்க் போன்ற நாடுகள் உள்ளாட்சியின் மேல் தங்கள் அரசாங்கங்களைக் கட்டி உள்ளாட்சி அரசாங்கத்தை மக்கள் கையில் தந்துவிட்டன அந்த நாடுகள். அதன் விளைவு பொறுப்புமிக்க அதிகாரம் மிக்க குடிமக்கள் தங்கள் பங்கேற்பின் மூலம் தங்கள் தேவைகளைப் பூர்த்தி செய்தது தங்களுக்கான ஒரு ஆட்சியை அடித்தளத்தில் கட்டமைத்துக் கொண்டது மட்டுமில்லாமல், மக்களாட்சியையும் வலுவாக்கிக் கொண்டு விட்டனர். அது

**தேர்தலும், தேர்தலுக்கான ஒரு அரசியலும் பிரதானப்படுத்தப்பட்டு, மக்களுக்கான அரசியலையும் வளர்ச்சி மற்றும் மேம்பாட்டு அரசியலைப் புறக்கணித்து விட்டது இன்றைய கட்சி அரசியல். வளர்ச்சி மற்றும் மேம்பாட்டு அரசியலுக்கு மக்களின் ஒற்றுமை தேவை.**

மட்டுமல்ல இதன் விளைவாக அந்த நாடுகளில் ஆட்சி அதிகாரம் என்பது நடுத்தர வர்க்கத்தின் கையில் இருக்கிறது. அந்த நாடுகளில் ஏழைகள் குறைந்தும், பணக்காரர்கள் எண்ணிக்கையும் குறைந்தும், நடுத்தர வர்க்கத்தின் எண்ணிக்கை அதிகரித்தும், ஆட்சியை நடுத்தர வர்க்கம் தீர்மானிக்கும் சூழலில் நடைபெற்றுக் கொண்டுள்ளது என்பதை பல்வேறு ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

ஆனால் நம் நாட்டில் உள்ளாட்சியின் மகத்துவம் அறிந்தும், அதை வலுப்படுத்த நம் ஆட்சியாளர்கள் தயாராக இல்லை என்ற கசப்பான உண்மையை நமது அரசாங்க அறிக்கைகளே தெரியப்படுத்துவதுதான் நாம் சந்திக்கும் மிகப் பெரும் சோகம். அதுவும் குறிப்பாக தமிழகம் இந்தியாவுக்கு மட்டுமல்ல உலகுக்கு வழிகாட்டும் வாழ்வியலுக்காக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருத்தியலை வைத்துள்ளது என்பதை நம் வரலாற்றிலும் இலக்கியங்களிலும் கூறுவதை மேடைக்கு மேடை அரசியல் முழக்கங்களாகச் செய்ய முடிகிறது. ஆனால் நடைமுறைப்படுத்த முடியவில்லை. நடைமுறைப்படுத்த நாம் தயாராகவில்லை என்ற கசப்பான உண்மையை நாம் ஒப்புக்கொண்டாக வேண்டும்.

"யாதும் ஊரே யாவரும் கேளீர்" என்ற மகாத்தத்துவத்தை தந்த புலவர் வாழ்ந்த நாடு நம் தமிழ் நாடு. உலகத்தில் மக்கள் நாடோடிகளாக வாழ்ந்த காலத்தில் மொழிக்கு இலக்கணம் எழுதிய பூமி தமிழ் நாடு. அது மட்டுமல்ல அத்துடன் ஒரு வாழ்வியலுக்கான இலக்கணத்தை குறளாக உலகிற்கே தந்த நாடு நம் தமிழ்நாடு. அது மட்டுமல்ல ஆட்சியாளர்களை தேர்தல் மூலம் தேர்ந்தெடுக்கும் முறையையும் உலகுக்குத் தந்த நாடும் தமிழ்நாடு தான். அந்தத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளரின் தகுதி என்ன, என்பதை ஒழுக்கத்தின் அடிப்படையில் வைத்து நிர்ணயம் செய்து ஆட்சிக்கு அறமும் ஒழுக்கமும் பின்புலத்தில் இருக்க வேண்டும் என்ற கருத்தை தந்த நாடும் தமிழ்நாடு தான். பசுவின் கன்றை கொன்ற கொலைக்குற்றத்தை செய்த தன் மகனையே தேர்காலில் இட்டு கொன்று நீதி தந்த ஆட்சியாளன் வாழ்ந்த நாடும் தமிழ்நாடுதான். தவறான நீதி பரிபாலனம் செய்து ஒருவனின் உயிரைப் பறித்தது நான் செய்த தவறு நானே குற்றவாளி என்று தன் உயிரை மாய்ந்து நீதி தேவதையை உயிர்ப்பிக்கச் செய்த ஆட்சியாளன் வாழ்ந்த நாடும் நமது நாடுதான். அந்த நாடு இன்று எங்கே இருக்கிறது என்பதுதான் கேள்வி. இன்று எல்லா அறக்கூறுகளையும் இழந்து சுயநலத்தின் உச்சத்தில் உல்லாச வாழ்க்கையை எல்லா சுகபோகத்தையும் அனுபவிக்க ஒட்டுமொத்த மக்களாட்சியை சிதிலமடையச் செய்து மாண்பற்ற ஒரு தேர்தல் முறையில் சிக்கி தவித்துக் கொண்டிருப்பதை நாம் சந்திக்கும் மனிதர்களிடமெல்லாம் கருத்தாக வெளிப்படுவதை நம்மால் பார்க்க முடிகிறது.

இந்தச் சூழல் என்பது இன்று தமிழகத்தில் மட்டுமல்ல ஒட்டு மொத்த இந்தியாவிலும் பார்க்க முடிகிறது. இதன் விளைவுதான் பொதுக்கருத்தாளர்கள் ஒரு புதுக்கருத்தை முன் வைக்கின்றனர். நம் தாராளமய மக்களாட்சியை எவ்வளவுக்கு எவ்வளவு




பாழ்படுத்த முடியுமோ அந்த அளவுக்கு பாழ்படுத்தியுள்ளோம். அதன் தாக்கம் தான் மக்களாட்சி மாண்பு கெட்டுவிட்டது, அதைச் சரி செய்ய வேண்டும் என பொதுக் கருத்தாளர்கள் முழக்கமிட ஆரம்பித்து விட்டனர். தாராளமய மக்களாட்சிக்குப் பதில் நெறிப்படுத்தப்பட்ட ஒரு மக்களாட்சி தான் வேண்டும் என முழங்கவும் ஆரம்பித்து விட்டனர்.

இது எங்கு துவங்கியது என்று நிதான்மாகச் சிந்தித்தால் தனியார் மயம், தாராளமயம், உலகமயம் பொருளாதாரம் என்று பிரகடனப்படுத்தப்பட்டு சந்தைக்கு சிவப்புக் கம்பளம் விரித்தோமோ அன்றுதான் இது துவங்கியது. ஆட்சியைப் பிடிப்பதற்கும், தக்க வைப்பதற்கும் பணம் தேவை என்ற சிந்தனை வந்து, அந்தப் பணத்தை மக்களிடமிருந்து பெற முடியாது, அதை சந்தையிலிருந்து தான் பெற முடியும் என்ற நிலை வந்து சந்தையின் பக்கம் வீழ்ந்தது நம் அரசியல். அந்த வீழ்ச்சி அரசியல் வீழ்ச்சி தான், அது இன்று மக்களாட்சியை வீழ்த்திவிட்டது. ஒரு அரசு பொருளாதாரம் வளரும்போது பங்கீட்டு நிதியை நிர்வாகத்தைச் செம்மைப்படுத்தி செறிவாக நிகழ்த்தி ஆட்சி செய்வதற்குப் பதிலாக கட்சி அரசியலை வளர்த்தெடுக்க சந்தையின் காலடியில் அதிகாரத்தை வைத்து விட்டது கட்சி அரசியல்.

தேர்தலும், தேர்தலுக்கான ஒரு அரசியலும் பிரதானப்படுத்தப்பட்டு, மக்களுக்கான அரசியலையும் வளர்ச்சி மற்றும் மேம்பாட்டு அரசியலைப் புறக்கணித்து விட்டது இன்றைய கட்சி அரசியல். வளர்ச்சி மற்றும் மேம்பாட்டு அரசியலுக்கு மக்களின் ஒற்றுமை தேவை. பொது மேம்பாட்டில்தான் தனிமனித, குடும்ப



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேம்பாடு அடங்கியுள்ளது என்ற அடிப்படையில் நாட்டின் வளர்ச்சி, மாநிலத்தின் வளர்ச்சி, நகரின் வளர்ச்சி, கிராமத்தின் வளர்ச்சி என்ற பொது மேம்பாட்டை முன்னிலைப்படுத்தாமல், மக்களை வாக்குக்காகப் பிரித்து அரசியல் நடத்தியதின் விளைவு இன்று மேம்பாடு ஒரு சில வர்க்கத்திற்கு சாத்தியமானது மற்றவர்கள் அரசின் மேய்ப்புக்குள் பயனாளியாக அடைக்கப்பட்டு கிடக்கின்றனர் என்பது அனைவரும் அறிந்த உண்மை. இதை 1985 வாக்கில் ரஜினி கோத்தாரி தன் "ரீ திங்கிங் டெமாக்ரசி" என்ற புத்தகத்தில் மிகத் தெளிவாக நம் அரசியல் தடம் மாறுவதை சுட்டிக்காட்டி நேரம் வந்துவிட்டது நம் மக்களாட்சியை சீராய்வது செய்வதுற்கு என்று பிரகடனப்படுத்தினார். அதே நேரத்தில் பொருளாதார வளர்ச்சிக்கான சீர்திருத்தமும் செய்ய வேண்டிய காலம் வந்துவிட்டது என்ற நிலையில் மாற்றுமுறை பொருளாதாரத்தை நோக்கி அடி எடுத்து வைக்க இந்தியாவை 21ஆம் நூற்றாண்டுக்கு எடுத்துச் செல்லும் முயற்சி என்று பிரகடனப்படுத்தப்பட்டது. அந்த முயற்சி 1991ல் உலகமயப் பொருளாதாரத்தை நோக்கி என்ற முழக்கத்தில் எடுக்கப்பட்டு அதற்கான சீர்திருத்தங்களைச் செய்து சந்தையின்மேல் கட்டப்பட்ட மூக்கணாங்கயிறு அவிட்கப்பட்டு சந்தையின் முழுச் சக்தியைப் பயன்படுத்தி வளர்ச்சி நிர்ணயிக்கப்பட்டு செயல்பட்டதன் விளைவு உலகம் வியக்கும் பொருளாதார வளர்ச்சியை எட்டியது. ஒரு ஆட்சியின் சிறப்பு எதில் இருக்கிறது என்றால் நாடு பெற்ற பொருளாதார வளர்ச்சியை பாதுகாப்பதிலும், அந்த வளர்ச்சியை பங்கீடு செய்வதில் நடத்தும் நிர்வாகத்தில்தான் உள்ளது. வளர்ந்த பொருளாதாரத்தில் எண்ணற்ற மேம்பாட்டுத் திட்டங்கள் உருவாக்கப்பட்டு செயல்படுத்தினாலும் அவைகள் மக்களை குறிப்பாக விளிம்பு நிலை மக்களைச் சென்று அடையவில்லை என்பதில் யாருக்கும் எந்த சந்தேகமும் இல்லை.

இதன் விளைவுதான் பொதுமக்களின் தொடர்ந்த கூப்பாடு குடிமக்களின் அடிப்படைத் தேவைகளுக்காக இருந்தது. இதைச்சரி செய்து மக்களை பங்கேற்க வைக்கத்தான், புதிய உள்ளாட்சி அரசாங்கமாக அரசமைப்புச் சாசனத்தால் உருவாக்கப்பட்டது. இதனையும் தாண்டி பல்வேறு விதமான உரிமைச் சட்டங்களையும் கொண்டு வந்து மக்களை அதிகாரப்படுத்தி மேம்பாட்டுப் பணிகளில் அவர்களை பங்கேற்க வைக்க முயற்சிகளை மேற்கொண்டது மத்திய அரசாங்கம். இவை அனைத்தின் முக்கியத்துவம் அறிந்து அடித்தள ஆட்சி, நிர்வாகக் கட்டமைப்புக்கள் மேம்படுத்தப்பட்டனவா என்றால் ஆம் என்று கூற முடியவில்லை.

காரணம் மேலே இருந்து உருவாக்கப்படுகின்ற சட்டமோ, திட்டமோ அவை அனைத்தும் இன்றைக்கு விழித்துக் கொண்டவர்களால் பிடித்துக் கொள்ளப்படுகிறது. காரணம் அவைகள் யாருக்கு சென்று சேர வேண்டுமோ அவர்களுக்குச் சென்று சேருவதில்லை. அந்தத் திட்டங்களும் சட்டங்களும் யாருக்காக கொண்டுவரப்பட்டனவோ அவர்களுக்கு அந்தச் செயதி போய்ச் சேருவதில்லை. போய்ச் சேராமல் பார்த்தும் கொள்கின்றனர். இவர்களுக்காக உழைக்கின்றோம் என முழக்கமிடும் அரசியல் அமைப்புக்களும் இவர்கள் பிரச்சினைகளை மேடைகளில் முழங்க முடிகிறதே தவிர, அரசு உருவாக்கியிருக்கும் புதிய வாய்ப்புக்களைப் பயன்படுத்த அந்த விளிம்பு நிலை மக்களுக்கு வழிகாட்டிட முடியவில்லை.

இவை அனைத்திற்கும் ஒட்டு மொத்த காரணமாக எதை நம்மால் பார்க்க முடிகிறதென்றால் அரசியல் அறியாமையில் நம் சமூகம் மூழ்கிக் கிடப்பதுதான். எனவே இந்த அறியாமையைப் போக்காமல் நாம் நினைக்கும் அடிப்படை மாற்றங்களைச் செய்ய இயலாது. இன்றைய சூழலை மாற்றத் தேவை என்பது புதுச் சட்டமோ புதுத் திட்டமோ அல்லது புதுத் தொழில் நுட்பமோ அல்ல. தேவை ஒரு மக்கள் தயாரிப்பு. அதுதான் இன்று நமது தேவை. இந்த மக்கள் தயாரிப்பு என்பது மக்களை செயலில் தோய்ப்பது. அதற்கு வழிகாட்டுவது அந்த வழிகாட்டுதலில் பொதுமக்கள் அறிவார்ந்தவர்களாக சமூக மேம்பாட்டுப் பணிகளில் தன்னைக் கரைத்துக் கொள்பவர்களாக செயல்பட வேண்டும். எனவே நமக்குத் தேவை வசீகரத் தலைமையல்ல வழிகாட்டும் தலைமை.

●

கட்டுரையாளர்: பேராசிரியர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டுரை | இரா.முரளி

# சமூக நீதிக்கானது அய்யாவின் வழி!



ஆன்மிகம் என்பது சக மனிதரின் விடுதலை குறித்து கவலை கொள்ளும் பேரன்பு, அது ஒடுக்கப்பட்டவர்களின் சமூக விடுதலைக்கானதும் ஆகும் என்று நிருபித்த ஆன்மிகப் பேராளுமைகளில் ஒருவர்தான் அய்யா வைகுண்டர். மார்க்சியர்கள் பண்பாட்டு அரசியலுக்கான கூறுகளை இவரிடமிருந்து பெறலாம். 1809 ஆம் ஆண்டு பொன்னு நாடாருக்கும், வெயிலாளம்மாள் என்ற அம்மையாருக்கும் பிறந்தவர் அய்யா வைகுண்டர். அவருக்கு முதலில் 'முடி சூடும் பெருமாள்' என்ற பெயரைச் சூட்டுகிறார்கள். ஆனால் அப்பொழுது அப்பகுதியில் இருந்த உயர் சாதி மக்கள் இந்தப் பெயரை எதிர்த்து வேறு பெயரை வைக்கச் சொன்னதால் அவருக்கு முத்துக்குட்டி என்று பெயர் வைத்தனர். அந்தச் சமயத்தில் திருவிதாங்கூர் சமஸ்தானத்துடன் இணைந்திருந்ததுதான் நாகர்கோயில் கன்னியாகுமரி மாவட்டம். திருவிதாங்கூர் சமஸ்தானத்தில் மன்னர்கள் மனுநீதியின் படிதான் ஆட்சி நடத்த வேண்டும் என்று பிடிவாதமாக இருந்தவர்கள். அப்போது சித்திரைத் திருநாள் என்ற மகாராஜா இருந்தார். அவர் கர்நாடக சங்கீதத்தில் முக்கிய ராகங்களை உருவாக்கி பங்களித்தவர். அவர் இசையில் வல்லுனராக இருந்தாலும், வர்ணாசிரம தர்மத்தை சற்றும் விட்டுவிட விரும்பவில்லை. சாதி மதப் பேதங்களைக் கடுமையாகக் கடைப்பிடித்தார். அக்காலக் கட்டத்தில்தான் தோள் சீலைப் போராட்டம் நடக்கிறது. உயர் சாதியினர் கொலை செய்தாலும் சட்டப்படி தண்டிக்கப்பட இயலாது. எல்லோரும் வரி கட்ட வேண்டும். அய்யா சார்ந்து இருந்த நாடார் சமூகம் கடுமையான ஒடுக்குமுறைக்கு ஆளான சாதியாக இருந்தது. அப்போது மொத்தம் பதினெட்டு சாதிகள் கீழ் நிலை சாதிகளாக சமஸ்தானத்தால் அறிவிக்கப்பட்டிருந்தன. பனை மரம் ஏறுவது வைகுண்டர் குடும்பத்தின் தொழிலாக இருந்தது. அவருடைய 17ஆவது வயதில் அவருக்குத் திருமணம் நடக்கிறது. அந்தத் திருமணம் என்பது சமூகச் சீர்திருத்தத்திற்கான முன்னுரையாக இருந்தது. ஏற்கனவே திருமணமாகி, ஒரு குழந்தைக்கு தாயான விதவை திருமாலை என்பவரை, அவரது ஒப்புதலுடன் அய்யா மணமுடிக்கிறார்.

பள்ளிப் படிப்பிற்கு வாய்ப்பு இல்லாததால் பனைத் தொழில் ஈடுபட்டு வந்தார். திருமணத்திற்குப் பிறகு அய்யா முத்துக்குட்டியின் உடல்நிலை மிகவும் பாதிக்கப்பட்டது. மருத்துவர்கள் ஏதும் செய்ய முடியாத நிலை ஏற்பட்டது. இந்தச் சமயத்தில் இவருடைய அம்மாவிற்கு கனவில் விஷ்ணு எனப்படும் நாராயணர் தோன்றி, திருச்செந்தூருக்கு முத்துகுட்டியை அழைத்து வருமாறு சொன்னாராம். அங்கு கடலிலே மூழ்கி எழுந்தால் சரியாக விடுவார் என்று கனவில் சொல்லப்படுகிறது. இந்திய ஆன்மீக வரலாற்றில் கனவுகளுக்கு என்று ஒரு பங்கு உள்ளது. பல அதிசயச் செய்திகள் கனவின் மூலமே சொல்லப்பட்டுள்ளன. இவர்கள் இருந்த ஊர் சாமித்தோப்பு என்ற ஊர். அங்கிருந்து திருச்செந்தூருக்கு அவரை அழைத்துச் செல்ல வேண்டுமானால் நடந்தேதான் செல்ல வேண்டும். இவரை ஒரு தொட்டில் கட்டி அதில் வைத்து தூக்கிச் செல்கிறார்கள். கூடங்குளம் அருகில் வரும்போது அவருடைய உடலில் சற்று முன்னேற்றம் காணத் தொடங்கியதால், அவரே இறங்கி, இனி தன்னால் நடக்க இயலும் என்று கூறி நடக்கத் தொடங்குகின்றார். இது ஒரு ஆனந்த அதிர்ச்சியை குடும்பத்தினருக்கு ஏற்படுத்தியது.

திருச்செந்தூர் கடலில் குளிக்க செல்லுகின்றனர். அங்கே கடலினுள் நீராட சென்ற முத்துக்குட்டி திரும்பி வரவே இல்லை. ஆழமான கடலை நோக்கிச் சென்று விட்டார். மாலை வரைத் தேடியும் அவர் கிடைக்கவில்லை. அவர் இறந்திருக்க வேண்டும் என்ற முடிவிற்கு குடும்பத்தினர் வந்தார்கள். ஆனால் அவரின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்மா மட்டும் அவர் திரும்பி வந்து விடுவார் என்று நம்பி அந்த ஊரிலேயே காத்திருக்க முடிவு செய்தார். மூன்று நாட்கள் கழித்து அவர் எப்படி உள்ளே சென்றாரோ, அப்படியே கடலில் இருந்து வெளியே நடந்து வந்தாராம். தவிப்புடன் இருந்த அவரின் தாய் ஓடி சென்று "முத்து குட்டி! வாடா என் மகனே!" என்று அவரை அணைத்துக்கொள்ள, அவர் "அம்மா! நான் இனி முத்துக்குட்டி இல்லை. என் பெயர் வைகுண்டன். நான் விஷ்ணுவின் அவதாரம். விஷ்ணுவுடைய அம்சம்" என்றார். கடலுக்குச் சென்ற முத்துக்குட்டி இப்போது வைகுண்டனாக மாறிவிட்டார். எல்லாரும் நம்ப முடியாத அதிர்ச்சிக்கு ஆளானார்கள்.

**வைகுண்டரின் தவம்:** அப்போது அரசாங்கத்தின் மாடுகளை பராமரிப்பதற்காக பூவண்டர் என்னும் யாதவ குலத்தவர் ஒருவர் இருந்தார். வைகுண்டரை பற்றி அறிந்த பூவண்டர் தன்னுடைய தென்னந்தோப்பில் ஒரு குடில் அமைத்து அவர் தங்குவதற்கு இடம் அளிக்கின்றார். அங்கு வைகுண்டர் ஆறு ஆண்டுகள் தவம் மேற்கொள்ளுகின்றார். அது மிகவும் வித்தியாசமான ஒரு தவம் ஆகும்.

ஒரு பெரிய குழியை வெட்டி அந்தக் குழியிலே இரண்டு ஆண்டுகள் நின்று கொண்டே தவத்தை மேற்கொண்டாராம். அவ்வப்போது பால் சோறு மட்டும் சாப்பிட்டு வந்திருக்கிறார். அதன் பின் இரண்டு ஆண்டுகள் வெளியே வந்து தரையில் அமர்ந்து கொண்டே தவம் செய்தாராம். அதற்குப் பிறகு இரண்டு ஆண்டுகள் ஒரு மாமரத்தின் கீழ அமர்ந்து தவம் செய்திருக்கிறார். தாழ்த்தப்பட்ட குலத்தைச் சேர்ந்த ஒருவர் கடலில் மூழ்கி, பின் உயிருடன் கடவுளின் அம்சமாகத் திரும்பி வந்து ஆறு ஆண்டுகள் கடும் தவம் மேற்கொண்டு இருக்கிறார் என்ற தகவலை அறிந்த பதினெட்டு இனங்களை சேர்ந்த சாதாரண மக்கள் அவரை வழிபடுவதற்காக வரத் தொடங்கி இருக்கிறார்கள். பல ஊர்களிலிருந்து பிற்படுத்தப்பட்ட தாழ்த்தப்பட்ட மக்கள் வந்து வணங்கத் தொடங்கினார். அப்படி அவரைத் தரிசிக்கும் போது பலருக்கு நோய்கள் குணமானதாகவும் சொல்லப்படுகிறது. அவர் புகழ் அந்தப் பகுதி முழுவதும் பரவத் தொடங்கியது. சீடர்களும் அவரிடம் சேரத் தொடங்கினார்கள். அவர் ஐந்து பேரை மட்டும் முக்கிய சீடராக வைத்திருந்ததாகத் தெரிகிறது. அவர்கள் பஞ்சபாண்டவர்களின் மறுபிறவி என்றும் கூட சொல்லுவார்கள். அதில் ஒருவரான ஹரி கோபால் என்பவரை அழைத்து, அவரை தான் சொல்லுவதை எழுதுமாறு பணித்தார். அப்படி எழுதப்பட்டதுதான் 'அகிலத்திரட்டு அம்மானை' என்னும் நூல் ஆகும். இது 1500 செய்யுள் வரை கொண்ட தொகுப்பாகும். 13 ஆயிரத்துக்கும் மேற்பட்ட வரிகளைக் கொண்டது. இது நாஞ்சில் நாட்டு தமிழில் எழுதப்பட்டுள்ளது. இந்த நூலைத்தான் தங்களின் புனித நூலாக அய்யாவழி வழிபாட்டாளர்கள் போற்றுகின்றனர்.

இதில் அவர் வாழ்க்கைக் குறிப்புகளும், தத்துவக் கோட்பாடுகளும், புதிய வாழ்வியல் முறைக்கான செய்திகளும், அன்றைய சமூக பண்பாட்டு- அரசியல் சிக்கல்களும் காணப்படுகிறது. இதில் பிற்காலத்தில் சுற்றுச் சூழல் மாசுபாட்டால் ஏற்படப்போகும் தீய விளைவுகள் பற்றியும்கூட குறிப்பிட்டிருக்கின்றார். மேலும் 'அருள் நூல்' என்னும் மற்றுமொரு நூலையும் அவர் எழுதியிருக்கிறார். இந்த இரண்டு நூல்கள்தான் அய்யா வழியின் வழிகாட்டு நூல்களாகும். இப்படித் தாழ்த்தப்பட்ட சாதியைச் சேர்ந்த ஒருவர் ஆன்மீகக் குருவாக அங்கீகாரம் பெற்று வளர்வது உயர் சாதியினருக்குக் கொஞ்சமும் பிடிக்கவில்லை.

குரோனிதன் என்ற அரக்கன் தேவர்களுக்கும், பிறருக்கும் பெரும் கொடுமை செய்து கொண்டிருந்த வேளையில், அவனை ஆறு கூறுகளாக விஷ்ணு வெட்டிப் புதைத்து விட்டதாகவும், அந்த ஆறு கூறுகளும் ஒவ்வொரு காலகட்டத்திலும் மோசமான ஒரு தீய சக்தியாக உருவெடுத்ததாகவும், அதில் ஐந்து பேர்களை விஷ்ணுவே கொன்று விட்டதாகவும், ஆறாவதாக தோன்றிய கலிபுருஷனை அழிப்பதற்கு தன்னுடன் இருந்த சம்பூரணன் என்பவரை ஐயா வைகுண்டராக அவதரிக்க வைத்தார் என்ற புராணக்கதை உண்டு. கலி புருஷன் என்று சொல்லும் பொழுது, சமூகத்தில் நிகழ்கின்ற எல்லா அநீதிகளின் குறியீடாக அதை எடுத்துக் கொள்ளலாம். ஆக சமூக அநீதிகளுக்கு எதிராக போராடக் கூடிய அறப்போராளியாக ஐயா வைகுண்டரை இறைவன் உருவாக்கியதாக அப்பகுதியினர் கருதினார்கள். வழக்கமாக இம்மாதிரி புராணங்கள் மேல் சாதியிலிருந்துதான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உருவாகும். ஆனல் இது கீழிருந்து உருவானது. தாழ்த்தப் பட்ட இனத்தைச் சேர்ந்தவர்கள் இப்படி விஷ்ணுவின் அவதாரமாக வைகுண்டரைக் கண்டது, பண்பாட்டு வெளியில் பெரும் சவாலானது. நாட்டார் தெய்வமாக சொல்லியிருந்தால் கூட ஒருவேளை சகித்துக் கொண்டிருப்பார்கள். விஷ்ணுவின் அவதாரங்கள் மொத்தம் பத்து மட்டுமே என்று இறுதி செய்யப்பட்ட நிலையில் திடீரென்று குரோனிதன் என்ற அரக்கன் கதையை முன்வைத்து மற்றும் ஒரு அவ்தாரமாக அதுவும் தாழ்த்தப்பட்ட சாதியைச் சேர்ந்த ஒருவர் உருவானது உயர் சாதியினரால் கொஞ்சம் கூட சகித்துக் கொள்ள முடியவில்லை. அவர்கள் வசை பாடினர். சாபம் இட்டனர்.

இவரின் வளர்ச்சியைப் பிடிக்காத உயர் சாதியினர் இவரைத் தீர்த்து கட்ட பல முயற்சிகள் எடுத்ததாகவும் ஆனால் எதுவும் பலிக்கவில்லை என்றும் தெரிகிறது. எனவே அவர்கள் அரசரிடம் சென்று, இப்படி கீழ் சாதியைச் சேர்ந்த ஒருவர் தன்னை விஷ்ணு என்று சொல்லிக் கொண்டு குருவாக உருவாகி இருக்கிறார். அவர் கலியுகத்தை மாற்றப் போகிறாராம், கலி புருஷனை அழிக்கப் போகிறாராம். அவரை அடக்குவது உங்கள் கடமை என்று அரசரை முடுக்கி விடுகிறார்கள். இது அறிந்து வெகுண்ட மன்னர், நம்பூதிரி ஜோசியர் ஒருவரை ஆலோசித்த போது, கலி முற்றி நாடு கெடும்போது விஷ்ணு அவதாரம் எடுப்பார் என அவர் விளக்கம் சொன்னார். அப்படியே அவதாரம் எடுத்தாலும் இப்படி சாணார் குலத்திலா அவர் பிறப்பார் என அர்சர் மிகவும் கோபம் கொள்கினறார். அப்போது பூவண்டர் அரசரின் அருகில் வந்து "சாணான் குலத்தில் மாயன் சார்வாரோ என்று எண்ண வேண்டாம்! பாணானாய்த் தோன்றி நிற்பார்! பறையனாய் தோன்றி நிற்பார்! தூணிலும் தோன்றி நிற்பார்! தோலனாய் தோன்றி நிற்பார்! எல்லா குலத்திலும் தோன்றுவார். அவருக்குச் சாதி பேதம் இல்லை" எனவே தான் அறிந்த வரை வைகுண்டர் கண்டிப்பாக விஷ்ணுவின் அவதாரம்தான் என்று சொன்னார். இது கேட்ட அரசருக்கு பூவண்டரின் மீது கடுமையான கோபம் வந்தது. பூவண்டரை சிறையில் அடைக்க உத்திரவிட்டார். உடனே வைகுண்டரை இழுத்து வருமாறும் ஆணையிட்டார். அப்படியே நடந்தது. வைகுண்டரை விலங்கிட்டு தெருவில் இழுத்துச் சென்றனர். அப்படிச் செல்லும் பொழுது அவரை சித்திரவதை செய்து கொண்டு சென்றதாகவும் அதை பார்த்த மக்கள் எல்லாம் கண்ணீர் விட்டதாகவும் சொல்கிறார்கள். நீ ஒழுங்காக அடக்க,ஒடுக்கமாக இருக்க வேண்டும் இது மாதிரி ஆன்மீகப் பணிகள் எல்லாம் இனி செய்யக்கூடாது என்று அரசர் கட்டளையிட்ட போது, வைகுண்டர் மறுத்துவிட்டார். எனவே அவர் சிறையில் அடைக்கப்பட்டு, அங்கு மிளகாய் புகை எல்லாம் போடப்பட்டு பலவகையில் அவருக்கு சித்தரவதை செய்யப்பட்டது.

**"அரங்கதனில் அடைத்து, (மிளகாய்)வத்தல் போட**
**தீ வைத்தும்**
**அசையாமல் இருந்தேனே சிவனே அய்யா.."**

என்று அய்யவே இதைக் குறிப்பிட்டுள்ளார்.

அவருக்கு இரண்டு முறை விஷம் வேறு வைத்திருக்கிறார்கள் அதுவும் பலிக்கவில்லை. இறுதியாக ஒரு பசித்த புலியை வைகுண்டர் மீது ஏவி விடுகிறார். அதுவும் எதுவும் செய்யவில்லை. பின்னர் வேறு வழி இல்லாமல் 112 நாட்கள் கழித்து வைகுண்டரை அரசர் விடுதலை செய்து விடுகிறார். ஆனால் நிபந்தனையாக 'சாணார் சாதிக்கு மட்டுமே நான் குருவாக இருப்பேன் வேறு சாதியினருக்கு நான் குரு அல்ல' என்ற உத்திரவாதத்தை எழுதிக் கொடுத்து கையொப்பமிட சொல்லி அரசர் கேட்கிறார். அதை நிராகரித்து விட்டு வைகுண்டர் சென்று விடுகிறார்.

**அன்புக்கொடி இயக்கம்:** இதற்குப் பின்னர் வைகுண்டர் ஒரு பெரிய இயக்கத்தைக் கட்டமைக்கிறார். இந்த இயக்கத்தை நடத்தும் அமைப்பு சொத்தின் மீது அக்கறை கொள்ளக்கூடாது என்ற அடிப்படையான ஒரு கட்டளையை வைத்து, மக்கள் சமத்துவத்தைப் பேணுவதை நாம் உருவாக்க வேண்டும் அதுவே முதல் அடிப்படை நோக்கம் என்று கூறுகிறார். மற்றும் ஒரு வித்தியாசமான நிகழ்வாக "துவையல் தவம்" என்ற ஒரு நிகழ்வை உண்டாக்கி அழைப்பு விடுக்கிறார். அதாவது அவரவர் துணியை சுத்தமாக துவைப்பது என்ற நிகழ்வு அது. வாகைப்பதியிலும், முட்டப்பதியிலும் 700க்கும் மேற்பட்டவர்கள் அதில் கலந்து கொண்டார்கள். அதில் மூன்று நாட்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலையும் மாலையும் கடலில் குளித்துவிட்டு தம் துணிகளை தாமே துவைத்து, சுத்தமான ஆடைகளை அணிந்து, வெறும் பருப்பும் அரிசியும் பொங்க வைத்து அந்த உணவை உண்டு தவம் செய்தர் அதில் கலந்து கொண்டவர்கள். காலை, மாலை, இரவு வேளைகளில் தான் உருவாக்கிய நூலை படிக்கச் சொன்னார். கடற்கரையிலேயே தங்கி தவம் மேற்கொண்டு பல கஷ்டங்களை அவர்கள் எதிர் கொண்டனர். இதற்குத்தான் துவையல் தவம் என்று பெயர். இப்படி புதிது புதிதாக அவர் செயல் திட்டங்களை வகுக்கத் தொடங்கினார். இதன் மூலமாக சுத்த ஆச்சாரம் பேசும் மேல் சாதியினருக்கு இணையாக தாழ்த்தப்பட்டுள்ள இனத்தவரும் இருக்கிறார்கள் என்பதை நிரூபிக்க முயற்சித்தார்.

இறைவனுக்கு முன்னால் அனைவரும் சமமானவர்கள் என்பதே அய்யாவின் அடிப்படைக் கோட்பாடு. சமத்துவத்தை அன்பின் அடிப்படையிலே உறுதி செய்ய வேண்டும். "சாதிகள் வேண்டாம், சமத்துவம் வேண்டும்" என்பதே அன்புக் கொடி இயக்கத்தின் முழக்கமாக ஆனது. சமூக அறிவியலாளர் போல சமூக தத்துவங்களை அவர் முன்மொழிந்தார். அவர் உருவாக்கிய அமைப்பு எதை எப்படி செய்ய வேண்டும் என்பதற்கான கொள்கைகளையும், செயல்முறைகளையும் வகுத்தார். தான் தங்கி இருந்த குடிலை கோவிலை போல மாற்றினார். தான் இருக்கும் இடத்தில் ஒரு கிணற்றைத் தோண்டினார். முத்திரிக் கிணறு என்று அதற்குப் பெயர். கிணற்றில் அனைவரும் சென்று குளிக்க வேண்டும் என்பது சுத்தத்திற்காக மட்டுமல்ல, புழங்கும் தண்ணீரிலும் சாதி இருந்ததை ஒழிக்கும் விதமாக, சாதி வேறுபாடுகள் பார்க்காமல், ஒரே தண்ணீரில், ஒரே இடத்தில் அனைவரும் குளிக்கும் மனோபாவத்தைப் பெறவேண்டும் என்பதற்காக ஆகும். எளிமையான உணவையே மக்கள் கொள்ள வேண்டும்.வழிபாடு என்பது சிலை வழிபாடு அல்ல. இரண்டு கண்ணாடிகள் வைக்கப்பட்டு அவற்றிற்கு முன்னால் ஒரு தீபமும் வைக்கப்படுகிறது. கண்ணாடியில் உற்றுப் பார்த்தால் நம் முகம் தெரியும். 'நீதான் கடவுள்' என்பதை உணர்த்தவே இப்படி ஒரு அமைப்பை வழிபாட்டை உருவாக்கினார். இவர் எந்த விதமான புனித நூல்களையும் கற்றவர் அல்ல என்பதையும் நினைவில் கொள்ள வேண்டும். விக்கிரக வழிபாடு என்பதை கடுமையாக எதிர்க்கிறார்.

புரோகிதர்களை வைத்துச் செய்யப்படும் வேத சடங்குகளை முற்றிலுமாக மறுதலிக்கிறார். காணிக்கை செலுத்துவதையும் தவிர்க்குமாறு வலியுறுத்துகிறார். அச்சமயத்தில் தாழ்த்தப்பட்ட மக்கள் கோவிலுக்குள்ளாக சென்று வழிபட முடியாத நிலை. ஆனால் காணிக்கைகள் மட்டும் அவர்களிடமிருந்து பெறப்பட்டன. அப்படிப்பட்ட மக்களின் சுயமரியாதையை மீட்டுக் கொடுப்பதே தன்னுடைய ஆன்மிகத்தினுடைய முதல் கடமையாக அய்யா பிரகடனப் படுத்தினார் . சமத்துவ பந்தி அங்கு போடப்பட்டது. இவரை நாடி வந்த சீடர்களுக்குள் சாதி வேற்றுமை இருக்கக் கூடாது என்பதற்காக அவர்களைப் பிற ஒதுக்கப்பட்ட சாதியினரின் சடங்குகளுக்கு அனுப்பி வைத்தார். இன்னும் ஒரு படி மேலே போய் தன்னுடைய சீடர்கள் பிற தாழ்த்தப்பட்ட சாதியினர் வீடுகளுக்குச் சென்று பிச்சை பெற்று உணவை உண்ணக் கற்றுக் கொள்ள வேண்டும் என்று வலியுறுத்தி அவ்வாறே செய்ய வைத்தார். தொடர்ந்து சாதி வேற்றுமைகளை களைய வேண்டும் என்ற உபதேசத்தை தன்னுடைய சீடர்களுக்கு அவர் கொடுத்துக் கொண்டே இருந்தார். அதுமட்டுமின்றி சாதி வேறுபாடுகளை நீக்கக்கூடிய பல்வேறு சிறு சிறு செயல் திட்டங்களை அவர் திட்டமிட்டு உருவாக்கி செயல்படுத்தி வந்தார்.

எல்லாவற்றிற்கும் மேலாக தலையில் துண்டை தலைப்பாகை போல முண்டாசாகக் கட்டிக் கொள்ள வேண்டும் என்று கட்டளையிட்டார். காலில் செருப்பு அணிவதும், குடை பிடித்துச் செல்வதும் அனுமதிக்கப்பட்டது. இடுப்பில் துண்டைக் கட்டி நிற்க வேண்டிய தாழ்ந்த சாதியினர் தலையில் துண்டைக் கட்டி இருப்பது என்பது மட்டுமல்ல, முழங்காலுக்கு மேல்தான் வேட்டி கட்ட வேண்டும் என்பதை மாற்றி பூமியில் புரளும் அளவிற்கு வேட்டி கட்ட வேண்டும் என்ற அய்யவின் சீர் திருத்தம் ஒரு பண்பாட்டு புரட்சியே! அதுவும் அந்தக் காலத்தில் தலையில் சுமை தூக்க கூட துணியை சுற்றி வைக்காமல் வைகோலைச் சுற்றி வைத்துக் கொள்ள வேண்டும் என்று கட்டளை இடப்பட்டிருந்தது. தலைக்கு தலைபாகையைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டுவது சுயமரியாதையை மீட்டெடுக்கும் முக்கியமான விஷயமாக அய்யா கருதினார். அதேபோல வழிபாட்டு முறைகளையும் அவர் வகுத்துக் கொடுத்த அம்மானைப் பாடல்கள் விளக்கின. தம் இயக்கத்திற்காக தனியாக ஒரு கொடியையும் உருவாக்கி விட்டார்.

"தாழக்கிடப்பாரை தற்காப்பது தருமம்! இறைமனம் என்பது வேறுபாடு இல்லாமல் அனைவரையும் சமமாக காண்பது என்பதே" என்று கருதினர். நல்லது நினைவோருக்கு நாள் எத்தனை ஆனாலும் பொல்லாங்கு வராது. பூமியில் வாழ்ந்திருப்பார் என்றார். அதேபோல கோவில்களில் உயிர் பலி கொடுப்பதும் தவறு என்று தடுத்த அவர்,

**'ஆடு கிடாய் கோழி பன்றி ஆயனுக்கு**
**வேண்டாங்கான்**
**மேளதாளம் குரவைத் தொழில் வேண்டாம் கான்**
**ஈசனுக்கு'**

என்று உரைத்தார். ஈசனுக்கு ஆடு கோழிகளும் தேவையில்லை, ஆரவாரமான மேள தாளங்களும் தேவையில்லை என்று அறிவுரை வழங்கினார். "பொய்யில்லை பிசாசு இல்லை, பில்லியின் விலைகள் இல்லை, நொய்யில்லை, நோவுமில்லை, நொன்பலத் துன்பமும் இல்லை" என்று சொல்லி பில்லி சூனியம், பிசாசு போன்றவற்றின் மீது நம்பிக்கை வைக்கக் கூடாது என்று கண்டித்தார். ஏனென்றால் அதுதான் நீங்கள் பூசாரிகளிடமும் சாமியாரிடமும் உங்களை ஒப்படைக்கும் வாசலாக அமையும் என்றார். கடவுளுக்கும் மனிதனுக்கும் இடையில் புரோகிதர் தேவையில்லை என்ற கருத்தை அவர் கொண்டிருந்தார். "காணிக்கை இடாதுங்கோ !காவடி தூக்காதீங்கோ" என்றும் வலியுறுத்தினார்.

அந்தக் காலகட்டத்தில் தாழ்த்தப்பட்ட அந்தப் பதினெட்டு சாதியினர் ஒழுங்காக அமைக்கப்பட்ட வீதிகளில், முன் வாசல், பின் வாசல் வைத்து வீடுகள் கட்டி அதில் வாழ அனுமதிக்கப்படவில்லை. ஆங்காங்கே சிறிய குடிசைகளாக அமைத்து வாழ்வதற்கு மட்டுமே அனுமதிக்கப்பட்டார்கள். இத்தருணத்தில் வைகுண்டர் இனி நாம் வீடுகளை வரிசையாக ஒழுங்கமைவாக, ஒரு தெருவாக அமைத்துக் கொள்ள வேண்டும். அதற்கு முன் வாசல் பின் வாசல் எல்லாம் வைக்க வேண்டும் என்றார். இது அவர்களுக்குள் வேறுபாடற்ற ஒருங்கிணைப்பை உருவாக்கும் என்று கருதினர்.

தன்னுடைய இந்த விளக்கங்களை, செயல் திட்டங்களை எல்லா ஊர்களிலும் ஒடுக்கப்பட்ட இனத்தினர் பின்பற்றும் வகையிலே பிரச்சாரம் செய்ய தன்னுடைய சீடர்களை அனுப்பி வைக்கிறார்.

அக்கால கட்டத்தில் திருவனந்தபுரத்தில் எல்லாவற்றிற்கும் வரி போட்டு சுரண்டல் ஆட்சி நடந்து கொண்டு இருந்தது. இவர்கள் மரம் ஏறினாலும் வரி. பொருள்களை விற்றாலும் வரி. எந்த வருமானம் வந்தாலும் வரி என்று இன்று போல அன்று இருந்திருக்கிறது. அதை எதிர்த்து "உன் உழைப்புக்கான கூலி உனக்குத்தான் சொந்தம். அதை மறுக்க யாருக்கும் உரிமை இல்லை!" என்று அறைகூவல் விடுத்தார். இந்தத் தாழ்த்தப்பட்ட இனத்தைச் சேர்ந்த மக்கள் சுத்த சுகாதாரமாக இருக்க மாட்டார்கள் என்ற ஒரு மனோபாவம் மேல் தட்டு மக்களுக்கு இருந்தது. அதை உடைக்க தீர்மானித்தார். அதன் முதல் நிலையாக புலால் மற்றும் மீன்கள் உண்ணுவதை கைவிட வேண்டும் என்று கூறினார். கன்னியாகுமரி மாவட்டத்தில் மக்கள் தங்கள் உயிரை மீன் உணவில்தான் வைத்திருப்பார்கள். அதைத் தியாகம் செய்ய அவர் கூறினார். இன்றும் கூட வாரத்தில் இரண்டு நாட்கள் அய்யாவழியைச் சேர்ந்தவர்கள் இறைச்சியோ, மீனோ உண்பதில்லை என்று அறிகிறோம். இதை வேத மரபுக்குள் அவர் சென்று விட்டார் என்று சுருக்கி விடக்கூடாது.

"மானமாக வாழ்ந்தால் மாறும் கலி தன்னாலே" என்று சொல்லி இருக்கிறார். தன்மானத்தோடு வாழத் தொடங்கினாலே சமத்துவம் பரவத் தொடங்கும். சமமின்மையைப் பரப்பும் கலி வீழத் தொடங்கும். அறம் செழிக்கும் என்பதே அவருடைய விளக்கம். அன்புதான் அறம் என்றார். எளியோரைக் கண்டு இறங்கி இரு என் மகனே! வலியாரைக் கண்டு மகிழாதே என் மகனே! என்று வலியோருக்கு வால் பிடிப்பதை கண்டிக்கின்றார். அவர் தன் கொடிக்கு பெயர் அன்புக்கொடி என்றுதான் வைத்திருக்கிறார். அதுவே அவர் உருவாக்கிய அமைப்பின் பெயராகவும் ஆனது. அன்பு தான் அறம் என்பதே இவர் குறிக்கோள். இந்த அன்பை அனைவரும் கடைப்பிடிக்க பல செயல்பாடுகளை திட்டமிட்டு தன் இயக்கத்தின் மூலமாக செய்ய வைத்தார். இவருடைய செயல்பாடுகள் உயர் சாதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்துக்களை மட்டும் அல்ல கிருத்துவ மதத்தினரையும் தொல்லைக்கு உள்ளாக்கியது. கிருத்துவம் அங்கே பரவி வந்த காலம் அது. தாழ்த்தப்பட்ட மக்களை மதமாற்றம் செய்ய தேவாலயங்கள் முயற்சி செய்த நேரத்திலே அவர்களை ஒருங்கிணைத்து ஒரு புதிய ஆன்மீக இயக்கத்தை இவர் கட்டி வந்தது அவர்களுக்கு ஒரு பெரிய தடைக்கல்லாகவே இருந்தது. பிரிட்டிஷ் அரசுக்கு அப்பகுதியில் இருக்கும் முத்துக்குட்டி நமக்கு பெரும் இடர்பாடாக இருக்கிறார் என்று கிறித்துவ பாதிரிகள் கடிதம் எழுதினார்கள்.

**பெண்களின் உரிமைகள் காக்க:** பெண்களுக்கான உரிமைகளை அய்யா அழுத்தமாக தன் பாடல்களில் வெளிப்படுத்துகின்றார். அவை ஏட்டில் மட்டும் நின்று விடாமல் செயல் படுத்தவும் செய்கின்றார். பெண்கள் தோல் சீலை அணியக்கூடாது என்ற அரசின் சட்டத்தை உடைத்து, தன் கோவிலுக்கு வரும் பெண்கள் மேல் துணி அணிந்துதான் வரவேண்டும் என்றும், பெண்களே பூஜைகளை செய்யலாம் என்றும் அறிவிக்கின்றார். பெண்களுக்கு உரிமைகள் வழங்காத சமுதாயம் சீரழிந்து போகும் எனவும் சாபமிடுகின்றார். விதவைகள் தாலியை அறுத்துவிட்டு விதவைக் கோலம் பூண வேண்டிய அவசியம் இல்லை என்றும் அறிவித்தார். விதவை மறுமணத்தை ஆதரித்தார். மொத்தத்தில் அப்போது இந்து மதத்திற்கு எதிரானவராகவே அவர் அடையாளம் காணப்பட்டார். கோவில்களில் பிரசாதத்தை தூக்கி தான் எறிவார்கள். அதை மாற்றி திரு மண்ணை எடுத்து விபூதி போல ஒவ்வொருத்தர் நெற்றியிலும் பூசாரி பூசி விட வேண்டும் என்று கட்டளையிட்டார். அதையே நாமமாக இட்டுக் கொள்ள வேண்டும் என்றார். திணை மாவில் கூட அந்த நாமத்தை இட்டு இருக்கிறார்கள். அய்யா வழி இயக்கம் தீவிர இயக்கமாக பரவத் தொடங்கியது. ஆயிரக்கணக்கான மக்கள் இவர் பின்னால் திரண்டார்கள். அறத்தை அறமாக மட்டுமே போதித்தால் சாதாரண மக்கள் அதன் பின் வரமாட்டார்கள் என்று உணர்ந்துதான் அதற்கு பின்னால் ஒரு தெய்வீக சக்தி, ஆன்மீக சக்தி இருப்பதை அவர் முன் வைத்தார். தோள் சிலை போராட்டத்திற்கு முன்னுரை எழுதியவரும் சம்பந்தி போஜனத்திற்கு அடிக்கல் நாட்டியவரும் இவர்தான். நம்மை எதிர்க்கும் உயர் சாதியினரிடம் முரண்களாக பேசி, மோதலில் ஈடுபட வேண்டாம் என்றும் அவர் அறிவுரை வழங்கினார். வன்முறையற்ற அமைதியான புரட்சியைத்தான் அவர் விரும்பினார். அவர் இரண்டு வகை எதிரிகளை அடையாளம் காண்கிறார். ஒன்று கலி நீசன் மற்றொருவன் வெண் நீசன். கலிநேசன் என்பது திருவதாங்கூர் அரசரை குறிக்கின்றது. வெண் நீசன் என்பது வெள்ளையரை குறிப்பது.

மதம் மாறச் சொல்லுவது, வரிகளை வகுப்பது, அதிகாரத்தை மேல் செலுத்துவது எல்லாவற்றிற்கும் எதிராக நாம் போராட வேண்டும் என்று கூறினார். அறத்தை நாம் நாடி வாழ்ந்தால் நமக்குள் மன உறுதியும் திண்மையும் ஏற்பட்டு அநீதியை எதிர்க்கும் திறனை நாம் பெற முடியும் என்று சொல்லுகிறார். அறமே உரம். சுற்று வட்டாரங்களில் கல்விக்கூடங்களை உருவாக்கி தன்னுடைய போதனைகளையும் மக்களுக்கு எட்ட வைத்தார். இவர் காட்டிய வழியைத்தான் "அய்யா வழி" என்று சொல்லுகிறார்கள். அய்யா வழியிலே பயணத்தை மேற்கொண்டு வருபவர்கள் இன்றும் பல ஆயிரம் பேர் இருக்கிறார்கள். பாலப்பிரஜாபதி அடிகளார்தான் இந்த நிறுவனத்திற்காக பொறுப்பாளராக இருக்கிறார் தலைவராக இருக்கிறார். பல முற்போக்கு மேடைகளிலே அவரை நாம் காண முடியும்.

சமூக மாற்றத்திற்கானதே ஆன்மீகம் என்பதை செயல்பாட்டில் நிரூபித்த அய்யா வைகுண்டர் 1851 ஜூன் மாதம் 2 ஆம் தேதி மறைந்தார். மொத்தத்தில் சமூக நீதிக்கான புதிய பாதையாக சமைக்கப்பட்ட அய்யா வழி என்பது இந்து மதத்தின் பிரிவாக கருதப்படக் கூடாது தனி மதமாகத்தான் அதை நீங்கள் கருத வேண்டும் என்று அய்யா வழியினர் அரசாங்கத்தைப் பலகாலமாக வேண்டி வந்த போதிலும் இன்றுவரை இந்து மதத்தினுடைய பிரிவாகவே இது கருதப்பட்டு வருகிறது. நெருக்கடியான ஒரு சமூகச்சூழலில் சமூக நீதிக்கு வழிகட்டிய அய்யாவின் வழி தனி-வழி தான்.

●

---

கட்டுரையாளர்: பேராசிரியர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்ணை உயிர்ச் சக்தியாக சித்தரிக்கும் கீர்த்திகாவின் ஓவியங்கள்



**பெண்ணின் உணர்வுகளையும், கனவுகளையும் கொண்டாட்டங்களையும் சித்தரிக்கும் பல வகை ஓவியங்கள் அங்கு இருந்தன. மனித உறவுகள், ஆழ்மன மென் உணர்வுகள், இயற்கை, பறவைகள், இந்தப் பிரபஞ்சத்தின் கூறு எனவாகப் பெண்ணை ஓவியங்களாகச் செய்துள்ளார் கீர்த்திகா.**

ஈழத் தமிழ் ஓவியர் கீர்த்திகா ஸ்டீபன் பிரான்சில் வசித்து வருகின்றார். அவரது ஓவியக் கண்காட்சி மார்ச் மாதம் 3 வாரங்கள் இடம்பெற்றது. அதற்கு என்னை அழைத்திருந்தார். ஓவியக்காட்சியைக் காண்பதற்காக இரண்டு நாள் பயணமாக பாரிஸ் சென்று வந்தேன். ஓவியங்களைப் பார்வையிட்டதோடு கீர்த்திகாவுடன் ஓர் உரையாடலை மேற்கொள்ளவும் வாய்ப்பமைந்தது. கீர்த்திகா ஓவியத்துறையில் பல்கலைக் கழகக் கல்வி கற்றவர். அவருடைய ஓவியங்கள் பல கண்காட்சிகளில் இடம்பிடித்துள்ளன. அவருடைய ஓவியங்கள் *'அவள்/SHE'* என்ற தலைப்பின் கீழ் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன. பிரான்சின் *Châtillon* மாநகரின் சமூக பண்பாட்டு மையத்தில் *(Centre Socio-Culturel Guynemer)* மார்ச் 7 ஆம் திகதி தொடங்கி 27 ஆம் திகதி வரையான 3 வாரங்கள் காட்சிப் படுத்தப்பட்டுள்ளன. இதன் ஏற்பாடும் *Châtillon* சமூக பண்பாட்டு மையமே.

இந்தக் கட்டுரை ஓவியரின் பின்னணி, ஓவியக்கல்வி, படைப்பூக்கம், படைப்புகள், உத்திகள், வெளிப்பாடு, பிரதிபலிப்பு, கலைப்பார்வை எனவான விடயங்கள் மீது கவனம் செலுத்துகின்றது. உரையாடலில் வெளிப்பட்ட விடயங்களின் தொகுப்பாகவும், நேர்காணலின் கேள்வி-பதில்களாகவும் இக்கட்டுரை வடிவமைக்கப்பட்டுள்ளது.

பெண்ணின் உணர்வுகளையும், கனவுகளையும் கொண்டாட்டங்களையும் சித்தரிக்கும் பல வகை ஓவியங்கள் அங்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





இருந்தன. அவரின் பல ஓவியங்கள் பெண்ணை உயிர் சக்தியாகச் சித்தரிக்கின்றன. மனித உறவுகள், ஆழ்மன மென் உணர்வுகள், இயற்கை, பறவைகள், இந்தப் பிரபஞ்சஞ்சத்தின் கூறு எனவாகப் பெண்ணை ஓவியங்களாகச் செய்துள்ளார்.

யாழ் இடப்பெயர்வினைத் தொடர்ந்து சிறுமியாக ஈழத்திலிருந்து பிரித்தானியாவிற்குப் புலம் பெயர்ந்த கீர்த்திகா அங்கு பாடசாலை முதல் பல்கலைக்கழகக் கல்விவரை கற்றவர். கலை ஆற்றுப்படுத்தல் உளவியல் *(Psychology of Art Therapy)* துறையிலும் கற்றிருக்கின்றார். பதின்ம வயதில் பாடசாலைக் காலத்தில் ஓவியம் மீதான விருப்பம் ஏற்பட்டது. ஓவிய ஆசிரியர் அளித்த ஊக்கமும் வழிகாட்டலும் தனது ஈடுபாட்டுக்கு உந்துதலாக அமைந்ததாகக் குறிப்பிட்டார். நிலைப்படவியல் ஓவியம் *(Still life frames/Painting)* மூலம் ஆரம்பத்தில் ஓவியத்தைப் பழகிக்கொண்டதாக, அதாவது வரைதல் பயிற்சியினை மேற்கொண்டதாகக் குறிப்பிடுகின்றார். நிலைப்பட ஓவியவியல் என்பது அசையாப் பொருட்களை அழகியலோடு ஒழுங்குபடுத்தி அவற்றைப் பார்த்து வரைந்து ஓவியமாக்குதலாகும். இத்தகைய நிலைப்படவியல் ஓவியங்களோடு, தனக்குப் பிடித்த காட்சிகளையும் பொருட்களையும் பார்த்து வரைவதை பயிற்சிக்கான களமாகக் கையாண்டுள்ளார்.

பறவைகள் மீதான ஈர்ப்பும் காதலுமே தன் ஓவியங்களுக்கான ஆதர்சம், உந்துதல் என்று குறிப்பிடுகின்றார். சுதந்திரம், துணிவு, அழகு, சுயாதீனம் ஆகியவற்றைப் பறவைகள் பிரதிநிதித்துவம் செய்கின்றன. பெண்கள்



  

குறித்தும் பறவையை உவமை, உருவகங்களாக ஓவியங்களிற் பிரதிநிதித்துவம் செய்வது தனக்கு மிகவும் பிடித்தமானது என்றும் கூறுகின்றார்.

**எனது ஓவியத்தில் பெரும்பாலும் பெண் தனியாக இருப்பாள். ஆனால் அவள் தனியாக இருந்தாலும், அவள் திடமானவளாகவும் அமைதியானவளாகவும் இருப்பாள். அவள் எப்போதும் இயற்கையால் சூழப்பட்ட அழகோடு இருப்பாள். மலர்கள், இலைகள், பறவைகள், நிலா, நட்சத்திரங்கள், கடல், கடற்சிப்பிகள் அல்லது இயற்கையின் ஏதோவொரு அம்சத்துடன் இணைந்திருப்பாள்** என்று பெண் பற்றிய தனது ஓவியப் படைப்பாக்கத்தின் தன்மையைச் சித்தரிக்கின்றார்.

குஸ்டவ் கிளிம்ட் (*Gustav Klimt*), மற்றும் விக்டர் ஹோர்டா (*Victor Horta*) ஆகியோர் அவரது ஆதர்சமான ஓவியக்கலைஞர்கள். குஸ்டவ் கிளிம்ட் ஒஸ்திரிய நாட்டைச் சேர்ந்தவர். *1900*-களின் தொடக்கத்தில் ஒஸ்திரிய நவீனத்துவ ஓவியத்தில் அவரது பங்கு முக்கியமானது. அத்தோடு குறியீட்டுவாதம் மற்றும் ஆர்ட் நூவோ (*Symbolism and Art nouveau*) யுகத்திலும் அவரது பங்களிப்பும் வகிபாகமும் வலுவாக இருந்தது. அவர் ஓவியத்;தில் ஒரு தனித்துவமான பாணியை உருவாக்கினார். அது அலங்காரக் கூறுகளால் நிரம்பியிருந்தது. பெரும்பாலும் பொன் வண்ணத்தினைப் பயன்படுத்தியிருக்கின்றார். மற்றும் அவரது ஓவியங்கள் அதிகம் பெண்களை மையமாகக் கொண்டிருந்தன. சிருங்கார வெளிப்பாடுகளை அதிகம் கொண்டிருந்தமையினாற் சர்ச்சைக்குரியனவாகவும் பார்க்கப்பட்டன. விக்டர் ஹோர்டா பெல்ஜியத்தைச் சேர்ந்த கட்டிடக்கலைஞரும் பேராசிரியருமாவார். *1890*களில் ஒரு மாற்றுக் கலைப்பாணியுடன் நீடித்த ஆர்ட் நூவா கலைப் பாணியின் வளர்ச்சியில் இவரது வகிபாகத்திற்காக அறியப்பட்டவர்.

பிரான்ஸ் தலைநகர் பாரிசில் கலைசார்ந்த ஓவியம் சார்ந்த பல கண்காட்சிகள், அருங்காட்சியகங்களைப் பார்வையிட்டதால், ஆர்ட் நூவோவிலிருந்தும் உந்துதலைப் பெற்றதாகவும் கூறுகின்றார்.

ஆர்ட் நூவோ என்பது *1890*களில் தோன்றிய கலைப்பாணி சார்ந்த ஓர் இயக்கமாகும். அடிப்படையில் அது பிரெஞ்சுச் சொல். இது இயற்கை வடிவங்கள் மற்றும் வளைந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோடுகளாலான கலை, குறிப்பாக ஓவியங்களைக் குறிப்பதாகும். தொழில்மயமாக்கல் மற்றும் இயந்திரமயமாக்கலுக்கான எதிர்வினையாக. இந்த இயக்கம் கட்டிடக்கலை, வடிவமைப்பு, ஓவியம் மற்றும் கிராஃபிக்ஸ் ஆகியவற்றில் குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்தியது, இப்பாணி உருவாக்கத்தின் மூலவர்களாக ஆன்டோனி கவுடி மற்றும் குஸ்டாவ் கிளிம்ட் *(Antoni Gaudi, Gustav Klimt)* ஆகியோர் கருதப்படுகின்றனர்.

கொண்டாட்டம், அசைவு, பெண்கள், பறவைகள், பொன்னிறம், பச்சை கொடிபோல் படர்தல், செழிப்பு *(Richness)* விடயங்கள் தன்னைக் கவர்ந்ததாகவும் உந்துதலாக அமைந்ததாகவும் கூறுகின்றார். அதைவிட இத்தகு தன்மைகளுடன் வெளிப்படுத்தப்படும் பேசுபொருள், உரிமை மறுக்கப்பட்ட ஒரு தருணம் அல்லது சூழலிலிருந்து அதனைத் திடீரென்று உடைத்துக் கொண்டு பிரகாசமாக வெளிப்படும் போது - அது பார்ப்பவரைக் கவர்கின்றது. ஒடுக்குமுறை, உரிமைமறுப்பை உடைத்து வெளிவரும்போது - அது பேசப்படும் விடயமாக அமைகின்றது என்றும் கூறுகின்றார்.



கீர்த்திகா கிழக்கு இலண்டன் பல்கலைக்கழகத்தில் *(University of East London)* நுண்கலைத் துறையில் ஓவியக் கல்வி பயின்று இளமானிப் பட்டப்படிப்பினை நிறைவுசெய்தவர். புலம்பெயர் தேசம் ஒன்றில் மருத்துவ, சட்டவியல், தொழில்நுட்பத் துறைகளைத் தாண்டிச் சமூகம், மானிடவியல், ஊடகம் உட்பட்ட துறைகளிற் கற்பவர்களே மிக அரிது. இந்நிலையில் கலைத்துறையில் ஓவியத்தினை உயர்கல்வியில் தெரிவுசெய்தமை மிகப் பாராட்டுதற்குரிய செயல்.

**ஒரு ஓவியத்தை வரையத் தொடங்கும் போது எவ்வாறு தூண்டப்படுகின்றீர்கள்? அந்தச் செயல்முறை (Process) எப்படி நிகழ்கிறது? முன்தீர்மானித்து ஒரு ஓவியத்தினை வரைகின்றீர்களா? அல்லது ஒரு பொறியிலிருந்து இயல்பாக நிகழ்கின்றதா?**

உண்மையில் அது மூன்று படிநிலைகளுக்கு ஊடாக இறுதி வடிவத்தை அடைகிறது. முதலில் மனதில் உள்ளவை வெளிப்படும். அடுத்து அவற்றை ஒன்றோடொன்று தொடர்புபடுத்துகின்ற ஒரு படிநிலை நிகழும். மூன்றாவதாக வரையத் தொடங்கும் போது அது இறுதிவடிவத்தை அடையும். ஆனால் சில நேரங்களில் இறுதிவடிவத்தை உருவாக்கும் போது விபத்தாக அல்லது எதிர்பாராமல் சில விடயங்கள் நடைபெறும். அது புதிய உள்ளீடுகளைக் கொண்ட வடிவத்தையும் அடைவதுண்டு.

**கலை என்பது அடிப்படையில் ஒரு மனதின் உணர்வுகளை இன்னொரு மனதிற்குக் கடத்துவது. உங்களுடைய மனமும் வாழ்வும் அனுபவங்களும் உங்களுடைய ஓவியங்களில் எந்த அளவிலும் வகையிலும் பிரதிபலிக்கின்றது?**

ஆரம்ப காலத்தில் ஒரு ஓவியத்தைத் தொடங்கும் போது மிகச் சோகமான வெளிப்பாடுகளாக வந்துள்ளன. உதாரணமாக கண்ணீர்த்துளி ஒரு படிமமாக வந்ததுண்டு. ஒரு கட்டத்தில் இவை வேண்டாம் என்ற உணர்வு வந்தது. இவை எதனைப் பிரதிபலிக்கப்போகின்றன, கடத்தப் போகின்றன என்று என்னை நானே கேட்டுக்கொண்டேன். இவற்றுக்குப் பதிலாக அழகியலோடு இணைத்து நான் எப்படியான ஒரு அமைதியையும் அதுசார்ந்த சூழலையும் விரும்புகின்றேனோ அவற்றை வெளிப்படுத்தும் வகையிலான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓவியங்களை உருவாக்கத் தொடங்கினேன். நான் நம்பிக்கையோடு, சுதந்திரத்தோடு, என்னால் முடியும் என்ற திடத்தோடு இருப்பதை விரும்பும் என் மனநிலையை, என் கனவுகளை வெளிப்படுத்துவதை முக்கியமாகக் கருதத்தொடங்கினேன். இன்னும் சொல்லப் போனால் மன அமைதியைபடைப்பாற்றலாகவும் கற்பனாபூர்வமாகவும் அழகியலுடனும் வெளிப்படுத்த முனைகின்றேன்.

**உங்களுடைய ஓவியங்களிற் பல, கொண்டாட்ட மனநிலையை அல்லது கொண்டாட்டம் மீதான பிரியத்தை வெளிப்படுத்துவதாக உள்ளன. அது குறித்துக் கூறுங்கள்:**

ஓவியத்துக்கான தேடல்கூட எனக்கு ஒரு வகையிற் கொண்டாட்டமான அனுபவங்களைத் தான் தந்திருக்கின்றன, தந்துகொண்டிருக்கின்றன. ஓவியத்தில் ஈடுபடுவது, ஓவியத்தினை உருவாக்குவது என்க்கு ஒரு சந்தோசத்தைத் தருகின்ற முக்கியமான விடயம். பதின்ம வயதுகளில் எனது வாழ்வுச் சூழலில் எனது தாய்மொழியிற் பேசவோ உணர்வுகளைப் பகிரவோ அருகில் பெரிதாக யாரும் இருக்கவில்லை. அந்தச் சூழலில் எனது சுயத்தை நான் தேடவும் பரீட்சிக்கவும் கண்டடையவும் ஓவியம் ஒரு கருவியாகத் துணைநின்றது. *There is an end towards somewhere*- எங்கோ ஒரு பாதை இருக்கிறது தானே. அதை நோக்கி அமைதியாகச் செல்வோம் என்பதே என் மனநிலை'. அதனை ஓவியங்களின் ஊடாகப் பெரும்பாலும் வெளிப்படுத்துகின்றேன்.

**தனி ஓவியமாக இருக்கட்டும் அல்லது ஒரு கருப்பொருளை மையைப்படுத்திய பல ஓவியங்களாக இருக்கட்டும், எண்ணக்கரு உருவாகுவதிலிருந்து இறுதி வடிவம் பெறும் வரையிலான செயல்முறையில் உங்கள் அநுபவம் எப்படியானது, எப்படி உங்களை உணரவைக்கிறது?**

கல்லூரி, பல்கலைக் கழக காலத்தில் எங்களுக்கான கருப்பொருள் தரப்படும், வழிகாட்டல் இருக்கும். அது இலகுவானது. ஆனால் தற்போது சுயாதீனமாக ஓவியங்களை உருவாக்குவது முற்றிலும் சுய தேடலுக்கும் ஆற்றலுக்கும் ஊடாக வெளிப்படுத்தப்பட வேண்டியது.

நான்தான் கருவைத் தெரிவுசெய்ய வேண்டும், அதை வளர்த்து வடிவமைக்க வேண்டும். ஆனால் தொடர்ச்சியான பயிற்சிகளும் அநுபவங்களும் ஆர்வமும் தேடலும் புதிய படைப்புகளை உருவாக்குவதை இலகுபடுத்துகின்றன. இறுதி வடிவத்தைக் காண்பதில் அலாதியான ஒரு மகிழ்ச்சி உண்டாகும். அதற்காகவே இடையறாது பல மணிநேரங்கள்தொடர்ந்துவரைந்திருக்கின்றேன்.

**பொதுவாகவே ஓவியங்களை, குறிப்பாக நவீன ஓவியங்களை நேரடியாக விளங்கிக் கொள்வது இலகுவாக இருப்பதில்லை. Abstractதன்மையுடைய ஓவியங்கள் பல்வேறு கோணங்களில் புரிந்துகொள்ளக்கூடியவை. தருணங்களில் ஓவியர் எத்தகைய எண்ணக்கருவினை மனதிற்கொண்டு வரைந்தாரோ அதற்கு மாறான பொருள்களையும் பார்வையாளர்களும் விமர்சகர்களும் அர்த்தப்படுத்தும் சூழல்களும் உண்டு. உங்களுடைய ஓவியங்களிலும் மரபு சாராத நவீன Abstract ஓவியங்கள் உள்ளன. இது குறித்த உங்கள் அநுபவம், பார்வை பற்றிக் கூறுங்கள்:**

எனது படைப்புகளில் வெவ்வேறு அர்த்தங்கொள்ளத்தக்க மறைபொருள் (*Hidden abstract*) தன்மையுள்ள ஓவியங்கள் உள்ளன.

**அதனை நீங்கள் திட்டமிட்டு Abstract தன்மையான வெளிப்பாடு அமையவேண்டுமென்ற ஒரு கவனத்தோடு உருவாக்குகின்றீர்களா? அல்லது இயல்பாகவே அவ்வாறு அமைகின்றதா?**

இயல்பாகத் தான் அமைகின்றது. *Abstract* தன்மையோடு உருவாக்கவேண்டுமென்ற வலிந்த பிரயத்தனம் இல்லை. ஒவ்வொருவரும் வெவ்வேறு பார்வையோடு அவற்றைப் புரிந்துகொள்கின்றனர். கருத்துகளைச் சொல்கின்றனர். ஓவியங்கள் தொடர்பான ஈடுபாடும் அறிதலும் உள்ளவர்கள் வெவ்வேறு பார்வைகளை என்னிடம் வெளிப்படுத்துவதுண்டு. சில விடயங்களை நேரடியாகச் சொல்ல முடியாமலிருக்கும் அல்லது தயக்கமாக இருக்கும். சில பேர் அதைச் சொல்லத் தேவையில்லை என்று நினைக்கக்கூடும். நான் அவற்றைச் சொல்வது நல்லதென்று நினைப்பதுண்டு.

**ஓவியங்களில் நீங்கள் பயன்படுத்துகின்ற உத்திகள், நிறங்கள், வடிவங்கள் குறித்துச் சொல்லுங்கள்**

நான் அதிகம் எண்ணெய் வண்ண ஓவியங்களையே உருவாக்குகின்றேன். நீர்வண்ணத்தினை மிகக்குறைவாகவே பயன்படுத்துகிறேன். கலவை ஊடக (*Mixed media art techniques*) உத்திகளையும் சிறிய அளவில் கையாளுகின்றேன். எண்ணெய் வண்ண '*Emposs*' உருவாக்கம் எனக்கு அதிகம் பிடிக்கும். அதில் ஒரு தொட்டு-உணர்தல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



*(Touch and feel)* தன்மையும் ஒரு முப்பரிமாணத் தன்மையையும் (3D) கொண்டுவரலாம். மகத் துல்லியமும் கூர்மையுமான தன்மையுடனும் ஓவியங்களை உருவாக்கமுடியும்.

**காட்சிக்கு வைக்கப்பட்டிருந்த ஓவியங்களில் குறிப்பிடத்தக்க சில ஓவியங்கள் பெண்ணும் மயிலும் இணைந்ததான தோற்றங்களும் படிமங்களும் கொண்டனவாக இருந்ததை அவதானிக்க முடிந்தது. அப்படியான உருவகப்படுத்தலுக்குப் பின்னால் உள்ள அம்சம் என்ன?**

எனது ஓவியங்களில் நீங்கள் காண்கின்ற தோகை விரிக்கின்ற மயில் ஆண் மயில். அதனை நான் அழகியற் பார்வையில் மட்டும் பயன்படுத்தவில்லை. பெண்ணையும் ஆண்மயிலையும் உருவகமாக அமைத்திருப்பதன் மூலம் ஒரு சமத்துவத்தையும் பாதுகாப்பினையும் ஒரு சேர வெளிப்படுத்த விழைகின்றேன்.

**உங்களுடைய ஓவியங்களில் நடன அசைவுகள் வருகின்றன. அலை, காற்று, மரங்கள், இலைகள், கடல் உட்பட்ட இயற்கையின் கூறுகள் அதிகம் உங்கள் ஓவியங்களில் இடம்பிடித்துள்ளன. அவை பெரும்பாலும் பெண்ணோடு இணைந்ததாக, பெண்ணைப் பிரதிபலிப்பதாக, பெண்ணின் சக்தியை வெளிப்படுத்துவதாக உள்ளன. இந்த உருவக வெளிப்பாடு பற்றிக் கூறுங்கள்...**

சிறு வயதிலிருந்தே எனக்கு நடனத்தில் ஈடுபாடு இருந்திருக்கின்றது. பரதநாட்டியம் பழகியிருக்கிறேன். ஆனால் தொடர்ந்து பழகவும் அரங்கேற்றம் செய்யும் நிலைக்குச் செல்லமுடியாத தடைகள் ஏற்பட்டமை குறித்து வருந்தியிருக்கின்றேன். அது என்னுடைய இயக்கத்தை (அசைவுகளை) நிறுத்தியதான ஒரு உறுத்தல் உணர்வை எனக்குத் தந்தது. கலைகளில் எனக்கு ஓவியம், நடனம், பாடல் மீதான ஆர்வங்கள் உள்ளன. ஆனால் நடனத்தில் என்னைத் தடுத்து நிறுத்தியதான உணர்வு, ஓவியங்களில் அசைவுகளைக் கொண்டுவரத் தூண்டியது.

**இதனை அடக்கப்பட்ட ஒரு கலை வடிவம் இன்னொரு கலை வடிவத்தினூடாகப் பிரதிபலிக்கின்றது என்று சொல்லலாமா?**

ஓம். அத்தோடு இந்த மனமும் வாழ்வும் ஏதோவொன்றைத் தேடிக் கொண்டிருக்கின்றது, அதனை நோக்கி நகர்ந்துகொண்டிருக்கின்றது என்பதன் குறியீடாகவும் அந்த அசைவுகள் வெளிப்படுவதாக நான் உணர்கிறேன்.

**உங்கள் வாழ்வில் ஓவியம் என்பதன் பங்கு என்னவாக இருக்கின்றது?**

தற்போது ஓவியம் என்வாழ்வில் முக்கிய அங்கமாக ஆகியிருக்கிறது என்று உணர்கிறேன். குறிப்பாக இந்தக் கண்காட்சி எனக்கு மிகமிக விசேடமானதும் மனதுக்கு நெருக்கமானதுமாக உணர்கிறேன். இதற்கு முன்னரும் எனது ஓவியங்கள் பல கண்காட்சிகளைக் கண்டிருக்கின்றன. ஆனால் அவற்றிலிருந்தெல்லாம் இது வேறுபடுகின்றது. என்னளவில் இது மிக முக்கியமானது. இந்த நிகழ்வை ஏற்பாடு செய்த பிரெஞ்ச் கலை பண்பாட்டு மையம் பல்லின மக்கள் ஒன்றுகூடும் இடம். இந்த ஓவியக் காட்சியை 3 வாரங்கள் பல்வேறு இன, மொழி, பண்பாட்டுப் பின்னணியுடைய மக்கள் பார்வையிட்டனர். அவர்களிற் பலருக்கு என் ஓவியங்களின் நிறப்பாவனை, பேசுபொருள், வெளிப்பாடு பிடித்திருக்கின்றது. உற்சாகமளிக்கும் வகையிலான பல கருத்துகள், பாராட்டுகளையும் தெரிவித்திருந்தனர்.

அடுத்து தமிழ் சார்ந்த அடையாளம், பண்பாட்டு வெளிப்பாட்டுக்குரிய கண்காட்சியை நடாத்துவதற்கான வாய்ப்பும் இதனூடகக் கிடைத்திருக்கின்றது என்பது இன்னுமோர் மகிழ்வைத் தருகின்றது. புதிய வாய்ப்புகளுக்கான திறவுகோலாக இந்தக் கண்காட்சி அமைந்ததையிட்டு உள்ளார்ந்த நெகிழ்வு உண்டாகுகின்றது என்று நிறைவாகக் கூறிக்கொண்டார்.

●

*கட்டுரையாளர்: எழுத்தாளர்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டுரை | நெல்லை சு.முத்து




# தொல் தமிழ்நாட்டில் இரும்பு யுகம் (கி.மு.3350)



சென்ற இதழ்த் தொடர்ச்சி...

கல்வி மற்றும் ஆய்வு ஆலோசகர், தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை பேராசிரியர் கா. ராஜன், தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை இணை இயக்குநர் முனைவர் இரா.சிவானந்தம் ஆகியோர் எழுதிய 'இரும்பின் தொன்மை: தமிழ்நாட்டில் அண்மைக்காலக் கதிரியக்கக் காலக்கணக்கீடுகள்' நூலில் பின்வரும் ஆய்வு முடிவுகள் இடம்பெறுகின்றன.

"வட இந்தியாவில் கிடைத்ததைப் போல தமிழ்நாட்டில் அதிக அளவில் செம்பு கிடைக்காத காரணத்தால் இங்கு செம்புக் காலம் வழக்கத்திலிருக்கவில்லை.

"இருந்தபோதிலும், ஆதிச்சநல்லூரில் கண்டெடுக்கப்பட்ட ஈமத் தாழிகளில் கி.மு.15ஆம் நூற்றாண்டின் *(IUACD 23C5689, கி.மு.1441)* இடைக்காலத்தைச் சார்ந்த உயர்தர தகர-வெண்கலப் பொருட்கள் *(high-tin bronzes)* அதிக எண்ணிக்கையில் கிடைத்தன. மேலும், சாஸ்தாபுரம், அடுக்கம், சூலப்புரம் (உலைப்பட்டி), திருமலாபுரம், ஆரோவில் போன்ற இடங்களில் உள்ள ஈமத் தாழிகளிலும் இவை கண்டறியப்பட்டன. இரும்புப் பொருட்களுடன் இவை கண்டறியப்பட்டதால் உயர்தர தகர-வெண்கலப் பொருட்களை இரும்புக் காலத்தோடு இணைத்துக் கருதமுடியும். பொதுவாக, செம்பு உருக்கும் தொழில்நுட்பம் இரும்புத் தொழில்நுட்பைவிட காலத்தால் முந்தியது என்று கருதப்படுகிறது. அண்மைக்கால அகழாய்வுகளில் ஈமத் தாழிகளில் கண்டறியப்பட்ட அதிக எண்ணிக்கையிலான உயர்தர தகர- வெண்கலப் பொருட்கள் அனைத்தும் முழுமையடைந்த பொருட்களாக உள்ளன. தமிழ்நாட்டில் நீண்ட நெடிய கள ஆய்வுகளும், அகழாய்வுகளும் மேற்கொள்ளப்பட்டிருந்தாலும், தொல் உயர்தர தகர - வெண்கலப் பொருட்கள் உற்பத்தி மையம் இருந்ததற்கான எந்த அடையாளமும் இதுவரை கிடைக்கவில்லை. தற்பொழுது பெரும்பாலும் ஈமச்சின்னங்களில் குறிப்பாக ஈமத்தாழிகளில் கிடைக்கும் சான்றுகள் அனைத்தும் தமிழ்நாட்டில் இறக்குமதி செய்யப்பட்டிருக்கவேண்டும் என்று கருத வழிவகுக்கிறது. எனினும் வழக்கத்திற்கு மாறாகக் கிடைக்கும் இந்தக் காலத்தால் முந்திய உயர்தர தகர-வெண்கலப் பொருட்கள் இங்கேயே தயாரிக்கப்பட்டனவா அல்லது வெளியிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டனவா என்பதை மேலாய்வுகளின் மூலமே உறுதிப்படுத்தமுடியும். எனவே, இரும்பு அறிமுகமான பின்னர் தமிழ்நாட்டில் செம்பு அறிமுகமாகியிருக்கலாம்....

"இரும்புத் தொழில்நுட்பம் மிகப் பழங்காலத்திலேயே இருந்துள்ளது என்று கருதப்பட்டாலும் தற்பொழுது கிடைக்கும் சான்றுகளின் அடிப்படையில் இரும்புத்தாதுவிலிருந்து உருக்கிச் செய்யப்படும் இரும்புத் தொழில்நுட்பம் கி.மு.இரண்டாயிரம் ஆண்டுகளின் இடைப்பட்ட காலத்தில்தான் தொடங்கியதாக ஆய்வு முடிவுகள் தெரிவிக்கின்றன." *(Waldbaum 1999).*

"அனடோலியா மற்றும் காகசஸ் பகுதிகளில் இரும்புக்காலம் கி.மு. இரண்டாயிரம் ஆண்டின் பிற்பகுதியில் (சுமார் 1300) தொடங்கியது. பண்டைய கிழக்குப் பிரதேசங்களில் இத்தகைய தொழில்நுட்ப மாற்றம் ஏறத்தாழ கி.மு.12ஆம் நூற்றாண்டுகளில் ஏற்பட்டுள்ளது (கி.மு.1200-1100). சீனா, மத்திய மற்றும் மேற்கு ஐரோப்பா, வடக்கு ஐரோப்பா மற்றும் வடக்கு ஸ்காண்டினேவிய ஐரோப்பா ஆகியவற்றில் முறையே சுமார் கி.மு.900, கி.மு.800, கி.மு.600, மற்றும் கி.மு.500 ஆகிய காலகட்டங்களில் இரும்புக்காலம் தொடங்கியதாகக் கருதப்படுகின்றது *(Miller et.al., 1994:1-36; Alpern*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2005:41-94; Muhly 2003:174-183; Stuiver 1968:45-58). இந்த காலக்கணக்கீடுகளைக் கொண்டு, இரும்பு முதலில் அனடோலியா பகுதிகளில் ஹிட்டைட் ஆட்சிக் காலத்தில் உற்பத்தி செய்யப்பட்டது என்றும் அங்கிருந்து அத்தொழில்நுட்பம் உலகின் மற்ற பகுதிகளுக்குப் பரவியது என்றும் எண்ணினர். தற்பொழுது துருக்கி நாடாகக் கருதப்படுகின்ற தொன்மை அனடோலியா நாட்டைச் சார்ந்த ஹிட்டைட் மன்னர் அடுத்த நாட்டு மன்னருக்கு வாள் ஒன்றை அனுப்பிவைத்ததாகவும், அத்துடன் தன்னால் மற்ற இரும்பு உபகரணங்களை அனுப்பி வைக்க இயலவில்லை என மன்னிப்புக் குறிப்பு அனுப்பி வைத்ததாகவும் கருதப்படுகிறது. இது எரிகல் இரும்பு திரளையில் இருந்து உருவாக்கப்பட்ட இரும்புப் பொருட்களின் பண்பாட்டு மற்றும் பொருளியலின் முக்கித்துவத்தை அளிக்கிறது எனலாம்.

“எனவே இரும்புக் கனிமத்தைக் கொண்டு உருவாக்கப்படும் இரும்புத் தொழில்நுட்பம் அறியப்படும் வரை எரிக்கல்லால் உருவாக்கப்பட்ட இரும்பு முக்கியத்துவம் பெற்றிருந்தது என்பதை இதன் மூலம் அறியமுடிகிறது. எனினும், இத்தகைய கருதுகோள்கள் பற்றிக் கல்வியாளர்கள் மற்றும் ஆய்வாளர்களிடையே தொடர்ந்து கேள்விகள் எழுப்பப்பட்டும் விவாதிக்கப்பட்டும் வருகின்றன.

“செம்பை உருக்க 1000°C வெப்பம் தேவைப்படுகிறது. ஆனால் இரும்பை உருக்க 1200°C க்கும் மேலாக வெப்பம் தேவைப்படுகிறது. எனவே, இரும்பு உருக்கும் தொழில்நுட்பம் கண்டறியப்பட சற்றுத் தாமதமாகியிருக்கலாம். இரும்புக் கருவிகள் மத்திய அனடோலியாவில் கி.மு.1800 காலக்கட்டத்தில் மிகக் குறைந்த அளவிலே தயாரிக்கப்பட்டன. புதிய ஹிட்டைட் பேரரசுக் (கி.மு.1400-1200) காலத்தில் அவை பொது உபயோகத்தில் உயர்பிரிவு மக்களால் பயன்படுத்தப்பட்டுள்ளன. இதன் அடிப்படையில், இந்தத் தொழில்நுட்பம் உலகம் முழுவதும் கி.மு.12ஆம் -11ஆம் நூற்றாண்டுகளுக்குப் பின்னரே பரவியதாகக் கருதப்படுகிறது.

**கொடுமணல் இரும்பு உலை**

“கொடுமணல் அகழாய்வில் வெளிப்படுத்தப்பட்ட இரும்பு உலைக்கு மேலே கூறப்பட்ட விளக்கமானது மிகவும் பொருத்தமானதாக உள்ளது. வாழ்விடப்பகுதியின் தெற்குப் பகுதியில் அமைக்கப்பட்ட குழியில், 65 செ.மீ. ஆழமும் 115 செ.மீ. விட்டமும் கொண்ட ஒரு வட்ட வடிவ உலை கிடைத்தது. உலையின் உட்பகுதிகள் வெள்ளை நிறம் கொண்டு இருந்தன. அதிக வெப்பநிலையில் நீண்ட நேரம் நெருப்பைப் பயன்படுத்தியது இதற்கான காரணமாக இருக்கலாம். இரும்புக் கழிவு, கழிவுடன்கூடிய எரிந்த களிமண், கண்ணாடிபோன்ற வாய்ப்பகுதியைக் கொண்ட ஊதுலைத் துண்டுகள் மற்றும் ஒரு கருங்கல் பலகை ஆகியவை உலைப் பகுதிக்கு அருகில் கிடைத்தன. உலையின் உள்சுவரை ஒட்டியிருந்த இரும்புக் கழிவுகள் மென்மையான மேற்பரப்பைக் கொண்டிருந்தது. 15 செ.மீ. நீளமும், 6 செ.மீ. தடிமனும் 1.5 செ.மீ. துளை விட்டமும் கொண்ட ஊதுலைகள் கண்டெடுக்கப்பட்டன. எனவே, உலைக்கு மிக அருகில் துருத்திகள் பயன்படுத்தப்பட்டிருக்க வேண்டும் என்பதை இவை உணர்த்துகின்றன.

“கொடுமணலில் அகழப்பட்ட உலை, இரும்பு ஆக்சைடுகளை இரும்பாக மாற்ற, குறைந்தபட்ச வெப்பநிலைத் தேவையைவிட 1300°c வெப்பநிலை வரை அடைந்திருக்கலாம்; எனினும் குறிப்பாக, இந்த வெப்பநிலை இரும்பு எனும் உலோகத்தை உருக்குவதைவிட குறைந்ததாக இருந்துள்ளது. இவ்வாறு உருவாக்கப்படும் இரும்பு உருகிய நிலையில் மெல்லிய இரும்பாக இருக்கும்பொழுதே அதிலிருந்து கழிவுகள் ஓரளவு நீக்கப்படும். மீதமுள்ள கழிவுகளும் உருகிய நிலையிலான இரும்பைச் சம்மட்டியால் தட்டும்பொழுது கழிந்துவிடும் (Tylcote: 1962: 183-4). வீட்டுத்தரைகள், மரம் நடுவதற்கான குழிகள் மற்றும் பிற புழங்குப்பொருட்களோ பானை ஓடுகளோ இரும்பு உருக்கும் உலைப் பகுதியில் இல்லை. எனவே, இரும்பு உருக்கும் தொழில் குடியிருப்புப் பகுதியின் எல்லையில் திறந்த வெளியில் நடைபெற்றிருக்கலாம் என்று கருதலாம்.

**பீட்டா அனலிட்டிக் ஆய்வுக்கருவி**

“அதிகமான இரும்புக் கழிவுகளைக் கொண்ட இத்தகைய உலைகள் கோயம்புத்தூருக்கு அருகில் உள்ள இடையர்பாளையத்திலும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈரோடு அருகே நிச்சாம்பாளையத்திலும், பல்லடம் அருகே செட்டிப்பாளையத்திலும் கண்டறியப்பட்டன. இந்த மூன்று மிக முக்கியமான தொல்லியல் தளங்கள் ஆய்வு செய்யப்படவேண்டும்.

"இந்தத் தொல்லியல் தளங்கள் எல்லாம் வாழ்விட மற்றும் ஈமத் தாழிகளுடன் இணைந்து காணப்படுகின்றன. மேலும் செம்பழுப்பு பூச்சு பெற்ற வெள்ளைவண்ணம் தீட்டப்பட்ட ஓடுகள், கருப்பு-சிவப்பு ஓடுகள், குறியீடுகள் போன்றவையும் இத் தொல்லியல் தளங்களில் கிடைத்துள்ளன. இதன் மூலம் இந்தத் தளங்கள் அனைத்தும் கி.மு.5ஆம் நூற்றாண்டுக்கு முற்பட்டவையாக இருக்க வேண்டும் என்று கருதலாம்.

'முடுக்கி நிறைமாலையளவி' ('ஆக்சிலரேட்டர் மாஸ் ஸ்பெக்ட்ரோமெட்ரி, *Accelerator Mass Spectromery*) உதவியால் காலத்தினைக் கணித்தல் என்பது அப்பொருளில் கதிரியக்கக் கார்பன் அணுக்கருக்களின் வயதினைப் பயன்படுத்தி, தொல்பொருள்களின் சிறிய மாதிரிகளைக் கையாண்டு, அவற்றின் தொன்மையை அளவிடுதல் ஆகும்.

"தொல்பொருள் ஆராய்ச்சியாளர்களுக்கு இது ஒரு சக்திவாய்ந்த கருவியாகும். அது தொல்பொருள் மாதிரியில் உள்ள கார்பன்-14 அணுக்களுக்கும் கார்பன்-12 அணுக்களுக்கும் இடையிலான விகிதத்தை இந்தக் கருவி அளவிடுகிறது

"முடுக்கி நிறைமாலையளவியில் 'சைக்ளோட்ரான்' (*cyclotron*), 'எலக்ட்ரோஸ்டேடிக் முடுக்கி' (*electrostatic accelerator*) ஆகிய இரண்டு அடிப்படைப் பகுதிகள் உள்ளன. முதல் பகுதி அயனிகளை அசாதாரணமான உயர் இயக்க ஆற்றல்களுக்கு முடுக்கிவிடுவதை உள்ளடக்கியது. மேலும் அடுத்த படியில் பகுப்பாய்வு அடங்கும்.

ஒளியியல் தூண்டப்பட்ட ஒளிர்வு (*Optical Stimulated Luminescence*) காலக் கணக்கீடு என்பது மட்பாண்டங்கள், கல் மற்றும் வண்டல் போன்ற பொருட்களின் தேதி வரை தொல்லியல் துறையில் பயன்படுத்தப்படும் ஒரு நுட்பமாகும். இது புவியியலில் மணல், சேறு, வண்டல் மண் போன்ற வண்டல்களின் வயதினைக் கணக்கிடப் பயன்படுத்தப்படுகிறது.

"ஒளியியல் தூண்டப்பட்ட ஒளிர்வு காலக் கணக்கீடு என்பது எவ்வளவு காலத்திற்கு முன்பு கனிம, தானியங்கள் கடைசியாக சூரிய ஒளி அல்லது போதுமான வெப்பத்திற்கு உள்ளாகி இருந்தன என்பதைத் தீர்மானிக்கும் காலவரிசைக் கணிப்பு முறைகளின் குழுவைக் குறிக்கிறது. அத்தகைய நிகழ்வு எப்போது நிகழ்ந்தது என்பதை அறிய விரும்பும் புவியியலாளர்கள், தொல்பொருள் ஆராய்ச்சியாளர்களுக்கு இது பயனுள்ளதாக இருக்கும். ஒளிர்வைத் தூண்டுவதற்கும் அளவிடுவதற்கும் இது பல்வேறு முறைகளைப் பயன்படுத்துகிறது.

**"இரும்புத் தொழில்நுட்பம் மிகப் பழங்காலத்திலேயே இருந்துள்ளது என்று கருதப்பட்டாலும் தற்பொழுது கிடைக்கும் சான்றுகளின் அடிப்படையில் இரும்புத்தாதுவிலிருந்து உருக்கிச் செய்யப்படும் இரும்புத் தொழில்நுட்பம் கி.மு.இரண்டாயிரம் ஆண்டுகளின் இடைப்பட்ட காலத்தில்தான் தொடங்கியதாக ஆய்வு முடிவுகள் தெரிவிக்கின்றன."**

"முடுக்கி நிறைமாலையளவி மற்றும் ஒளியியல் தூண்டப்பட்ட ஒளிர்வு காலக் கணக்கீடுகள் என்று மூன்று ஆய்வகங்களிலிருந்து பெறப்பட்ட 'இரும்பின் தொன்மை' நூல் தரும் தரவுகள் இவை:

"சிவகளை, தொல்பொருள்களுக்கான முடுக்கி நிறைமாலையளவி ஆய்வக முடிவுகளைத் தவிர ஒளியியல் தூண்டப்பட்ட ஒளிர்வு காலக் கணக்கீடு ஆய்வக முடிவுகளையும் பெறலாம் என்று முடிவுசெய்யப்பட்டது. இரண்டு வெவ்வேறு ஒளியியல் தூண்டப்பட்ட ஒளிர்வு காலக் கணக்கீடு ஆய்வகங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டன. இதற்காக ஐந்து மாதிரிகள் (குழி A2-தாழி-1இலிருந்து இரண்டு பானையோட்டு மாதிரிகளும் ஒரு கரிம மாதிரியும்; குழி A2-தாழி-3இலிருந்து ஒரு பானையோட்டு மாதிரியும் நெல் தானிய மாதிரிகளும்) சேகரிக்கப்பட்டன.

"ஐந்து மாதிரிகளில், லக்னோவில் உள்ள



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பீர்பால் சஹானி பேலியோ சயின்சஸ் ஆய்வு நிறுவனத்திற்கு ஒன்றும், அகமதாபாத் இயற்பியல் ஆய்வுக்கூடத்திற்கு ஒன்றும், அமெரிக்காவில் பிளோரிடாவில் உள்ள பீட்டா அனலிட்டிக் ஆய்வகத்திற்கு ஒன்றும் தெளிவான கணக்கீடுகள் பெறவேண்டி அனுப்பப்பட்டன. அவ்வாய்வுக்கூடங்களில் இருந்து பெறப்பட்ட ஆய்வு முடிவுகள் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தவையாக அமைந்தன.

"அக்காலக்கணிப்புகள் கி.மு.2459 (வ.எண்.1,BSIP/A2-தாழி1), கி.மு.2427 (வ.எண். 2, PRL-A2-தாழி-1) மற்றும் கி.மு.3259 (வ.எண். 3, Beta-A2-தாழி-1) ஆகும். இந்த மூன்று கணக்கீடுகளும் ஒரே ஈமக் குழியிலிருந்து சேகரிக்கப்பட்ட மாதிரிகளுக்கானவை (அதாவது குழி A2-தாழி-1) என்பது குறிப்பிடத்தக்கது. இவை கி.மு.2500க்கும் 3000க்கும் இடைப்பட்ட காலத்தைச் சார்ந்ததாக காணப்படுகிறது. குறிப்பாக, மூன்று காலக்கணிப்புகளும் கி.மு.மூன்றாயிரத்தின் இடைப்பகுதியில் அமைந்து நிலைத்த தன்மையைக் காட்டுகின்றன. இதில் ஆய்வுக்குழி B3 ஈமத்தாழியில் இருந்து சேகரிக்கப்பட்ட மாதிரியின் காலம் (Beta 583593 - கி.மு.3345-குழி B3-தாழி) கி.மு. நாலாயிரமாண்டின் முற்பகுதிக்கு செல்கிறது.

"ஐந்தில், மற்ற இரண்டு மாதிரிகளும் (பானை ஓடு மற்றும் நெல்) (குழி A2-தாழி-3) ஒளியியல் தூண்டப்பட்ட ஒளிர்வுக் காலக்கணிப்பு பெறுவதற்காக லக்னோவில் உள்ள பீர்பால் சஹானி பேலியோ சயின்சஸ் நிறுவனத்திற்கு ஒன்றும் (வ.எண்.4 - BSIP) முடுக்கி நிறைமாலையளவி கதிரியக்கக் காலக்கணக்கீடு பெறுவதற்காக அமெரிக்காவில் புளோரிடாவிலுள்ள பீட்டா அனலிட்டிக் ஆய்வகத்திற்கு ஒன்றும் (வ.எண்.5- Beta) காலக்கணக்கீடு உறுதிசெய்வதற்காக அனுப்பப்பட்டன.

"பேலியோ சயின்சஸ் ஆய்வகத்திலிருந்து தூண்டப்பட்ட ஒளிர்வுக் காலக்கணிப்பு கி.மு.1284உம் பீட்டா அனலிட்டிக் ஆய்வகத்திலிருந்து முடுக்கி நிறைமாலையளவி கதிரியக்கக் காலக்கணக்கீடு கி.மு.1155உம் பெறப்பட்டன. குறிப்பாக, ஒரே தாழியிலிருந்து (குழி A2- தாழி-3) சேகரிக்கப்பட்ட இரண்டு வகையான மாதிரிகளும் (நெல் மற்றும் பானை ஓடு) இரண்டு வெவ்வேறு காலக்கணக்கீடு ஆய்வகங்களிலிருந்து இரண்டு வகையான காலக்கணக்கீடு முறைகளும் நெருங்கிய காலக்கணக்கீடுகளை வழங்கின.

இதேபோல், ஒரே தாழியிலிருந்து இரண்டு பானை ஓட்டு மாதிரிகள் (குழி L13-தாழி-5) சேகரிக்கப்பட்டு லக்னோவிலுள்ள பீர்பால் சஹானி பேலியோ சயின்சஸ் நிறுவனத்திற்கு ஒன்றும் (வ.எண்.6), அகமதாபாத்தில் உள்ள இயற்பியல் ஆராய்ச்சி ஆய்வகத்திற்கு ஒன்றும் (வ.எண்.7) அனுப்பப்பட்டன. கி.மு.1836 (வ.எண். 6,BSIP/L13 - தாழி-5) மற்றும் கி.மு.2450 (வ.எண்.7, PRL/L-13, தாழி-5) ஆகிய கணக்கீடுகள் பெறப்பட்டன. ஒளியியல் தூண்டப்பட்ட ஒளிர்வுக் காலக்கணிப்புகளின் பிழைப்பட்ட மதிப்பை நேர்செய்வதற்காக முறையே 363ஐயும் 308ஐயும் ஒருவர் கணக்கில் எடுத்துக்கொண்டால், அது ஒரே மாதிரியான காலத்தை வழங்குகிறது. அதாவது, கி.மு.2199 மற்றும் கி.மு.2142 (3856 + 363 = 4219 ஆண்டுகள் முந்தையது, அதாவது, 4219 - 2020 = கி.மு.2199 மற்றும் 4470 - 308 = 4162 ஆண்டுகள் முந்தையது, அதாவது, 4162 - 2020 = கி.மு.2142) எனக் கொள்ளவேண்டியுள்ளது.

தவிர, இரண்டு தாழிகளிலிருந்து சேகரிக்கப்பட்ட கரி மாதிரிகள் (குழி L13-தாழி 2 மற்றும் 8) கி.மு.1909 மற்றும் கி.மு.1988 (வ.எண். 8, 9) என்னும் காலக்கணக்கீடு அளித்தன. குழிகள் C3/1 மற்றும் B3-தாழி-10 ஆகியவற்றிலிருந்து சேகரிக்கப்பட்ட இரண்டு மாதிரிகள் முறையே கி.மு.2953 என்றும் கி.மு.3345 (வ.எண்.10, 11) என்றும் காலக்கணக்கீட்டினை வழங்கின.

ஏற்கெனவே சிவகளை, ஆதிச்சநல்லூர், மயிலாடும்பாறை, கீழ்நமண்டி மற்றும் மாங்காடு ஆகிய இடங்களில் மேற்கொள்ளப்பட்ட அகழாய்வுகள் தென்னிந்தியாவில் குறிப்பாகத் தமிழ்நாட்டில் கி.மு.2500 முதல் கி.மு.3000 வரையிலான காலக்கட்டத்தில் இரும்பு அறிமுகமாயிருக்க வேண்டும் என்று கருதப்பட்டது. வடக்கே அமைந்துள்ள பண்பாட்டு இடங்கள் செப்புக்காலத்தில் இருந்தபோது, விந்தியத்திற்கு தெற்கே வணிகத்திற்குப் பயன்படுத்தும் அளவிற்குச் செப்புத்தாது குறைவாக கிடைத்த காரணத்தால் தென்னிந்தியா இரும்புக் காலத்திற்குள் நுழைந்திருக்கலாம். எனவே, வடஇந்தியாவின் செப்புக்காலமும் தென்னிந்தியாவின் இரும்புக் காலமும் சமகாலத்தவை எனலாம். எதிர்கால அகழாய்வுகள் மற்றும் அறிவியல்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடிப்படையிலான காலக்கணக்கீடுகள் இந்தியாவில் இரும்பு அறிமுகமான காலத்தை மேலும் தெளிவுபடுத்தலாம் அல்லது வலுப்படுத்தலாம்".

தற்போது தமிழ்நாட்டில் மேற்கொள்ளப்பட்ட அகழாய்வுகளின் மூலம் அண்மையில் கிடைக்கப்பெற்றுள்ள மாதிரிகளின் முடுக்கி நிறைமாலையளவி, ஒளியியல் தூண்டப்பட்ட ஒளிர்வுப் பகுப்பாய்வு முடிவுகள் கி.மு.2427, கி.மு.2450, கி.மு.2459, கி.மு.2522, கி.மு.2953, கி.மு.3259 மற்றும் கி.மு.3345 எனக் காலக் கணக்கீடுகள் பெறப்பட்டுள்ளன.

டாக்டர் கே.ஏ.வெங்கடேசன் (முன்னாள் இயக்குநர், இந்திரா காந்தி அணு ஆராய்ச்சி மையம், கல்பாக்கம்), டாக்டர் எம்.மேனகா (தலைவர், கதிர்வீச்சு பயன்பாடு மற்றும் அளவியல் பிரிவு, அணு ஆராய்ச்சிக்கான இந்திரா காந்தி மையம், கல்பாக்கம்), டாக்டர். அலோக் குமார் (கனுங்கோ தொல்லியல் இணை ஆராய்ச்சிப் பேராசிரியர், மனிதநேயம் மற்றும் சமூக அறிவியல் துறை, இந்திய தொழில்நுட்ப நிறுவனம், காந்தி நகர்), டாக்டர்.பி.மோர்தேகாய் (விஞ்ஞானி-டி, பீர்பால் சஹானி இன்ஸ்டிடியூட் ஆஃப் பேலியோ சயின்சஸ், லக்னோ), டாக்டர் நவீன் சௌஹான் (தலைவர், லுமினென்சென்ஸ் டோசிமெட்ரி மற்றும் லுமினென்சென்ஸ் டேட்டிங், இயற்பியல் ஆராய்ச்சி ஆய்வகம், அகமதாபாத்), டாக்டர் பிரியங்கா சிங் (ரிசர்ச் அசோசியேட்-I, இந்தியன் இன்ஸ்டிடியூட் ஆஃப் ஜியோமேக்னடிசம்,, நவி மும்பை), டாக்டர். மலிகா சிங்கால் (ஆராய்ச்சி விஞ்ஞானி, இயற்பியல் ஆராய்ச்சி ஆய்வகம், அகமதாபாத்), டாக்டர் சாரதா சீனிவாசன் (பேராசிரியர், தேசிய மேம்பட்ட ஆய்வுகள் நிறுவனம், பெங்களூர்) டாக்டர். ஜாங் சிக் பார்க் (பேராசிரியர், உலோகவியல் பொறியியல் துறை, ஹாங்கிக் பல்கலைக்கழகம், தென் கொரியா), டாக்டர் ஜி.முத்துசங்கர் (தலைவர். புவியியல் துறை, பாண்டிச்சேரி பிரெஞ்சு நிறுவனம், புதுச்சேரி) எனப் பல்துறை ஆய்வாளர்களும், விஞ்ஞானிகளும் கண்டறிவித்துள்ள முடிவுகள் இவை.

ஆதலால், இந்தியாவில் குறிப்பாக தமிழ்நாட்டில் கி.மு.நான்காம் ஆயிரத்தின் முற்பகுதியில் இரும்பு அறிமுகமாகிவிட்டது என்று உறுதியாகக் கூறலாம். •

கட்டுரையாளர்: விஞ்ஞானி

கவிதை | ஜே.ஜெ.ஃபர்னாண்டஸ்



சுமப்பதில் எனக்கு
சுகம்தான் எப்போதும்
சுமக்கும் கட்டிலனைய
சுமந்தேன்.
சுமையாகிப்போனேனேயென
சுமை கசிந்துருகி
கண்ணீர் சிந்தியது.
கரம்பற்றியவள்
துவண்டு தொங்கும்போது
கரநரம்புகள் நைந்துபோக
கடுமையாய் பற்றி போராடினேன்.
தலையாட்டி பொம்மையாயில்லை
தாய்நாட்டைக் காக்கும்
போர்வீரன் போலிருந்தேன்.
போதிமரம் தேடி
போய்விடவில்லை தொலைந்து.
காவி கமண்டலம் நாடவில்லை
கடமை மறுத்து.
கைவிடவில்லை நான்.
கைவிட்டது
கண்முன்னால் கையைப்பிசைந்த
மருத்துவரோ
கண்ணுக்குத் தெரியாத
கடவுளரோ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உழவுக் கம்புப் போராட்டம்

திருவிதாங்கூரை மனநோயாளிகளின் தேசம் என்று விவேகானந்தர் சொன்னதைப் பலரும் மேற்கோள் காட்டிப் பேசினாலும் சமூக மறுமலர்ச்சியை எதிர்கொள்வதிலும் நியாயமான பிரச்சனைகளுக்குப் போராடுவதிலும் முன்னணியில் நின்றது திருவிதாங்கூர் என்பது வரலாறு..

1903 இல் தோன்றிய 'ஸ்ரீ நாராயண குரு தர்ம பரிபாலனம்' (ஈழவ மக்களின் விடுதலை அமைப்பு), அய்யன் காளி 1907இல் ஆரம்பித்த 'சாதி ஜன பரிபாலன யோகம்' (புலையர் விடுதலை ), 1914இல் மன்னத்துப் பத்மநாபன் ஆரம்பித்த 'நாயர் சர்வீஸஸ் சொசைட்டி' என இப்படி பல சமூக விடுதலை அமைப்புகள் உருவான பின்பு இங்கு பெரிய மாற்றம் ஏற்பட்டிருக்கிறது.

திருவிதாங்கூர் அடிமைகளுக்கான போராட்டத்திற்கு 1853இல் பலன் கிடைத்தது. மேலாடை அணியும் உரிமை 1859இல் வந்தது. இவை போல மருமக்கள் வழி ஒழிப்பு சட்டம் (1924), கோவில்களில் தேவதாசி ஒழிப்பு (1930) எல்லா சாதியினரும் கோவில்களில் செல்லும் உரிமை (1936) ஆகியன போராட்டத்தின் விளைவாக கிடைத்தவை. இதுபோன்ற சமூகச் செயல்பாட்டுகளுக்குள் நடந்த போராட்டம் பற்றிய செய்திகள் வரலாற்றில் விரிவாகப் பதிவு செய்யப்பட்டுள்ளன.

திருவிதாங்கூரில் நடந்த இந்தச் சமூகப் போராட்டங்களுக்கெல்லாம் முன்பே பதினெட்டாம் நூற்றாண்டில் விவசாயிகளும் போராடியிருக்கின்றனர். வரிச்சுமையால் துன்பமுற்றுப் போராடிய இவர்களின் வரலாறு விரிவாகப் பதிவு செய்யப்படவில்லை. மிகக் குறைவான ஆவணங்களே கிடைத்துள்ளன. விவசாயிகளின் போராட்டம் பற்றிய செய்திகள் திருவனந்தபுரம் ஆவணக் காப்பகத்தில் அழகியபாண்டியபுரம் 'பெரிய வீட்டு முதலியார்' என்னும் தலைப்பிட்ட ஓலைச் சுருணைகளில் உள்ளன. இவற்றில் சிலவே அச்சில் வந்துள்ளன (நான் தேர்ந்தெடுத்த முதலியார் ஆவணங்களை இரண்டு நூற்களாக வெளியிட்டுள்ளேன்).

நாஞ்சில் நாட்டு விவசாயிகள் நில உரிமையாளர்கள் எல்லோரும் கூடி வேணாட்டு அரசுக்கு வரி கொடுக்க மாட்டோம் என்று அறிவித்த செய்திகள் முதலியார் ஆவணங்களில் உள்ளன. இவற்றில் நான்கு ஆவணங்கள் திருவிதாங்கூர் கல்வெட்டுத் தொகுதியில் (1925 பகுதி 5) வெளியாகியுள்ளன. நான் தொகுத்து வெளியிட்ட முதலியார் ஆவணங்கள் என்னும் நூலில் (தமிழினி பதிப்பகம் 2005) இந்த அறிக்கைகளையும் இவற்றின் விரிவான விளக்கங்களையும் கொடுத்துள்ளேன்.

இந்த ஆவணங்களின் சாராம்சம் இதுதான்: வேணாட்டு அரசின் வரிச்சுமையால் நாஞ்சில் நாட்டு விவசாயிகள் அரசைப் புறக்கணித்தும் சொந்த நாட்டை விட்டுக் குடி பெயர்வதாக எச்சரித்தும் வயல் விவசாயத்தை முழுக்கவும் செய்யப் போவதில்லை என்றும் முடிவு செய்த எச்சரிக்கையாக அறிவித்த செய்திகள் இந்த அறிக்கைகளில் உள்ளன. இவை எழுத்துப் பூர்வமாக வெளியிடப்பட்டுள்ளன. இதற்குப் பின்னணி உண்டு.

இப்படியாக விவசாயிகள், நில உடமையாளர்கள் வேணாட்டு அரசருக்குக் கொடுத்த ஓலைகள் நாஞ்சில் நாட்டில் உள்ள ஆசிராமம், ஈசாந்திமங்கலம் வடசேரி, கடுக்கரை ஆகிய ஊர்களிலிருந்து எழுதப்பட்டவை ஆகும். இவை 'ஒப்பரவு ஓலை', 'மொழிமாறா ஓலை' என்னும் பெயர்களில் அழைக்கப்பட்டன.

விவசாயிகளின் இந்தப் போராட்டம் 1703 - 1723 ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலங்களில் நடந்திருக்கிறது. இந்தக் காலக்கட்டத்தில் நாஞ்சில் நாடு வேணாட்டின் கீழ் இருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போராட்டக்காரர்கள் அறிக்கையாக கொடுத்த ஓலைகளில் உள்ள விவரங்கள் பின்வருமாறு:

நில உடமையாளர்களும் கோவில் நிலங்களின் குத்தகைக்காரர்களும் நடத்திய போராட்டம் குறித்து வெளியிட்ட அறிக்கைகளில் காலத்தால் முந்தியது வடசேரி (நாகர்கோவில் நகரத்தின் ஒரு பகுதி) மொழிமாறா ஓலை. இது மலையாள வருஷம் 878 ஐப்பசி மாதம் 1 ஆம் தேதி (1703) எழுதப்பட்டது. இந்த ஆவண ஓலையில் 10 நீண்ட மடங்கிய வரிகள் உள்ளன. அச்சில் வந்தால் ஏறக்குறைய 48 வரிகள் வரும்.

இதில் உள்ள செய்திகள் வருமாறு: 1677 ஆம் ஆண்டு முதலாக மதுரையிலிருந்து குதிரைப் படைகள் நாஞ்சில்நாட்டுக்கு வந்து பேரழிவுகள் செய்து வருகின்றன. மக்களைக் கொள்ளையடிக்கின்றன. வேணாட்டு அரசு அதிகாரிகள் எதுவுமே தெரியாதது போல மக்களைச் சுரண்டிக் கொண்டிருக்கின்றனர்.

அதிகாரிகள் மக்களின் பிரதிநிதிகளை மதிப்பதில்லை. அவர்கள் பேசுவதைக் கேட்பதில்லை. கோவில் நிர்வாகிகள் கோவில் நிலங்களைக் குத்தகை எடுத்தவர்களை நெருக்குகின்றார்கள். அவர்களை மதிப்பதும் இல்லை. அந்நிய மதத்தைச் சார்ந்தவர்கள் கோவில் நிலங்களில் வேலை செய்கின்ற பறையர் ஜாதி மக்களிடம் வேறு வேலைகளைக் கொடுக்கின்றனர்.

இதனால் நாஞ்சில்நாட்டு மக்களில் சிலர் இந்தப் பகுதியை விட்டுக் குடிபெயர்ந்து செல்ல முடிவு செய்துவிட்டனர். அவர்களின் நிலம் தரிசாக கிடக்கிறது. நாங்களும் குடி பெயர முடிவு செய்துவிட்டோம். கோவில் நிலங்களைப் பயிரிட மாட்டோம். இது எச்சரிக்கை என்னும் செய்தி இந்த அறிக்கையில் உள்ளது.

இந்த ஓலை எழுதப்பட்ட காலத்தில் வேணாட்டை ரவிவர்மா (1684-1718) என்ற அரசர் ஆண்டு வந்தார். இவர் உமையம்மா ராணியை அடுத்து வந்த அரசர். ரவி வர்மா காலத்தில் மதுரையில் ராணி மங்கம்மாள் அரசியாக இருந்தார். இவரது படைகள் தான் மிகக் கொடூரமாக நாஞ்சில் நாட்டைத் தாக்கியிருக்கிறது என்பது வரலாறு.

நாஞ்சில் நாட்டு ஆசிராமம் என்னும் ஊர் திருவாசலில் உள்ள அம்பலத்தில் நாஞ்சில் நாட்டு தென்மீதி, வடமீதிப் பகுதிகளில் உள்ள வயல் உரிமையாளர்களும் குத்தகைக்காரர்களும் மலையாள வருஷம் 889 மார்கழி 14 ஆம் தேதி (1714) கூடி வரிச்சுமை பற்றிப் பேசினார்கள். தீர்மான முடிவை ஓலையிலே பதிவு செய்தார்கள். இது ‘ஒப்புரவு மொழி ஓலை’ என்னும் தலைப்பில் முதலியார் ஆவணக் குவியலில் உள்ளது. இந்த ஓலை குறிக்கும் செய்திகள் பின்வருமாறு:

நாஞ்சில் நாட்டிற்குக் கிழக்கே இருந்து (மதுரை) குதிரைப்படைகள் வந்து அழிவு செய்கின்றன. இதனால் வயல் விளைச்சல் குறைந்துவிட்டது. இந்தச் சூழ்நிலையில் அரசாங்க அதிகாரிகள் வரி வரி எனச் சொல்லி துன்புறுத்துகிறார்கள். இவர்கள் கூறும் கணக்கு கூட தவறாக உள்ளது.

குலசேகரத் தாம்புரான் கட்டளையின்படி அஞ்சாலியும் மேல்வாரமும் கொடுத்து வருகிறோம். ஆனால் வையா வரியும் கோட்டை வரியும் கொடுக்கும்படி வற்புறுத்துகிறார்கள். அதை நிச்சயமாகத் தரமாட்டோம். எங்களைக் கட்டாயப்படுத்தினால் இந்தப் பகுதியை விட்டே நாங்கள் குடி பெயர்ந்து விடுவோம். இதை அரசனுக்கு எச்சரிக்கையாகச் சொல்லுகிறோம். சுசீந்திரம் தாணுமாலயன் சுவாமி, பூதப்பாண்டி பூதலிங்க சுவாமி ஆணையாகச் சொல்லுகிறோம். எங்களுடன் ஒத்துழைக்க மறுக்கும் குத்தகைக்காரர்களையும் கூட நாங்கள் புறக்கணிப்போம்.

இந்த ஓலை 15 வரிகள் கொண்டது. நீண்ட வரிகள் ஓர் ஓலையில் மூன்று மடக்கிய வரிகள், ஆக 33 வரிகள் வரலாம். இவை தமிழ் எழுத்து வடிவில் மலையாள மொழிக் கலப்புடன் உள்ளன. இந்த ஓலை எழுதப்பட்ட காலத்தில் (1714) நாஞ்சில் நாடு அடங்கிய வேணாட்டை இரவிவர்மா என்பவர் (1689 - 1718) ஆட்சி செய்தார்.

இவர் காலத்தில் நரசப்பய்யன் ராமப்பய்யன் போன்றவர்கள் படையுடன் வந்தனர். கோவில் நிர்வாகிகளும் கோவிலுக்குரிய வயல்களின் குத்தகைக்காரர்களும் அடிக்கடி மோதிக்கொண்டார்கள். வரி வசூலிப்பதில் கூட நெறிமுறை இல்லை. இதனால் மதுரைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படைகளுக்குக் கொள்ளையடிக்க வசதி ஆயிற்று.

மதுரையிலிருந்து குதிரைப் படைகளுடன் வந்த ராமப்பையன் வேணாட்டு படைத்தலைவனான இரவிக்குட்டி பிள்ளை என்பவருடன் போர் செய்து அவரது தலையை வெட்டிய நிகழ்ச்சி இரவிக்குட்டி பிள்ளை போர் என்னும் கதைப்பாடலாக உள்ளது. வேணாட்டில் ராமப்பய்யன் செய்த போரோ இரவுக்குட்டி பிள்ளையுடன் நடந்து கொண்ட முறையோ அச்சில் வந்த ராமப்பய்யன் அம்மானையில் இல்லை.

நாஞ்சில் நாட்டில் மிகச் சிறிய கிராமம் ஈசாந்திமங்கலம். இன்றும் அப்படித்தான் இருக்கிறது. இந்த ஊரில் விவசாயிகள் கூடி மொழிமாறா ஓலையை எழுதி அரசரிடம் அனுப்பியிருக்கிறார்கள். இந்தத் தீர்மானம் பற்றிய ஓலை மலையாள ஆண்டு *894* வைகாசி மாதம் *15* ஆம் தேதி *(1719)* எழுதப்பட்டது.

இந்த ஓலையிலும் வரலாற்றுச் செய்தி உண்டு. *1707* ஆம் ஆண்டிலிருந்து படைகள் நாஞ்சில் நாட்டுக்கு வந்து அழிவு செய்திருக்கிறது. வரி வாங்குவதுஎன்னும்பெயரில்கொள்ளையடித்துச் சென்றனர். ஸ்ரீனிவாச ராவ் என்பவர் தலைமையில் வந்த படைவீரர்கள் ஆடுமாடுகளையும்நெல்லையும்வித்துக்களையும் கொள்ளையிட்டனர். அம்பலக்காரரைக் கூட பிடித்துச் சென்றார்கள்.

பெற்றாரெட்டி அனந்தோசி நாயக்கர் என்னும் படைத்தலைவர்கள் பெண்களின் தாலியைப் பறித்தனர். காதுகளை அறுத்தனர். சுசீந்திரம் கோயிலில் உள்ள வெள்ளி வெண்கலப் பாத்திரங்களையும் சீலைகளையும் கொள்ளையிட்டனர். அங்கிருந்து நெல் மூட்டைகளை வண்டிகளிலே ஏற்றிச் சென்றனர். சுசீந்திரம் ஆசிரமம் ஆகிய கிராமங்களுக்கு நெருப்பு வைத்தனர். இந்தச் செய்திகளை எல்லாம் காரியக்காரர்கள் வழி அரசருக்கு அனுப்பினோம்.

இதற்குப் பிறகும் அதிகாரிகள் எங்களிடம் வரி வேண்டும் என்று கேட்க வருகிறார்கள். கிழக்கில் இருந்து வரும் குதிரைப் படைகளிடமிருந்து எங்களைப் பாதுகாக்க முடியாத அரசாங்கத்திற்கு நாங்கள் வரி கொடுக்க வேண்டுமா? இதையும் பொறுத்துக் கொண்டோம். பழைய வரிகளை வேண்டுமானால் முறைப்படி கட்டுகிறோம்; புதிய வரிகள் விதிக்க வேண்டாம் கட்டமாட்டோம். இனிமேல் புதிய வரிகள் போடவும் கூடாது.

நாங்கள் நிலங்களைப் பயிரிட மாட்டோம்; தரிசாகப் போடப் போகிறோம். எல்லாக் கோவில் நிலங்கள் பயிராகவில்லை என்றால் வருமானம் இல்லை. கோவிலில் பூசை முடங்கிப் போகும். இப்போதே கோவில்களில் பூசையில்லை எச்சரிக்கை. இப்போதும் எங்களுக்கு வரி விலக்குத் தரவில்லை என்றால் ஒட்டுமொத்த நிலங்களைத் தரிசாகப் போட்டுவிடுவோம். இதுவும் எச்சரிக்கை. இப்படியான செய்திகள் இந்த ஓலையில் உள்ளன.

இந்தப் போராட்ட அறிக்கையில் உள்ள செய்தி வேறு ஒரு ஓலையிலும் வருகிறது. திருவிதாங்கூர் கல்வெட்டுத் தொகுதியில் (எண் *5)* இந்த ஓலை பதிப்பிக்கப்படவில்லை. இந்த ஆவணத்தில் அனந்தோசி நாயக்கர் தாழக்குடி உட்பட நாஞ்சில் நாட்டில் சில கிராமங்களில் கொள்ளையடித்த செய்தி வருகிறது.

இந்த ஓலையில் சொல்லப்படும் அனந்தோசி நாயக்கர், பெற்றாரெட்டி சீனிவாசராவ் ஆகிய படைத்தலைவர்கள் பற்றி மதுரை நாயக்கர் வரலாற்றை எழுதியவர்கள் சொல்லவில்லை (சத்தியநாத ஐயர், அ.கி. பரந்தாமனார்). இவர்கள் படைத் தலைவர்களாகவோ அடியாட்களாகவோ இருந்திருக்கலாம். இப்படி இவர்கள் கொள்ளையடித்த பொருட்களை மதுரை நாயக்கர் அரசுக்காக கொண்டு சென்றார்களா? அவர்களே எடுத்துக் கொண்டார்களா? என்பதெல்லாம் தெரியாது.

இந்த நிகழ்ச்சி நடந்தபோது வேணாட்டில் ஆதித்த வர்மா என்பவர் *(1718-1721)* அரசராய் இருந்தார். இவர் காலத்தில் வேணாடு பெரும் சிக்கலில் இருந்தது. கோவில் ட்ரஸ்டிகளான பிள்ளைமார்களும் கலகம் செய்தனர். ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனியார் அஞ்சு தெங்கில் பிரச்சனைகளை உண்டாக்கினர். இதனால் அரசர் நெருக்கடியில் இருந்தார்.

-தொடரும்

●

---

கட்டுரையாளர்: பேராசிரியர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்அரா! சங்க இலக்கியங்களில் நாகப்பாம்பு!!

பாம்புகள் ஊர்வன இனத்தைச்சேர்ந்தவை. அவற்றுள், கொடிய நஞ்சினையும், எழுந்துநின்று, தலையைஉயர்த்தி படம்விரித்து *(hood)* சீறும் பண்பும்கொண்ட பாம்புகள் நாகப்பாம்புகள் என்றும், நல்லபாம்புகள் என்றும் அடையாளப்படுத்தப்படுகின்றன. நல்லபாம்பு, அதன் கழுத்துஎலும்பை *(neck-rib)* தசையைக்கொண்டு விரிவாக்குவதால் விரிந்து படமாக மாற்றுகிறது. இதனால் நல்லபாம்பின் அளவு மிகைப்படுத்திக் காட்டப்படுவதால் , அதன் எதிரிகளுக்கு அச்சத்தை ஏற்படுத்தும். நல்லபாம்பு படம்விரித்ததும் , பெரிய அளவில் இரண்டு கரும்புள்ளிகள் தெரியும். பார்ப்பதற்கு அவை கண்கள்போல தோன்றுவதால், எதிரிகள் ஏமாற்றப்பட்டு அச்சத்திற்குள்ளாகும். நல்லபாம்பு படம்விரித்து ஆடுவது எதிரிகளை அச்சுறுத்தி எச்சரிக்கை செய்வதற்காகவே. ஒருவிதத்தில் அது நல்லபாம்பின் தற்காப்பிற்கானது என்றும் சொல்லலாம்.

### நல்லபாம்பும், மூடநம்பிக்கைகளும்

'மிதித்தால் கடிக்கும், விதித்தால் கடிக்கும்' என்று நல்லபாம்பைப் பற்றிய சொலவடை ஒன்று எங்கள் ஊரில் உண்டு. கொடிய நஞ்சினை உடைய நல்லபாம்பு, அதுவாகவே தேடிச்சென்று யாரையும் கடிப்பதில்லை. நல்லபாம்பு பழிவாங்குவதை மையமாக வைத்து பலதிரைப்படங்கள் வெளிவந்திருக்கின்றன. அவை அனைத்துமே உண்மைக்குப் புறம்பான, மூடநம்பிக்கையை வளர்க்கும் படங்களே. நாகப்பாம்பைக் கடவுளாகக் கருதி, அது பல சாகசங்களைச் செய்வதுபோன்று உருவான திரைப்படங்களும் மூடநம்பிக்கையை வளர்க்கும் படங்களே.

எங்கள் ஊர்களில் நல்லபாம்பு என்று சொல்லமாட்டார்கள். அதுவும் இருட்டிவிட்டால் சொல்லவே மாட்டார்கள். 'பூச்சி' என்றுதான் சொல்வார்கள். நல்லபாம்பு கடித்துவிட்டது அல்லது கொத்திவிட்டது என்றும் சொல்வதில்லை. 'தீண்டிவிட்டது' என்பார்கள். நல்லபாம்பு என்று பெயரைச் சொன்னாலே கண்முன் வந்துவிடுமோ என்னும் அச்சம்தான் அதற்கான காரணமாக இருக்கவேண்டும். நல்லபாம்பு பற்றிய செய்திகள் பலபாடல்களில் விரவிக்கிடக்கின்றன. அச்செய்திகளை இக்கட்டுரைப் பேசுகிறது.

### நல்லெண்ணெய்யும், நல்லபாம்பும்

உடலுக்கு நல்லதுசெய்யும் எண்ணெயை நல்லெண்ணெய் என்று சொல்வதில் வியப்பில்லை. ஆனால் கொடிய நஞ்சினை உடைய நாகப்பாம்பை நல்லபாம்பு என்று சொல்வதில் முரண் உள்ளது அல்லவா? இதுபற்றிய ஐயம் நீண்டகாலமாகவே எனக்கு இருந்துவந்திருக்கிறது.

சங்க இலக்கியங்களில் நாகப்பாம்பு ' நல்அரா' என்று அடையாளப்படுத்தப்படுகிறது. 'அரா' என்பதற்கு அரவு, அரவம் என்று பொருளாகிறது. ' நல்' என்பதற்கு நல்ல என்றும் மிகுந்த என்றும் பொருள் சொல்லப்படுகிறது. மிகுதியான (கொடிய) நஞ்சினைக்கொண்ட நாகப்பாம்பு நல்அரா என்று சங்ககாலத்தில் அழைக்கப்பட்டு, பிற்காலத்தில் நல்லபாம்பு என்று மருவியிருக்கலாம். (நல்லதம்பிரான்' என்றால் நாகப்பாம்பினைக் குறிக்கும் என்று நா. கதிரைவேற்பிள்ளையின் 'தமிழ் அகராதி' கூறுகிறது.)

போலவே, உடலுக்கு நன்மைவிளைவிக்கும் எள்எண்ணெய் நல்ல எண்ணெய் என்னும் பொருளில் நல்லெண்ணெய் என்று அழைக்கப்பட்டிருக்கலாம். உடலுக்கு மிகுந்த குளிர்ச்சியைத்தருவதாலும் நல்லெண்ணெய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று அழைக்கப்பட்டிருக்கலாம்.

### நல்லெண்ணெயும், நல்லபாம்பும்

நல்லெண்ணெய்க்கும், நல்லபாம்புக்கும் உள்ள பொதுக்குணங்களை வைத்து காளமேகப்புலவர் ஒரு சிலேடைப்பாடல் இயற்றியிருக்கிறார்.

**"ஆடிக் குடத்தடையும் ஆடும்போ தேஇரையும்
மூடித் திறக்கின் முகங்காட்டும் – ஓடி மண்டை
பற்றிற் பரபரெனும் பாரிற்பிண் நாக்கும்உண்டாம்
உற்றிடுபாம் பெள்ளனவே யோது"**

எள் செக்கிலே ஆடி, எண்ணெயாகக் குடத்தில்சேரும். படம் எடுத்து ஆடும் நல்லபாம்பு (மண்) குடத்தில் அடையும்.

எள், செக்கில் ஆடும்போது இரச்சல் உண்டாகும். நல்லபாம்பு படம்விரித்து ஆடும்போது சீறும், அதனால் ஓசை உண்டாகும்.

நல்லெண்ணெய் இருக்கும் குடத்தின் மூடியைத் திறந்துபார்த்தால் பார்ப்பவரின் முகம் தெரியும். நல்லபாம்பு இருக்கும் குடத்தின் மூடியைத் திறந்தால், அது படம்விரித்து தன் தலையை உயர்த்திக்காட்டும்.

நல்லெண்ணையை தலையில் தேய்த்துக்கொண்டால் உடலில் குளிர்ச்சி பரவும். நல்லபாம்பு தீண்டினால் அதன் நஞ்சு பரபரவென தலைக்கு ஏறும்.

எள், செக்கில் ஆடிமுடிந்து எண்ணைணெய் எடுத்தபிறகு அங்கே பி(பு)ண்ணாக்கும் கிடைக்கும். நல்லபாம்பின் நாவு பிளவுபட்டிருப்பதால் பிண்ணாக்கும் (பிளவுநாக்கும்) ஆகும்.. அதனால் பாம்பும், எள்ளும் சமம் என்று ஓது என்று சொல்கிறார் காளமேகப்புலவர்.

### உளுந்தும், நல்லபாம்பும்

வீட்டிற்கு அருகில் உளுந்து வாடை அடித்தால், அருகில் நல்லபாம்பு இருக்கும் என்னும் நம்பிக்கை கிராமங்களில் உண்டு.

### கீரியும் X பாம்பும்

கீரியை நாங்கள் கீரிப்பிள்ளை என்போம். பார்ப்பதற்கு அத்தனை சாதுவாக இருக்கும். எனது சொந்த ஊரில், எங்கள் வீட்டின் பின்புறம் பாறைகள் நிறைந்திருக்கும். முழுநிலவுநாள் நடுஇரவில் கீரிகள் நடமாடுவதை நான் பார்த்திருக்கிறேன். அந்தப்பொழுதில் நாகப்பாம்புகளும் தென்படும்.

நேர்எதிர்ப்பண்பு உள்ளவர்களையும், பகைஉணர்வுகொண்டவர்களையும் கீரியும் பாம்பும்போலஎன்றுசொல்வது வட்டாரவழக்கு. ஏன் அப்படிச்சொல்கிறார்கள் என்பது நீண்டகாலமாக நான் அறிந்திருக்கவில்லை. தாமிரபரணி ஆற்றங்கரையில் எங்கள் மாமாவுக்கு கொஞ்சம் வயல் இருந்தது. அங்கு செல்லும்போது ஒருநாள் கருநாகம் துண்டுதுண்டாகக் கிடப்பதைப் பார்த்து அதிர்ந்திருக்கிறேன். பாம்பை அப்படி வெட்டியது கீரி என்பதை மற்றவர்கள் சொல்லிக் கேட்டிருக்கிறேன். ஆனாலும், நல்லபாம்பை வேட்டையாடி உணவாக உண்ணக்கூடியது கீரி என்பதும், அதன்பொருட்டே அந்தச்சண்டை என்பதான உண்மையையும் மிகவும் காலம்தாழ்ந்தே தெரிந்துகொண்டேன். கீரி, ராஜநாகத்தையும் வெல்லமுடியும், கொல்லவும்முடியும் என்றும் உயிரியலாளர்கள் கூறுகின்றனர்.

எங்கள் வீட்டின் பின்புறம், நடுஇரவில் வெளிவரும் நாகப்பாம்புகளை வேட்டையாடுவதற்காகவே, கீரிகளும் நடமாடின என்பது இப்போது எனக்குப் புரிகிறது. நாகம்பற்றிய எத்தனையோ செய்திகள் சங்க இலக்கியங்களில் காணப்பட்டாலும் கீரி X பாம்பு சண்டைபற்றிய செய்திகள் எனது கண்ணில் படவில்லை. அன்றைய தமிழர் வாழ்வில், அவர்களைச்சுற்றி நிகழ்ந்தவற்றை எல்லாம் பதிவுசெய்திருக்கும் சங்க இலக்கியங்கள், நான் அறிந்தவரையில், இதனை ஏன் பதிவுசெய்யவில்லை என்னும் கேள்வியும் இயல்பாகவே எழுகின்றது.

### புற்றில் குடியிருக்கும் நல்அரா

'கரையான் புற்றெடுக்க கருநாகம் குடிகொண்டது' என்று ஒரு பழமொழி உண்டு. கரையான் புற்றில் நாகம் இருப்பதற்கு புற்றில் நிலவும் குளிர்ச்சி காரணமாக இருக்கலாம்.

'எந்தப்புற்றில் எந்தப்பாம்போ?' என்று ஒரு சொலவடை உண்டு. பொதுவாக, சாரைப்பாம்பு புற்றில் நுழையும்போது அதன் தலை உள்ளேயும், வால் வெளியிலும் இருக்கும். வாலைப்பிடித்து வெளியில் எடுத்துவிடலாம். ஆனால்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நல்லபாம்பு உள்ளே நுழைந்த உடன் தலையை வெளிப்புறம்நோக்கித் திருப்பிக்கொள்ளும். அதன்பிறகு தனது உடல் முழுவதையும் உள்ளே இழுத்துவைத்துக்கொள்ளும். நல்லபாம்பு இருக்கும் புற்றில் வால் என்று எண்ணி கையை நுழைத்தால், உடலில் உயிர்தங்கும் என்று உறுதிசொல்ல முடியாது.

"இரைதேர் எண்கின் பகுவாய் ஏற்றை
கொடுவரிப் புற்றம் வாய்ப்ப வாங்கி
நல்அரா நடுங்க உறரிக் கொல்லன்
ஊதுலைக் குருகின் உள்ளுயிர்த்து அகழும்
நடுநாள் வருதல் அஞ்சுதும் யாம்என.."

(நற்றிணை, பாடல் 125, வரிகள் 1-5)

ஆண்கரடி (எண்கின் ஏற்றை), ஈசல்களைப்பிடித்து உண்பதற்காக, புற்றில் கையைவிடுகிறது. அனைத்தையும் நடுங்கவைக்கும் புற்றுக்குள் இருக்கும் நாகப்பாம்பு, கரடியின் நகங்கள் பாம்பின் உடலைக்கிழித்துவிடும் என்பதால், அச்சத்தில் நடுங்குகிறது. கரடியின் உடலில் அடர்ந்த மயிர் வளர்ந்திருப்பதால் பாம்பு கடித்தாலும் கரடிக்கு ஊறுவிளையாதுபோலும். அதனால்தான் கரடி, தேன்கூட்டையும் மிகச்சாதாரணமாக எடுத்துத் தின்றுவிடுகிறது.

"இரும்புமுகம் நுதைய நூறி ஒன்னார்
இருஞ்சமம் கடத்தல் ஏனோர்க்கும் எளிதே.
நல்அரா உறையும் புற்றம் போலவும்
கொல்ஏறு திரிதரு மன்றம் போலவும்
மாற்றருந் துப்பின் மாற்றோர் 'பாசறை
உளன்' என வெரூஉம் ஓர்ஒளி
வலன்உயர் நெடுவேல் என்னைகண் ணதுவே"

(புறநானூறு, பாடல் 309, வரி 3)

நாகப்பாம்பு உறையும் புற்றை நெருங்குவதற்கும், ஊர்ப்பொதுமன்றத்தில் திரியும் கொல்லேறை நெருங்குவதற்கும் அச்சம் கொள்வதைப்போல நெருங்குவதற்கு அச்சம்தரும் போர்வீரர்களும் பாசறையில் உள்ளனர் என்பது பொருளாகிறது.

"பாம்புஉறை புற்றத்து ஈரம்புறம் குத்தி
மண்ணுடைக் கோட்ட அண்ணல் ஏறு"

(அகநானூறு, பாடல் 64, வரி 10)

வீடுதிரும்பும் காளைகளின் அழகிய கொம்புகளில் , மழைநீரில் நனைந்த புற்றைக் குத்தியதால் புற்றுமண் படிந்திருக்கும். இப்படி மண்ணைக்குத்தி, கொம்புமண்ணோடு வரும் காளைகளைக்கண்டால் அனைவரும் அச்சம்கொண்டு விலகிவிடுவது, கிராமத்து மக்களின் இயல்பு.

### மேய்மணி விளக்கு

முற்றிய நாகப்பாம்பிடம் ஒளிவீசும் மாணிக்கமணி இருக்கும். இரவின் அடர் இருட்டில் நாகம் தனது மணியை உமிழும். அதன் வெளிச்சத்தில் இரைதேடும். இப்படிப்பட்ட கதைகளையும், நாகத்தை ஏமாற்றி அந்த மணியை எப்படி எடுக்கலாம் என்பதுபற்றியும் பலவிதமான கதைகளை நான் எனது சிறுவயதில் கேட்டிருக்கிறேன். ஆனால் நாகப்பாம்பிடம் மாணிக்கமணி உண்டு என்பது பற்றிய பாடல்களைப் படிக்கும்போது, இப்படிப்பட்ட உண்மைக்குப் புறம்பான , அறிவியலுக்கு அப்பாற்பட்ட நம்பிக்கைகள் ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பே தமிழ்ச்சமூகத்தில் ஏற்பட்டுவிட்டன என்பதை புரிந்துகொள்ள முடிகிறது. என்னதான் அறிவார்ந்த சமூகமாக தமிழ்ச்சமூகம் இருந்திருந்தாலும் இதுபோன்ற அறிவியலுக்கு முரணான நம்பிக்கைகளும் இருந்திருக்கின்றன என்பதையும் சொல்லவேண்டியுள்ளது. அது அவர்களது தவறல்ல என்பதையும் சொல்லத்தான் வேண்டும்.

"ஈர்உயிர்ப் பிணவின் வயவுப்பசி களைஇய
இருங்களிறு அட்ட பெருஞ்சின உழுவை
நாம நல் அராக் கதிர்பட உமிழ்ந்த
மேய்மணி விளக்கின் புலர ஈர்க்கும்....."

(அகநானூறு, பாடல் 72)

இரவுவேளையில் தலைவன் வரும்வழி ஆபத்துக்கள் நிறைந்தது என்று தலைவி, தோழியிடம் கவலைப்படும் பாடல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரவில் இரைதேடுவதற்காக நாகப்பாம்பு மாணிக்கக்கல்லை உமிழும். அதனை 'மேய்மணி விளக்கு' என்கிறது பாடல். அந்த வெளிச்சத்தில் குட்டியை ஈன்ற பெண்புலியின் பசிபோக்க ஆண்புலி பன்றியைக்கொன்று இழுத்துவருகிறது. 'ஈருயிர்' என்பதனால் குட்டியை ஈன்ற பெண்புலியைச் சுட்டுவது கவித்துவம்.

**"நெடுமலை அடுக்கம் கண்கெட மின்னிப்**
**படுமழை பொழிந்த பால்நாள் கங்குல்**
**-------- -------- -------- -------- -------- ---**
**----- --------**
**தண்பல் அருவித் தாழ்நீர் ஒருசிறை**
**உருமுச்சிவந்து எரிந்து உறண்அழி பாம்பின்**
**திருமணி விளக்கின் பெருகுவை**
**இருள்மென் கூந்தல் ஏமுறு துயிலே"**
**(அகநானூறு, பாடல் 92 )**

தோழி, தலைவனிடம் தலைவியைச் சந்திக்கும் இடம், காலம்பற்றிக் கூறும் பாடல். இரவில் யானையைத் தாக்கும் புலியின் முழக்கம் கேட்கும். அதனால் இரவில் வரவேண்டாம். பகலில் நாங்கள் தினைப்புலம் காப்போம். குரங்குகளும் ஏறமுடியாத மரங்கள் செறிந்த இருள்நிறைந்த செங்காந்தள் மலர்ந்துள்ள அடர்ந்த காட்டில் அருவிபாயும் சுனையின் பக்கத்தில் நாகப்பாம்பு தனது இரைதேடலுக்காக உமிழ்ந்துவைத்திருக்கும் மாணிக்கமணியின் வெளிச்சத்தில் தலைவியின் அடர்ந்த கூந்தலில் உறக்கத்தைப் பெறலாம் என்கிறாள் தோழி. பகல்நேரம் என்றாலும், இரவுபோல் அடர்ந்தகாடு என்பதையும் புரிந்துகொள்ளவேண்டும்.

**"மைபடு விடரகம் துழைஇ ஒய்யென**
**அருவி தந்த அரவுஉமிழ் திருமணி**
**பெருவரைச் சிறுகுடிமறுகுவிளக்கு உறுத்தலின்**
**இரவும் இழந்தனள் அளியள் உரவுப்பெயல்**
**உரும்இறை கொண்ட உயர்சிமைப்**
**மெருமலை நாட – நின் மலர்ந்த மார்பே"**
**(அகநானூறு, பாடல் 192, வரிகள் 10-15)**

தலைவியை மணம்பேசி முடிக்காமல் களவுவாழ்க்கையைத் தொடரவிரும்பும் தலைவனுக்குத் தோழி கூறியது. பகலிலும் தலைவியைச் சந்திக்க முடியாது. இரவிலும் சந்திக்கமுடியாது. மலை உச்சியில் , இருள்படர்ந்த குகைகளில் நாகப்பாம்புகள் மாணிக்கங்களை உமிழ்ந்துவைத்திருக்கும். அவற்றை அருவிநீர் அடித்துக்கொண்டுக் கீழ்இறங்கும். அப்படி அடித்துக்கொண்டுவந்த இரத்தினங்களை ஊர்மக்கள் எடுத்து அவரவர் வீடுகளில் அழகுக்காக வைத்திருப்பர். அவை வீசும் ஒளிக்கதிர்கள், இரவை பகல்போல் ஆக்கிவிடும். அதனால், விரைவில் தலைவியை மணம்பேசி முடிக்கவேண்டும் என்று தோழி உரைக்கிறாள்.

இப்பாடலில் நாகப்பாம்புகள் உமிழ்ந்த இரத்தினங்களை அருவிநீர் அடித்துவந்ததாகவும், அவற்றை ஊர்மக்கள் எடுத்து அழகுப்பொருளாக வைத்திருப்பதாகவும் சொல்வதில் பாதி உண்மையும், மீதி புனைவுமாக இருத்தல்வேண்டும். மலைக்குகைகளில் இருந்து ஒளிவீசும் கற்களை அருவிநீர் அடித்துக்கொண்டு வந்த செய்தி உண்மையாக இருக்கக்கூடும். ஆனால் அவை நாகம் உமிழ்ந்தவை என்பது புனைவாக மட்டுமே இருத்தல்வேண்டும்.

**"விரவுமணி ஒளிர்வரும் அரவுறழ் ஆரமொடு**
**விரையோன் மேனிப் பூந்துகில் கலிங்கம்**
**உரைசெல அருளி யோனே**
**பறை இசை அருவிப் பாயல் கோவே"**
**(புறநானூறு, பாடல் 398, வரி 27-30)**

மன்னன் சேரமான் வஞ்சன், புலவர் திருத்தாமனாருக்கு நாகம் உமிழ்ந்த மணிபோன்று ஒளிரும் கழுத்துமாலையையும், மென்மையான உடையையும், இன்னபிற செல்வத்தையும் கொடுத்து ஆதரித்த செய்தி இங்கு உள்ளது.

**நாகப்பாம்பு வாயில் அகப்பட்ட இரை**

**" 'செல்வார் அல்லர்'என்று யான் இகழ்ந் தனனே**
**ஒல்வாள் அல்லர் என்று அவர்இகழ்ந் தனரே**
**ஆயிடை**
**இருபேர் ஆண்மை செய்த பூசல்**
**நல்லராக் கதுவி யாங்குஎன்**
**அல்லல் நெஞ்சம் அலமல்க் குறுமே"**
**(குறுந்தொகை, பாடல் 43)**

தலைவன் பிரிந்துசெல்லமாட்டான் என்று தலைவி நம்பி இருந்துவிட்டாள். பிரிவைச்சொன்னால், தலைவி தாங்கமாட்டாள் என்று சொல்லாமலேயே தலைவன் பிரிந்துவிட்டான். தலைவனது பிரிவு, தலைவியை வாட்டுகிறது. எப்படி என்றால், நாகப்பாம்பின் வாயில் அகப்பட்ட இரையைப்போன்று வருந்தி வாட்டுகிறது.

-தொடரும்

●

கட்டுரையாளர்: பேராசிரியர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தற்குறியும் கையெழுத்தும்

## புதுக்கோட்டை கல்வெட்டுகளில் படிப்பறிவு

## [தொடக்கநிலைப் பார்வை]

**தொடக்கம்:** அண்மைக்காலமாகபுதுக்கோட்டை வட்டாரம் வரலாற்றுச் சான்றுகளுக்கான ஆய்வுக்களமாக ஆய்வாளர்களை ஈர்த்துவருகிறது.[1] இவ்வட்டாரம் பற்றிக் கலையியல்[2] கல்வெட்டியல்[3] மானிடவியல்[4] தொழில்நுட்பம்[5] என்ற பின்புலங்களில் ஆய்வுகள் வெளிவந்துள்ளன. இன்றும் அங்கு தொல்லியல் அகழாய்வுகள் நிகழ்கின்றன. கல்வெட்டுக்கள் வெளியாகின்றன.[6] இவ்வட்டாரம், இரும்புக்காலம் தொடக்கம் ஒரு வரலாற்றுத் தொடர்ச்சியினைக் கொண்டுள்ளது. ஆனால், இடைக்காலத்தில் இவ்வட்டாரம் சோழர் அரசுக்கும் பாண்டியர் அரசுக்கும் இடைப்பட்ட ஓர் இடைத்துறைப் பகுதியாகத் *(buffer zone)* திகழ்ந்தது. இவ்விரு அரசுகளுமே இவ்வட்டாரத்தின்மேல் முழுமையான அதிகாரத்தினைக் கொண்டிருக்கவில்லை. என்றபோதும், அங்கு கிடைக்கின்ற கல்வெட்டுக்கள் அவ்வரசர் குலத்தினர் பற்றியும் அவர்கள் கொண்டிருந்த அதிகாரம் பற்றியும் பேசுகின்றன. சோழர் காலத்திலும், பாண்டியர் காலத்திலும், தொடர்ந்துவந்த காலத்திலும் கிடைக்கின்ற கல்வெட்டுகள் சமூக, பொருளியல், வரலாற்றுப் போக்குகளை விளக்குகின்றன. இங்கு, கல்வெட்டுக்களின் கையெழுத்துப் பகுதிகளில் பொறிக்கப்பட்டுள்ள பெயர்களின் அடிப்படையில் அவ்வட்டாரத்தில் படிப்பறிவு பெற்றவர்கள் பற்றி அறியும் முயற்சி மேற்கொள்ளப்படுகிறது.

**இடமும் காலமும்:** எழுத, படிக்க, பேசத் தெரிந்தவர்கள் படிப்பறிவுள்ளவர்கள் என்பது பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கருத்தாகும். தமிழ்ச்சமூகத்தில் கையெழுத்திடத் தெரியாதவர்கள் பொதுவாக தற்குறி என்று சுட்டப்படுவர்.[7] இவ்வட்டாரத்தில் தற்குறிகளையும் படிப்பறிவுள்ளவர்களையும் அறியும்பொருட்டு புதுக்கோட்டை தனியரசு *(The Erstwhile Pudukkottai State)* வெளியிட்ட *Inscriptions of Pudukkottai State* என்ற கல்வெட்டுத் தொகுதியில் வெளியான அனைத்துக் கல்வெட்டுகளும் படிக்கப்பட்டன. அவற்றில் கி.பி 1200-1400 காலக்கட்டத்தில் கையெழுத்துகள் பற்றி தெளிவான செய்திகள் கிடைக்கின்றன. இச்சான்றுகள் வாயிலாக அக்காலக்கட்டத்தில் சமூக, பொருளியல் இயக்கம் வளமை பெற்றுள்ளதனை அறியமுடிகிறது. எனவே, இக்காலக்கட்டம் ஆய்விற்குத் தெரிவு செய்யப்பட்டது. இவ்விருநூறு ஆண்டுகளில் மொத்தம் 186 கல்வெட்டுகளில் மிகத்தெளிவாக, கையெழுத்திட்டவர்களின் பெயர்களும் அவர்களின் சமூகநிலை பற்றிய செய்திகளும் கிடைக்கின்றன. அக்கல்வெட்டுகளில் மொத்தம் 1272 பேர் கையெழுத்திட்டதாகப் பொறிக்கப்பட்டுள்ளது. எனவே, அவர்களின் பெயர்கள் கணக்கிடப்பட்டன. மேலதிகப் புரிதலுக்காக, மேற்சொல்லப்பட்ட காலக்கட்டம் இரண்டாகப் பகுக்கப்பட்டது: முதல் காலக்கட்டத்தில் (கி.பி.1200-1300) 824 பேரும், இரண்டாம் காலக்கட்டத்தில் (கி.பி.1300-1400) 448 பேரும் கல்வெட்டுகளில் கையெழுத்திட்டதாக அறியமுடிகிறது. இரண்டாம் காலக்கட்டத்தில் 183% பேர் எண்ணிக்கையில் குறைந்துள்ளனர். இம்மாற்றம், தமிழ்நாட்டில் நிகழ்ந்த சோழராட்சியின் சரிவிற்குப்பின் நிகழ்ந்த அரசியல் சமூகப் போக்குகளின் வலுவற்ற சூழலின் வெளிப்பாடு எனலாம். குறிப்பாக கி.பி.1250-1400 காலக்கட்டத்தில் தமிழ்நாட்டு மக்கள் பெருந்துயருற்றனர் *(hardship)* என்று ஆயப்பட்டுள்ளது. அக்காலத்தில் பாண்டியர், ஹோய்சாளர், காகதீயர்களிடையே நிகழ்ந்த போர்களும், டெல்லி சுல்தான்களின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படையெடுப்புகளும், விஜயநகரப் படையினரின் ஊடுருவலும் இச்சூழலுக்குக் காரணமாயின என்று ஆய்வாளர்கள் நிரூபித்துள்ளனர்.[8] போர்ச் சூழல் படிப்பறிவினைக் குலைக்கும் என்று விளங்கிக்கொள்ள முடிகிறது.

**கல்வெட்டில் கையெழுத்து:** ஒருவர் நேரடியாக கல்வெட்டில் கையொப்பமிடமுடியாது. அதற்குத் தொழில்நுட்பத்தின் அடிப்படையில் வாய்ப்பில்லை. கல்வெட்டினை ஆவணமாக்கலில் பல நிலைகள் உள்ளன. கல்வெட்டில் இப்படிக்கு இவையென்னெழுத்து என்ற தொடர் கையெழுத்திட்டவரைச் சுட்டும். ஆனால், இது எப்படி நிகழ்ந்தது என்பதனை அறியவேண்டும். கல்தச்சர்தான் இத்தொடரினைக் கல்வெட்டில் பொறித்திருக்க முடியும். பொதுவாக, கல்வெட்டுகள் நிலக்கொடைகள் பற்றிப் பேசுவன. இவற்றில், முதலில் கொடையளித்தவர் பெயரும், கொடை பெற்றவரின் பெயரும் அவர்கள் பற்றிய செய்திகளும் இடம்பெறும். இச்செய்திகளை ஒருவர், அதாவது அவர் உள்ளூர் அலுவலராக இருக்கலாம் அல்லது அரசின் முகவராக இருக்கலாம். அவர், கல்வெட்டுக்கான பாடத்தினை வாயால் சொல்லச் சொல்ல மற்றொருவர் ஓலையில் எழுதுவார். கொடையோடு தொடர்புடையோரின் விவரக் குறிப்புகள், பெயர்கள், ஓலையில் எழுதியவர் பெயர்கள், ஊரவர் பெயர்கள், நாட்டவர் பெயர்கள், அதற்குச் சாட்சியாக இருந்தோரின் பெயர்கள் என்று இப்பட்டியல் நீளும். இதனை எழுதும் அலுவலர் ஓலைஎழுத்து எனப்படுவார். இவ்வனைத்தும் ஓலையில் எழுதப்பட்டபின் இதனை ஒருவர் படிக்கப் படிக்க மற்றொருவர் கல்வெட்டு பொறிப்பதற்காகத் தெரிவுசெய்யப்பட்ட இடத்தில், பொதுவாக கோயில்சுவரில், செம்மண் குழம்பினால் எழுதிச்செல்வார். அடுத்த நிலையில் எழுதப்பட்ட அவ்வெழுத்தினைத் தச்சர் உளியினால் கல்வெட்டு ஆவணமாகப் பொறிப்பார். அப்படி பொறித்தவர்கள் கல்வெட்டுக்களில் தம்மை தட்டார், தட்டான், தச்சாசார்யன், சில்பாச்சார்யன் என்று குறிப்பிட்டுள்ளனர். படிப்பறிவு இல்லாமல் அவர்கள் கல்வெட்டுச் செய்திகளில் பொறித்திருக்க முடியாது. அப்போது கல்வெட்டினைப் பொறித்த தட்டாரின் பெயரும் பொறிக்கப்படும். இப்படி, கோயில் சுவரின்மேல் பொறிக்கப்பட்ட அனைத்துக் கல்வெட்டுகளுக்கும் மூல ஓலை ஆவணம் உண்டு. இந்த ஓலை ஆவணத்தின் இறுதிப் பகுதியில் தொடர்புடையவர்கள் கையெழுத்திடுவர். இவையும் சேர்த்துக் கல்வெட்டில் பொறிக்கப்படும். அதில், கையெழுத்திடத் தெரியாதவர்கள் இடும் குறி, தற்குறி எனப்படும். கையெழுத்திடத் தெரியாத இவர்களுக்காகப் பிறிதொருவர் கையெழுத்திடுவார். அது, இவையென்னெழுத்து என்று குறிக்கப்படும். சயினஞ என்றும் சுட்டப்படும். சிலர் மூப்பின் காரணமாக கையெழுத்திட முடியாத நிலையில் (கைமாட்டாமையால்) இருந்தால் அவர்களுக்காகப் பிறிதொருவர் கையெழுத்திடுவார். இப்படி தற்குறிகள், கையெழுத்திட்டவர்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் இவ்வட்டாரத்தில் படிப்பறிவு பெற்றவர்கள், படிப்பறிவு அற்றவர்களின் தொகையினைக் கணக்கிடலாம்.

**தற்குறியும் படிப்பறிவும்:** முன்பே குறித்தபடி இரு காலக்கட்டத்திலும் கையெழுத்திட்ட மொத்த நபர்கள் 1272 பேரில் 94 பேருக்காகப் பிறர் கையெழுத்திட்டுள்ளனர். அதாவது, 89% பேர் படிப்பறிவு பெற்றவர்; 11%பேர் தற்குறிகள் என்று அறியமுடிகிறது. ஒருவரே அடுத்தடுத்த ஆண்டுகளின் கல்வெட்டுகளில் கையெழுத்திட்டதும் உண்டு. ஆனால், அவை எண்ணிக்கையில் மிகக்குறைவு. இதில் கைமாட்டாமையினால் கையெழுத்து இடத் தவறியவர்களும் உண்டு. அவர்களுக்கு, பிறர் கையெழுத்திட்டிருப்பர். இவர்களின் எண்ணிக்கையினைக் கழித்தால் தற்குறிகளின் எண்ணிக்கை மேலும் குறையும். இத்தற்குறிகளில் அரையன், நாடாழ்வான், உடையான், விழுப்பரையன், பெரையன் போன்று மதிப்புறு பட்டம் கொண்டவர்களும் உண்டு. அகம்படி முதலிகள், அரசர் மக்கள், மறவர், முதலிகள், தேசிமக்கள் போன்றோரும் உண்டு. சிவபிராமணரும் உண்டு. விரையாச்சிலை என்ற ஊரிலிருந்த சிவபிராமணரில் துக்கைபட்டன் சொக்கன்பட்டன் என்பவர் தற்குறியாக இருந்துள்ளார். இன்னொரு ஊரில் தொண்டைமான்பட்டன் பிள்ளையான் என்பாரும் தற்குறியாக இருந்துள்ளார். இப்போக்கு பெரும்பாலும் இரண்டாம் காலக்கட்டத்தில் நிகழ்ந்தது. பெரும்பாலான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தற்குறிகளுக்குக் கணக்கு அலுவலர்கள் கையெழுத்திட்டுள்ளனர். ஓரிடத்தில், ஒரு நாடாழ்வான் 3 தற்குறிகளுக்குக் கையெழுத்திட்டுள்ளார். புத்தாம்பூர் என்ற ஊரின் புத்தன் அழகன் என்ற தற்குறிக்காகப் பிறிதொருவர் கையெழுத்திட்டுள்ளார். அதேபோன்று, இன்னோர் ஊரில் புத்தன் தனியானைவிட்ட தேவன் என்பார் தற்குறியாக இருந்துள்ளார். மற்றோரிடத்தில் இராயபட்டர் என்பாருக்காக திருவரங்குளவேளார் என்பவர் கையெழுத்திட்டுள்ளார். விராச்சிலை என்ற ஊரின் ஊராரில் 12 பேர் தற்குறியாக இருந்துள்ளனர். அவர்களில் பட்டன்[9] என்பவரும் உண்டு. பனையூரில் ஊராட்சி செய்யும் ஊர்மறவர்கள் தற்குறியாக இருந்துள்ளனர். கோயில்தானத்தாரும் தற்குறியாக இருந்துள்ளனர். கி.பி.1300 இல் சுந்தரபாண்டியவாணாதரராயர் என்ற வட்டாரத் தலைவர் தற்குறியாக இருந்துள்ளார்.

**வேளான்:** கல்வெட்டுகளின் கையெழுத்துப் பகுதியில் வேளான் பட்டம் கொண்டவர்கள் செல்வாக்குப் பெற்றிருந்ததாக அறியமுடிகிறது. இவர்கள் நிலவுடைமையினர் என்பது நிரூபிக்கப்பட்ட கருத்து. இவர்கள் முதல் காலக்கட்டத்தில் 141 பேரும், இரண்டாம் காலக்கட்டத்தில் 85 பேரும் கல்வெட்டுகளில் இடம்பெற்றுள்ளனர். அதாவது, இரண்டாம் காலக்கட்டத்தில் 60% குறைந்துள்ளனர். இப்போக்கு சமூக இயக்கத்திலும் ஆவணமாக்கலிலும் வேளான்களின் செல்வாக்கு குறைந்ததனைக் காட்டுகிறது. அவ்விடத்தினைப் பட்டன்கள் இட்டு நிரப்பினர் என்பதனைப் பின்னர் அறியலாம். பொதுவாக, வேளான்கள் நாடுகளின் பெயர்களை, ஊர்களின் பெயர்களைத் தத்தம் பெயர்களின் முன்னொட்டாகப் பெற்றுள்ளனர். இப்படி பெயர்பெற்றவர்கள் முதல் காலக்கட்டத்தில் 70 பேரும் அடுத்த கட்டத்தில் 33 பேரும் இருந்துள்ளனர். இங்கு, 100% வேளான்களின் செல்வாக்கு குறைந்துள்ளதனை அறியலாம். கானநாட்டு/ காநாட்டு வேளான்கள் அடிக்கடி கையெழுத்திட்டுள்ளதனைக் கல்வெட்டுகள் பதித்துள்ளன. வரலாற்றுக் காலத்தில் கானாடு, கோனாடு என்ற பகுதிகள் இவ்வட்டாரத்தில் சமூக இயங்குதளத்தின் கருப்பகுதியாக அமைந்திருந்தது இதனால் புலனாகிறது.

கவிதை

# மௌனம்

கிருத்திகா தாஸ்



என் மௌனம்..
எனக்குக் கேட்கிறது..
அழு குரல்கள்
ஓய்ந்த பிறகே
நான் இங்கு வந்தேன்..
பேச்சுச் சத்தங்களுக்கு
நடுவே என்
மௌனத்தை யார்
கண்டுகொள்ளப் போகிறார்கள்..

என் பிறப்புக்கும் முன்பு
கைவிடப்பட்ட
இந்த வீட்டுக்குள்
ஒட்டிக் கொண்டிருக்கும் இந்தக்
காற்றும் புகாத அறை..

ஒன்றோடு ஒன்று
தொடர்பில்லாத புகைப்படங்கள்
என்றோ வாழ்ந்து
அழிந்த முகங்களைச்
சுமந்து கொண்டிருக்கின்றன..

அந்தப் புகைப்பட முகங்கள்
கொஞ்சம் காலம்
மனித ரூபத்திலும்
கொஞ்சம் காலம்
மிருக ரூபத்திலும்
வாழ்ந்து இருந்திருக்கக்கூடும்..

காலநிலை மாற்றங்கள்
ஒவ்வொரு நிமிடத்திலும்
நிகழ்ந்து கொண்டிருக்கிறது
இந்த வீட்டுக்குள்..
இரண்டு முறை
இறந்து போன
மனிதனொருவன்
பூட்டியிருக்கும்
மற்றொரு அறைக்குள்
இன்னும் வசித்திருக்கிறான்..

அழிந்துபோன சில
அழிவற்றவைகளாக
மாறிவிடுகின்றன..
இந்த இருள்
முடிந்த பிறகு
என்ன செய்வது.. நான்
எங்கு செல்வது..

ம்ம்..
மானிடர்கள்
யாரும் இல்லாத
இந்தக் கதைக்குப்
பேச்சுச் சத்தம் எதற்கு..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்நாடுகளின் பெயர்கள் இன்றும் கானாடுகாத்தான் கோனாப்பட்டு (கோனாட்டுப்பற்று) என்ற ஊர்ப்பெயர்களில் தலையெழுத்தாக உள்ளன என்பதனை அறியமுடிகிறது. இதுபோன்று 25 நாடுகளில் வேளான்கள் இயங்கியுள்ளனர். இரு காலக்கட்டத்திற்கும் சேர்த்து 47 வேளான்கள் அரசர்களின் பெயர்களைத் தத்தம் பெயர்களில் ஒரு கூறாகக் கொண்டுள்ளனர். குறிப்பாக, சோழமன்னரின் பெயர்கள் பரவலாக இடம்பெற்றுள்ளன. இதில், முதல் கல்வெட்டுக் குறிப்பு கி.பி.1225 இல் இடம்பெற்றுள்ளது. மூவேந்தவேளான் பட்டம் கொண்ட 24 வேளான்கள் இப்படி அரசரின் பெயர்களைத் தம் பெயரின் கூறாகப் பெற்றுள்ளனர் (எ.கா. இராசேந்திரசோழ மூவேந்தவேளான்). மூவேந்தவேளான் பட்டம் கொண்டிராத வேளான்களும் இராசேந்திரசோழன், உத்தமசோழன், குலோதுங்கசோழன், வீரஇராசேந்திரன், விக்ரமசோழன் போன்ற பெயர்களில் சுட்டப்பட்டுள்ளனர். இவையன்றி, மும்மடிசோழன், உலகளந்தசோழன், செம்பியன்சோழன், முடிகொண்டசோழன், அழகியசோழன், வீரசோழன், எதிரிலிசோழன், கிடாரங்கொண்டசோழன் போன்ற பெயர்களாலும் சுட்டப்பட்டுள்ளனர். சோழராட்சியின் தளர்விற்குப் பின்னும் அவர்களின் புகழ், உரத்துடன் இருந்தது என்பதனையே இப்பெயர்கள் காட்டுகின்றன. சோழர் வீழ்ச்சிக்குப்பின் வேளான்கள் தம்மைப் பாண்டியருடன் இணைத்துக்கொண்டனர் போலத் தெரிகிறது. எனவே அடுத்து, பராக்கிரமபாண்டியன், அழகியபாண்டியன், சேரபாண்டியன், சுந்தரபாண்டியன் போன்ற பெயர்களிலும் வேளான்கள் அறியப்பட்டுள்ளனர். ஆனால். இவர்கள் புதிதாக எழுந்த வேளான்களாக இருக்கலாம்.

**பட்டன்:** இரு காலக்கட்டத்திற்கும் சேர்த்து 116 பட்டன்கள் கையெழுத்திட்டுள்ளனர். முதல் காலக்கட்டத்தில் 53 பேரும் இரண்டாம் காலக்கட்டத்தில் 63 பேரும் கையெழுத்திட்டுள்ளனர். இரண்டாம் காலக்கட்டத்தில் 9.7% கையெழுத்து கூடியுள்ளது. இது அரசர்களின் வலுவற்ற தன்மையினையும் வேளான்களின் கணிசமான வீழ்ச்சியினையும் காட்டுவதாகக் கொள்ளலாம். இதனால், கோயில் பூசகர்களின் செல்வாக்கு கூடியது போலும். சில பட்டன்கள் நாடு அளவில் செல்வாக்குப் பெற்றதனை நாட்டுபட்டன் என்ற கல்வெட்டுச்சொல் உணர்த்தும். ஊரளவில் செயல்பட்ட பட்டன்கள் ஊர்பட்டன் என்று சுட்டப்பட்டுள்ளனர். சில பட்டன்கள், அவர்கள் சார்ந்த கூட்டப் பெயர்களால் அறியப்பட்டுள்ளனர் (எ.கா. அய்நூற்றுவபட்டன், நாநூற்றவபட்டன்). இவையனைத்தும் பட்டன்களின் எழுச்சியினைக் காட்டுவன.

**நாடாழ்வான்:** இரண்டு காலக்கட்டத்திற்கும் சேர்த்து 35 நாடாழ்வான்கள் கல்வெட்டுக்களில் கையொப்பமிட்டுள்ளனர். இவர்கள் நிலவுடைமையினர். முதல் காலக்கட்டத்தில் 29 பேரும் இரண்டாம் காலக்கட்டத்தில் 6 பேரும். குறைவான எண்ணிக்கை, இரண்டாம் காலக்கட்டத்தில் நாடாழ்வான்களின் செல்வாக்கு மிகக்கணிசமாகக் குறைந்ததனைக் காட்டுகிறது. இங்கு மேற்சொல்லப்பட்ட பத்தியில் இரண்டாம் காலக்கட்டத்தில் பட்டன்களின் எழுச்சி சுட்டிக்காட்டப்பட்டுள்ளதனைக் கருத்தில் கொள்ளவேண்டும். நாட்டரையன் என்ற கல்வெட்டுச் சொல்லையும் நாடாழ்வானோடு இணைத்துப் பார்க்கலாம். கி.பி. 1270 இல் நாட்டான் என்ற பதிவும் இடம்பெற்றுள்ளது. ஒரு கல்வெட்டில் ஒரு தச்சாசாரியன் உடையான் பட்டம் பெற்றுள்ளார். தெலிங்ககுலகாலபுரத்துக் கல்வெட்டுக்களில் உடையான்கள் செட்டி என்ற பட்டத்தினைப் பெற்றுள்ளனர். அவ்வூரின் மற்றொரு உடையான் முடிகொண்டசோழ தெலிங்கராயன் என்று கல்வெட்டில் குறிக்கப்பட்டுள்ளார். இதனுடன் வடுகன்சேந்தன், ஆதிச்சன்வடுகன் போன்ற பெயர்களும் இவ்வட்டாரத்திற்குள் வந்த புலப்பெயர்ச்சியினைக் காட்டுவன.

**உடையான்:** இரண்டு காலகட்டத்திற்கும் சேர்த்து மொத்தம் 81 உடையான்கள் கையொப்பமிட்டுள்ளனர். முதல் காலக்கட்டத்தில் 40 பேரும் இரண்டாம் காலக்கட்டத்தில் 41 பேரும் கையொப்பமிட்டுள்ளனர். பல உடையான்கள் ஊரின் பெயரினை முன்னொட்டாகப் பெற்றுள்ளனர். திருச்சிராப்பள்ளி உடையான் என்ற பதிவு புதுக்கோட்டை, திருச்சிராப்பள்ளி வட்டாரங்களிடையிலான ஊடாட்டத்தினை வெளிப்படுத்தியதாகக் கொள்ளலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்போக்கு இரண்டாம் காலக்கட்டத்தில் நிகழ்ந்துள்ளது.

**பல்லவரையன்:** பல்லவரையன் என்ற பட்டப்பெயரோடு இரண்டுகாலகட்டத்திற்கும் சேர்த்து 28பேர் கையெழுத்திட்டுள்ளனர். முதல் காலகட்டத்தில் 21பேரும் இரண்டாம் காலகட்டத்தில் 7 பேரும். இப்பட்டம் குலோத்துங்கசோழன் என்ற அரசர் பெயரோடு சேர்த்து அதிகமுறை இடம்பெற்றுள்ளது. ஒரு கல்வெட்டில் (கி.பி.1271) சுந்தரபாண்டியன் என்ற பெயரோடு சேர்த்து பல்லவரையன் என்ற பெயரும் இடம்பெற்றுள்ளது. தென்னவன்பல்லவதரையன், தென்னவதரையன் போன்ற பெயர்கள் குறிப்பிடத்தக்கன. கிடாரத்தரையன், கடாரத்தரையன், காங்கேயன், காலிங்கராயன் போன்றவையும் முனையதரையன் என்ற பெயரும் குறிப்பிடத்தக்கன. வாணாதராயன், சேதிராயன், தெலிங்கராயன் போன்ற பெயர்கள் இவ்வட்டாரம் நோக்கி நிகழ்ந்த புலப்பெயர்ச்சியினைக் காட்டும். தொண்டைமான் என்ற பெயர் ஒருசில கல்வெட்டுக்களில் மட்டுமே பதிவாகியுள்ளது. இப்பெயரின் முதல் பதிவு கி.பி. 1201 ஆம் ஆண்டின் கல்வெட்டில் பொறிக்கப்பட்டுள்ளது. கி.பி. 1212 இல் தொண்டைமான் வாணாதராயன் என்ற பதிவு கிடைக்கிறது. கி.பி. 1244 இல் தொண்டைமான் நாடாழ்வான் என்ற பதிவும் கிடைக்கிறது. கி.பி. 1273 இல் தொண்டைமான் என்ற பெயரில் கையெழுத்து பதியப்பட்டுள்ளது. இவர்கள் பிற்காலத்தில் இவ்வட்டாரத்தினை ஆட்சிசெய்த தொண்டைமான் அரச குடும்பத்தினரின் முன்னோராக இருக்கலாம் என்று கருதுவதற்கு இக்குறிப்புகள் இடமளிக்கின்றன.

**சுருக்கமாக:** இங்கு நிலவுடைமையோடும் கோயிலோடும் அதிகாரக் கட்டமைப்போடும் தொடர்புடைய நபர்களின் பெயர்களே கல்வெட்டு ஆவணங்களில் பதியப்பட்டன என்பது உறுதி. அவர்களில் நாடாழ்வான், வேளான், மூவேந்தவேளான் போன்றோர் நிலவுடைமைச் சமூகத்தினர் என்பது அறியப்பட்ட ஒன்று. அதேபோன்று, அரையன், பேரையன், விழுப்பரையன், பல்லவரையன் போன்ற பட்டம் கொண்டவர்கள் ஆட்சியோடும் நில வருவாயோடும் நிர்வாகத்தோடும் தொடர்புடையவர் என்பதும் உண்மை. இங்கு, பட்டன்கள் கோயிலோடு தொடர்புடையவர் என்பதும் பூசகர்கள் என்பதும் சொல்லாமலே விளங்கும். இவையன்றி இவ்வட்டாரத்தின் இனக்குழுவினரான அரசுமக்கள், தேசிமக்கள், மறவர் போன்றோரும் கல்வெட்டுக்களில் குறிக்கப்பட்டுள்ளனர். இங்கு கல்வெட்டுக்களில் கையெழுத்திட்டவர்களாகச் சுட்டப்பட்டவர்கள் இவ்வட்டாரத்து மக்களின் பிரதிநிதிகள் என்று அறியப்பட வேண்டியவர்கள். ஆய்விற்கு தெரிவுசெய்யப்பட்ட காலத்தின் ஒட்டுமொத்த மக்கள்தொகையினைப் பயன்படுத்தப்பட்ட கல்வெட்டுக்களின் அடிப்படையில் கணிக்கமுடியாது. ஆனால் அவர்களுக்காக, சமூக, பொருளியல் நிலையில் இயங்கியவர்களின் இருப்பினை மேற்கண்டவாறு ஓரளவு அறியலாம். அந்த இயக்கத்திற்கு எழுத்தறிவும் படிப்பறிவும் தேவை என்பதையும் உணரலாம். இவ்வட்டாரத்தில் கி.பி. 1200 முதல் கி.பி. 1400வரை 200 ஆண்டுகளில் 1272 பேர் மட்டுமே கையெழுத்திடும் அளவிற்குப் படிப்பறிவு பெற்றனர் என்றால் ஒரு நூற்றாண்டில் சராசரியாக 636 பேர் படிப்பறிவு பெற்றுள்ளனர் என்று பொருளாகிறது. பத்தாண்டுக்கு சுமார் 63 பேர் என்றும் ஓராண்டுக்கு 6 பேர் என்றும் படிப்பறிவு/எழுத்தறிவு பெற்றதாகத்தெரிகிறது. இது சமூக, பொருளியலின் இயக்கத்தில் பங்காற்றுவதற்குப் படிப்பறிவு ஒரு தகுதியாக கருதப்பட்டுள்ளது என்பதனை உணர்த்துகிறது. இங்கு கணக்கிடப்பட்டவர்களுக்குப் படிப்பறிவு இருந்ததாலேயே இன்றைக்கு இக்கல்வெட்டுகள் ஆய்விற்குக் கிடைத்துள்ளன. அம்மக்கள் கடவுள் வணக்கத்திற்கு மாத்திரமல்லாமல் கோயில் சுவர்களை ஆவணத் தளங்களாகவும் தெரிவு செய்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. இவ்வட்டாரத்தில் கி.பி.1200களுக்குப் பிறகு பல சமூக மாற்றங்கள் நிகழ்ந்ததனை உணரமுடிகிறது. குறிப்பாக ஒருசில கல்வெட்டுக்களில் தேசாந்திரிகளான துறவிகளைக் குறிக்கும் பைராகி[10] (வைராகி/வயிராகி) என்பாரும் கையெழுத்திட்டுள்ளனர். தமிழ்நாட்டில் இவர்களைப்பற்றிய முதல் கல்வெட்டுக் குறிப்பு கி.பி 1201 இல் தஞ்சாவூர் வட்டாரத்தில் கிடைக்கிறது. அரை நூற்றாண்டு கழித்து ஆய்வுக்களத்தில் கி.பி.1266 இல் கிடைக்கிறது. ஒரு பைராகி கோநாட்டுப் பகுதியில் தேசாந்திரியாக இயங்கியதால் அவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோநாட்டுபைராகி என்று அழைக்கப்பட்டுள்ளார். பொதுவாக பைராகிகள் வடக்கிலிருந்து வரும் துறவிகள் என்று அறியப்பட்டாலும் இவர்கள் தமிழ் மொழியினைக் கற்று தமிழ் ஆவணங்களான கோயில் கல்வெட்டுகளில் கையெழுத்து இடும் அளவிற்குத் தமிழில் படிப்பறிவு பெற்றுள்ளனர் என்பதனையும் தமிழ்நாட்டில் அவர்களின் செல்வாக்கு விளங்கியதனையும் சான்றுகள் நிறுவுகின்றன. இப்போக்கு, தமிழ்நாட்டின் வரலாற்றில் கவனிக்கப்படவேண்டிய புள்ளியாகும். இக்காலகட்டத்தில்தான் சோழர் சரிவும் தொடங்குகிறது என்பதை இத்தோடு ஒப்புநோக்க வேண்டும். புதுக்கோட்டை வட்டாரத்தின் கல்வெட்டுச் செய்திகள் மானிடவியல், உளவியல் பின்னணியில் உற்று ஆயப்படுமானால் மேலும் சில வரலாற்றுக் கூறுகளைக் கண்டறிய முடியும்.

அடிக்குறிப்புகள்

1. K.Rajan (et al), Cultural Heritage of Tamil Nadu: Pudukkottai, 2 Vols. Government of Tamil Nadu, Department of Archaeology, Chennai, 2023. அண்மையில் இரு தொகுதிகளாக வெளியிடப்பட்ட இந்நூல் இவ்வட்டாரத்தின் நெடியவரலாற்றினை அறிந்துகொள்வதற்கான பலவகைச் சான்றுகளையும் பட்டியலிடுகிறது. வண்ணப்படங்கள், பட்டியல்கள், பகுப்பாய்வுத் தரவுகள் என்று பல நிலைகளில் இந்நூல் ஆய்வாளர்களுக்குப் ஒரு சுட்டு நூலாகப் பெரிதும் பயன்படும்.

2. J.Rajamohamad, Art of Pudukkottai (Art and Architecture), Historical Archives Committee, Pudukkottai, 2003. ஒரு விவரணைக் கையேடு போன்று இந்நூல் புதுக்கோட்டை வட்டாரத்தின் கலை வரலாற்றினை, குறிப்பாக கோயில் கலை, சிற்பக் கலைகளின் நிலப்பரப்பியலை விளக்குவதாக அமைகிறது. இந்நூல், தொடக்கநிலை ஆய்வாளர்களுக்குப் பெரிதும் பயன்படும்.

3. R.Tirumalai, Studies in Ancient Townships of Pudukkottai, Institute of Epigraphy, State Dept. Of Archaeology, Govt. of Tamil Nadu, Madras, 1981; கல்வெட்டுச் சான்றுகளை முதன்மையாக் கொண்டு எழுதப்பட்ட இந்நூல் இடைக்காலத்தில் புதுக்கோட்டை வட்டாரத்தில் வணிகநகரங்கள் கோயில்களை மையமிட்டு வளர்ந்ததனை விவரிக்கிறது. நீர்ப்பாசனம், நிலவருவாய், பிரமதேயம், பாடிகாவல் பற்றிய இயல்கள் இவ்வட்டாரம் பற்றி அறிந்து கொள்வதற்குப் பெரிதும் பயன்படும். Vee.Manickam, Pudukkottai History upto 1600 A.D., (in Tamil), Clio Publishers, Madurai, 2004. வரலாற்று இயங்கியல் கோட்பாட்டின் அடிப்படையில் பெருமளவிலான கல்வெட்டுக்களை முதன்மைச் சான்றுகளாகக் கொண்டு இவ்வாய்வு செய்யப்பட்டுள்ளது. சமூக-வரலாற்றுப் போக்குகள் இந்நூலில் காரணகாரியங்களுடன் விளக்கப்பட்டுள்ளன. இந்நூல் ஒரு குறிப்பிட்ட வட்டாரம் பற்றிய ஆய்விற்கு ஒரு மாதிரி நூலாகலாம்; கி.இரா.சங்கரன், கல்வெட்டுகளில் புதுக்கோட்டை வட்டாரத்தின் இடைக்காலத்திய வரலாறு, நியூ செஞ்சுரி புக்ஹவுஸ், சென்னை, 2014. கல்வெட்டுச் சான்றுகளையும் கள ஆய்வுகளையும் அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்ட இந்நூலில் நீர் உரிமை, நிலவுரிமை, படிப்பறிவு பற்றிய பொருண்மைகள் முதன்மை பெறுகின்றன. நீர் உரிமையினை முதலாகக் கொண்டு இவ்வட்டாரத்தின் அரையர்கள் நிலத்தின்மீதான பாடிகாவல் உரிமையினை ஊர்பாடிகாவல் என்று விரித்து குளத்தின் மீதான பாடிகாவல் உரிமை என்று விரிவாக்கினர். அடுத்த கட்டத்தில் அதனைக் குளச்சுவந்திரம் அதாவது குளத்தின்மீதான ஆட்சியதிகாரம் என்று உருமாற்றி அதனை நாட்டுசுவந்திரம் என்றாக்கி அரசுசுவந்திரம் என்ற நிலைக்கு உயர்த்தினர். இவ்வுரிமைகள்தான் தொண்டைமான் அரசகுலத்தினர் அரசுரிமை பெறுவதற்கு வாய்க்காலானது என்ற வரலாற்றுப் போக்கினை அறியலாம்.

4. Nicholas B.Dirks, The Hallow Crown: Ethnohistory of an Indian Kingdom (first published in India, 1989), Cambridge University Press in Association with Orient Longman, Madras, 1989. கல்வெட்டுச் சான்றுகள், ஓலைஆவணங்கள், தாள் ஆவணங்கள் மற்றும் களஆய்வுகளின் அடிப்படையில் மானிடவியல் பின்னணியில் செய்யப்படும் ஆய்விற்கு இந்நூல் சிறந்த மாதிரியாகும். இந்நூலாசிரியர், புதுக்கோட்டை தொண்டமான் கள்ளர் அரசர் குடும்பத்தின் வரலாற்றுப் பின்னணியினை இரத்தவுறவு, மணவுறவுகளின் அடிப்படையில் ஆய்ந்துள்ளார். இதில் இனக்குழுவுறவும் கிராம நிர்வாகமும் கோயில்களால் பிணைக்கப்பட்டது பற்றி விவரிக்கப்பட்டுள்ளது.

5. K.R.Sankaran, Irrigation Techniques in Pudukkottai Region, NCBH, Chennai, 2013. இந்நூலில் இவ்வட்டாரத்தின் நீர்ப்பாசனத் தொழில்நுட்பத்தின் கூறுகளான குமிழி-மடைகளின் வளர்ச்சிப் போக்குகள், கல்வெட்டுச் சான்றுகள், கள ஆய்வுகளின் அடிப்படையில் அறியப்பட்டு அவை வரைபடங்கள் மற்றும் புகைப்படங்கள் வாயிலாக விளக்கப்பட்டுள்ளன.

6. கரு.இராசேந்திரன், புதுக்கோட்டை வட்டாரக் கல்வெட்டுகள் (புதிய கண்டுபிடிப்பு), பாண்டியநாட்டு வரலாற்று ஆய்வுமையம், மதுரை,2017. இந்நூலில் நீர்ப்பாசனத் தொழில்நுட்பம் தொடர்பான குமிழி, மடைகளின் மேல் பொறிக்கப்பட்டுள்ள கல்வெட்டுகள் படியெடுக்கப்பட்டு, படிக்கப்பட்டு பதிப்பிக்கப்பட்டுள்ளன. மொத்தம் 238 கல்வெட்டுகள். இந்நூல், இவ்வட்டாரத்தின் ஆய்விற்கான ஒரு மூலநூலாக அமைகிறது. இந்நூல் வழியேயும் மேற்சுட்டப்பட்ட நூலின் வழியேயும் இவ்வட்டாரத்தின் நீர்ப்பாசனத்தின் தொழில்நுட்பம் உழைக்கும் மக்களால் உருவாக்கப்பட்டவை என்பதனை உணரலாம்.

7. தற்குறி என்ற சொல்லுக்கு எழுதத் தெரியாதவர் இடும் கீறல் என்று விளக்கம் கிடைக்கிறது. அக்குறியினையும் அவருக்காகப் பிறிதொருவர் இடுவார் என்பதனையும் அறியமுடிகிறது. Tamil Lexicon, p.1085.

8. Noboru Karashima,, Towards a New Formation:South Indian Society under Vijayanagar Rule, OUP, 1992. p.16.

9. பா.ரா.சுப்பிரமணியன், ப.சண்முகம், கல்வெட்டுச் சொற்களின் பொருட்புல அடைவு (கி.மு.300 முதல் கி.பி.1300 வரை), செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம், சென்னை, 2023. ப.327.

10. வயிராகி/பயிராகி என்ற சொல்லுக்கு pilgrims from North India, தேசாந்திரியான வடநாட்டுத் துறவி என்று பொருள் கிடைக்கிறது. பார்க்க: Tamil Lexicon, ப. 3500. இதன் பிற வடிவங்களான வயிராகிகள், வைராகிகள் என்ற சொற்களுக்குத் துறவிகள், சன்னியாசிகள் என்றும் ascetic என்றும் பொருள்கள் கிடைக்கின்றன. பார்க்க: பா.ரா.சுப்பிரமணியன், ப.சண்முகம், கல்வெட்டுச் சொற்களின் பொருட்புல அடைவு (கி.மு.300 முதல் கி.பி.1300 வரை), செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம், சென்னை, 2023. p.290; ஆவணம், இதழ்.6.ப.38.

---

*கட்டுரையாளர்: பேராசிரியர்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டுரை | இரா.எட்வின்

# 65/66

**"சிதறிய பொருட்களில்**
**பரவிக் கிடக்கிறது**
**இறந்த எலியின் போராட்டம்"**

தம்பி வைகறையின் இந்தக் கவிதை காட்சியாக விரிந்து என்னை பிசைந்துகொண்டே இருக்கிறது. கிட்டத்தட்ட இருபது வருடங்களாக இந்தக் கவிதை என்னைத் தொந்தரவு செய்துகொண்டே இருக்கிறது.

அறைக்குள் ஒரு எலி புகுந்துவிட்டது. அதை அடித்துக் கொல்வதற்கு கைகளில் கம்புகளோடு துரத்துகிறார்கள். அங்கும் இங்குமாக ஓடி ஒளிகிறது அந்த எலி. அது ஒளிந்துகொண்டிருப்பதாக இவர்கள் நம்புகிற இடங்களையெல்லாம் கலைத்துப் போடுகிறார்கள். அது வேறு இடத்திற்குப் போகிறது. அங்கும் இருக்கிற பொருட்களையெல்லாம் கலைத்துப் போடுகிறார்கள். மீண்டும் மீண்டும் எலி ஓடி ஒளிவதும் இவர்கள் கலைத்துப் போடுவதுமாக நகர்கிறது.

நீண்டதொரு தேடலுக்குப் பிறகு களைத்துப் போனவர்களாக எலி வேட்டையை நிறுத்துகிறார்கள். அறை முழுவதும் பொருட்கள் சிதறிக் கிடக்கின்றன. சே, இந்த எழவெடுத்த எலி என்ன பாடு படுத்திடுச்சு என்று அங்கலாய்க்கிறார்கள். அறைகள் முழுவதும் சிதறிக் கிடக்கும் பொருட்களை மீண்டும் ஒழுங்குபடுத்த வேண்டுமே என்கிற அங்கலாய்ப்பு இவர்களுக்கு. பொருட்கள் சிதறி அலங்கோலமாகக் கிடக்கும் அந்த அறைகள் என்பது அந்த எலியின் உயிர்காக்கும் போராட்டம். அவ்வளவு அழகாக அதைக் காட்சிப் படுத்தியிருப்பான் வைகறை.

இப்போது மொத்த இந்தியாவும் சிதறிக் கிடக்கும் அறைகளாகத்தான் காட்சியளிக்கிறது. பாஜக தலைவர்கள் மற்றும் ஊழியர்கள் கைகளில் கிடைத்த ஆயுதங்களோடு எலிகளை முற்றாய் அழிக்க முடியாமல் களைத்துப் போனவர்களாக "சே நாசமாப் போன எலி, சிக்காம என்னபாடு படுத்துது" என்று புலம்புகிறார்கள். இங்கு எலிகள் என்பவை இந்தியாவின் விழுமியங்களைக் குறிக்கிற சொல் என்று கொள்வதுதான் சரியாக இருக்கும்.

இந்தியாவின் விழுமியங்களை பாஜகவும் RSS காரர்களும் ஒருபோதும் ஏற்பதில்லை. காரணம் இந்திய விழுமியங்களின் மையச்சரடு "மதச் சார்பின்மை". RSS மற்றும் பாஜக சித்தாந்தத்தின் மையச்சரடு இந்துத்துவா. மதச் சார்பின்மை மக்களை இணைக்கக் கோரும். மதப்பழமைவாதம் மனிதர்களைக் கூறுபோடத் துடிக்கும்.

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் நேர் எதிரிகள் RSS மற்றும் பாஜகவினர். பரந்த இந்து ராஷ்ட்ரமே அவர்களது சித்தாந்தத் தந்தையான கோல்வால்கரது கனவு. இதை அவர்கள் பகிரங்கமாகவே வெளிப்படுத்தவும் தயங்குவதில்லை. ஆனால், அரசியல் அமைப்புச் சட்டத்தைப் பாதுகாக்க வேண்டிய ஆட்சி பீடத்தில் அவர்கள் இருக்கிறார்கள். ஆகவேதான் இதுகுறித்து உரக்கப் பேசமுடியாமல் தவிக்கிறார்கள்.

இந்திய அரசிலமைப்புச் சட்டத்தை காவி மைகொண்டு எழுதுவதற்கான பெரும்பான்மை அவர்களுக்கு இல்லை. அவர்களுக்கு பெரும்பான்மை கிடைக்கவேண்டும் என்றால் மக்களை பதற்றத்தோடு வைத்திருக்கவேண்டும் என்று கருதுகிறார்கள். 80 விழுக்காடு பெரும்பான்மை மக்களை 20 விழுக்காடு சிறுபான்மையினருக்கு எதிரியாக மாற்றுவது தேர்தலில் தங்களுக்கு பெரும்பான்மையைக் கொடுக்கக்கூடும் என்று கருதுகிறார்கள். ஆகவே கலவரங்களை வாய்க்கிற இடங்களில் எல்லாம் விதைத்துக்கொண்டே இருக்கிறார்கள்.

சமீபத்தில் சம்பல் பற்றி எரிந்தது நாம் அறிந்தது. அதற்கான தோற்றுவாயினை தோழர் மதுர் சத்யா ஒரு கூட்டத்தில் பேசக் கேட்க வாய்த்தது. ஒரு RSS இளைஞன் தனது பயணத்தின் ஊடே ஒரு மசூதியைப் பார்க்கிறான். அது அவனை உறுத்துகிறது. அந்த மசூதி அவனை மிகவும் உறுத்துவதாக அவனது நண்பனுக்கு அலைபேசி வழியாக சொல்கிறான். வழக்கறிஞரான அவனது நண்பன் அந்த மசூதியின் இருப்பிட விவரங்களைக் கோருகிறான். இவனும் தருகிறான். இது நிகழ்ந்தபோது காலை பத்தே முக்கால் மணி இருக்கும் என்கிறார் சத்யா. விவரங்களை அலைபேசி வழியாக பெற்றுக் கொண்டதும் வழக்கிற்கான மனுவைத் தயார் செய்கிறான். ஒரு இந்து ஆலயம் இருந்த இடத்தில் அந்த மசூதி கட்டப்பட்டிருப்பதாக வழக்கைத் தொடுக்கிறான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழக்கு அன்றே விசாரணைக்கு வருகிறது அன்றே தீர்ப்பும் வருகிறது. அந்த மசூதி இருக்கும் இடத்தில் இந்து ஆலயம் இருந்திருப்பதற்கான முகாந்திரம் இருப்பதாக் நீதிமன்றம் கூறுகிறது. எனவே தொல்லியல் துறை அந்த இடத்தை சோதித்து அறிக்கை தரவேண்டும் என்று உத்தரவிடுகிறது. தொல்லியல்துறை களத்திற்கு வருகிறது. அங்கு ஒரு இந்து ஆலயம் இருந்திருக்க வாய்ப்பு இருப்பதாக அது ஆய்வறிக்கை தருகிறது. இவை அத்தனையும் 40 மணிநேர அவகாசத்திற்குள் நடந்து முடிந்திருக்கிறது. வேறென்ன சொல்வது. அன்பை பெடல் இல்லாத சைக்கிளிலும் வெறுப்பை ராக்கெட்டிலும் அனுப்பிப் பழகிவிட்டார்கள். இதன் விளைவு கடும் பதற்றமும் ஐம்பது அறுபது உயிர்ப் பலிகளும்.

வழக்குகளையும் ஆயுதங்களாக மாற்றக் கற்றிருக்கிறார்கள். இதைவிடக் கொடுமை என்னவென்றால் இதுபோல இன்னும் 40,000வழக்குகளைத் தொடுப்பதற்கான திட்டம் அவர்களிடம் இருக்கிறதாம். இது ஒன்றிற்கே இவ்வளவு பதற்றமும் உயிரிழப்பும் என்றால் நாற்பதாயிரம் வழக்குகள் எத்தனை பாதிப்புகளைக் கொண்டு வரும்? இந்த பதற்றத்தினால் அவர்களுக்கு என்ன பயன் என்ற கேள்வியும் வரும். இது சிறுபான்மை மக்கள் மற்றும் அவர்களுக்கு ஆதரவானவர்களை அச்சப்படுத்தும். இந்த அச்சம் வாக்குகளாக மாறும் என்று கருதுகிறார்கள்.

ஊழியர்கள் இப்படியான செயல்களைச் செய்கிறார்கள் என்றால் அரசோ சட்டங்கள் மற்றும் சட்டத் திருத்தங்கள் மூலம் பதற்றத்தைக் கொண்டுவர முயற்சி செய்கிறது. அப்படி ஒரு அரக்கத்தனமான முயற்சிதான் வக்பு வாரியத் திருத்தச் சட்டம். ஆங்கிலேயர்கள் காலத்தில் இருந்தே வக்பு வாரியச் சட்டத்தில் மாற்றங்களைச் செய்துகொண்டேதான் இருக்கிறார்கள். மன்மோகன்சிங் காலத்தில்கூட 2013வாக்கில் வக்பு வாரிய சட்டத்தில் மாற்றங்கள் செய்யப்பட்டிருக்கின்றன. வக்பு வாரியச் சட்டத்தில் உள்ள ஷரத்துகளை மாற்றவோ திருத்தவோ கூடாது என்றுகூட இஸ்லாமியர்கள் ஒருபோதும் கோரியது இல்லை. இன்னும் சரியாக சொல்வதெனில் வக்பு வாரியத்தில் இரண்டு பெண்கள் அவசியம் இருக்க வேண்டும் என்று திருத்தம் கொண்டுவரப்பட்டபோது இஸ்லாமியர்கள் அதை எதிர்க்கவெல்லாம் இல்லை.

இப்போது கொண்டு வந்திருக்கக்கூடிய திருத்தங்கள் இஸ்லாமியர்களுக்கு எதிராக இருக்கின்றன. வாரியத்தின் சொத்து வளர்ந்துவிடக் கூடாது என்பதற்காகவும் இருக்கிற சொத்தை அரசின் சொத்தாக மாற்றிக்கொள்கிற ஏற்பாடாகவும் இந்தத் திட்டங்கள் இருப்பதால்தான் இதை எதிர்க்கவும் இதற்கெதிராக உச்சநீதிமன்றத்திற்கு செல்வதற்குமான தேவை நமக்கு ஏற்பட்டிருக்கிறது. வக்பு வாரியச் சட்டத்தில் இருப்பது 113 ஷரத்துகள். இதில் கிட்டத்தட்ட 48 ஷரத்துகளை இந்த அரசாங்கம் திருத்தி இருக்கிறது. கிட்டத்தட்ட 42 விழுக்காடு சட்டம் திருத்தப்பட்டுள்ளது. சரி பாதி ஷரத்துகள் திருத்தப்பட்டுள்ளன என்பது கிட்டத்தட்ட புதுச் சட்டம் போன்றதுதான்.

வக்பு அமைப்பிற்கு ஈரமனம் கொண்டோர்கள் யாராயினும் நன்கொடை அளிக்கலாம். திருத்தச் சட்டத்தின்படி குறைந்த பட்சம் ஐந்து ஆண்டுகளேனும் இஸ்லாமியராக இருக்கக்கூடிய ஒருவரால்தான் வக்பு அமைப்பிற்கு நன்கொடை அளிக்க முடியும். இதன்மூலம் வக்பு வாரியத்திற்கு புதிதாக வரவெதுவும் வந்துவிடக் கூடாது என்பதில் இவர்களுக்கு இருக்கிற வக்கிரம் வெளிப்படுகிறது. ஒருபுறம் வரவைத் தடுக்கிற இவர்களது வன்மம் இதுவென்றால் இன்னொரு புறம் இருக்கிற வக்பு சொத்துகளை அரசாங்கம் எடுத்துக்கொள்கிற வன்மமும் இருக்கிறது.

இருக்கிற சொத்துக்களுக்கான பத்திர ஆவணங்களைக் கேட்கிறார்கள். பத்திரப்பதிவு தொடங்கும் முன்னரே வக்புவிற்கு வந்த சொத்துக்களுக்கு ஆவணங்கள் சாத்தியமே இல்லை என்பது அவர்களுக்குத் தெரியும். ஆவணம் இல்லாத சொத்துகள் ஆக்கிரமிக்கப்பட்ட அரசின் சொத்துகள் என்கிறார்கள். தாவா ஏற்படின் இதற்கான விசாரணை அதிகாரி மாவட்ட ஆட்சித்தலைவர் என்கிறார்கள். அது எப்படி அரசின் அதிகாரி அந்த நிலம் யாருடையது என்று விசாரிக்க முடியும் என்றால் அது அப்படித்தான் என்கிறார்கள். இந்த வழக்கு இப்போது உச்சநீதிமன்றத்தில் இருக்கிறது. இவர்கள் மீதான வன்முறைகள், இவர்களுக்கு எதிரான சட்டங்கள் போன்றவற்றால் நொந்து போயிருக்கிற இஸ்லாமியர்களை இறுக அணைத்தபடி “இருக்கிறோம்” என்று சொல்லும் தொண்ணூறு விழுக்காடு இந்தியர்கள் நம் வயிற்றில் பால் வார்க்கிறார்கள்.

இந்த அன்பும் அணைப்பும் சங்கிகளின் வெறுப்பை சல்லி சல்லியாக நொறுக்கும். •

கட்டுரையாளர்: எழுத்தாளர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டுரை | துரைநாதன் சபீதன்

# கிழக்கிலங்கையில் தொழில் முறையோடு மறைந்த சூட்டுக்களம் ஆற்றுகை

### அறிமுகம்

அரங்கச் செயற்பாடுகள் மக்களின் வாழ்வியலோடு இணைந்தவை. இவ்வாறே அவர்களின் வாழ்வியல் அம்சங்களுள் ஒன்றான தொழில் முறைகளிலும் பங்கெடுத்துள்ளன. திருகோணமலை மாவட்டத்தில் மீன் பிடி போன்றே நெற்பயிற் செய்கையும் பிரதான தொழில் முறையாக உள்ளது. நெற்பயிர்ச் செய்கையின் இறுதிக் கட்டமான அறுவடையின் பின்னர் சூடு அடித்தல் எனும் நிகழ்வு இடம் பெறுகின்றது. இந்த நிகழ்வின் பிரதான அம்சமாக 'சூட்டுக்களம்' எனும் ஆற்றுகை மேற் கொள்ளப்பட்டது.

இலங்கை ஒரு விவசாய நாடு ஆகையால் விவசாயத்தை மையப்படுத்தியதாக பல் வேறுபட்ட ஆற்றுகைகளை நாம் அடையாளப்படுத்திக் காட்ட முடியும். எனினும் சில ஆற்றுகைகள் காலப்போக்கில் அழிவடைந்துவிட்டன. அவற்றுள் இதுவும் ஒன்றாகும். முன்பு அறுவடையானது முற்றாக நிறைவு பெறுவதற்கு இரண்டு தொடக்கம் மூன்று கிழமைகள் எடுத்ததாகவும், தொடர்ச்சியான வேலைக் களைப்பைப் போக்கவும், சமய நம்பிக்கை நோக்கத்துடனும் இதனை மேற்கொண்டுள்ளதாக அறியப்பட்டது.

சூட்டுக்களம் தமிழர் கிராமிய வழிபாட்டு முறைகளையும் அவர்களது தொழில் முறை ஒழுக்கங்களையும் பேசும் ஒன்றாக காணப்பட்டது. ஒரு தொழில் முறைச் செயற்பாடே அழிந்து போனமையினால் அதனுடன் இணைந்த ஆற்றுகைகளும் மறைந்தே போய்விடுகின்றன. 2004 ஆம் ஆண்டு வரை சூட்டுக்களம் மேற்கொள்ளப்பட்டதாக 'சூடு காப்பான், செல்லப்பிள்ளை துரைநாயகம்' குறிப்பிடுகின்றார்.

திருகோணமலை மாவட்டத்தின் தங்கநகர், கிளிவெட்டி, கங்குவேலி, பாரதிபுரம், மேன்கமம் உள்ளிட்ட விவசாயக் கிராமங்களில் மேற்கொள்ளப்பட்ட ஆற்றுகை இதுவாகும். சுனாமி இயந்திரம், அறுவடை இயந்திரம் போன்றவற்றின் வருகையினால் காலப் போக்கில் மறைந்து விட்டது எனினும் இந்த ஆற்றுகையில் ஈடுபட்டவர்கள், பார்வையாளர்கள் என்பவர்கள் மனதில் மறைந்திருந்த ஆற்றுகையினை எனது ஆய்வினூடாக வெளிக்கொண்டு வந்துள்ளேன்.

அறுவடைக்குப் பின்னர் வயலையும், தொழிலாளர்களையும் காவல் காத்து நின்ற வைரவர், நாக தம்பிரானுக்கு நன்றி செலுத்துவதாக இது ஆரம்பிக்கின்றது. ஆற்றுகையின் பெரும்பகுதியாக சூடு அடித்தல் நிகழ்வு காணப்படுகின்றது. சூடு அடித்தலின் பின்னர் களத்துப் பிச்சை கொடுத்தல், பொங்கல் படைத்தல் என்பவற்றுடன் நிறைவு பெறுகின்றது. சூடு அடித்தலின் போது பாடப்படும் சூட்டுப் பாடல், வேலையாள் தடி நடனம், மத்தள இசை, குரைக் காட்டல் என்பன ஆற்றுகையின் முக்கிய அம்சம் ஆகும்.

சூடு காப்பான் என்பவரின் தலைமையில் துப்புரவு செய்யப்பட்ட களத்தில் சூடு வைக்கப்படும். தொடர்ந்து தொழுவ மாடுகளால் (ஒன்றாகப் பிணைக்கப்பட்ட 5 எருமைகள்) சூடு வளைக்கப்படும். இதன் போது நாகதம்பிரான், வைரவர் போன்ற தெய்வங்களுக்கு நன்றி கூறுவதாகவும் பிரிந்து இருக்கும் குடும்பத்தை எண்ணிப் பாடுவதாகவும் இந்தச் சூட்டுக்கள ஆற்றுகை சூடு பிடிப்பதைக் காணலாம்.

சூட்டுக் களத்திற்கு வேலை செய்ய மற்றும் அதனுடன் தொடர்புடைய ஆற்றுகைகளில் பங்கு பெறுவதற்குப் பெண்களுக்கு அனுமதி இல்லை. சூடு களத்தில் வேலை செய்யும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண்கள் அவர்களது மனைவியினருடன் வேலைக்கு முன்பதாக ஊடலில் ஈடுபடக் கூடாது. மாதவிடாய் வரும் பெண்கள் களத்திற்கு வருகைதர முடியாது. சூட்டுக் களத்தில் வேலை செய்யும் ஆண்கள் தமது வீடுகளுக்குச் செல்ல முடியாது. வெளியில் இருந்து உணவு கொண்டு வர சிறுவர்களுக்கு மாத்திரம் அனுமதி உண்டு. இவ்வாறான இறுக்கமான ஒழுங்குகள் இந்தப் பகுதி மக்களால் பின்பற்றப் பட்டுள்ளது. ஆற்றுகைக்கு முன்னரான செயற்பாடுகள், ஆற்றுகைக்குப் பின்னரான செயற்பாடுகள் என நான் வரையறுத்துள்ளது சூட்டுக் களத்தினுள் நிகழ்த்தப்படும் நிகழ்வுகள் தவிர்ந்தவற்றை ஆகும். ஏன் எனில் இங்கு சூடு அடிக்கப்படும் களமே அரங்கு ஆகும்.

**ஆற்றுகைக்கு முன்னரான செயற்பாடுகள்**

நன்றாக விளைந்த வயலின் நெற்கதிர்களை வேலையாட்கள் அறுவடை செய்வார்கள். அறுவடை செய்த நெற்கதிர்களை இணைத்து உப்பட்டி கட்டுவார்கள். உப்பட்டிகளைக் கட்டுகளாகக் கட்டி களத்து மேட்டிற்குக் கொண்டு வருவார்கள். இந்தச் செயற்பாடே 'கட்டுக் கட்டுதல்' என்று அழைக்கப்படுகின்றது.

கட்டுக் கட்டுதலைத் தொடர்ந்து 'களம் செருக்குதல்' எனும் நிகழ்வானது இடம் பெறும். இந்த நிகழ்வு சூடுகாப்பானின் தலைமையில் மேற்கொள்ளப்படும். சூடுகாப்பான் சூடுகளத்தினை எல்லைப்படுத்துவார். ஏனையவர்கள் 'போலத்து' எனும் தூய்மை செய்யும் கருவியைப் பயன்படுத்தி அதனைத் தூய்மை செய்வார்கள். தூய்மை செய்தலின் போது களத்தில் இருக்கும் களைகள், தேவையற்ற குப்பைகள் அகற்றப்படும். தூய்மைப் பணி நிறைவு பெற்றதும் மஞ்சள் கலந்த நீரை சூடு காப்பான் களத்தில் தெளிப்பார்.

**ஆற்றுகையின் போதான செயற்பாடுகள்**

களம் செருக்குதலைத் தொடர்ந்து வயலின் உரிமையாளர் தமது காவல் தெய்வத்திற்கு மடை வைப்பார். வாழைப் பழம், நெற்கதிர், ஒற்றைப் படையில் வெற்றிலை, பாக்கு, மது பானம் உள்ளிட்ட சில பொருட்கள் படைக்கப்படும். உரிமையாளர் அனைத்து விடயங்களும் ஒழுங்காக நடைபெற வேண்டும் என எண்ணி தேங்காய் நேர்ந்து வைப்பார். இங்கு காவல் தெய்வங்களாக வைரவர், நாகதம்பிரான், கறுப்பு சாமி போன்ற சிறு தெய்வங்கள் காணப்படும். சிறு தெய்வ வழிபாட்டுடன் ஆரம்பமாகும் இந்த நிகழ்வின் தொடர்ச்சியாக நெல்லு கட்டுக்கள் களத்துக்குக் கொண்டு வரப்படும். களத்துக்குக் கொண்டு வரப்பட்டு வட்டவடிவில் பரவலாக அடுக்கப்படும். இந்த நிகழ்வை 'சூடு வைத்தல்' என்று அழைப்பார்கள். சூடு வைத்தலைத் தொடர்ந்து 'சூடு மிதித்தல்' இடம் பெறும். சூடு மிதித்தல் நிகழ்வில் ஒன்றாகப் பிணைக்கப்பட்ட எருமை தொழுவமாடுகளைப் பயன்படுத்துவார்கள். ஒரு தொழுவம் என்பது ஒன்றாகப் பிணைக்கப்பட்ட ஐந்து மாடுகள் ஆகும். சூடு அடிக்க ஒற்றை படையில் தொழுவக் கூட்டங்கள் பயன்படுத்தப்படும். ஆகக் குறைந்தது 5 தொழுவக் கூட்டங்கள் பயன்படுத்துவார்கள். இந்த மாடுகளைப் பொலி நடையன் என்று அழைப்பார்கள்.

சூடு மிதித்தலின் போது மாட்டுக்குக் குரைகாட்டுதலில் (ஒரு வகையான சத்தம்) இவர்களது நாட்டுப் புறப்பாடல்கள் ஆரம்பமாகின்றன. 'வேகமாக செல்லடா பொலி நடையா பொளுது சாய போகுதடா பொலி நடையா பசிக்கு நல்ல புல்லுத்தாரன் பொலி நடையா...' என்ற பாடலை எடுத்துக்காட்ட முடிகின்றது. இந்தப் பாடல் நாக தம்பிரான், வைரவர், பொலி நடையன் போன்றவற்றுக்கு நன்றி கூறுவதாகவும் அவர்களது வாழ்வியலோடு விவசாயம் எவ்வகை முக்கியத்துவம் பெறுகின்றது போன்ற பண்பாட்டு அம்சங்களை வெளிக்காட்டுவதாகவும் அமைகிறது. 'சூடு மிதித்தலைத் தொடர்ந்து 'பொலி வாட்டுதல்' நிகழ்வானது இடம் பெறும். பொலி வாட்டுதலின் போது வேலையாள் தடி பயன்படுத்தப்படும். வேலையாள் தடிகளை ஆண்கள் பாடலுக்கு ஏற்றவாறு தட்டிக்கொண்டு வேலையில் ஈடுபடுவார்கள். சூடு களத்தில் உள்ள வைக்கோல்களை அகற்றும் இந்தச் செயற்பாடு வட்டமாக சூடுகளத்தைச் சுற்றி நடந்து மேற் கொள்வதாக அமையும். ஆண்கள் சூடு களத்தில் வட்ட வடிவில் எண்ணிக்கைக்கு ஏற்ப உள் வட்டம், வெளி வட்டமாக நிற்பார்கள். வலது இடது பக்கங்களாக சுற்றிச் சுற்றி பாடல் பாடிய வண்ணம் தடிகளைத் தட்டிக் கொண்டு வைக்கோல்களை வெளியே தள்ளுவார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதன் போது 'பொலி பொலி மச்சான் பொலி பொலி போடியாருக்கு நல்ல பொலி' போன்ற நாட்டார் பாடல்கள் பாடப்பட்டன. இந்தப் பாடல்களில் அவர்களது தொழில் ஈடுபாட்டு மகிழ்ச்சியும், அவர்கள் இல்லத்தாரின் பிரிவுத் துயரையும் எண்ணி பாடுவதாக காணப்படுகின்றது.

பொலி வாட்டுதலைத் தொடர்ந்து பொலி தெரிதலானது இடம் பெறும்.பொலி தெரிதலை பொலி தூற்றுதல் என்றும் அழைப்பர். பொலி தூற்றுவதற்கு உயரமான இடம் ஒன்று வேண்டும். உயரமாகவும் சூடுகாப்பான் இருந்து தூற்றவும் அவரியானது கட்டப்படும். அவரி என்பது உயரமான தடிகளால் கட்டப்படும் முக்காலி போன்ற அமைப்பாகும். அவரியில் இருந்து காற்று வழத்திற்கு ஏற்ப சூடுகாப்பான் பொலியினை தூற்றுவார் (பொலி என்பது நெல்). பொலி தூற்றப்படும் வேளையில் சூடுகாப்பானுக்கும் வேலையாட்களுக்கும் இடையே அங்கதச் சுவைமிக்க உரையாடல்கள் நிகழும்.

ஆட்டம் பாட்டமாக நடைபெறும் சூட்டுக்களம் ஓரிரு நாட்களில் நடைபெற்று முடிவது அல்ல. இது ஓரிரு வாரங்கள் நடை பெறுவது ஆகும். ஆகவே வேலை நிறைவு பெறும்வரை தமது வீடுகளுக்கு வரமுடியாது என்ற கட்டுபாடு உள்ளதால் ஆண்கள் இரவு நேரங்களைச் சூட்டுக்கள வாடியிலே கழித்துக் கொள்கின்றார்கள். இரவு நேரங்களில் வேலை செய்ய முடியாத கட்டுப்பாடும் உண்டு. இதன் போது பொழுது போக்குக்காக பாசறை மூட்டி பாடல் பாடி, மத்தளங்கள் அடித்தும் மகிழ்ந்து உள்ளனர். இரவு நேரங்களில் வெளிச்சத்திற்காக சூழ்லாம்பு பயன்படுத்தியுள்ளனர். இவ்வாறு இரவு பகலாக நடைபெற்ற சூட்டுக்களத்தில் தொடர்ந்து பொலி தெரிந்து மூட்டை கட்டப்பட்டும்.

மூட்டை கட்டியதைத் தொடர்ந்து முன்பு நேர்ந்து கட்டப்பட்ட தேங்காயினை நெல் வயலின் உரிமையாளர் உடைப்பார். சூட்டுக்களத்தின் இறுதிச் செயற்பாடு இதுவாகும்.

### ஆற்றுகைக்குப் பின்னரான செயற்பாடுகள்

தேங்காய் உடைத்ததன் பின்னர் களத்துக்கு வெளியே களத்து மேட்டில் நெல் மூட்டைகள் அடுக்கப்படும். குல தெய்வத்திற்குப் பொங்கல் பொங்கிப் படைப்பார்கள். தொடர்ந்து உரிமையாளர் சூடுகாப்பான், வேலையாட்கள் என்போருக்குப் பொங்கல் கொடுப்பார். களத்து மேட்டிற்கு நெல் தானம் கேட்டு வருபவர்களுக்கும் பொங்கலும் நெல்லும் கொடுப்பார். நெல் தானம் கொடுக்கும் நிகழ்வைக் களத்துப் பிச்சை என்கிறார்கள். பின்னர் சூடுகளத்திற்கு நீர் தெளித்து ஒரு வாழை இலையில் ஒரு நாழி அளவு நெல் பறவைகளுக்காகப் படைக்கப்படும். பின்னர் நெல் மூட்டைகள் வீடுகளுக்குக் கொண்டு செல்லப்படும்.

### ஆற்றுகையுடன் தொடர்புடைய நம்பிக்கைகள்

இந்த ஆற்றுகையுடன் தொடர்புடைய நம்பிக்கைகளாகப் பின்வருவனவற்றை அடையாளப்படுத்த முடியும்: தேங்காய் நேர்ந்து வைத்தால் எந்த விதத் தடையும் இன்றி நிகழ்வு நிறைவு பெறும், தூய்மையாக களத்தைப் பேணுவது வைரவர் களத்தில் குடியிருப்பதாக எண்ணுதல். பெண்கள் களத்துக்கு வருவது களத்தின் தூய்மை கெட்டு போகின்றது என்ற நம்பிக்கை. களத்தில் செய்யப்படும் களத்துப் பிச்சை கொடுத்தல், பறவைகளுக்கு வைக்கும் மடை என்பவற்றால் சிறந்த விளைச்சல் கிட்டும். வைரவர், நாக தம்பிரானுக்குச் செய்யும் சடங்குகளால் களத்தில் எந்த தீங்கும் நடை பெறாது என்பவற்றைக் காணலாம்.

### முடிவுரை

நவீன வேளாண்மை நன்மை பயக்கும் அதேவேளை தமிழரின் பாரம்பரியத் தொழில் முறைகளோடு அவைசார் ஆற்றுகைகளை அழித்து வருகின்றன. இத்தகைய ஆற்றுகைக் கலைகளை உயிர்ப்போடு பேணுவது சமூக பண்பாட்டு தெளிவாக்கத்துக்கு ஏதுவான ஒன்று. இந்தக் கட்டுரையில் சூட்டுக்கள ஆற்றுகை எச்சங்கள் பதிவிடப்பட்டுள்ளன. எதிர்காலத்தில் இவற்றை ஒன்றிணைத்துப் புத்துருவாக்கம் செய்து கலை பண்பாட்டு நிலைபேற்றுக்குப் பங்களிப்பு செய்ய இந்தக் கட்டுரை துணைபோகும்.

●

*கட்டுரையாளர்: எழுத்தாளர்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முடியில்லா பிரச்சனைகளுக்கு தீர்வு

THE ZUSAANLI GROUPS
TZG
Since 1992




## NAYAGARA
### HAIR GRIP OIL

## மூச்சு குழாயின் சுவாசம் இலேசாகும்!
## ஆயுர்வேதம் தந்த அற்புதம்

மூலிகை ஆராய்ச்சியில் 33 வருடங்களாக ஈடுபட்டுள்ள மூலிகை ஆராய்ச்சியாளர் மற்றும் 15 வருடங்களாக ஆயுர்வேதத் துறையில் உள்ள ஆயுர்வேத மருத்துவர் ஆகியோரின் அற்புதமான தயாரிப்பு **ஸ்வாசஃப்ரீ.**

**நாட்பட்ட ஆஸ்துமா, சளி, இருமல், தும்மல் உள்ளிட்ட நுரையீரல் சம்மந்தப்பட்ட அனைத்திற்கும் மிகச்சிறந்தது.**

கொரியர் / தபாலில் அனுப்பி வைக்கப்படும்.



கிடைக்குமிடம் :

**வெற்றி விநாயகர் மெடிக்கல்ஸ்**

தி சுசான்லி அக்குபஞ்சர் & ஆயுர்வேதிக் கிளினிக் வளாகம்,
11-A, பாரதிதாசன் தெரு, பிள்ளையார் கோயில் எதிரில்,
மஞ்சக்குப்பம், கடலூர்-1.

செல் : 93676 22248, போன் : 04142-355418

மேலும் விபரங்களுக்கு : **96003 09546, 93676 22256**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டுரை | துருவன்



# ஓநாய் குலச்சின்னம்!

கேம் ஆஃப் த்ரோன்ஸ் தொலைக்காட்சித் தொடரின் மூலம் பிரபலமான ஒரு விலங்கு இனமாக கருதப்படும் டையர் ஓநாய் (*dire wolf*) பத்தாயிரம் ஆண்டுகளுக்குப் பிறகு மீண்டும் உயிர்பிக்கப்பட்டுள்ளதாக அமெரிக்க உயிரித்தொழில்நுட்ப நிறுவனம் கோலோசல் பயோசயின்சஸ் அறிவித்துள்ளது.

பில்லியனர் பென் லாம் மற்றும் மரபியல் நிபுணர் ஜார்ஜ் சர்ச் ஆகியோரால் நிறுவப்பட்ட கோலோசல் பயோசயின்சஸ் : மனிதகுல வரலாற்றில் அழிந்துபோன உயிரினத்தை முதல் முறையாக, 10,000 ஆண்டுகளுக்குப் பிறகு, வெற்றிகரமாக மீட்டெடுக்கப்பட்டுள்ளதாக கூறி வருகிறது.

### டையர் ஓநாய்?

டையர் ஓநாய்கள் (*Aenocyon dirus*) சுமார் 13,000 ஆண்டுகளுக்கு முன்பு அழிந்து போவதற்கு முன்னர் தெற்கு கனடா மற்றும் அமெரிக்காவில் ஆதிக்கம் செலுத்திய ஓநாய் இனமாகும். இதன் கற்படியுருவங்கள் (*fossils*) வட அமெரிக்காவில் கண்டறியப்பட்டன. இந்த இனமானது சுமார் 57 லட்சம் ஆண்டுகளுக்கு முன்னர் தோன்றிய இனமாகும். இவை இன்றைய சாம்பல் ஓநாய்களை (கேனிஸ் லூபஸ் - *Canis lupus*) ஒத்திருக்கின்றன, ஆனால் அவை பெரியதாக, வெள்ளை நிற வெளிப்புற கோட்டுகளுடன் இருந்தன. இந்த ஓநாய் 3.5 அடி உயரமும், 6 அடிக்கு மேல் நீளமும், 68 கிலோ வரை எடையும் இருக்கும். டைர் ஓநாய்கள் குதிரைகள், காட்டெருமைகளை வேட்டையாடி உண்ணக்கூடியவை.

உயிரித் தொழில்நுட்பத்தை பயன்படுத்தி ரோமுலஸ், ரேமுஸ் என்ற இரண்டு ஆண் டையர் ஓநாய்கள் கடந்த ஆண்டு அக்டோபர் 1 ஆம் தேதி பிறந்தன. இந்த இரண்டும் தற்போது 4 அடி நீளமும் 36 கிலோ எடையுடன் உள்ளன.

கேம் ஆப் த்ரோன்ஸில் ஒரு கதாபாத்திரத்தின் பெயரால் பெயரிடப்பட்ட கலீசி என்ற பெண் டையர் ஓநாய் இந்தாண்டு ஜனவரி 30 ஆம் தேதி பிறந்தது. மூன்று மாதங்கள் முடிந்த நிலையில் இதன் வளர்ச்சியும் சீராக உள்ளது என்று கோலோசல் பயோசயின்சஸ் அறிவித்துள்ளது. இதுவரை அறியப்பட்ட ஓநாய் இனங்களில் பயங்கரமான ஓநாய் என்பது ஹவுஸ் ஸ்டார்க்கின் சிகில் அல்லது மாஸ்-கட் ஆகும்.

### டையர் ஓநாய் எப்படி அழிந்தது?

ஒருவேளை, இந்த இனம் தனது உணவிற்காக உண்ணக்கூடிய இரை இனங்கள் அழிந்த பின் அழிந்து போய் இருக்கலாம் என்று விஞ்ஞானிகள் கருதுகின்றனர். மேலும் மனிதர்கள் இதனை வேட்டையாடியும் இந்த இனத்தை அழித்திருக்கலாம் என்றும் கருதுகின்றனர்.

.சமீபத்திய ஆண்டுகளில், HBO இன் கேம் ஆஃப் த்ரோன்ஸ் மற்றும் ஜார்ஜ் ஆர்ஆர் மார்ட்டினின் ஏ சாங் ஆஃப் ஐஸ் அண்ட் ஃபயர் தொடர்கள் ஃபேண்டஸி நாவல்களின் காரணமாக, இந்த இனங்கள் குறித்து விவரங்களை பலர் தெரிந்து வைத்துள்ளனர். இந்த ஓநாய்களை தற்போது வட அமெரிக்காவில்2,000 ஏக்கர் பரப்பளவில் பாதுகாக்கப்பட்ட இடத்தில் கோலோசல் வைத்துள்ளது. அங்கு இந்த ஓநாய்கள் நன்கு கவனிக்கப்பட்டு பராமரிக்கப்படுகின்றன.

### எப்படி உருவாக்கினார்கள்?

கொலோசலில் உள்ள விஞ்ஞானிகள் இந்த ஓநாய்களின் மாதிரிகளுக்காக அருங்காட்சியகங்கள் மற்றும் ஆய்வகங்களைத் தொடர்புகொண்டு, சுமார் 13,000 ஆண்டுகள் பழமையான பல் மற்றும் 72,000 ஆண்டுகள் பழமையான மண்டை ஓடு ஆகியவற்றை வாங்கினார்கள்.

"மண்டை ஓட்டின் உள்ளே பெட்ரஸ் அல்லது உள் காது எலும்பு உள்ளது, இது நன்கு பாதுகாக்கப்பட்ட டிஎன்ஏவின் நல்ல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆதாரமாக உள்ளது," என்று கொலோசலின் தலைமை அறிவியல் அதிகாரி பெத் ஷாபிரோ தெரிவித்துள்ளார். இந்த இரண்டு மாதிரிகளிலிருந்து, ஷாபிரோ மற்றும் அவரது குழுவினர் இந்த ஓநாய் மரபணுக்களை உருவாக்க போதுமான டிஎன்ஏவை மீட்டெடுக்க முடிந்தது - அதன் முழுமையான மரபணு தகவல்களின் தொகுப்பு கண்டறியப்பட்டது. பின்னர் அவர்கள் இந்த மரபணுக்களை ஓநாய்கள் உள்ளிட்ட பிற கேனிட் இனங்களுடன் ஒப்பிட்டனர்.

மரபணுத் தரவைப் பயன்படுத்தி, ஆராய்ச்சியாளர்கள் சாம்பல் ஓநாய், டைர் ஓநாய்களின் நெருங்கிய உறவினர் என்பதை உறுதிப்படுத்தினர். டிஎன்ஏ குறியீட்டில் 99.5% சாம்பல் நிற ஓநாய்களுடன் டையர் ஓநாய் ஒத்துப் போகிறது. விஞ்ஞானிகள் மரபணு எடிட்டிங் மூலம் சாம்பல் ஓநாயின் 14 மரபணுக்களில் 20 தனிப்பட்ட திருத்தங்களைச் செய்தனர் . அவற்றில், 15 அழிந்துபோன டையர் ஓநாய் மரபணு மாறுபாடுகளான வெளிர் நிற கோட், நீளமான முடி, உடல் அளவு மற்றும் தசைகள் போன்றவற்றை கண்டறிந்தனர். மாதிரிகளில் இருந்து எடுக்கப்பட்ட டிஎன்ஏவை கொண்டு குளோனிங் செய்ய இயலவில்லை. 500 டிகிரி ஓவனில் டிஎன்ஏ வானது சிதைந்து போனது. அதற்குப் பதிலாக செயற்கை உயிரியல் தொழில்நுட்பத்தை பயன்படுத்தினர்.

சாம்பல் ஓநாய்களின் மரபணுவில் 20 மாற்றங்கள் செய்து, தோற்றத்தில் டையர் ஓநாய் போலவே இருக்கும் சில குட்டிகளை உருவாக்கியுள்ளனர், குறிப்பாக சொல்லப்போனால் உருவாக்கப்பட்டிருக்கும் ஓநாய்கள் சாம்பல் ஓநாய்களை விட பெரிதாக, வெள்ளையாக இருக்கின்றன. அவ்வளவுதான்.

டையர் ஓநாயின் மரபணுவுக்கும் சாம்பல் ஓநாய் மரபணுவுக்கும் உள்ள வேறுபாடு 0.5 விழுக்காடு. அரை சதவிகிதம் என்பது சிறியதாகத் தெரியலாம். ஆனால் தனித்தனி மரபணுக்கள் என்று வரும்போது ஒட்டுமொத்தமாக 1,22,35,000 டி,என்.ஏ கூறுகள் மாறுபடும்!. அதாவது சாம்பல் ஓநாய்கள் மற்றும் டையர் ஓநாய்கள் டிஎன்ஏக்கள் கட்டமைப்பு 99.5% ஒரே போல உள்ளது. ஆனால், டையர் ஓநாயானது 25 லட்சம் முதல் 60 லட்சம் ஆண்டுகளுக்கு முன்பாக சாம்பல் ஓநாய்களிலிருந்து வேறுபட்டு வேறொரு பேரினத்தில் இருந்து உருவானது என்று கொலோசல் உயிரி அறிவியலின் விஞ்ஞானி டாக்டர். பெத் ஷாபிரோ தெரிவித்துள்ளார்.

கொலோசலின் ஓநாய் குட்டிகள் உண்மையில் பயங்கரமான ஓநாய்களாக இருந்தாலும், ரோமுலஸ், ரெமுஸ் மற்றும் கலீசிக்கு பெற்றோர் இல்லை, அவர்கள் வேறு எந்த ஓநாய்களையும் இதுவரை சந்தித்ததில்லை, வேட்டையாடவும் தெரியாது. அவை இனப்பெருக்கம் செய்ய அனுமதிக்கப்படவில்லை. இந்த "பயங்கரமான ஓநாய்கள்" இறப்பதற்கு மட்டுமே மீண்டும் உயிர்ப்பிக்கப்படும் இரண்டாவது இனமாக இருக்கும். முதலாவது ஐரோப்பாவின் பைரனீஸ் பகுதியில் இருந்து வந்த புகார்டோ என்ற மலை ஆடு உயிரித் தொழில்நுட்பத்தை பயன்படுத்தி உருவாக்கப்பட்டது.

உயிரித் தொழில் நுட்பத்தை பயன்படுத்தி அழிந்து போன இனங்கள் மீண்டும் மீட்டெடுக்கப்படும் வாய்ப்பு இருந்தாலும், இது தற்போதைய சூழலில் பல சிக்கல்களையும் உருவாக்கும் என்று விஞ்ஞானிகள் கருதுகின்றனர். இன்றைய சூழலில், தற்போதுள்ள உயிரினங்கள் பலவும் அழிவை நோக்கி சென்று கொண்டிருக்கின்றன. காலநிலை மாற்றம், மனிதர்களின் அதீத பயன்பாடு மற்றும் வேட்டையாடுதல் காரணமாக அவைகளின் அழிவு அதிகரித்து வருகிறது. இவற்றை பாதுகாக்க வேண்டியது மிகவும் முக்கியம். அதற்கு பதிலாக பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த உயிரினங்களை மீட்டெடுப்பது என்பது சரிதானா என்ற கேள்வியும் எழுகிறது.

அறிவியல் தொழில்நுட்பங்களை தற்போதுள்ள சூழல் மற்றும் காலநிலை மாற்றத்திற்கு ஏற்ப பொறுப்புடன் பயன்படுத்த வேண்டும். பல்லாயிரம் ஆண்டுகால உயிரினங்கள் மீட்டெடுக்கப்படுவது, தற்போதுள்ள புவியின் உயிரினங்களை கேள்விக்குறியாக்கி, மீட்டெடுப்பு தொழில்நுட்பம் என்பது தவறான முன்னுதாரணமாக மாறிவிடும் அபாயம் உள்ளது.

●

கட்டுரையாளர்: எழுத்தாளர்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்டாட்டி:
# சோழர்களின் அடிமைப் பணிப்பெண்கள்

பெண்டாட்டிகள் எவ்வாறு அடிமையாக்கப்பட்டனர்? அவர்களோடு தொடர்புடைய 'வேளம்' என்ற நிறுவனத்தின் தனித்தன்மைகள், பெண்டாட்டிகளுக்கும் அரசக் குடும்பதினருக்கும் உள்ள தொடர்பு, இவர்களுக்கும் கோவில் பணிப்பெண்டிரான தேவரடியார்களுக்கும் உள்ள தொடர்பு, பெண்டாட்டிகளுக்கும் பணிமகன்களுக்கும் இருந்த இரத்த உறவுகள், இவ்வாறான பெண் அடிமைகளின் வாரிசுகளின் நிலை என்ன போன்ற ஒன்றுக்கொன்று தொடர்புடைய பல்வேறு விடயங்களைக் குறித்துப் பேசுவதாக அமைகிறது இக்கட்டுரை.

இன்றைய காலகட்டத்தில் 'பெண்டாட்டி' என்ற சொல் 'மனைவி' என்ற பொருள் பெற்றுப் பயன்பாட்டில் இருப்பினும், தென்னிந்தியாவை ஆண்ட சோழர்களின் காலத்தில் (10-13ஆம் நூற்றாண்டுகள்), இச்சொல் அரண்மனைப் பணிகளுக்கெனக் கொண்டுவரப்பட்ட ஒருவகைப் பெண் அடிமைகளைக் குறிப்பதாக அமைந்திருந்தது. கே.ஏ. நீலகண்ட சாஸ்திரி போன்ற முந்தைய வரலாற்று ஆசிரியர்கள் பெண்டாட்டிகளைப் பற்றிய குறிப்புகளைத் தமது எழுத்துக்களில் விட்டுச் சென்றுள்ளனர். எனினும், இவ்வகைப் பெண்களைப் பற்றிய முழுமையான ஆய்வுகள் அண்மைக் காலங்களிலேயே மேற்கொள்ளப்பட்டன. அவ்வாறு வெளிவந்த ஆய்வுகளில் லெஸ்லிசி ஓர் அவர்களின் *Donors, Devotees, and the Daughters of God: Temple women in Medieval Tamilnadu (2000)* என்ற நூலும் தாவுத் அலி அவர்களின் *War, Servitude, and the Imperial Household: A Study of Palace Women in the Chola Empire (2006)* என்ற கட்டுரையும் முக்கியமானவை. இவற்றில் தாவுத் அலி அவர்களின் ஆய்வுகள் வெளிக்கொணரும் செய்திகளைச் அவற்றிற்கான பின்புலத்தில் சுருக்கமாகத் தொகுத்தளிப்பதே இக்கட்டுரையின் நோக்கம்.

### தென்னிந்தியாவில் அடிமை முறை

தென்னிந்தியாவில் நிலவிய அடிமை முறைகள் குறித்து வரலாற்று ஆய்வுகள் அனைத்தும் பொதுவாகச் சோழர்களுக்கும் பிந்தைய காலக்கட்டத்தை மையமாகக் கொண்டிருப்பவை. விவசாய உற்பத்தியுடன் தொடர்புடைய அடிமை முறைகளான பண்ணையாள் முறை, மிராசுதார் முறை, சாதிய முறை போன்றவைகளும் அடிமைகளை விற்றல் வாங்குதல் மற்றும் ஏற்றுமதி செய்தல் போன்றவையும் ஆய்வாளர்களின் கவனத்தை அதிகமாக ஈர்த்துள்ளன. இது போன்ற ஆழ்ந்த ஆய்வுகளுக்குச் சோழர் காலம் உட்படுத்தப்படாமைக்கு முக்கியக் காரணமாக இருப்பது அதற்கான வரலாற்றுத் தரவுகளைப் பெறுவதில் இருக்கும் சிக்கல் ஆகும். சோழர்கால வரலாற்று ஆவணங்களான கல்வெட்டுகள் குறிப்பாகக் கோவில்களுக்கும் பிரமணர்களுக்கும் கொடுக்கப்பட்ட கொடைகளையும், அதற்காக வசூலிக்கப்பட்ட வரிகளையும் மேலும் இது தொடர்பான அரசு ஆணைகளையும் பதிவு செய்பவை. இவற்றினூடாகச் சமூக வரலாற்றைக் கட்டமைத்தல் என்பது மிகவும் கடினமான செயல் ஆகும். எனினும், ஒய்.சுப்பராயலு அவர்கள் சிதறிக்கிடந்த சில கல்வெட்டுக் குறிப்புகளைக் கொண்டு விவசாய அடிமைகள் பற்றிய சிறு குறிப்பை எழுதினார் (*Y.Subbrayalu, 2012*). ஒப்பீட்டளவில் பார்க்கும்போது, இது போன்று விவசாய அடிமைகள் குறித்த குறிப்புகளைவிட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடிமைப் பெண்கள் பற்றிய குறிப்புகள் கல்வெட்டுகளில் அதிகம். இப்பெண்கள் கோவில்களோடும் அரண்மனைகளோடும் தொடர்புடையவர்களாய் இருந்ததாலும் அவ்வப்போது கோவில்களுக்குச் சிறு கொடைகளை வழங்கியதாலும் அவ்வாறான பதிவுகளைப் பெறமுடிந்தது.

பொதுவாக மனிதர்கள் வணிகப் பொருட்களைப் போன்று சந்தைகளில் வாங்க-விற்கப் படக்கூடிய நிலையை 'அடிமை' என வரையறுப்பர். தெற்காசிய வரலாற்றில் அடிமைமுறையைப் பற்றி எழுதும்போது, ரிச்சர்ட் ஈட்டன் *(M.Eatan, 2006)*, 'அடிமை' என்பதனை இவ்வாறு வரையறுக்கின்றார்: 'அதிகாரம் வாய்ந்த தனிநபரால் அல்லது நிறுவனத்தினால், ஒருவர் முற்றிலுமாக அடக்கியாளப்படும் தன்மை அடிமைநிலை ஆகும்'. இதைப் போன்று, தென்னிந்திய அடிமைமுறையின் இயல்பை விவரிக்கும் லெஸ்லி ஓர் *(Leslie Orr, 2021)* அவர்கள் இடைக்காலத் தரவுகள் இதைப்பற்றி நேரடியாகக் குறிப்பிடாத நிலையல் அதை அக்காலத்தில் நிலவிய ஒரு சிக்கலான ஒருவருக்கொருவர் சார்ந்திருந்த படிநிலை அமைப்பிலான சமூக அமைப்பின் பின்புலத்தில் புரிந்துகொள்ள வேண்டும் என்கின்றார். இதை ஒரு சாதியப் படிநிலை அமைப்பினூடாகப் பார்க்க முடியாது. எடுத்துக்காட்டாக, பொதுவாகக் கீழமைச் சாதியாகக் கருதப்படும் பறையர்கள் போன்றோர் ஒருசில இடங்களில் நில அடிமைகளாகவும், ஒருசில இடங்களில் கோவிலுக்குக் கொடை வழங்கிய கொடையாளியாகவும் காட்டப்படுகின்றனர். அதுபோல், கோவிலுக்கு விற்கப்பட்ட பெண்கள் ஒருசில இடங்களில் கீழ்நிலை வீட்டுவேலையில் ஈடுபட்டதாகவும், ஒருசில இடங்களில் மேல்நிலையிலான கோவில் சடங்குளோடு தொடர்புடைய வேலைகளில் ஈடுபட்டதாகவும் காட்டப்படுகின்றனர். எனவே, பின்புலச் சூழலை ஆராய்வதன் மூலமாகவே இடைக்கால அடிமை முறையினை அறிந்துகொள்ள முடியும் என்கின்றார்.

#### அரண்மனைப் பணியாளர்கள்

இடைக்காலத்தில் அரண்மனை வீட்டு வேலைப் பணிகள் பற்றியோ அப்பணிகளுக்கான ஆள்சேர்ப்பு எவ்வாறு மேற்கொள்ளப்பட்டது



என்பது பற்றியோ தெளிவான தகவல்கள் நம்மிடையே இல்லை. பொதுவாக அரண்மனை என்றதும் அரசன், அமைச்சர்கள், அரசாங்க அலுவலர்கள், காவலர்கள், அந்தப்புரம் என ஆண்களைப் மையப்படுத்திய ஓர் அமைப்பே நம் கண்முன் எழும். ஆனால், பன்னிரெண்டாம் நூற்றாண்டில் தென்னிந்தியாவிற்குப் பயணித்ததாகக் கூறப்படும் சீனப் பயணியான யுவான்சுவாங் சோழ அரசன் பத்தாயிரம் நடனப் பெண்களைப் பணிக்கு வைத்திருந்தாகக் குறிப்பிடுகின்றார். அவர்களுள் மூவாயிரம் பேர் ஒரே சமயத்தில் சுழற்சி முறையில் அரசனுக்குப் பணிவிடை செய்தனர். இத்தகவலை ஏற்றிக்கூறப்பட்ட ஒரு கருத்தாக நாம் பார்த்தாலும், குறைந்தது பலநூறு பெண்களாவது அரண்மனைப் பணியில் இருந்திருப்பார்கள் என்பதை எளிதாக ஏற்றுக்கொள்ளலாம். அக்காலக் கல்வெட்டுகள் பதிவுசெய்யும் பணிப்பெண்கள் கோவிலுக்குக் கொடுத்த கொடைகள் இக்கருத்தை மேலும் வலுப்படுத்துகின்றன .

தஞ்சாவூர், கங்கைகொண்ட சோழபுரம் போன்ற அரண்மனை வளாகங்கள் ஒரு மிகப்பெரிய அரச குடும்பத்தினருக்கான மற்றும் அரண்மனையோடு தொடர்புடையோரின் குடியிருப்பு நகரங்களாக இருந்துள்ளன. இவை பல்வேறு, பலஅடுக்கு வசிப்பிடக் கட்டடங்களோடு குளிப்பதற்கு, சாப்பிடுவதற்கு எனத் தனித்தனி இடங்களையும், இராசாங்க வேலைகளுக்கான மைய அரங்குளையும் கொண்டிருந்தன. அரசன் அவனது பல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சோழ அரசன் பத்தாயிரம் நடனப் பெண்களைப் பணிக்கு வைத்திருந்தாகக் குறிப்பிடுகின்றார். அவர்களுள் மூவாயிரம் பேர் ஒரே சமயத்தில் சுழற்சி முறையில் அரசனுக்குப் பணிவிடை செய்தனர். இத்தகவலை ஏற்றிக்கூறப்பட்ட ஒரு கருத்தாக நாம் பார்த்தாலும், குறைந்தது பலநூறு பெண்களாவது அரண்மனைப் பணியில் இருந்திருப்பார்கள் என்பதை எளிதாக ஏற்றுக்கொள்ளலாம். அக்காலக் கல்வெட்டுகள் பதிவுசெய்யும் பணிப்பெண்கள் கோவிலுக்குக் கொடுத்த கொடைகள் இக்கருத்தை மேலும் வலுப்படுத்துகின்றன.**

மனைவிகள், குழந்தைகள், நெருங்கிய உறவினர்கள் என அரசகுடும்பத்தினர் மற்றும் அரசனின் முக்கிய மெய்க்காப்பாளர்கள் போன்றோர்களின் வசிப்பிடத்தை உள்ளடக்கியதாக வளாகத்தின் உள்சுற்றும், அரசாங்கத்தின் ஏனைய அலுவலகங்கள் மற்றும் அரண்மனையோடு தொடர்புடையோரின் வசிப்பிடங்களாகப் புறச்சுற்றும் இருந்தன. இவ்வாறு புறச்சுற்றில் அரண்மனையோடு மிகநெருங்கிய அமைப்பாக இருந்ததுதான் கல்வெட்டுகளில் கூறப்படும் வேளம் என்ற நிறுவனம். வேளம் என்பது பொதுவாக அரண்மனை பணிப்பெண்களையும் அவர்களது உறைவிடத்தையும் சுட்டும் சொல்லாகக் கையாளப்பட்டுள்ளது.

## வெவ்வேறு வேளங்கள்

கல்வெட்டுகள் கூறும் இந்த வேளம் என்ற சொல்லை ஆழ்ந்து ஆராயாமல், அரண்மனைக் கீழ்நிலைப் பணிகளுக்கான ஆள்சேர்ப்பு முறையை விவாதிக்க முடியாது. ஏறக்குறைய முப்பது வேளங்களின் பெயர்களைச் சோழர்காலக் கல்வெட்டுகள் பதிவு செய்கின்றன. இவை முதலாம் பராந்தகன் (கி.பி.907-955) மற்றும் முதலாம் குலோத்துங்கன் (கிபி. 1070-1120) ஆட்சிக்கு இடைப்பட்ட காலத்தைச் சேர்ந்தவை. போதுமான தரவுகள் இல்லாத நிலையில், வேளம் என்பதை அந்தப்புரம், சிறை, படைகள் தங்கும் வளாகம் எனப் பல்வேறு பொருள்படும்படி ஆய்வாளர்கள் விளக்க முற்பட்டுள்ளனர். கல்வெட்டுகளில் வேளத்தைப் பற்றிய குறிப்புகள் அவ்வேளத்தைச் சேர்ந்த பெண்கள் கோவிலுக்குக் கொடைகள் வழங்கியதைப் பதிவு செய்யும்போது காணப்படுகின்றன. ஒவ்வொரு வேளத்திற்கும் தனிப்பட்ட பெயர் கொடுக்கப்பட்டிருந்தது. வேளங்களின் பெயர்கள் பொதுவாகச் சோழ அரசர்கள், அரசிகள், இளவரசர்களின் நினைவாகச் சூட்டப்பட்டவை. எடுத்துகாட்டுக்கு கண்டராதித்யா வேளம், பஞ்சமதேவியார் வேளம், கோதண்டராமன் வேளம் முதலியவற்றைக் குறிப்பிடலாம். மேலும் ஒரே காலத்தில் பல்வேறு வேளங்கள் இயங்கின. அரச குடும்பத்தினரின் பட்டங்களைப் பெயராகக் கொண்டிருந்த வேளங்கள் அந்தக் குறிப்பிட்ட நபருக்குத்தான் பணி செய்தன என்று பொருள் கொள்ள முடியாது. அதுபோல், சோழர்களின் படைவீரர்களில் முக்கியமானவர்களான கைக்கோளர்களை வேளங்களோடு தொடர்புபடுத்தி ஒருசில கல்வெட்டுகள் குறிப்பிட்டாலும், வேளத்தைப் படைகளோடு தொடர்புடைய ஓர் அமைப்பாகக் கருதமுடியாது.

பழைய வேளம், பெரிய வேளம், ஆழ்வார் வேளம், பெருமாள் வேளம் என்பன போன்ற பெயர்கள் அவ்வேளங்களின் காலம், முக்கியத்துவம், அளவு, தன்மை போன்றவற்றை முன்வைத்து அழைக்கப்பட்டதாகக் கருதலாம். அதுபோல், திருமஞ்சனத்தார் வேளம் என்பது அரசனின் குளியல் சடங்குகளோடும், திருப்பரிகலத்தார் வேளம் பூசை பாத்திரங்களைக் கையாள்வதோடும், திருவந்திக்காப்பு வேளம் என்பது மாலைநேரச் சடங்குகளோடும் தொடர்புடையன. எனினும், ஒரு வேளம் ஒரு குறிப்பிட்ட பணிக்கானது மட்டும் என்று கூறமுடியாது. எடுத்துக்காட்டுக்கு, அரண்மனையில் பாடகியாக வேலை செய்த ஒரு பணிப்பெண் பெரிய வேளத்தைச் சார்ந்தவள் எனக் கல்வெட்டு குறிப்பிடுகின்றது.

## பெண்டாட்டிகள்

கல்வெட்டுக் குறிப்புகள் வேளத்தோடு தொடர்புடைய நபர்களாக இருவகையினரைக் காட்டுகின்றன. இவர்களுள் பெண்டாட்டிகள் என்ற பணிப்பெண்கள் அதிக அளவிலும் தேர்ந்த படைவீரர்களாக இருந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கைக்கோளர்கள் ஒருசில இடங்களிலும் குறிப்பிடப் படுகின்றனர். முன்பு குறிப்பிட்டதுபோல், இடைக்காலத்தில் பெண்டாட்டி என்ற பதம் அரண்மனையோடு தொடர்புடைய அடிமைப் பணிப்பெண்களைச் சுட்டுவதற்காகப் பயன்படுத்தப்பட்டது. ஓர் இடத்தில் பெண்டாட்டி என்ற சொல் 'அடியாள்' (அடிமை) என்றே கூறப்பட்டுள்ளது. மேலும், ஒருசில கல்வெட்டுகள் வேளத்தோடும் அரண்மனையோடும் தொடர்புடைய பணிப்பெண்களைப் 'பெண்டு' அல்லது 'பெண்டீர்' என்றே பதிவு செய்கின்றன. பொதுவாகப் பெண்டாட்டிகள் பதிவு செய்யப்படும் அனைத்து இடங்களிலும் அவர்கள் சார்ந்திருந்த வேளத்தின் பெயர் குறிப்பிடப்படவில்லை என்பதும் கவனிக்கதக்கது. மாறாக அவர்கள் இன்னாருடைய பணிப்பெண்கள் எனக் கூறப்பட்டுள்ளனர். எதற்காக ஒருசில அரண்மனைப் பணிப்பெண்கள் பெண்டாட்டிகள் என அழைக்கப்படவில்லை என்பதற்கும், எதற்காக ஒருசில பெண்டாட்டிகளின் வேளங்களின் அடையாளங்கள் குறிப்பிடப்படவில்லை என்பதற்குமான காரணத்தையும் நம்மால் விளக்கமுடியவில்லை. எனினும் பெருவாரியான பணிப்பெண்கள் பெண்டாட்டிகள் என்ற பொதுப்பெயரால் அழைக்கப்பட்டனர் என்றும், அவர்களுள் பெரும்பாலானோர் வேளத்தோடு தொடர்புடையவர்கள் என்றும் கல்வெட்டுக் குறிப்புகளின் ஊடாக எளிதில் ஏற்றுக்கொள்ள முடியும்.

### பெண்டாட்டிகளின் சமூகப் பின்புலம்

பெண்டாட்டிகளின் குடும்ப மற்றும் சமூகப் பின்னணி குறித்துப் பதிவு செய்வதில் கல்வெட்டுகள் பொதுவாக மௌனம் காட்டுகின்றன. எனினும், பன்னிரெண்டாம் நூற்றாண்டைச் சேர்ந்த கல்வெட்டு ஒன்று ஒரு முக்கியமான குறிப்பைக் கொடுக்கின்றது. பாண்டிய அரசன் வீரபாண்டியனைப் போரில் வெற்றிகண்ட சோழ அரசன் மூன்றாம் குலோத்துங்கனின் மெய்க்கீர்த்தியைக் (புகழ்மாலை) கொடுக்கும் இக்கல்வெட்டு, இப்போர் வீரபாண்டியனின் அழகிய பெண்கள் குலோத்துங்கனின் வேளத்தில் நுழைவதற்குக் காரணமாக அமைந்தது எனக் குறிப்பிடுகின்றது.

அதுபோல் மற்றொரு கல்வெட்டில் குலோத்துங்கனின் மெய்கீர்த்தி இப்போர் பாண்டியனின் இளம் அரசியைச் சோழனின் வேளத்திற்குக் கொண்டுவந்தது பற்றிய செய்தி இடம்பெறுகிறது. குலோத்துங்கன் காலத்தில் எழுதப்பட்ட கலிங்கத்துப்பரணி என்ற நூல், போரில் வெற்றிபெற்றுத் தலைநகருக்குத் திரும்பும் சோழப் படைவீரர்களை வரவேற்க வேளத்துப் பெண்களைக் 'கதவைத் திறங்கள்' என அழைப்பது போன்று எழுதப்பட்ட சில பாடல்களைக் கொண்டுள்ளது. அவை, அவர்களை அழகிய பாண்டிய நாட்டுப் பெண்களே, துளு நாட்டுப் பெண்களே, மலைநாட்டுப் பெண்களே, கர்நாடகப் பெண்களே என அழைக்கின்றன. இதே போன்று, சோழர்கால உலா இலக்கியங்களும், அரசர்கள் நகரவீதியில் உலா வரும்போது அவர்களைப் பார்ப்பதற்கு நின்ற வேளத்துப் பெண்களை வெவ்வேறு நாடுகளிலிருந்து கொண்டுவரப்பட்ட பெண்களின் சந்ததிகள் எனக் குறிப்பிடுகின்றன. மற்றொரு வகையில், சோழ அரசர்களுக்குச் சிற்றரசர்கள் கொடுத்த கப்பங்கள் மூலமாகவும் பெண்கள் வேளத்திற்குக் கொண்டு வரப்பட்டிருக்கலாம். இது குறித்தும் கலிங்கத்துப்பரணியும் ஒருசில கல்வெட்டுகளும் குறிப்பிடுகின்றன. எனவே, பெரும்பான்மையான வேளத்தைச் சேர்ந்த பெண்கள் எதிரிநாட்டு அரசர்களோடு நடைபெற்ற போரின்போது பிடிபட்டவர்கள் அல்லது சிற்றரசர்கள் கொடுத்த கப்பங்கள் மூலம் கொண்டுவரப்பட்டவர்கள் என உறுதியாகக் கூறலாம். இடைக்காலத் தென்னிந்தியாவில், போரில் வெற்றிபெற்ற படைகள் தோல்வியடைந்தோரின் நாட்டைச் சேர்ந்த பெண்களைப் பிடித்துவருவதும் சிற்றரசர்கள் பெண்களைப் பேரரசர்களுக்குக் கப்பங்களாகச் செலுத்துவதும் பொதுவான செயல்பாடாக இருந்துள்ளதை வெவ்வேறு தரவுகள் உறுதிப்படப் பதிவு செய்கின்றன. போர்கள் நிறைந்த இராசராசன் மற்றும் இராசேந்திர சோழன் காலத்துக் கல்வெட்டுகளிலேயே வேளத்தைப் பற்றிய குறிப்புகள் அதிகமாகக் காணப்படுகின்றன என்பதும் குறிப்பிடத்தக்கது.

- தொடரும்

●

கட்டுரையாளர்: பேராசிரியர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# மணிமேகலையை ஏன் வாசிக்க வேண்டும்?

மணிமேகலை என் நெஞ்சுக்கு மிகவும் நெருக்கமான காவியம். இக்காவியம் குறித்து முதுபெரும் தோழர் கே.டி.கே. தங்கமணி, தோழர். ஜீவபாரதி உள்ளிட்ட சிலரின் நூல்களை வாசித்துள்ளேன். தீராநதியில் அ. மார்க்ஸ் தொடராக எழுதியபோது அவ்வப்போது வாசித்துள்ளேன். மூலமும் உரையும் வாசித்துள்ளேன். இதற்கு ஈடான இன்னொரு காவியம் இல்லை என்றே சொல்லுவேன். அந்த அளவு என் மனதைக் கொள்ளை கொண்ட காவியம் இது. இம்முறை அ.மார்க்சின் மணிமேகலை வெளிவந்த சூட்டோடு வாங்கிவிட்டேன். வெளிநாட்டில் இருந்தபடி வாசித்தேன். இந்நூலை ஒவ்வொருவரும் வாசிக்க வேண்டும் என சிபாரிசு செய்கிறேன்.

மணிமேகலை காப்பியத்தின் தனித்துவங்களையும் சிறப்புகளையும் ஓர் இடதுசாரி கூர்நோக்கோடு இந்நூல் நெடுக கட்டுரைகளாகத் தந்துள்ளார் அ.மார்க்ஸ். முதல் பாகத்தில் 38 கட்டுரைகளும் , இரண்டாம் பாகத்தில் 22 கட்டுரைகளும், மூன்றாம் பாகத்தில் [இரண்டாம் பாகத் தொகுப்பில் அடங்கியது] 17 கட்டுரைகளும், முதல் பாகத் தொகுப்பின் இறுதியில் 'சாத்தனாரின் மணிமேகலை மூல காப்பியச் சுருக்கமும்" இடம் பெற்றுள்ளது. 'தீராநதி'யில் கிட்டத்தட்ட நான்கு ஆண்டுகள் தொடராக வந்த கட்டுரைகளின் தொகுப்பு என்பதால் அதற்குரிய பலமும் பலவீனமும் உள்ளடக்கியதே இத்தொகுப்பு நூல்.

மணிமேகலை எவ்வளவு உயர்வான சிந்தனைகளை உள்ளடக்கியது என்பதில் ஐயமில்லை.அதனை எடுதுக்காட்டுவதையே அ. மார்க்ஸின் இந்நூல் தன் முதன்மை இலக்காகக் கொண்டுள்ளது. மணிமேகலை 30 அத்தியாயங்களைக் கொண்டது. மொத்தம் 4758 வரிகள். 16 கிளைக்கதைகள். ஒவ்வொரு கிளைக்கதையும் பௌத்த நெறி ஒன்றை வலியுறுத்தும் வண்ணம் அமையப்பெற்றது. எனவே மணிமேகலையின் நூல் கட்டுமானம் சற்று சிக்கலானது. அந்த சிக்கல்களை அறுத்து மணிமேகலை பேசும் அறத்தை படம் பிடிக்கிற சவாலான பணியைத்தான் அ.மார்க்ஸ் செய்துள்ளார்.

இரட்டைக் காப்பியங்கள் எனச் சொல்லப்படுகிற சிலப்பதிகாரத்திலும் மணிமேகலையிலும் கண்ணகி, மணிமேகலை, மாதவி ,சித்திராபதி, மாசாத்துவன், அறவாணர், இளங்கோ ,சாத்தனார் என முக்கிய பாத்திரங்கள் ஒன்றாக இருப்பினும் பாத்திரங்களை வார்த்ததில் பாரிய வேறுபாடு உண்டு. இதனை இந்நூலில் பல இடங்களின் மார்க்ஸ் நிறுவுகிறார். குறிப்பாக சிலம்பு சமண காவியமாக இருப்பினும் நூல் நெடுக ஒருவித சமய சமரசம் பேணப்படும்; ஆனால் மணிமேகலை பௌத்த நெறியை ஓங்கி ஒலிக்கும்.

இளங்கோவடிகளின் சிலப்பதிகாரத்தில் கண்ணகியை கடைசியில் பத்தினி தெய்வமாக காட்சிப்படுத்த ஏதுவாக முதல் காண்டத்தில் வர்ணிக்கும் போதே உயர்வு நவிர்ச்சியை கையாள்வதாக ம.பொ.சி தன் "விளக்கத் தெளிவுரை"யில் சுட்டிக்காட்டுவார்.

'மணிமேகலைத் துறவு' என பெயர் பெற்ற இக்காவியத்தில் ஓர் இளம் பெண் துறவு நோக்கி பயணிக்கும் போதும், இளம் பெண்ணுக்கே உரிய காதல், உளவியல் போராட்டம் இவற்றை சாத்தனார் நேர்த்தியாய் சொல்லியிருப்பார் இப்பாங்கை அ.மார்க்ஸ் எடுத்துக் காட்டுகிறார்.

பத்தினி என்கிற கோட்பாட்டை மணிமேகலை போற்றவில்லை. மணிமேகலை பத்தினி தெய்வம் கண்ணகியை சந்திக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போது, நீங்கள் "கற்புக் கடன் பூண்டு நுங்கடன்.." முடித்தது சரியா? மதுரையை எரித்தது சரியா என வலுவாகக் கேள்வி எழுப்புகிறார். பத்தினி கோட்பாட்டை கேள்விக்குள்ளாக்கும் மணிமேகலை மக்களின் உளவியலில் ஆழப்பதிந்துள்ள பத்தினி கருத்தியலை முற்றாக எதிர்நிலையில் நிறுத்தாமல் சமரசமும் செய்கிறது. மணிமேகலை முதலில் அட்சய பாத்திரத்தில் பிச்சை ஏற்க ஆதிரை என்ற பத்தினியைத் தேர்ந்தெடுத்தார் என்பது இதானால்தான் என்கிறார் அ.மார்க்ஸ்.

சைவ மரபினர் நெடுங்காலமாக சிலப்பதிகாரம், திருக்குறளை ஏற்றுக்கொண்ட போதிலும் மணிமேகலையை ஏற்க மறுத்தது ஏன் என்கிற கேள்வியை எழுப்பி விடைதேட முயன்றிருக்கிறார் அ.மார்க்ஸ்.

"மணிமேகலை அவர்களால் செரித்துக்கொள்ள இயலாத பல அம்சங்களைக் கொண்டிருந்ததுதான் இதன் அடிப்படை. ஒரு பெண்ணுக்கு காப்பிய மரபில் அளிக்கப்படும் பாத்திர இலக்கணங்களை முற்றிலும் மீறியவள் மணிமேகலை காதல் பிரிவு ,கணவனைத் தொழுதெழும் கற்பு ,இல்வாழ்க்கை, தாய்மை என்கிற பாத்திர மரபு மணிமேகலையில் தலைகீழாகக் கவிழ்க்கப்படுகிறது. காப்பிய நாயகியின் லட்சியம் இல்லறம் அல்ல. இங்கு காப்பியத்தின் பெயரே மணிமேகலைத் துறவு என்பதுதான்" என்கிறார் அ.மார்க்ஸ்.

சீதை, சீதா என்கிற பெயர்கள் தமிழ்சமூகத்தில் மீண்டும் மீண்டும் பெண்களுக்கு சூட்டப்படுகிறது. சீதையும் ஓர் துயர காவியம்தான் ஆயினும் ஆணாதிக்க சிந்தனைக்கு ஏற்ற அடிமை என்பதால் சமூகம் ஏற்றுக் கொண்டாடுகிறது.ஆயின் ஆட்சிக்கு எதிராக சீறி எழுந்த கண்ணகி பெயரோ, ஊருக்கே பசிப்பிணி போக்கிய உலக முன்மாதிரி மணிமேகலை பெயரோ விதிவிலக்கவாகவே இங்கு புழங்குகிறது. இந்த சமூக உளவியலோடு நாம் மறுவாசிப்பு செய்ய வேண்டி இருக்கிறது என்பது என் கருத்து.

"மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம்" [மோசிக்கீரனார்.புறநானூறு 186] என்பதே சங்கம் தொட்டு தமிழ்ச் சமூக கருத்தாக்கமாக இருந்து வந்தது. "மன்னனே உயிர் மக்கள் வெறும் உடல்தான். மன்னன் நன்றாக இருந்தால்தான் மக்கள் நன்றாக இருக்க முடியும்" என்பது மோசிக்கீரனாரின் வாதம். ஆனால் மணிமேகலையில் ஜனநாயகம் சற்று மூச்சுவிடுகிறது. மணிமேகலை சொல்கிறது, "மன்னவன் மகனே கேள்! கோ [அரசன்] நிலை தவறினால் கோள்களும் நிலை தவறும். கோள்கள் நிலை தவறினால் மழை பொய்க்கும், மழை பொய்த்தால் மன்னுயிர் [மனிதர்கள்] அழிவர். மன்னுயிர் அழிந்தால் மன்னுயிர் எல்லாம் தன்னுயிர் எனக் கருத வேண்டிய மண்ணாள் வேந்தனின் தன்மையும் அழியும்." [மணி 7.7 -12] மக்கள்தான் உயிர்.மக்கள் நன்றாக இருந்தால்தான் மன்னன் நன்றாக இருக்க முடியும்" என மோசிக்கீரனாருக்கு எதிர்நிலையை மணிமேகலை எடுப்பதை அ.மார்க்ஸ் எடுத்துக் காட்டுகிறார்.

"பசியும் பிணியும் பகையும் நீங்கி வசியும் [மழையும்] வளனும் சுரக்க" இந்திரவிழாவுக்கு அழைப்பு விடப்படுகிறது முதல் அத்தியாயத்திலேயே. பசிப்பிணிக்கு எதிராக உரக்க ஒலித்த மானுடநேயக் குரலே மணிமேகலை. நூல் நெடுக பௌத்த அறம் ஓங்கி இருப்பினும் பசிப்பிணிக்கு எதிராக 'அட்சயபாத்திரம்' எனும் அழகிய கற்பனையைப் படைத்த சாத்தனார் , அதனை முதலில் ஆபுத்திரன் கையில் கொடுக்கிறார் ,பின்னர் அதை மணிமேகலை கையில் தருகிறார். ஆபுத்திரனின் பிறப்பு என்பது தாய்க்கு தவறான வழியில் பிறந்தவன், மணிமேகலை கணிகையர் குலத்தில் வந்தவர். ஆக குல ஒழுக்க விதிகளை சுக்குநூறாக உடைத் தெறிந்து பசிப்பிணியை போக்கும் அட்சய பாத்திரத்தை அவர்கள் கையில் கொடுத்து வற்றா மானுட அன்பே உயர் ஒழுக்கமென நிறுவிய காப்பியம் இது. அ.மார்க்ஸ் தம் கட்டுரைகளில் பல இடங்களில் இதனை எடுத்துக் காட்டுகிறார்.

"காணார் ,கேளார், கால்முடப்பட்டோர், பேணுநர் இல்லார் ,பிணி நடுக்குற்றார் ..." என யார் யாருக்கெல்லாம் பசிப்பிணி ஆற்ற வேண்டும் என விரிந்து பரந்து வழிகாட்டுகிறது. இங்கு இன்னொரு செய்தி, "மாற்றுத் திறனாளி" என்ற சொல்லை இப்போது நாம் ஏற்றுள்ளோம். குருடர், செவிடர் ,நொண்டி போன்ற சொற்களை இழிவெனச் சொல்கிறோம். சிலப்பதிகாரம் உடபட பழந்தமிழ் இலக்கியங்களில் இச்சொற்களே விரவி இருக்க, மணிமேகலையே மாற்றுச் சொற்களைப் படைத்து முன்னத்தி ஏர் ஆகிறது என்பது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என் அபிப்பிராயம். அ.மார்க்ஸ் இதனைக் கருத்தில் கொள்ளவில்லை. அரும்பசி களைய எல்லையற்ற வெளியை உருவாக்கி இல்லை எனாது வழங்கிய அட்சய பாத்திரக் கற்பனை கூட ஒரு வகை உட்டோபியன் சோஷலிசம் என நான் கருதுவது உண்டு. ஓர் நூலில் எழுதியும் இருக்கிறேன். பசிப்பிணி ஆற்ற வேண்டிய மக்கள் தொகுதியாக காணார் கேளார் என நீளும் பட்டியலில் விலங்கினங்களையும் சேர்த்த சாத்தனார் ஓரிடத்தில் 'மடிநல்கூர்த்த மக்கள்' எனச் சொல்லிச் செல்கிறார். அது யாரைக் குறிக்கும் என அ.மார்க்ஸ் கேள்வி எழுப்பிச் செல்கிறார்.

போரில் வென்று சிறைபிடிக்கப்பட்ட எதிரிநாட்டுக் கைதிகளை இந்திரவிழாவின் போது விடுதலை செய்ததாக ம.பொ.சி தன் சிலப்பதிகார விளக்கத் தெளிவுரையில் எடுதுக்காட்டுவார். ஆனால் "சிறைக்கோட்டத்தையே அறக்கோட்டமாக்கி" மனித உரிமையின் பெருங் குரலாக மணிமேகலை ஒலித்ததை, மனித உரிமைப் போராளியான அ.மார்க்ஸ் உளம்தோய்ந்து எடுத்துரைத்துள்ளார்.

பல்வேறு சமயத்தாருடன் உரையாடி அவர்கள் சமயநெறி அறிந்தாய்ந்து பௌத்தம் சேர்கிறார் மணிமேகலை. அளவை வாதி, சைவவாதி, பிரம்மவாதி, வைணவவாதி, வேதவாதி, ஆசிகவாதி என எல்லோரிடம் பாடம் கேட்கிறார். ஆயினும் இறுதியில் பௌத்தமே உயர்வென சொல்லி முடிக்கிறார். நீலகேசி பிற சமயத்தை வாதில் வென்று சமணத்தை நிறுவியதுபோல் மணிமேகலை செய்யவில்லை. எல்லா சமய நெறிகளையும் அறிந்து; பௌத்தமே மேலானது என முடிவுக்கு வருகிறார். அப்பாத்திரத்தின் வழி வாசகனையும் வரச்செய்யும் காவிய நுட்பம் மணிகேலைக்குரியது, அதே சமயம் சமய பகையை விசிறாமல் பல்வேறு சமயங்களின் இருப்பையும் அங்கீகரிக்கிறது. அ. மார்க்ஸ் இதனை எடுத்துக் காட்டத் தவறவில்லை.

பட்டினிக்கு எதிரான மாபெரும் மானுட பேரெழுச்சியாகவும்; பத்தினி கோட்பாடு ,குலதர்மம் இவற்றை மீறி உயர் ஒழுக்கத்தை பறை சாற்றுவதாகவும் ; ஓர் இளம் பெண் துறவு பூணுவதை மையம் கொண்டதாகவும் அமையப்பெற்ற மணிமேகலையில், கிளைக்கதைகள் மூலம் பொளத்த அறமே உரைக்கப்படுவதால் இந்நூல் நெடுக தத்துவமும் அறபோதனையும் பிணைந்திருப்பதை அறிவோம். அதனை எடுத்துக்காட்ட அ. மார்க்ஸ் தவறவில்லை. அதன் தத்துவப் புலம் குறித்து நான் இங்கு பேசப்புகவில்லை. நூலை வாசித்தறிக!

இப்படி இந்நூலில் எடுத்துரைக்கப்பட்ட கருத்துகளை சொல்லச் சொல்ல நீளும்; இத்தோடு நிறுத்திக் கொள்கிறேன். நீங்கள் வாசித்து அறிவது மிகவும் நன்று!

குறிப்பாக இரண்டு செய்திகளை சுட்டிக்காட்டுவது அவசியமென்று கருதுகிறேன்.

1] எழுத்துப் பிழைகள் உறுத்துகின்றன. தத்துவ வாதம் மிகுந்த பகுதியில் வாசிப்புக்கு இடையூறு செய்கிறது. அடுத்த பதிப்பில் சரி செய்க! 134 ஆம் பக்கத்தில் 17 வது அத்தியாயத் தலைப்பே "பட்டினி வழிபாடு" என்றிருக்கிறது. 'பத்தினி வழிபாடு' என்றல்லவா இருந்திருக்க வேண்டும். அத்தியாய உட்பொருளிலும் அப்படியே உள்ளது.

2] கூறியது கூறல் வாரந்தோறும் எழுதும் போது கட்டாயம் தேவைப்படும் ஏனெனில் வாசகர் நினைவுத் தொடர்ச்சிக்காக. ஆனால் நூலாக்கும் போது பத்தி பத்தியாக பக்கம் பக்கமாகக் கூறியது கூறல் மீண்டும் மீண்டும் வருவது வாசிப்புக்கு இடையூறு செய்யும். எடிட் செய்தால் பக்கங்களின் எண்ணிக்கையும் நிச்சயம் குறையும். அடுத்த பதிப்பில் இவ்விரண்டையும் சரி செய்வாரென தோழமையோடு எதிர்பார்க்கிறேன்.

இடதுசாரி மற்றும் முற்போக்கு பக்கம் நிற்போர் ,கம்யூனிஸ்ட் கட்சியோடு ஏதோ ஒரு வகையில் தன்னை அடையாளம் காட்டிக் கொள்வோர், பாசிச எதிர்ப்பில் தன்னை முன்நிறுத்துவோர் வாசிக்க வேண்டிய காப்பியம்' "மணிமேகலை". அதனை நோக்கி ஆற்றுப்படுத்துகிறார் இந்நூல் வழி அ.மார்க்ஸ்.

**நெஞ்சில் கனல் மணக்கும் பூக்கள்: மணிமேகலை**
**[ இரண்டு பாகங்கள் ]**
**ஆசிரியர்: அ.மார்க்ஸ், வெளியீடு: எழுத்து பிரசுரம்,**
**தொடர்புக்கு: zerodegreepublishing@ gmail.com/ 89250 61999**
**பக்கங்கள்: 350+240 விலை: ரூ.420+290**

●

கட்டுரையாளர்: எழுத்தாளர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மடல் திறப்பு

புத்தகக் கண்காட்சியில் கண்டெடுத்த சனாதனலிக்ஸ் நூலை இரண்டு பக்கத்திற்கு அறிமுகம் செய்ததும் அந்நூலை நியூ செஞ்சுரி புத்தக நிலையம் வெளியிட்டிருப்பதும் புருவம் உயரச் செய்தது. ஆதி மனிதன் சமூகமாக கூடி வாழ தொடங்கியபோது அவனை அறிவபூர்வமாக முன்னெடுத்துச் செல்ல ஆன்மீகம் என்ற வழிமுறை மூலம் மதம் தோற்றுவிக்கப்பட்டது. அதில் ஆதிக்கம் பெற்ற ஒரு சமூகம் தங்கள் நலனுக்காக சில குளறுபடிகளை நடத்தியபோது அதை சீர்திருத்த வேண்டிய கட்டாயம் நேர்ந்தது. சித்தர்கள், வள்ளலார், நாராயணகுரு, புத்தர், வைகுண்டசாமி என பலரும் பல பகுதிகளில் அதனை தொடங்கி வைக்க, தமிழகம் தழுவி பெரியார் அதை செவ்வனே செய்தார். ஆங்கிலேயர் வருகைக்குப் பின் அறிவியல் விழிப்புணர்வு மேலோங்க மூட நம்பிக்கைகளை புறந்தள்ளும் குணம் பொதுமக்களுக்கு இயல்பாகவே ஏற்பட்டது. இதற்கு பகுத்தறிவு இயக்கம் பக்கபலமானது..எனவே எந்த தத்துவத்திற்குள்ளும், கொள்கைக்குள்ளும் நம்மை சிறைப்படுத்திக் கொள்ளாமல் வெள்ளை காகிதமாய் நம் மூளையை நடுநிலைப்படுத்தி, வாரியாரோடு பெரியாரையும் அலசி, சோசியலிசத்தையும் கேபிடலிசத்தையும் மோத விட்டு திராவிடத்தையும் தமிழ் தேசியத்தையும் எடைபோட்டு நமக்குத் தேவையானதை தேர்ந்தெடுத்து அதில் உறுதியாக செல்ல வேண்டுமென உணர்த்தின.

_ அ.யாழினிபர்வதம், சென்னை.78.

'காக்கைச் சிறகினிலே' இலக்கிய மாத இதழ், எனும் பெயர் தாங்கி வந்தாலும், அரசியல் பொருளாதாரம் தத்துவம்... எல்லா பொருள் குறித்தும், கருத்துச் செறிவுடன் கட்டுரைகள் தாங்கி வரும் இதழ். மார்க்சிய, அம்பேத்காரிய, பெரியாரிய சிந்தனைகளை, மைய்ய ஒளிவிளக்காக ஏந்தி, கட்டுரைகள், கதைகள், கவிதைகள், ஓவியங்களுடன் வெளிவரும் இதழ் 'காக்கைச் சிறகினிலே'. மாற்று சிந்தனைகளுக்கு-கருத்துகளுக்கு இடம் உண்டா? நிச்சயமாக உண்டு. ஆனால், அவை, 'சத்தும் சாரமும்' உள்ளுறைவதாக இருந்திட வேண்டும் என்பது ஒரு நிபந்தனை. காக்கைச் சிறகினிலே இதழ், சிவப்பும் கருப்பும் நீலமும் கலந்த -இணைந்த, 'அறிவுச் சிறகுகள்' தரும் இதழ் 'காக்கைச் சிறகினிலே'! ஒவ்வொரு மாதமும் வாசித்து, யோசித்து,விவாதிக்க விரும்புவோர், வாசிக்க வேண்டிய இதழ் 'காக்கைச் சிறகினிலே! காக்கைச் சிறகினிலே இதழில் எழுதும் படைப்பாளர்களை ஒரு பார்வை ,பார்த்தாலே நாமும் சந்தா செலுத்தி,இதழை இப்போதே,இந்த மாதமேபெற வேண்டும் என்ற எண்ணம் செயலுக்கு தூண்டும்! நான் இப்படித்தான் சந்தாதாரர் ஆனேன்!

(முகநூலில் வந்தது) வீ.வெள்ளிங்கிரி, கோவை

'தாயே தாரக மந்திரம்' சின்னஞ் சிறிய கதைதான் என்றாலும் பென்னம் பெரிய தாரக மந்திரத்தை தந்தது. 'வக்புச் சட்டத் திருத்தம்' முசுலீம்களின் முகத்தில் கலர்பூசி 'ஹோலி பண்டிகை' கொண்டாடும் செயலாகும். இந்து கோவில்களில் உள்ள அறங்காவலர் குழுவில் முசுலீமுக்கு இடம் கொடுப்பீர்களா? என்று கேட்க எங்களுக்கு உரிமை உண்டா இல்லையா? என்று முசுலீம் சகோதரர்கள் கேட்கமாட்டார்களா? ஸ்ரீ நாராயண குரு 'உலக மக்கள் அனைவரும் ஒன்றே' என்ற சத்தியக் குரல் கொடுத்த சன்மார்க்க மேதை. ஒடுக்கப்பட்ட மக்களின் வழிபாட்டுக்காக ஊர்தோறும் கோவில்கள் எழுப்பினார். கூடவே அறிவுபெற கல்விக்கூடங்களையும் அமைத்தார். ஆன்மிகம் மூலம் சமூகப் புரட்சி செய்தவர்.

வெ.சின்னச்சாமி, மானூர், பழனி

"காக்கைச் சிறகினிலே" ஏப்ரல் 2025 இதழில் வெளியான உரிமைகளை மறுப்பது வாழ்வாதாரங்களைப் பறிப்பது. 'தலையங்கம் அருமையிலும் அருமை. மதத்திலிருந்து அரசியலைப் பிரித்து ஜனநாயகம் மலர்ந்த காலம் போய் மீண்டும் மதமும் அரசியலும் கார்ப்பரேட்டுகளுடன் இணைந்து சிறுபான்மையினரை ஒடுக்குவது, பெரும்பாலான மக்களின் ஜனநாயக உரிமைகளையும் வாழ்வாதாரங்களையும் மறுப்பதென்பது கொடுமையிலும் கொடுமை என்பது நூற்றுக்கு நூறு உண்மை. பெரியாரைப் பெட்டிக்குள் பூட்டவில்லை என்றும் மே.து.ராசுகுமாரின் கட்டுரையைப் புகழ்ந்துரைக்க வார்த்தைகள் இல்லை. பெரியாரை விட்டால் தமிழர்க்கு நாதி இல்லை. பெரியாரியமே மனித குலத்தை வாழவைக்கும் என்பதை தோழர் மே.து.ரா. அற்புதமாய் எழுதியுள்ளார். வஞ்சிக்கப்படும் தென் மாநிலங்கள்' என்னும் கௌசிக்கின் எழுத்தோவியம் வெகு சிறப்பு. அவர் எழுதியதுபோல் ஒன்றிய அரசிடம் குவிந்துள்ள அதிகாரங்களிலிருந்து உரிமைகளைப் பெற மாநிலங்கள் இனி போராட வேண்டித்தானிருக்கும் என்பதில் சிறிதும் ஐயமில்லை.

தங்க சங்கரபாண்டியன், சென்னை - 74

காக்கைச் சிறகினிலே ஏப்ரல் இதழ் ஒவ்வொன்றும் மிகச் சிறப்பான கட்டுரைகளையும் தாங்கிவருவது மகிழ்ச்சியாக இருக்கிறது. நிறையத் தகவல்களையும் கருத்துக்களையும் தெரிந்துகொள்ள வாய்ப்பாக இருக்கிறது. குறிப்பாக இன்றைய காலகட்டத்தில் அரசுக்கு முரணான கருத்துகளைக் கூறவோ அல்லது அரசை எதிர்த்து குரல் கொடுக்கக் கூடிய ஊடகங்களோ கிட்டத்தட்ட இல்லை என்றே சொல்லிவிடலாம். அப்படியான ஒரு சூழலில் தயக்கமில்லாமல் அரசு, அரசினுடைய கொள்கைகள் குறித்து துணிச்சலாகவும் விரிவாகவும் ஆழமாகவும் எழுதும் கட்டுரைகளைத் தாங்கி வருவது மகிழ்ச்சியாகவும் நம்பிக்கையூட்டுவதாகவும் இருக்கிறது.

அ. லெ. சொக்கலிங்கம், புதுக்கோட்டை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# மறந்த காவியம் நீலகேசி

மதுரைக் கல்லூரியில் மெய்யியல் (தத்துவம்) பேராசிரியராகவும் முதல்வராகவும் பணியாற்றியவரும், மார்க்சிய ஈடுபாடுள்ளவரும், களப்பணியில் மக்கள் சிவில் உரிமைக் கழகத்தில் செயல்படுகிறவருமான பேராசிரியர் முனைவர் இரா.முரளி, சாக்ரடீஸ் ஸ்டுடியோ என்ற பெயரில் "யூ டியூப்" மற்றும் சமூக ஊடகங்களிலும் களமாடுபவர். நீண்ட நெடிய மெய்யியல் மரபு தமிழுக்கு உள்ளதை அறிமுகப்படுத்தும் வகையில், இங்கு நிலவிய தொல் சமய மரபுகளுக்கிடையேயான விவாதங்களை விளக்கும் நூல்களில் எஞ்சியுள்ள ஐஞ்சிறு காப்பியங்களில் ஒன்றான 'நீலகேசி' என்ற நூலை ஆராய்ந்து அவர் எழுதியது 'மறந்த காவியம் நீலகேசி'.

அகழாய்வுகள், கல்வெட்டுகள், பாறை ஓவியங்கள், மானுடவியல் ஆய்வுகள், பழைய இலக்கிய இலக்கியங்கள் ஆகியவற்றையும் புதிய அறிவியல் கண்ணோட்டத்தில் ஆராய்ந்து பல கட்டுரைகள் இப்போது வெளிவருகின்றன. இவற்றையெல்லாம் கற்றறிந்த இந்நூலாசிரியர் நீலகேசி என்ற சமணப் பெண் அறிஞர் (இவர் தொண்டை மண்டலப் பழையனூர் நீலியாக இருக்கலாம் என்கிறார்) மற்ற சமயக் கணக்கர்களுடன் வாதிட்டு வென்றதை விளக்குகிறார். இந்நூலின் பாடல்கள் வாயிலாகவும் முரளி விளக்கிச் சொல்லும் முறையின் வாயிலாகவும் தமிழரின் அறிவுத்தோற்ற மரபு நெடியது என்பதை அறிகிறோம். நீலகேசி ஒரு கற்பனைப் படைப்பு என்றாலும் தமிழர் மெய்யியல் மரபுடன் தொடர்புடையதாக நீலி, நீலகேசி போன்ற பெயர்கள் இடம்பெறுகின்றன என்கிறார்.

முனிச்சந்திரன் என்ற சமண அறிஞரிடம் மாணவியாகக் கற்றுத் தேர்ந்த நீலகேசி பல இடங்களுக்கும் சென்று பிற மெய்யியலாரோடு வாதிட்டு வென்றதை இது பதிவு செய்கிறது. அக்காலத்தில் பௌத்தமும் சமணமும் பெருவழக்காக இருந்தன. எனவே முதலில் குண்டலகேசி, அருக்க சந்திரன், மொக்கலன், புத்தர் ஆகிய பௌத்த அறிஞர்களுடன் உரையாடலை நிகழ்த்தி உள்ளார். அக் காலத்தில் சைவ, வைணவச் சமயங்கள் இல்லை. பௌத்தமே சமணத்துக்குப் பெருஞ் சவாலாக இருந்தது. அவர்களை வென்றபின் ஆசீவகம், சாங்கியம், வைசேடிகம், வேதவாதம், பூதவாதம் ஆகிய மெய்யியல்களோடு மோதி வென்றிருக்கிறார். வேதவாதம் தவிர்த்த மற்ற விவாதங்களெல்லாம் பொருளை முதன்மைப்படுத்தியே நடந்ததை அறிகிறோம். அத்துடன் அவர்களிடம் இயங்கியல் பார்வையும் உள்ளதை அறிந்து வியக்கிறோம்.

பூதிகன் என்ற அந்தண வேத ஆசிரியருடன் நீலகேசி விவாதிக்கத் தொடங்குகிறார். வேதங்கள் தாமே சுயம்புவாகத் தோன்றியவை என்றும் அவை அனாதியானவை என்றும் பூதிகன் கூறுவதை மறுத்து, அவை மனிதர்களால் எழுதப்பட்டவை, முரண்பாடுகளின் மூட்டை, ஒருபுறம் தீயவை என்று ஒதுக்கும் வேதமே இன்னோரிடத்தில் அதை நியாயப்படுத்துகிறது என்றெல்லாம் அடுக்கடுக்காக வாதிடுகிறாள். இதனால் சினங்கொண்ட பூதிகன் "நீ வேதம் படிப்பதற்குத் தடைசெய்யப்பட்ட சூத்திரச்சி..... அதனால் அதைப் பற்றிக் குற்றம் கூறும் தகுதி உனக்கு இல்லை" என்று சினங்கொண்டு ஏசுகிறான். மற்ற மெய்யியலாரெல்லாம் தம் குற்றம் கண்டு திருத்திக்கொள்ளுகின்றனர். வைதிகர்கள் மட்டுமே தம் குற்றம் காணாமல், சாதி வருணப் பாகுபாட்டால் மக்களைப் பிரித்து ஒதுக்குகிறார்கள். "இந்த வகையில் சாதியப் பாகுபாடு தமிழகத்தில் அக்காலத்தில் கடைப்பிடிக்கப்பட்டது என்பதை மட்டுமின்றி வேதங்களைச் சூத்திரர்கள் பயில்வதற்கான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மெய்யியல் அல்லது தத்துவம் என்பது உலகக் கண்ணோட்டம் ஆகும். இந்த உலகமும் அது அடங்கியிருக்கிற பேரண்டமும் உண்டானதும், தொடர்ந்து இயங்குவதும் எப்படி என்பதே இதன் சாரமாகும். வேதவாதம் தவிர்த்த மற்ற நெறிகள் ஞானம் பெறுவதையும் ஒழுக்கமுடன் வாழ்வதையும் வலியுறுத்துவதைக் காணலாம். நம் சங்க இலக்கியம் தவிர்த்த மற்ற அறிவியல், நீதிநெறி இலக்கியங்கள் எல்லாம் சமண பௌத்தக் கொடைகளே ஆகும்.**

வாய்ப்பு மறுக்கப்பட்டதும் தெரிகிறது. அது மட்டுமின்றி இந்தச் சமூகப் பிரச்சினையை அப்போதே தம் நூலில் நூலாசிரியர் சுட்டுவதையும் கவனிக்கவேண்டும்" என்று முரளி இடையிடையே நீலகேசியின் இக்காலப் பொருத்தப்பாட்டைச் சுட்டுகிறார்.

இறுதியாக நீலகேசி பிசாசகன் என்ற பூதவாதியுடன் மோதுகிறாள். இவர்கள் சாருவாகர்கள் எனப்படுவர். இவர்களைப் பொருள்முதலர் எனலாம். இவர்கள் கடவுள், ஆன்மா, மறுபிறவி ஆகியவற்றை ஏற்காதவர்கள். சாருவாக நூல்கள் தமக்கு நேர் எதிரானவை என்பதால் வேதவாதிகளால் அழிக்கப்பட்டுவிட்டன. இதைப் போன்ற நூல்களில் கிடைக்கும் குறிப்புகளையும் கொண்டே அந்த மெய்யியலை அறிய முடிகிறது. அச்சுக்கலை வந்த பின்னும் பரசமய ஏடுகளை மடங்கள் அழித்துவிட்டதை அறிகிறோம். பிசாசகனோடு வாதிட்டுத் தன் கருத்தை அவர் ஒப்புக்கொள்ளாத நிலையில் தன் பேயுருவைக் காட்டித் தோற்கடிப்பதாக முடிகிறது.

மெய்யியல் அல்லது தத்துவம் என்பது உலகக் கண்ணோட்டம் ஆகும். இந்த உலகமும் அது அடங்கியிருக்கிற பேரண்டமும் உண்டானதும், தொடர்ந்து இயங்குவதும் எப்படி என்பதே இதன் சாரமாகும். வேதவாதம் தவிர்த்த மற்ற நெறிகள் ஞானம் பெறுவதையும் ஒழுக்கமுடன் வாழ்வதையும் வலியுறுத்துவதைக் காணலாம். நம் சங்க இலக்கியம் தவிர்த்த மற்ற அறிவியல், நீதிநெறி இலக்கியங்கள் எல்லாம் சமண பௌத்தக் கொடைகளே ஆகும். பௌத்த மூலநூல்களைக் குற்றாய்வு செய்தும், அவர்களுடைய நெறிபிறழ்ந்த வாழ்க்கையைச் சுட்டிக்காட்டியும் நீலகேசி வெல்லுகிறார். ஒளி ஒலியைவிட வேகமாகச் செல்வது, முகில்களில் சூரியக் கதிர்கள் படுவதால் வானவில் தோன்றுவது, பொருள்கள் உரசுவதால் ஒலி உண்டாவது போன்ற அறிவியற் கருத்துகளும் ஆங்காங்கே இடம்பெறுவதைக் காண்கிறோம்.

இந்த நூல் நுணுக்கமான பல உண்மைகளை நமக்கு விளக்குகின்றன என்று நூலாசிரியர் எழுதுகிறார். ஒரு பெண் மெய்யியலாரைத் தமிழர் மெய்யியல் பரப்பில் ஆசிரியர் உருவாக்கியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. மேலும் அவளைத் தெய்வமாகக் காட்டினால் அவளது வாதங்கள் மறுப்பின்றி ஏற்றுக் கொள்ளப்பட்டு விடுமென்பதால் நீலகேசி பேயாகக் காட்டப்படுகிறாள் என்கிறார். அப்போதுதான் தர்க்க அளவிலேயே வாசகர்கள் விவாதங்களை அறிய முடியும் என்கிறார். இப்படிப் பல சிறப்புகளைப் பெற்ற நீலகேசியை அறிமுகப்படுத்தவே முனைவர் முரளி இந்நூலை எழுதியுள்ளார். மெய்யியலை அறிய விரும்பும் புதிய வாசகர்கள் இதில் பயின்றுவரும் கலைச்சொற்களைப் புரிந்துகொள்ள ஏதுவாக அடுத்த பதிப்பில் கலைச்சொல் விளக்கத்தைச் சேர்க்க வேண்டும். இறுதியாக நூலாசிரியர் முரளியின் சொற்களைக் கூறி முடிக்கிறேன்: "...பல நூற்றாண்டுகளுக்கு முன்பிருந்தே இந்தச் சாதி, வர்ண பேதம் என்பது சாதாரண மக்கள் மீது தாக்குதலாக வேத தருமம் என்ற பெயரில் இருந்து வந்திருக்கிறது என்பதை அறியும் வேளையில் இன்றும் அவை செழிப்போடு நீதிமன்ற வளாகங்களில்கூட நடமாடுவதைக் காணமுடிகிறது. பழந்தமிழரின் அறிவுக் கோட்பாடுக்கு மட்டுமின்றி, அறவாழ்வுக்கும் சான்று கூறும் நூலாக நீலகேசி அமைந்துள்ளது." இது அதற்குச் சிறப்பான அறிமுகம்.

**மறந்த காவியம் நீலகேசி**
**ஆசிரியர்: இரா.முரளி**
**நாதன் பதிப்பகம்; சென்னை-93**
**விலை: ரூ.160; தொடர்புக்கு: 98840 60274**

●

*கட்டுரையாளர்: பேராசிரியர்*

**Owned and Published and Printed by V.Muthiah and Published from 22/32 M.J.B Street,Triplicane, Chennai-600005 and Printed at Sekar Offset Printers, 50/168, Big Street, Chepauk, Chennai-600005. Editor: V.Muthiah**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2ஆம் பக்கத் தொடர்ச்சி...

# தோழர் எஸ்.வி.ஆர். 86



வாழ்வில், செயலில் பல ஏமாற்றம் அடைந்து இருக்கலாம். ஆனாலும், அதையே ஒரு படிப்பினையாகக்கொண்டு முயற்சியில் சளைக்காமல் நடந்து கொண்டுதான் வருகிறேன்.

நான் ஒரு அநாமதேய வாழ்வு வாழவில்லை என்பதும், அநாவசியமான மனிதனாய் இருந்து வரவில்லை என்பதும் எனக்கு ஒரு ஆறுதல் தரத்தக்க விஷயமாக இருந்துவந்தது.

இப்படிப்பட்ட எனது வாழ்நாள் பற்றிய விளக்கம் என்னவென்றால், 1964 செப்டம்பர் 17-ந் தேதி வியாழக்கிழமை சரியான குரோதி வருஷம் புரட்டாசி மாதம் 1-ந் தேதிக்கு எனக்கு 85 வயது முடிகிறதென்றால் அது நான் பிறந்து ஓராயிரத்து இருபது (1020) மாதங்கள் ஆகிறதுடன், நான் பிறந்து இன்றைக்கு (17-4-1964க்கு) முப்பத்தி மூவாயிரத்து நாற்பத்தேழு நாட்கள் வாழ்ந்துவிட்டேன் என்று ஆகிறது.

மற்றும், நான் 1034 ஓராயிரத்து முப்பத்தி நான்கு அமாவாசையையும் 1034 பவுர்ணமியையும் 1034 பிறையையும் கண்டுவிட்டேன் என்று ஆகிறது.

'ஆயிரம் பிறை கண்டவன் முழு ஆயுள் வாழ்ந்தவனாவான்' என்று சொல்வார்கள். அதுபோல் முழு வாழ்நாள் வாழ்ந்துவிட்டேன்.

எனவே கிரமப்படி பார்த்தால், உங்களிடம் நான் பயணம் சொல்லிக் கொள்ள வேண்டியதுதான் எனது நேர்மையான கடன். (பெரியார் சிந்தனைகள் - சமர்தர்மம் தழைக்க உதவுக - கட்டுரையிலிருந்து).

நீங்கள் என்ன சொல்கிறீர்கள் தோழர்? என்று எல்லாரும் கேட்டபோது, தமிழ்நாடு முழுவதுமிருந்து இவ்வளவு பேர் இங்கே திரண்டிருப்பதே பெரும் மகிழ்ச்சி. இதுவே சாதனை, வெற்றி என மகிழ்கிறேன் என்றார் எஸ்விஆர்.

தோழர் எஸ்விஆரின் பிறந்த நாளையொட்டி எஸ். வி. ராஜதுரை பிறந்த நாள் வெளியீடாகத் தோழர்கள் வி. முத்தையா, நிகழ் அய்க்கண், பொன். தனசேகரன் ஆகியோர் உருவாக்கிய எஸ்விஆர் மொழிபெயர்ப்பில் போலந்து கவிஞர் ஸ்டானிஸ்லோவ் ஜெர்சி எல்இசியின் 'மூதுரைகள்' குறுநூலைக் கொளத்தூர் மணி வெளியிட, பேரறிவாளன் பெற்றுக்கொண்டார், எஸ்விஆர் இணையர் முன்.

எஸ்விஆர் பிறந்த நாள் கொண்டாட்டப் பகிர்வில் கொளத்தூர் மணி, இயக்குநர் மிஷ்கின், அற்புதம்மாள், பேரறிவாளன், பேராசிரியர்கள் கல்யாணி, கோச்சடை, பா.ப. ரமணி (இந்திய கம்யூ), உயிர் எழுத்து சுதீர் செந்தில், காவல்துறை ஐ.ஜி. (ஓய்வு) இரா. சின்னசாமி, மனித உரிமைச் செயற்பாட்டாளர் புதுவை சுகுமாரன், எழுத்தாளர்கள் பாமரன், 'சோளகர்தொட்டி' ச. பாலமுருகன், வழக்கறிஞர்கள் விஜயன், முனிரத்தினம், குயிலரசன், பால நந்தகுமார், எதிர் வெளியீடு அனீஷ், விருதுநகர் மாவட்டம் வத்திராயிருப்புப் பகுதி இலக்கிய வெளிவட்டம் நண்பர்கள் மா.ராமமூர்த்தி, க.திருப்பதி, பாலகுரு, பால்ராஜ் மற்றும் தந்தை பெரியார் திராவிடர் கழக மற்றும் விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் சகாதேவன் உள்ளிட்ட தோழர்கள், இந்திய கம்யூ., மார்க்சிய கம்யூ., சி.பி.ஐ. (எம்.எல்) லிபரேஷன், மக்கள் அதிகார தோழர்கள், பத்திரிகையாளர்கள், ஆசிரியர்கள் மற்றும் தோழர்கள் என 200-க்கும் அதிகமானவர்கள் பங்கேற்றனர்.

காக்கைச் சிறகினிலே குழுவும் வாழ்த்துவதில் இணைகிறது, தோழர் எஸ்விஆர் வாழ்க வாழ்க, தந்தை பெரியாரின் அடியொற்றி நூறாண்டு வாழ்க!

•

*கட்டுரையாளர்: எழுத்தாளர்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Kaakkai Cirakinile (Monthly) Register of Newspapers for India No. TNTAM / 2012 /43921
Postal Registration No. TN/CH(C)/617/2024-2026
ISSN 2348 - 4160 Date of Publication, 25th of Every Month Posted at patrika channel, Egmore. between 29th-4th of every month




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org